2897

T.N.L.A Debates

Official Report

Vol XVI No 1&2

21, 22 January 1986

DIGITIZED

V211,31 N86
N86.16.1&2;1
136441

745/86

வெளியீடு 25-9-1986 Issued 25-9-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜனவரி 21, 1986-தொகுதி XVI எண். 1
Tuesday the January 21, 1986-Volume XVI No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras-600009**

[Price Rs. 3

D 1
Y811.31 N86
N86.16.1 ¶ 231
136441
சென்னை-600 008.

உள்ளடக்கம்

21-1-1986.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்— | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—30 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 30—81 |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| | சென்னை, வியாசர்பாடி காவல் நிலையத் தருகே நடைபெற்ற வன்முறைச் சம்பவங் களும், துப்பாக்கிச் சூடும். | 82—94 |
| 3. | அறிவிப்பு— | |
| | சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தேர்தல். | 94—95 |
| 4. | கவன ஈர்ப்பு— | |
| | (அ) பவானிசாகர் பாசனத்தின் மீதான வரி வசூல். | 95—98 |
| | (ஆ) காஞ்சிபுரம் அருகே கள் குடித்து சிலர் இறந்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து. | 98—103 |
| 5. | அறிக்கை அளித்தல்.— | |
| | உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற் கான தகுதி குறித்து | 103—104 |
| 6. | அரசினர் சட்ட முன்வடிவு— | |
| | பச்சையப்பன் அறக்கட்டளை (மேலாண் மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986. | 104—106 |
| 7. | ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி). | 106—175 |
| | திரு கோ. வீரய்யன் | 106—108, 148—152 |
| | திரு சு. பாலன் | 108 |
| | திரு ஏ. பானுச்சாமி | 108—110 |
| | திரு கே. அன்பழகன் | 110—115 |

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (கைத்தறி துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர் அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி: (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.



21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூகநலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர் திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (கதர்த்துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (பொதுப் பணித் துறை அமைச்சர்)—பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMILNADU

THIRU SUNDAR LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS :

1. The HON. DR. M. G. RAMACHANDRAN : (CHIEF MINISTER)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. The HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (MINISTER FOR FINANCE): Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. The HON. THIRU S. RAMACHANDRAN : (MINISTER FOR ELECTRICITY)—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The HON. THIRU K. A. KRISHNASAMY : (MINISTER FOR LABOUR)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The HON. THIRU R. M. VEERAPPAN : (MINISTER FOR INFORMATION AND RELIGIOUS ENDOWMENTS)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquos permits.

6. The HON. THIRU K. RAJARAM : (MINISTER FOR INDUSTRIES)—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The HON. THIRU P. U. SHANMUGAM : (MINISTER FOR LOCAL ADMINISTRATION)—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The HON. THIRU C. ARANGANAYAGAM (MINISTER FOR EDUCATION)—Education, Official Language' Tamil Development and Culture.

9. The HON. DR. K. KALIMUTHU : (MINISTER FOR AGRICULTURE)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.



10. The HON. THIRU C. PONNAIYAN : (MINISTER FOR LAW)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. The HON. DR. H. V. HANDE : (MINISTER FOR HEALTH)—Health and Environmental Pollution Control.

12. The HON. THIRU S. MUTHUSAMY : (MINISTER FOR TRANSPORT)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports and Highways.

13. The HON. THIRU S. THIRUNAVUKKARASU : (MINISTER FOR FOOD)—Food, Price Control and Census.

14. The HON. THIRU V. V. SWAMINATHAN: (MINISTER FOR HANDLOOMS)—Handlooms and Textiles.

15. The HON. THIRU R. SOUNDARARAJAN : (MINISTER FOR NUTRITIOUS MEALS)—Nutritious Meals.

16. The HON. THIRU T. VEERASAMY : (MINISTER FOR COMMERCIAL TAXES)—Commercial Taxes.

17. The HON. THIRU N. NALLUSAMY : (MINISTER FOR HOUSING)—Housing, Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

18. The HON. THIRU ANOOR P. K. JAGADEESAN : (MINISTER FOR RURAL INDUSTRIES)—Rural Industries ncluding Village, Cottage and Small Industries.

19. The HON. THIRU T. RAMASAMY : (MINISTER FOR REHABILITATION AND EMPLOYMENT)—Employment and Training, Indian Overseas, Refugees, and Evacuees.

20. The HON. THIRU A. ARUNACHALAM : (MINISTER FOR ADI DRAVIDAR WELFARE)—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The HON. THIRU M. R. GOVENDAN : (MINISTER FOR BACKWARD CLASSES)—Backward Classes and Fisheries.

22. The HON. TMT. GOMATHI SRINIVASAN : (MINISTER FOR SOCIAL WELFARE)—Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY : (MINISTER FOR KHADI)—Khadi, Bhoodan and Gramdhan.

24. The HON. THIRU Y. S. M. YUSUF : (MINISTER FOR PUBLIC WORKS)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN : MINISTER FOR CO-OPERATION)—Co-operat

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. சைதை சா. துரைசாமி
திரு. டி. ஆர். வேங்கடரமணன்
திரு. பொன் முத்துராமலிங்கம்

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### இணைச் செயலாளர்.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம், பி.ஜி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்கள்.

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி., பி.எல்.



2897

### எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கேசவராம், பி.ஏ.,
திரு. டி. ஜேகப் ஆர்தர், பி.ஏ., பி.எல்.,

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. ஜி. வெங்கட்டராமன்

### தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.,

### துணைச் செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம்.ஏ.,

---

*27-2-1985 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
**10-1-1986 அன்று நியமிக்கப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அப்துல் சமத் திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 2 | அப்துல் மஜீத் திரு. எச். | வாணியம்பாடி |
| 3 | அரங்கநாயகம் திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4 | அரிக்குமார் திரு. இரா. | பெரணமல்லூர் |
| 5 | அருணாசலம் திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 6 | அருணாசலம் திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 7 | அன்பழகன் திரு. க. | பார்க்டவுன் |
| 8 | அன்பழகன் திரு. கே. | ஓமலூர் |
| 9 | அன்பழகன் திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 10 | அன்பழகன் திரு. பொ. | இளையான்குடி |
| 11 | ஆண்டி அம்பலம் திரு. மெ. | நத்தம் |
| 12 | ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி | ஆண்டிமடம் |
| 13 | ஆபிரகாம் திரு. ம. | ஆலந்தூர் |
| 14 | ஆறுமுகம் திரு. அ. | வந்தவாசி |
| 15 | ஆறுமுகம் திரு. எச். ஜீ. | பென்னாகரம் |
| 16 | ஆறுமுகம் திரு. ஆர். எஸ். | ஓட்டபிடாரம் (செ.வ.) |
| 17 | ஆறுமுகம் திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 18 | ஆறுமுகம் திரு. செ. | மதுராந்தகம் |
| 19 | ஆறுமுகம் திரு. சேலம். மு. | சேலம்-2 |
| 20 | ஆனந்த கிருஷ்ணா திரு. ஜி. | பூந்தமல்லி |
| 21 | ஆனந்தன் திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 22 | இரகுபதி திரு. கோ. | காட்பாடி |
| 23 | இரகுமான்கான் திரு. அ. | சேப்பாக்கம் |
| 24 | இரத்தினம் திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25 | இரத்தினவேலு திரு. சே. | முசிறி |
| 26 | இராசமாணிக்கம் திரு. ஆர். | அரூர் (செ.வ.) |
| 27 | இராசமாணிக்கம் திரு. எல்ல. | தாம்பரம் |
| 28 | இராசரத்தினம் திரு. எப். எம். | கொளச்சல் |
| 29 | இராசரத்தினம் என்கிற மணி திரு. எம். | விழுப்புரம் |
| 30 | இராசாங்கம் திரு. மு. | திருவிடைமருதூர் |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 31 | இராசாம்பாள் திருமதி த. | தலைவாசல் (செ.வ.) |
| 32 | இராசாராம் திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33 | இராசாராமன் திரு. எஸ். | பாபநாசம் |
| 34 | இராசு திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35 | இராசேந்திரன் திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36 | இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37 | இராமச்சந்திரன் திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38 | இராமச்சந்திரன் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39 | இராமச்சந்திரன் திரு. ச. | பன்ருட்டி |
| 40 | இராமச்சந்திரன் திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41 | இராமச்சந்திரன் திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42 | இராமசாமி திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43 | இராமசாமி திரு. த. | இராமநாதபுரம் |
| 44 | இராமநாதன் திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45 | இராமலிங்கம் டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46 | இளங்கோவன் திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47 | ஈஸ்வரன் திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48 | உச்சி திரு. கே. | கூடலூர் |
| 49 | உத்திராபதி திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50 | எத்திராசன் திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ) |
| 51 | கணபதி திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கதிர்வேலு திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53 | கந்தசாமி திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 | கந்தசாமி திரு. பெ. | பொங்கலூர் |
| 55 | கல்லன் திரு. கே. | உதகமண்டலம் |
| 56 | கலிதீர்த்தான் திரு சோ. | சங்கராபுரம் |
| 57 | காளிமுத்து டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58 | கிருஷ்ணசாமி திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59 | கிருஷ்ணசாமி திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60 | கிருஷ்ணமூர்த்தி திரு. கி. | கும்பகோணம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 61 கிருஷ்ணராஜ் திரு. ஜி. | சேலம்-1 |
| 62 குப்புசாமி திரு. கு. | ஒட்டன்சத்திரம் |
| 63 குப்புசாமி திரு. வே | செய்யாறு |
| 64 குமர குருபர ராமநாதன் திரு. ச. | விளாத்திகுளம் |
| 65 குமரி அனந்தன் திரு. | ராதாபுரம் |
| 66 குமாரதாஸ் டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 67 குருசாமி என்கிற அண்ணா தாசன் திரு. எம். | திருவரம்பூர் |
| 68 கோமதி சீனிவாசன் திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 69 கோவிந்தசாமி திரு. ஆர். | குடியாத்தம் |
| 70 கோவிந்தசாமி திரு. ச. | எடப்பாடி |
| 71 கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 72 சங்கரலிங்கம் திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 73 சண்முகம் திரு. இரா. | திருத்தணி |
| 74 சண்முகம் திரு. என். | சோளிங்கர் |
| 75 சண்முகம் திரு. ப. உ. | மேல் மலையனூர் |
| 76 சண்முகையா பாண்டியன் திரு. | ஆலங்குளம் |
| 77 சந்திரசேகரன் திரு. ஆ. | சோழவந்தான் |
| 78 சந்திரசேகர் திரு. மு. | முகையூர் |
| 79 சாகுல் ஆலம் திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 80 சமரசம் டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 81 சரோஜா திருமதி இரா. | உப்பிலியர்புரம் (ஆ.வா.) |
| 82 சாமிக்கண்ணு திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 83 சித்தன் திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 84 சிந்தன் திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 85 சிவக்குமார் திரு. ஆ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 86 சிவக்குமார் திரு. எம். | கூனூர் (செ.வ.) |
| 87 சிவஞானம் திரு. என். | திருவோணம் |
| 88 சிவப்பிரகாசம் திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வா. |
| 89 சிவராமன் திரு. எஸ். | சின்னசேலம் |
| 90 சிவராஜ் திரு. க. | ரிஷிவந்தியம் |
| 91 சின்னக்குழந்தை திரு. மு. | ஆரணி |
| 92 சின்னச்சாமி திரு. ரா. | தர்மபுரி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 93 சின்னச்சாமி திரு. வே. கு. | பவானிசாகர் |
| 94 சின்னராசு திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 95 சின்னராசு திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 96 சுந்தரதாஸ் திரு. மா. | விளவன்கோடு |
| 97 சுப்புராயர் திரு. சி. | கம்பம் |
| 98 சுப்பராயன் திரு. கு. | திருப்பூர் |
| 99 சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன் திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 100 சுப்பிரமணியன் திரு. உ. | சிவகங்கை |
| 101 சுப்பிரமணியன் திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 102 சுவாமிநாதன் திரு. வி. வி. | புவனகிரி |
| 103 செங்காளியப்பன் திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 104 செங்கோட்டையன் திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 105 செங்கோட்டையன் திரு. பெ. | கபிலர்மலை |
| 106 செம்மலை திரு. செ. | தாரமங்கலம் |
| 107 செல்லமுத்து திரு. மொ. | திருவாரூர் (செ. வ.) |
| 108 செல்லப்பா திரு. வி. கோ. | கடலூர் |
| 109 செல்வராசன் திரு. அ. | துறைமுகம் |
| 110 சேகர் என்கிற குலசேகரன் திரு. கே. பி. | பொன்னேரி (செ.வ.) |
| 111 சொர்ணலிங்கம் திரு. கா. | திருவாடனை |
| 112 சோலைராசு திரு. க. | மருங்காபுரி |
| 113 சைதை துரைசாமி திரு. சா. | சைதாப்பேட்டை |
| 114 சௌந்திரராசன் திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 115 சௌரிராஜன் டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 116 ஞானசுந்தரம் திரு. சா. | மன்னார்குடி |
| 117 டேனியல்ராஜ் திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 118 தங்கமணி திரு. மு. | மாயூரம் |
| 119 தங்கமணி திரு. கே. எம். | திண்டிவனம் |
| 120 தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 121 தங்கராசு திரு. செ. | மங்களூர் (செ. வ.) |
| 122 தங்கவேல்ராஜ் திரு. ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 123 தங்கவேலு திரு. வி. | வால்பாறை (செ.வ |
| 124 தமிழ்மணி திரு. | திருப்போரூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 125 | தமிழரசன் திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ) |
| 126 | தனபால் திரு. ப. | சங்கரி (செ.வ) |
| 127 | தாமரைக்கனி திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 128 | தியாகராசன் திரு. ர. | விருத்தாசலம் |
| 129 | திருஞானம் திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா) |
| 130 | திருநாவுக்கரசு திரு. எஸ். | அறந்தாங்கி |
| 131 | திருமலைச்சாமிக் கவுண்டர் திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 132 | தீர்த்தகிரி கவுண்டர் திரு. டி. | மொரப்பூர் |
| 133 | தீர்த்தராமன் திரு. ப. | பாலக்கோடு |
| 134 | துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம் திரு. | நெல்லிக்குப்பம் |
| 135 | துரை கிருஷ்ணமூர்த்தி திரு. | தஞ்சாவூர் |
| 136 | துரை கோவிந்தராசன் திரு. | திருவையாறு |
| 137 | துரைராசு திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 138 | துரை ராமசாமி திரு. | வெள்ளக்கோயில் |
| 139 | தெய்வநாயகம் திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 140 | தேவராஜ் திரு. வி. எம். | வேலூர் |
| 141 | நடராசன் திரு. ஆ. | பேரூர் |
| 142 | நரசிம்ம பல்லவன் திரு. க. | உத்திரமேரூர் |
| 143 | நரசிம்மன் திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 144 | நல்லமுத்து டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 145 | நல்லுசாமி திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 146 | நாச்சிமுத்து திரு. கே. பி | மேட்டூர் |
| 147 | நாராயணன் திரு. எஸ். | திருநெல்வேலி |
| 148 | நாராயணன் திரு. பு. கோ. | பவானி |
| 149 | நெடுஞ்செழியன் டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 150 | பட்டாபிராமன் திரு. செ. | திருவள்ளூர் |
| 151 | பரமசிவம் திரு. பா. ந. | பல்லடம் |
| 152 | பரிதி இளம்வழுதி திரு. | பெரம்பூர் |
| 153 | பழனி திரு. த. | ஆற்காடு |
| 154 | பழனிச்சாமி திரு. கா. செ. | காங்கேயம் |
| 155 | பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 156 | பாண்டியன் திரு. பி. எச். | சேரன்மாதேவி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 157 | பாண்டுரங்கன் திரு. மு. | கலசபாக்கம் |
| 158 | பாப்பா சுப்பிரமணியன் திரு. | குத்தாலம் |
| 159 | பாரதி திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 160 | பாரமலை திரு. க. | மானாமதுரை (செ.வ) |
| 161 | பாலகிருஷ்ணன் திரு. ச. | மொடக்குறிச்சி |
| 162 | பாலகிருஷ்ணன் திரு. வ. | சிவகாசி |
| 163 | பாலச்சந்திரன் திரு. வை. | பத்மநாபபுரம் |
| 164 | பாலசுப்பிரமணியன் திரு. க. | சீர்காழி (செ.வ) |
| 165 | பாலசுப்பிரமணியன் திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 166 | பாலசுப்பிரமணியன் திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 167 | பாலன் திரு. சு. | எழும்பூர் |
| 168 | பாலாஜி திரு. கே. | காஞ்சிபுரம் |
| 169 | பாலுச்சாமி திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 170 | பாலுசாமி திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 171 | பிச்சை திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 172 | பிரணவநாதன் திரு. அ. | கடலாடி |
| 173 | பிரேம்குமார் திரு. ஆ. | திண்டுக்கல் |
| 174 | புருசோத்தமன் திரு. எஸ். | அரியலூர் |
| 175 | புஷ்பராசு திரு. த. | திருமயம் |
| 176 | பெரியசாமி திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 177 | பெரியசாமி திரு. ரா. | தொட்டியம் |
| 178 | பெருமாள் திரு. தெ. | கடையநல்லூர் |
| 179 | பெருமாள் பிள்ளை திரு. கோ. | கன்னியாகுமரி |
| 180 | பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ) |
| 181 | பொன்னுசாமி டாக்டர் அ. | பெருந்துறை |
| 182 | பொன்னுரங்கம் திரு. ப. | ராயபுரம் |
| 183 | பொன்னையன் திரு. சி. | திருச்செங்கோடு |
| 184 | மணவாளன் திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 185 | மணிமாறன் திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186 | மலர்மன்னன் திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 187 | மனோகரன் திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 188 | மனோகரன் திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 189 | மாசிலாமணி டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 190 | மாதவன் திரு. செ. | திருப்பத்தூர் |
| 191 | மாதையன் திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ) |
| 192 | மாரிமுத்து திரு. த. | குளத்தூர் (செ.வ) |
| 193 | மாரிமுத்து திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 194 | மீனாட்சி சுந்தரம் திரு. மா. | வேதாரண்யம் |
| 195 | முகம்மது கனி திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 196 | முகம்மது சலீம் டாக்டர் த. | பெரியகுளம் |
| 197 | முசிறிபுத்தன் திரு. பி. | குளித்தலை |
| 198 | முத்துசாமி திரு. சு. | ஈரோடு |
| 199 | முத்துராமலிங்கம் திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 200 | முத்துராமலிங்கம் திரு. பொன் | மதுரை மேற்கு |
| 201 | முத்துவேல் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 202 | முத்தையா திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முருகானந்தம் திரு. டி. என். | செஞ்சி |
| 204 | முனிரத்தினம் திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205 | யசோதா திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ) |
| 206 | ரமணி திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207 | ரவீந்திரன் திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208 | ராமஜெயம் திரு. ம. நா. | வானூர் (செ.வ.) |
| 209 | ராமன் திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210 | ராஜாபாபு திரு. ஜெ. | போரூர் |
| 211 | ரெங்கசாமி திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212 | ரெத்தினராஜ் திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213 | லட்சுமி திருமதி பி. | அவினாசி (செ.வ.) |
| 214 | வச்சிரவேலு திரு. ஏ. | தண்டராம்பட்டு |
| 215 | வடிவேல் திரு. கு. | கரூர் |
| 216 | வளர்மதி திருமதி பா. | மயிலாப்பூர் |
| 217 | விஜயபாலன் திரு. என். | பூம்புகார் |
| 218 | விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி ப. | வீரபாண்டி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 219 | வீராணம்பலம் திரு. க. வெ. | மேலூர் |
| 220 | வீரய்யன் திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 221 | வீராசாமி திரு. தா. | ஒரத்தநாடு |
| 222 | வெங்கடரெட்டி திரு. டி. | ஓசூர் |
| 223 | வெங்கடாசலம் திரு. அ. | ஆலங்குடி |
| 224 | வெங்கடாசலம் திரு. கி. | லால்குடி |
| 225 | வெங்கடாசலம் திரு. டி. எம். | பரசூர் |
| 226 | வேங்கடரமணன் திரு. டி. ஆர். | தென்காசி |
| 227 | வேணுகோபால் திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ண நகர் |
| 228 | வேணுகோபால் திரு. கே. வி. | தள்ளி |
| 229 | ஜான் வின்சென்ட் திரு. மு. | நாங்குநேரி |
| 230 | ஜகதீசன் திரு. ஆனூர் பு. | செங்கல்பட்டு |
| 231 | ஜெகதீசன் திரு. சு. | அரவக்குறிச்சி |
| 232 | ஜெயச்சந்திரன் திரு. சா. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 233 | ஜெயராமன் திரு. வே. இரா. | தேனி |
| 234 | ஹேமச்சந்திரன் திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 | பிரான்சிஸ் திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அமைச்சர்
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே அமைச்சர்
3. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் அமைச்சர்
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 1986, ஜனவரி 21, செவ்வாய்க்கிழமை

## தை 8, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.''

கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### இராமகுண்டம் மின்நிலையத்திலிருந்து பெறும் மின்சக்தி.

61—(*வினா எண். 2409)—திரு கு. சுப்பராயன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திராவிலுள்ள மத்தியச் அரசுக்குச் சொந்தமான சூப்பர் மின்நிலையத்திலிருந்து தமிழகத்திற்கு மின்சாரம் கிடைக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு நிறுவனமான இராமகுண்டம் பேரனல் மின் நிலையத்திலிருந்து உற்பத்தியாகும் அனல் மின்சாரத்தை 1984 டிசம்பர் மாதம் முதல் தமிழ்நாடு பெற்று வருகிறது. 1985 மே மாதம் வரை 166.73 மில்லியன் யூனிட்டுகளைப் பெற்றுள்ளது.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமகுண்டத்திலிருந்து மின்சாரம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது என்றும் தமிழ்நாடு மின் வாரியம் இராமகுண்டத்திலிருந்து மின்சாரம் பெற்றுக்கொள்வதற்குரிய சாதன உத்தரவாதத்தைக் காலத்தில் ஏற்படுத்தாததன் காரணத்தால் தான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது என்று சொல்லப்படுவது உண்மையா?

[1986 ஜனவரி 21

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இராமகுண்டம் பேரனல் மின் நிலையம் இந்திய அரசின் நிறுவனம். அதிலேயிருந்து தென்னக மாநிலங்கள் மின்சாரத்தைப் பகிர்ந்துகொள்கின்றன. அதற்கான மின்கம்பித் தொடரை, 400 கே. வி. லைனை இந்திய அரசினர் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மின் உற்பத்தி துவங்கிய நிலையில், மின் கம்பித் தொடர் இன்னும் முடிவுறாத நிலையில் நமக்குரிய பங்கை ஆந்திர மாநில அரசின் கம்பித்தொடர் வழியாக நாம் பெற்று வருகிறோம். ஆகவே நமக்குக் கிடைக்க வேண்டிய அளவுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பம்பு செட்டுகளுக்கான மின் இணைப்பு.

**62—(*வினா எண். 1838)**—**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் திட்டமிட்டபடி பம்புசெட்டுகளுக்கான மின் இணைப்பு குறியீட்டளவை எய்த எவ்வளவு கிணறுகளுக்கு இன்னும் கொடுக்கப்படவேண்டும்?

(ஆ) பணிகள் முடிக்கப்படாததன் காரணம் யாது?

(இ) எப்போது முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) 1984-85 ஆம் ஆண்டு குறியீட்டளவான 50,000 பம்பு செட்டுகளுக்கு மேலாக 950 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ): இக் கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. செ. செம்மலை:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்புக் கொடுப்பதில் குறியீட்டளவையும் மிஞ்சி சாதனை புரிந்திருக்கும் தமிழகம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த வகையில், எத்தனையாவது இடத்தைப் பெற்றிருக்கின்றது என்ற அந்த விவரத்தையும், 1985—86 ஆம் ஆண்டுக்கான குறியீட்டளவு என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய நீரேற்றிகளைப் பொறுத்தவரையில் இந்தியாவில் தமிழகம் முதலிடத்தை வகித்து வருகிறது. இந்த ஆண்டு 40,000 நீரேற்றிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.



1986 ஜனவரி 21]

**திரு. செ. செம்மலை:** பேரவைத் தலைவர் அவர்களே,
ஆண்டுக்காண்டு அதிக அளவிற்குக் கிணறுகளுக்கு மின்னிணைப்புக்
கொடுக்கின்ற காரணத்தால் ஏற்கெனவே இருக்கின்ற
எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்ட
ட்ரான்ஸ்ஃபார்மர்களில் லோட் இல்லை என்ற அந்த ஒரு குறை
பாடு இருக்கிறது. எனவே நாம் கிணறுகளுக்கு மின் இணைப்புக்
கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சைமல்டேனியஸாக ட்ரான்ஸ்
ஃபார்மர்களையும் மாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கி
றோம். எனவே அப்படி முழுமையாக, பெரிய அளவில் அந்த
ட்ரான்ஸ்ஃபார்மர்களை மாற்றுவதற்கு ஏதேனும் திட்டத்தை
தமிழ்நாடு மின்சார வாரியம் வைத்திருக்கின்றதா, அதற்கான
நிதியுதவியை நாடி இருக்கின்றதா என்ற விவரங்களை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர்
அவர்களே, புதிய நீரேற்றிகளுக்கு மின்சாரம் வழங்குகிறபோது
தக்க மின்மாற்றிகளை வைத்துத்தான் மின்சாரம் வழங்கப்படு
கிறது. சில இடங்களைப் பொறுத்தவரையில் மின்மாற்றிகளின்
எண்ணிக்கை போதாது என்ற குறை இருக்கிறதே தவிர
இருக்கின்ற மின்மாற்றிகள் சரியாக இல்லை என்பதல்ல.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1984—85 ஆம் ஆண்டில் திட்டமிட்டபடி கிணறு
களுக்கு மின்னிணைப்புக் கொடுக்கப்பட்டதில், on the line service-
இல் வள்ளியூர் டிவிஷனில் கொடுக்கப்படவில்லை. இப்படி அந்த
ஒருக் கோட்டத்தில் மட்டும் கொடுக்காததால் 1985—86 ஆம்
ஆண்டில் மின்னிணைப்புக் கொடுக்கப்படக்கூடிய நிலையில் அரசு
மீண்டும் ஆய்வு செய்து அங்கே கொடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்
களே, இவ்வாண்டு அத்தகைய மின்னிணைப்புகள் 20,531 பம்பு
செட்டுகளுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** பேரவைத் தலைவர் அவர்களே,
விவசாயத்திற்கு மின்னிணைப்பு வழங்குவதில் முன்னுரிமை
அடிப்படையில் வழங்கப்படுகிறதா?
வழங்கி, சீனியாரிட்டி
பிற்பட்ட மாவட்டமாக இருக்கும் எங்களுடைய தர்மபுரி
தங்கிய மின்சார இணைப்பு வேண்டும் என்று
மாவட்டத்திலே 1978 லேயே மின்சார இணைப்பு வேண்டும் என்று
கேட்டு மனுக்களைக் கொடுத்திருக்கிறோம். நானே கூட கொடுத்
திருக்கிறேன்; 3 மின்சார இணைப்பு வேண்டும் என்று. எங்களுக்கு
இன்னும் சீனியாரிட்டி வரவில்லை என்று சொல்லுகிறார்கள்.
ஆனால் எங்களுடைய மாவட்டத்திலேயே சிங்கராயபேட்டை
என்ற இடத்திலே 198.லே மனு கொடுத்துள்ளவர்களுக்கு மின்
இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். இது பற்றி மின்சார இலாகா
அதிகாரிகளை அணுகிக் கேட்டபோது, சீனியாரிட்டியிலே சில
முன்றகளை வைத்திருக்கிறோம். மனுக்கள் அந்தப் பகுதியிலே

குறைவாக இருப்பதால் முன் உரிமை கொடுக்கப்படுகிறது. உங்கள் பகுதியிலே மனுக்கள் அதிகமாக இருப்பதால் சீனியாரிட்டி பின்னால் போய்விடுகிறது. அதன் காரணமாக காலதாமதம் ஆகிறது என்று கூறுகிறார்கள். (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேட்கவேண்டும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** கேள்வியாகத்தான் கேட்க இருக்கிறேன். சீனியாரிட்டி என்னும் முன் உரிமை வழங்குவதில் என்ன முறையை மின் இலாகா கடைப்பிடிக்கிறது? வரிசைக் கிரமமாக வழங்கப்படுகிறதா அல்லது வரிசைக் கிரமம் தவறி வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இதிலே 3 வகையான மின் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. ஒன்று, சென்ற ஆண்டு 20 ஆயிரம் நீர் ஏற்றிகளிலிருந்து 50 ஆயிரம் நீர் ஏற்றிகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்று அதை அதிகப்படுத்தினோம். கம்பித் தொடர்புக்கு அருகிலே உள்ள 'ஆன் தி லைன் சர்வீஸ்' என்ற வகையில் 20—1—85க்குள் யார் யார் அதற்காக, இணைப்புகளை தயாராக வைத்திருக்கிறார்களோ, அதே போல 28-2-85க்குள், யார் யாருக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்து சென்ற ஆண்டு கொடுத்தோம். அதிலே 20,531 இன்னும் பாக்கி இருக்கிறது. அதாவது 'ஆன் தி லைன் சர்வீஸ்' என்ற வகையில்: அவைகளுக்கு இந்த ஆண்டு வழங்கப்படுகின்றன.

31—3—76க்கு முன் யார் யார் மனுக்களின் மூலமாகக் கேட்டிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் வழங்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு எடுத்து அமல்படுத்தி வருகிறது. தென்னாற்காடு மாவட்டத்தைத் தவிர மற்ற இடங்களில் இந்த ஆண்டு 31-3-76-க்கு முன் பெற்ற மனுக்கள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்கப்படும். சில இடங்களில் மனுக்களே இல்லை. 31—3—76-க்குப் பிறகு கொடுத்தால் தான், ஏதாவது ஆண்டுக்கு கொஞ்சமாவது அலாட் பண்ணிக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமையிலே அவை வரும். அப்படி வருகிறபோது 31-3-76க்குப் பின் வந்தவைகளில் சுமார் 6431 மனுக்களுக்கு மட்டும் இந்த ஆண்டு வழங்கப்படும். அவர்களுக்கு ஏற்கெனவே நோட்டீஸ் கொடுத்து, பார்ட்டியும் ரெடியாக இருக்கக் கூடியவர்கள். அந்த வகையிலேதான் அவைகள் வழங்கப்படுகின்றன. ஆகையினால் 31-3-76க்கு பின்னாலே வருகிற வகையில் 6431 தான் வரும். அவர்கள் ஏற்கெனவே பம்பு செட்டுகளை வாங்கி ரெடியாக வைத்திருக்கின்றவர்கள். நம்மைப் பொறுத்தவரையில் தேதி படித்தான் வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

**திரு. மா. சின்னராசு:** தலைவர் அவர்களே, 'ஆன் தி லைன் சர்வீஸ்' என்று மின் இணைப்பு கொடுக்கிறபோது, எந்த இடத்திலிருந்து அந்த மின் கம்பிகள் இழுக்கப்பட





வேண்டுமோ அல்லது கம்பங்கள் நடப்பட வேண்டுமோ அந்த நில உடைமைக்காரர்களிடமிருந்து 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' வாங்க வேண்டும் என்று நிபந்தனை இருப்பதால் மின்சார ஊழியர்கள் போய் அவர்களிடம் பம்பு செட்களுக்கு மின் இணைப்பை நீங்கள் அனுமதி கொடுத்தால்தான் கொடுக்க முடியும் என்று கேட்கும்போது, அவர்கள் 'நோ அப்ஜெக்ஷன்' கொடுப்பதற்குப் பதிலாக 'அப்ஜெக்ஷன்' கொடுத்து விடுவதால் பல இடங்களில் மின்சாரம் பெற முடியாத நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி நிலைமை இருந்தால் அந்த நிபந்தனையைத் தளர்த்த அரசு உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அத்தகைய நிபந்தனை எதுவும் இல்லை. மின் கம்பங்களை எங்கே வேண்டுமானாலும் நடலாம், மின் கம்பிகளை எங்கே வேண்டுமானாலும் இழுக்கலாம். ஒரு வேளை மோட்டார் பம்புகளுக்கு சர்வீஸ் கொடுக்கின்ற வகையில், அது மற்றவர்களுடைய நிலத்திலே வருகிறதோ என்னவோ, அப்படி இருக்குமானால் அத்தகைய ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டிருக்கலாம். அது பற்றி ஏதாவது விவரங்கள், சான்றுகள் மாண்புமிகு உறுப்பினரிடத்திலே இருந்தால், கொடுத்தால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மின்சார இணைப்புக்கும் வெவ்வேறு வகையான இலக்குகளை நிர்ணயித்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மின்சார வாரியம் ஒதுக்கீடுகள் செய்திருக்கிறது. மின்சார பம்பு செட்டுகள் என்ற வகையிலே மதுரை மாவட்டத்திற்கு மிகவும் குறைவான அளவு பம்பு செட்டுகளை ஒதுக்கீடு செய்திருக்கிறதே அதனை இந்த ஆண்டு அதிகப்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புவதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே 40ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று, இன்று— ஜனவரி மாதம் 21 ஆம் தேதி — அறிவித்திருக்கிறார்கள். மார்ச் 31 ஆம் தேதிக்குள் அவை அளிக்கப்பட்டு விடுமா? அதற்கான போதிய டிரான்ஸ்பார்மர்களும், கருவிகளும் மின் வாரியத்தில் இருக்கின்றனவா என்றும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 40 ஆயிரம் நீரேற்றிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும். மாவட்டங்களுக்கு எந்த வகையிலே பிரிக்கப்படுகிறது என்றால் ஏற்கெனவே நோட்டீஸ் கொடுத்து எத்தனை பம்பு செட்டுகள் அந்தந்த மாவட்டங்களில் ரெடியாக இருக்கின்றனவோ அந்த வீதத்திலே பிரிக்கப்படுகிறதே தவிர, ஒரு மாவட்டத்திற்கு

கூடுதல், ஒரு மாவட்டத்திற்கு குறைவு என்பது சரியானதல்ல. 31-3-1976-க்கு முன் எந்தெந்த மாவட்டத்தில் மனுக்கள் போட்டிருக்கிறார்களோ, அந்த மனுக்கள் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இது தென்னாற்காடு மாவட்டத்தைத் தவிர உள்ள நிலைமை. ஏனென்றால் தென்னாற்காடு மாவட்டத்தில் மனுக்கள் நிறைய இருக்கின்றன.

திரு. க. பரமலை: தலைவர் அவர்களே, இப்போது 'ஆன் தி லைன் சர்வீஸ்' தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாகச் சொல்கிறார்களே, அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தகவல் எதுவும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நிறுத்தி வைக்கப்படவில்லை. சென்ற ஆண்டு கொடுப்போம் என்று சொன்னதிலே இன்னும் பாக்கி இருக்கிறது. 20-2-1985-க்கு முன்னால் தயார் ஆனவர்களில் பாக்கி இருக்கிறார்கள். ஆகவே அதற்குப் பின்னாலே வந்தவர்களுக்கு கொடுக்க இயலாத நிலையில் இருக்கிறோம்.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது பல்வேறு மனுக்கள் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு மேட்டூரிலிருந்து தண்ணீர் வராத நிலையில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால், அதிலே இருக்கிற விதிமுறைகளைத் தளர்த்தி அந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, பம்பு செட்டுகளுக்கு கட்டணம் கட்டி மின் இணைப்பிற்குத் தயார் நிலையில் உள்ள அனைவருக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலேயும், அதைச் சுற்றியுள்ள 11 தாலுக்காக்கள் அடங்கிய காவிரி டெல்டா பகுதியிலேயும் பில்டர் பாயிண்ட்டு களைப் பொறுத்தவரையில் எல்லாவற்றுக்கும் மின் இணைப்பு வழங்கப்படுகின்றது. அதுபோல commited on line cases — ஏற்கனவே லைனில் இருப்பவர்கள் ரெடியாக இருப்பார்களானால் அவர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகின்றன.

**வன்னியம்மாள்புரத்தில் புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.**

63.—(*வினா எண் 1556)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஒன்றியம், வன்னியம்மாள்புரம் பொதுமக்களிடமிருந்து சீரான மின் அழுத்தம் வேண்டி புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்கக் கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, வன்னியம்மாள்புரம் பகுதியில் டிரான்ஸ்பார்மரில் மின் அழுத்தம் சரியாக இல்லாமல் இருப்பதால் விவசாயிகளின் மோட்டார்கள் எரிந்து விடுகின்றன என்று நிறைய புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே டிரான்ஸ்பார்மரின் கெபாசிட்டியை கூட்டுவதற்கும், அந்தப் பகுதியில் மின் அழுத்தம் சரியான அளவில் இருப்பதற்கும் வாரியம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் சார்பாகவே இந்த விவரம் கேட்கப் பட்டிருப்பதால் அரசு பரிசீலிக்கும். (சிரிப்பு)

**வன்னாடு, கோம்பைப் பகுதி கிராமங்களுக்கு மின் இணைப்பு.**

64.—(*வினா எண் 1927)—திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி பச்சமலை, வன்னாடு, கோம்பை பகுதியிலுள்ள கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மின் இணைப்பு வழங்கப் படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) வன்னாடு, கோம்பை கிராமங்கள் ஏற்கனவே மின் மயமாக்கப்பட்டுள்ளன. அந்தக் கிராமங்களைச் சார்ந்த குக்கிராமங்களுக்கே மின்சாரம் வழங்க வேண்டியுள்ளது.

(ஆ) அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி இரா. சரோஜா: தலைவர் அவர்களே, மின் இணைப்பு வழங்குவதை வனத்துறையினர் தடுத்துள்ளார்கள். இது சம்பந்தமாக மின்துறை வனத்துறையோடு பேசி முடிவு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே. சில ஊர்களுக்கு வனத்துறை அனுமதி பெறப்பட்டிருக்கிறது. பெரும்பாலான பகுதிகளுக்கு போக வர சாலை வசதிகள் இல்லை, ஆகவே பொருள்களைக் கொண்டு போக முடியவில்லை என்பது தான் எனக்கு கிடைத்திருக்கிற தகவல்.

திருமதி இரா. சரோஜா : தலைவர் அவர்களே, வன்னாடு, கோம்பை கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு எவ்வளவு மதிப்பீட்டில் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பல ஊர்களின் பட்டியல் இருக்கிறது. எவ்வளவு மதிப்பீடு என்ற விவரம் இல்லை. சிறு சிறு பகுதிகளாக இருக்குமென்று கருதுகிறேன். எல்லாவற்றுக்கும் சாலை வசதி இல்லாததால் மதிப்பீடு கூட செய்ய இயலவில்லையென்று தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

## தற்காலிகத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம்.

65—(*வினா எண் 1997)—திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்காலிக தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவது செல்லாது என்ற உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) இதனால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து டெல்லி உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு மேல் முறையீடு (Special Leave Petition) பதிவு செய்யுமாறு உச்ச நீதிமன்ற தமிழ்நாடு வழக்குரைஞர் கேட்கப்பட்டுள்ளார். மேலும், தற்காலிக தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதற்காக 1981—ல் நிறைவேற்றப்பட்ட சட்ட விதிகளில் சில திருத்தங்கள் கொண்டு வருவதற்கு அரசு பரிசீலனை செய்து, அத்திருத்தங்கள், குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்று, 1985—ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25—ம் நாள் அரசிதழில் சட்டமாக வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தனியார் துறையிலேயும், அரசுத் துறையிலேயும், தற்காலிகத் தொழிலாளர்கள் என்ற பெயரால் எவ்வளவு பேர்கள் இதுவரையில் இருந்து வருகிறார்கள் என்பதையும், அரசாங்கம் இயற்றுகிற சட்டத்தை, அரசுத் துறைகளே உடனடியாக அமுலாக்கி, அரசுத் துறையிலே பணியாற்றி வருகிற அனைத்து தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. முதலாவது தற்காலிகத் தொழிலாளர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்களா என்பது. நிரந்தம் ஆக்கப்படுவார்கள். எத்தனை தற்காலிகத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இப்போது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்புக்கு மேல், உச்ச நீதி மன்றத்திலே முறையீடு செய்வதற்கு ஏற்பாடு செய்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எவ்வளவு காலத்திற்குள், உச்ச நீதிமன்றத்திலே வழக்கு பதிவு செய்யப்படும் என்பதையும், சென்னை உயர்நீதி மன்றம் வழங்கியிருக்கக்கூடிய தீர்ப்புக்கு இணங்க தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கக்கூடிய முறையிலே ஒரு புதிய சட்டத் திருத்தத்தை மாநில அரசு கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே விரைவிலே அந்த அப்பீல் எடுத்துக் கொள்ள ஆவன செய்யப்படும். இரண்டாவதாக ஏற்கனவே திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. அந்தச் சட்டமும் அமுலுக்கு வந்திருக்கிறது. விரைவில், துரிதமாக அமுல் செய்யப்படும்.

திரு. ஆர். ரெங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டெம்பரரி தொழிலாளர்களை பெர்மனென்ட் செய்ய வேண்டும் என்பதிலே கேஸ் போடப்பட்டு, அதனால் தாமதம் ஆகிறது. ஒரு வருடத்திற்கு மேலேகூட தாமதம் ஆகிறது. எனவே இதைத் தவிர்க்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சி செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய உடைமையிலே செயலாற்றி வரும் அரசு ரப்பர் கழகத்திலும், அதே போன்று போக்குவரத்துத் துறையிலேயும் 480 நாட்கள் வேலை செய்தும் நிரந்தரப்படுத்தாமல் தகுதி உள்ளவர்கள் இருந்தும் அப்படி அவர்களை நிரந்தரப்படுத்தாமல் இருப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? இது சம்பந்தமாக லேபர் கமிஷனர் கொடுத்த அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளாமல், இப்படி நிரந்தரப்படுத்தாமல் இருக்கின்ற நிலையை மாற்றி, அந்த நிறுவனங்களிலே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களை, தகுதி உள்ளவர்களை உடனடியாக நிரந்தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச் சந்திரன் அவர்கள் நேரிலேயே வற்புறுத்தியிருக்கிறார்கள். அதிலே உள்ள அடிப்படைகளை உணர்ந்து விரைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகத் தொழிலாளர்களில் ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்க்கக்கூடிய தற்காலிகத் தாழ்த்தப்பட்ட, மலை வாழ், நரிக் குறவத் தொழிலாளர்கள் பொதுத் துறையிலேயும், தனியார் துறையிலேயும் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த அடிப்படையிலே உள்ள கான்ட்ராக்ட் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டும் என்பதும், அவர்களுக்கு நல்ல பாதுகாப்பைத் தர வேண்டும் என்பதும் இந்த அரசினுடைய கொள்கை. மத்திய அரசினுடைய கொள்கை. இது குறித்து தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். எத்தனை தற்காலிகத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்கிற விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்து உங்களுடைய மேலான பார்வைக்கு வைக்கப்படும்.

தமிழ்நாடு இறைச்சி நிறுவனம்.

66—(*வினா எண். 3940)—திரு. சு. பாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சி மூலம் நடைபெற்ற ஆடு, மாடு இறைச்சிக் கூடங்கள், Meat Corporation-க்கு மாற்றப்பட்டது? தற்போது எந்த அளவிற்கு வேலை நடைபெறுகிறது?

(ஆ) இதில் பணியாற்றிய நிரந்தர தொழிலாளர்கள், தற்காலிக தொழிலாளர்களை அந்த நிறுவனம் ஏற்றுக் கொண்ட பின்பும் அவர்களது கோரிக்கைகள் மறுக்கப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி: (அ) மாநகராட்சிக்குச் சொந்தமான பெரம்பூர், சைதாப்பேட்டை வில்லிவாக்கம், பேசின்பாலம் ஆகிய இடங்களிலுள்ள இறைச்சிக் கூடங்களை 1-4-1981 முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் நடத்துவதற்கு ஏற்றுக்கொண்டது. அதன் பிறகு குத்தகை காலம் மறுபடியும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் இந்த இறைச்சிக் கூடங்களை நடத்த ஏற்றுக் கொண்ட பின்னர் அநேக அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) இல்லை.



திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி, இந்த இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்தும் வகையிலே அதற்கு 5 கோடி ரூபாய் ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டது. எனவே அத்தகைய நவீனக் கூடங்களை அமைக்க இதுவரையில் எடுத்த நடவடிக்கை என்ன? அந்த இறைச்சிக் கூடங்களில் எத்தனை தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெறும் நிலைமை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பெரம்பூரில் இருக்கின்ற இறைச்சிக் கூடத்தினுடைய வளர்ச்சிப் பணிகளை அரசு தற்காலிகமாக மேற்கொண்டு இருக்கிறது. குறிப்பாக அண்மையில் அதற்கு சாலை வசதிகள் செய்து தரப்பட்டு இருக்கின்றன. தண்ணீர் வசதியைப் பெறுவதற்கு பம்பு செட்டுகள் அதிக அளவுக்கு அமைக்கப்பட்டு இருக்கின்றன. மின் விளக்கு கூடப் பொறுத்தவரையில் சோடியம் வாயு மின் விளக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. என்றாலும் கூட விரைவில் கொடுங்கையூர் என்ற ஒரு இடத்தில் ஏறத்தாழ 4 கோடி ரூபாய் செலவில் ஒரு நவீன Modernised Slaughter House உருவாக்கப்பட இருக்கின்றது. விரைவில் அதை தொடங்க இருக்கிறோம். அப்போது பெரம்பூர் போன்ற சென்னை நகரத்தில் உள்ள இறைச்சிக் கூடங்கள் எல்லாம் அந்த இடத்திற்கு அப்புறப் படுத்தப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரம்பூரில் இயங்கி வருகிற அந்த இறைச்சிக் கூடத்தில் பணி ஆற்றுகின்ற தொழிலாளர்கள் இன்னும் மாநகராட்சித் தொழிலாளர்களாகவே கருதப்பட்டு அவர்கள் சம்பளம் பெறுவதாக அறிகிறேன். ஏன் இவர்கள் அந்தக் கழகத்திற்கு மாற்றப்பட்டும் மாநகராட்சியிலிருந்து சம்பளம் பெறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் புதிதாக அமைக்கப்படுகிற இடத்தில் இன்றைய தினம் யாரோ கோர்ட்டுக்கு சென்று தடை வாங்கி இருப்பதாக அறிகிறேன். அது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மாநகராட்சியில் இருந்து வந்தவர்கள். அவர்களை இன்றைய தினம் தமிழ்நாடு இறைச்சிக் கழகம் என்ற நிறுவனம் ஏற்றுக் கொண்டு இருக்கிறது. விரைவில் அவர்களுக்கு ஓய்வு கால ஊதியம் போன்ற அந்த வசதிகளைச் செய்து தர அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுவை வதை செய்யக் கூடாது என்று வேத காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்போது அரசு இறைச்சிக் கூடத்தில் பசு கொலை செய்யப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆகவே, இறைச்சிக் கூடங்களில் பசுவை கொலை செய்வதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இறைச்சிக் கூடங்களில் பசுவை கொலை செய்வது இல்லை.

67—( *வினா எண். 3777)—**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சைதை, ஆலந்தூர் சாலையில் உள்ள தமிழ்நாடு இறைச்சிக் கழகத்திற்கு சொந்தமான ''ஆட்டு இறைச்சிக் கூடத்தினை'' மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஆம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் சாலையில் அமைந்து இருக்கின்ற அந்த ஆட்டு இறைச்சிக் கூடத்தினை மாற்றுகின்ற செயற்குறிப்பு உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு என் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்த மாற்றம் நடைபெறுகின்ற அந்த இடைக்காலத்தில் அந்த ஆட்டு இறைச்சிக் கூடம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. பராமரிப்பு சரியாக இல்லை. அங்கிருந்து வெளியேறும் கழிவு நீர் சரியான முறையில் செல்லவில்லை. எனவே இந்த இடைக்காலத்தில் அந்த கூடத்தினை நவீனப்படுத்த ஏதேனும் நடவடிக்கை உள்ளதா என்பதை அறிய விருப்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீனப்படுத்துகின்ற ஆலோசனை இல்லை. ஆனால் அதை மாற்றுகின்ற வரையில் அதற்கு எல்லாவிதமான நல்ல வசதிகளும் செய்து தரப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆட்டு இறைச்சிக் கூடத்திற்கு வருகின்ற மருத்துவர்கள் சரியாக வருவது இல்லை. அங்கே முறையாக அந்தப் பணி நடைபெறுவது இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை நேரடியாகப் பார்வையிட்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரில் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வினாவிற்கும் சரி இந்த வினாவிற்கும் சரி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது இந்த இறைச்சிக்கூடங்கள் எல்லாம் சென்னை நகருக்கு வெளியே ஒரு பெரிய நவீன இறைச்சிக் கூடமாக மாற்றப்பட இருக்கிறது என்ற தகவலைத் தந்தார்கள். ஏற்கனவே அந்த இறைச்சிக் கூடங்களில் உயிர் வதைகள் நடந்து அதன்மூலம் அங்கிருந்து வெளியேறுகிற கழிவு, ரத்தம் போன்றவையினால் அருகில் உள்ள 'ரெட் ஹில்ஸில்' சென்னைக்கு தண்ணீர் வரக்கூடிய அந்தக் குளம் பாதிக்கப்படும் என்ற கருத்து, இந்து, போன்ற பத்திரிகைகளிலும் மற்றப் பத்திரிகைகளிலும் வெளி வந்து பொது மக்களுடைய பலத்த எதிர்ப்புக்கு ஆளாகியிருக்கிற காரணத்தினால் அந்தக் கழிவு நீரைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை புலால் உண்ணாதவர்கள் சார்பாக நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் சொன்னதுபோல் சில ஐயங்கள் வந்து அந்த ஐயங்கள் காரணமாக உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வழக்கு நடைபெறுகிற இந்த நேரத்தில் பல தகவல்களை விளக்கமாக, தெளிவாக, ஐயமில்லாமல் உங்களைப் போன்ற சகோதரர்கள் நல்ல, தக்க விளக்கத்தை அளிக்கிறவாறு நீதிமன்றத்திலும் கொடுத்திருக்கிறோம். இதில் நல்ல தீர்ப்பு வழங்கும் என மனதார நம்புகிறோம்.

**திரு. வி. தங்கவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் சாலையில் உள்ள இறைச்சிக் கழகத்தில் எத்தனை கிலோ இறைச்சி உற்பத்தி செய்யப்படுகிறது; குறிப்பாக ஆட்டு இறைச்சி இன்றைக்கு தமிழகத்தில் கிலோ ரூ. 30க்கு விற்பனை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையைப் பெற்றிருக்கிறது. இந்த ஆட்டு இறைச்சியை தமிழகத்தில் இருக்கக்கூடிய நுகர்வோருக்கு அரசாங்கமே கிலோ ஒன்றுக்கு ஐந்து ரூபாய்க்கு தர முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

[1986 ஜனவரி 21

## தமிழ்நாடு காகித ஆலை

68 (* வினா எண். 1881)—திரு சைதை சா. துரைசாமி: மாண்பு
மிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காகித ஆலையில் எத்தனை பேருக்கு
வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) காகித உற்பத்தித் திறன் எவ்வளவு?

(இ) தேவையான மூலப் பொருள்கள் எங்கிருந்து கிடைக்
கின்றன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) 31–12–85 தேதிய
நிலவரப்படி 1,505 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) செய்தித்தாள் காகித உற்பத்தித்திறன் 50,000
டன்கள் ஆண்டொன்றுக்கு எழுதும் மற்றும் அச்சிடும் காகித
உற்பத்தித் திறன் 40,000 டன்கள் ஆண்டொன்றுக்கு.

(இ) முக்கியமான மூலப்பொருளான கரும்புச் சக்கை, அரு
காமையிலுள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படுகிறது.

திரு. சைதை சா துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த காகித ஆலையின் செய்தித்தாளுக்கு மாத்தி
ரம்தான் பேப்பர் தயாரிக்கப்படுகிறதா? அல்லது மற்ற எல்லா
வகையான உபயோகத்திற்கும் பயன்படுகிற அந்தப் பேப்பர்களை
தயார் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்
களே, 50,000 டன் செய்தித்தாள் காகிதமும் 40,000 டன் மற்ற
அச்சிடும் எழுதும் காகிதமும் அந்த ஆலையில் தயாரிக்கப்படு
கிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்த காகித ஆலையை ஆரம்பித்திருக்கிற
அந்த இடத்தில் நிலம் கையகப்படுத்தும்போது அந்தப் பகுதியில்
இருக்கிற சிறிய விவசாயிகளிடம் நிலம் எடுத்துக் கொள்கிற
நேரத்தில் அதனால் இழப்பு ஏற்படுகிறது எனக் கருதி அந்த
நிலச்சொந்தக்காரர்களுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை
வழங்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி சில பேர்களுக்கு
வழங்கப்படவில்லையென்ற ஒரு குறைபாடு உள்ளது. எனவே
அப்படி வழங்கப்படாதவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்
உரிமை வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்
களா?



1986 ஜனவரி 21]

மாண்புமிகு திரு க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்
களே, அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கிறது. முடிந்த அள
விற்கு தகுந்தவர்களுக்கு அந்த ஆலையில் வேலை தரப்பட்
டிருக்கிறது. இந்த ஆலையைப் பொறுத்தவரையில் மாவட்ட
வாரியாகவே வேலைகள் தரப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த
ஆலையில் தமிழக அரசாங்கம் எவ்வளவு மூலதனம் போட்டிருக்
கிறது? அங்கே வேலைக்கு அமர்த்தப்படுகிறபோது ஏதேனும்
விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்
களே, அந்த ஆலையின் மொத்தச் செலவு 230 கோடி ரூபாய்
உலக வங்கி 100 கோடி ரூபாய் உதவி செய்திருக்கிறது. 780
ஏக்கரில், இந்த ஆலைக்கு நிலம் எடுத்து, அந்த ஆலை அமைக்
கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் தகுதியானவர்களை எல்லாம்
தேர்ந்தெடுத்திருக்கிறது. சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான்
இந்தத் தேர்வு நடைபெற்றிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புச்
சக்கையைப் பயன்படுத்தி இந்த காகித ஆலையில் உற்பத்தி
செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றையதினம்
கரும்புச் சக்கையை உற்பத்தி செய்யக்கூடிய ஏராளமான கரும்
பாலைகள் நம் தமிழகத்தில் இருக்கின்றன. ஆகவே மேலும்
காகித ஆலைகளை ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்
றனவா? அதோடு இந்த ஆலையில் இதுவரை வேலையில்
அமர்த்தப்பட்டிருக்கக்கூடியவர்களில் வெளி மாநிலத்தினர்
அமர்த்தப்பட்டுள்ளனரா? அப்படியானால் அவர்கள் எத்தனை
பேர்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்
களே, நான் சர்வீஸ் கமிஷன் என்று சொன்னேன். தகுதியான
வர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். அதில் காகித ஆலையில்
அனுபவம் உள்ளவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.
வெளி மாநிலங்களிலிருந்து, இப்போது அப்ரெண்டிஸ் ஆக பல
பேர்களை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். உத்தர பிரதேசத்தி
லிருந்தும், ராஜஸ்தானிலிருந்தும், ஒரிஸாவிலிருந்தும், பாண்டிச்
சேரியிலிருந்தும், மகாராஷ்டிராவிலிருந்தும் ஏற்கனவே காகித
ஆலைகளில் வேலை செய்தவர்களை இதில் தேர்ந்தெடுத்திருக்
கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 ஜனவரி 21

### வத்திராயிருப்பில் காகித ஆலை

69—(*வினா எண். 2058)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி த்திராயிருப்பு ஒன்றியத்தில் மேச் பேப்பர் மில் ஆரம்பிப்பதற்கு ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

(இ) எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை

(முற்பகல் 9-30)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, விடை இல்லை என்று சொல்லி விட்டார்கள். இது மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் அவர்களுக்கு போடப்பட்ட கேள்வியாகும். ஆனால், இப்போது தொழில் அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிறார். ஏற்கனவே, ஒரு கோடி ரூபாய் செலவில் இது ஆய்வு செய்யப்பட்டு, இப்போது பார்டு 2 ஸ்கீமில் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுவதாக இருக்கிறது இதிலே எது உண்மை என்று தெரியவில்லை. அகவே, அமைச்சர் அவர்கள் இதற்குத் தெளிவாக பதில் சொன்னால் நல்லது. அல்லது அந்த அமைச்சர் அவர்களிடம் சொல்லி பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அமைச்சர் அவர்களைக் கேட்கின்ற நிலை என்னிடத்திலும் இல்லை; தலைவர் அவர்களிடத்திலும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 70ம், 71ம் சேர்ந்து எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

### கரும்புக்கு விலை நிர்ணயம்

70—(*வினா எண். 940) திரு. ஆர் தியாகராசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983–84-ம் ஆண்டில் சப்ளை செய்த கரும்பிற்காக டன் ஒன்றுக்கு ரூ. 20/– வீதம் அரசு வழங்கும் என்ற அரசாணையை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஆவதை அரசு அறியுமா?



1986 ஜனவரி 21]

(ஆ) விவசாயிகளுக்கு மேற்படி தொகை விரைவில்கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) 1983–84-ம ஆண்டில் சப்ளை செய்த கரும்பிற்காக டன் ஒன்றுக்கு ரூ 20 வீதம் அரசு வழங்கும் என்ற அரசாணையை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏதும் இல்லை.

(ஆ) விவசாயிகளுக்கு மேற்படி தொகை விரைவில் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளதாக சர்க்கரைத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

71—(*வினா எண். 2755)—திரு. க. பாரமலை; திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) 1984–85-ம் ஆண்டுக்கு அரசு கரும்புக்கு நிர்ணயித்து அறிவித்த விலைகளை தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கொடுக்கவில்லை என்ற புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்

(ஆ) ஆலைகளின் நிதி நிலைமை மோசமாக இருப்பதால் அரசு பரிந்துரை செய்த விலையைக் கொடுத்தால் ழபபுகசூ சர்க்கரை ஆலைகள் அனைத்தும் பெருத்த நிதி இ ஆளாக நேரிடும் என தனியார் சர்க்கரை ஆலைகள் தெரிவித்துள்ளன. சில தனியார் சர்க்கரை ஆலைகள் மாநில அரசு பரிந்துரை செய்த கரும்பு விலையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கும் தொடுத்துள்ளன. இடைக்காலத் தடையும் பெற்றுள்ளன. ஆகவே உயர்நீதி மன்ற தீர்ப்பின் பிறகே மேல் நடவடிக்கை தொடர வாய்ப்புண்டு.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டிற்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்து விட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால், 1984-85 ஆம் ஆண்டிற்கான பணத்தைக் கொடுத்து விட்டார்களா? கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 1985-86 ஆம் ஆண்டிற்கு விலை நிர்ணயம் செய்வதில் டன் ஒன்றுக்கு குறைந்தது ரூ. 210-க்கு மேல் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. அரசு மறு பரிசீலனை செய்து, கூட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே முடிவை அறிவிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இனிப்பான செய்தியை, விலை

உயர்த்துகின்ற செய்தியை இப்போது இந்த மாமன்றத்தில் தமிழக மக்களுக்குச் சொல்வார்களானால், விவசாய மக்களுக்கு அது பேருதவியாக இருக்கும். அந்த ரூ. 210-க்கு மேலே அளிக்கும் செய்தியை இந்த அவையிலே அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இரண்டு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். 1984-85 ஆம் ஆண்டுக்கு மாநில அரசு பரிந்துரை செய்த கரும்பு விலையை தனியார் சர்க்கரை ஆலைகளால கொடுக்க இயலவில்லை என்று ஏற்கனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். அவர்கள் உயர்நீதி மன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கு முடிந்த பிறகு தான் அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறது. இந்த ஆண்டு கரும்பு விலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே இந்த மன்றத்தில் கேட்டார்கள். அந்த இனிப்பான செய்தியை விரைவிலே தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அறிவித்த விலைகளை தனியார் சர்க்கரை ஆலைகள் கொடுப்பதிலே பொருளாதார நிலைமை காரணமாக கொடுக்க இயலவில்லை என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். விலையை நிர்ணயிக்கின்ற போது, ஏற்கனவே அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டதாக ஒரு தகவல் இருக்கிறது, முத்தரப்பு மாநாட்டை கூட்டி அந்த மாநாட்டிலே முடிவு செய்து அமைச்சர் அவர்கள் விலை நிர்ணய அறிவிப்பைச் செய்வதாக ஆகவே இந்த விலைகளையெல்லாம் முத்தரப்பு மாநாட்டை கூட்டி, அவற்றை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஏற்கனவே பல முத்தரப்பு மாநாட்டினைச் நடத்தியிருக்கிறோம் ஆனால், அந்த மாநாட்டினால் நாம் இது சம்பந்தமான முடிவை செய்ய இயலாது, விவசாய பெருமக்களுடைய கருத்துக்கும், ஆலை அதிபர்களுடைய கருத்துக்கும் இடையே நிரம்ப வேறுபாடு இருக்கும், ஆகவே, அந்த வேறுபாடுகளை மனதிலே கொண்டுதான், உரிய, நியாயமான விலைகளை அதற்குப் பிறகு மாநில அரசு பரிந்துரை செய்கிறது. ஆகவே, மாநாட்டினை கூட்டுவதால் மட்டும் இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது.

**திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து கொள் முதல் செய்யப்படுகிற கரும்புக்கு மத்திய அரசிடமிருந்து ஏதேனும் மானியம் கொடுக்கப்படுகிறதா? அப்படியானால் எவ்வளவு தொகை கொடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இல்லை, இல்லை.



**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, பாண்டியராஜபுரம் ஆலை
தனியாரிடத்திலே இருக்கும்போது நான் போட்ட கேள்வி.
இப்போது வந்து இருக்கிறது. இப்போது நாம் அதை எடுத்துக்
கொண்டிருக்கிறோம். இருந்தாலும் கூட, அலங்காநல்லூர்
சர்க்கரை ஆலையும், ஒரே தொகுதி ஒரே தாலுகா, ஒரே
பக்கம் பக்கமாக உள்ளது. ஒன்று கூட்டுறவு. ஒன்று தனி
யாரிடமிருந்தது. இன்றைக்கு நம்மிடம் வந்துவிட்டது. பாண்டிய
ராஜபுரம் சர்க்கரை ஆலையினுடைய ரெக்கவரி மிகவும்
குறைத்துக் காட்டப்பட்டது. அலங்காநல்லூரில் மிகவும் நியாயமாக
காட்டப்பட்டது, அந்த ரெக்கவரி அடிப்படையிலே அலங்கா
நல்லூரில் ஒரு டன்னுக்கு 232 ரூபாய் அன்றைக்கு கொடுத்த
தாக நாங்கள் அறிகின்றோம். ஆக அந்த ரெக்கவரி அளவுக்கே
தனியார்கள் கொடுக்க வேண்டும் என்ற நிலையை அமைச்சர்
அவர்கள் உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே,
அதுதான் முறை, அந்த வகையிலே கொடுக்க வேண்டும் என்று
தான் அரசு பரிந்துரை செய்கிறது.

**திரு. க. பாரமலை :** பேரவைத் தலைவர் அவர்களே,
ரெக்கவரி அடிப்படையிலே விலை நிர்ணயிக்கப்படுகின்றபோது,
ஏற்கனவே, மத்திய அரசாங்கம் 165 ரூபாயாக அறிவித்திருக்
கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள்
அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மதுரை சுகர்ஸ், பாண்டிய
ராஜபுரம் ஆலை செயல்படாத காலத்தில் அங்கிருந்து வெளியிலே
இருக்கின்ற சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பியபோது, சர்க்கரை
சத்து என்ற அடிப்படையில், ஏறக்குறைய 8.5 சதவிகிதம்
சர்க்கரை சத்துள்ள அந்த கரும்புகளுக்கு 263 ரூபாய் அந்த
ஆலைகள் வழங்கி இருக்கின்றன. அப்படிப்பட்ட அந்த விலையை
இந்த ஆண்டிலும் கிடைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா
என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே,
ஏற்கனவே, அரசு விலையை அறிவித்திருக்கிறது. அவர்கள்
கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறோம். அதிலே
கூட சர்க்கரைச் சத்தினுடைய அடிப்படையிலே, அதிகமான
சர்க்கரை சத்து இருக்குமானால், அதிகமான தொகையை
அவர்கள் பெற வாய்ப்பிருக்கிறது.

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே,
நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய பதிலில்,
அதாவது ரெக்கவரி அடிப்படையிலே கொடுத்தாலும் கூட, தனி
யாருக்கு போடப்படக்கூடிய கரும்பினுடைய ரெக்கவரி குறைவு.
அது எப்படியோ திருட்டுத்தனமாக நடப்பதாக நாங்கள் அறி
கின்றோம், நாங்களும் கரும்பு விவசாயி என்ற முறையிலே
அதை அறிகின்றோம். பாண்டியராஜபுரத்திலே வரக்கூடிய

கரும்பு 8 பாயிண்டுக்கு கம்மியாக வருவதாகவும், அலங்கா நல்லூரில் வரக்கூடிய கரும்பு கிட்டத்தட்ட 11 பாயிண்ட் வரக் கூடிய அளவுக்கு இருப்பதாகக் கணக்கு இருக்கிறது. ஆகவே, தனியார் முதலாளிகள் ரெக்கவரியைக் குறைத்துக் காட்டுகிறார்களே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், அரசுக்கு ஒரு டன் கரும்பு உற்பத்தியானால், சர்சார்ஜ், எக்சைஸ் மொலாசஸ், இதன் மூலமாகக் கிட்டத்தட்ட 350 ரூபாய் கூட லாபம் கிடைக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறதே, அதிலிருந்தாவது கரும்பு விவசாயிகளுக்கு இன்னும் சற்று உயர்த்தி, டன்னுக்கு 200 ரூபாய்க்கு மேல் ரூ. 250, ரூ. 300 என்ற அடிப்படையிலே கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழி வகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தனியார் ஆலைகளிலே இத்தகைய தவறுகள் நடக்குமானால், அதைக் கண்டுபிடிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கவும் அரசு நிச்சயம் முன்வரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்தின் அடிப்படையிலே, ஏற்கனவே அந்த விலையைப் பற்றி மறுபரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்தேன்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியார் ஆலை அதிபர்கள் எல்லாம் கோர்ட்டுக்குச் சென்று வழக்காடுகிறார்கள் என்று எல்லாம் குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்களுக்கும், தொழில் அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். கரும்பு உற்பத்தி பண்ணுகிற சாகுபடி யாளர்களுக்கு என்ன முட்டுக்குழிச் செலவு, சாகுபடிச் செலவு என்ன என்பதெல்லாம் தெரியும். கூட்டுறவுத் துறையிலே ஆலைகள் லாபகரமாக இயங்குகிறதா, தனியார் துறையிலே லாபகரமாக இயங்குகிறதா என்பதை நமது அரசு நன்றாகப் புரிந்து இருக்கிறது. இருப்பினும், ஆலை அதிபர்கள் ஏமாற்று வதற்காகக் கோர்ட்டுக்குப் போய், உங்களையும் ஏமாற்றப் பார்க்கிறார்கள், விவசாயிகளையும் ஏமாற்றப் பார்க்கிறார்கள். எங்களையும் ஏமாற்றப் பார்க்கிறார்கள். அதற்கு இடம் அளிக்கக் கூடாது. இந்த ஆண்டு கூட, பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே 70, 80 இலட்சம் ரூபாய் லாபம் வந்திருப்பதாக அறிகிறோம். அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் அது வந்து இருக்கிறது. இப்படி ஆலைகள் நல்ல லாபகரமாக இயங்கும் போது, தனியார் துறைக்கு மட்டும் லாபம் இல்லாமல் போய் விடுமா? ஆகவே, சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளுக்கு ஏராளமான முட்டுக்குழி செலவு, இதர செலவுகள் எல்லாம் ஒன்றுக்கு இரண்டாக, இரட்டிப்பாக ஏற்பட்டு இருக்கிற காரணத் தினால், சென்ற ஆண்டு, எங்களுடைய பாலக்கோடு 8.5 சத விகிதம் கரும்புக்கு நம்முடைய அரசாங்கம் 185 ரூபாய் விலை நிர்ணயித்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு, மத்திய சர்க்கார் விலையை கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று மாநில சர்க்காருக்கு



தக்க அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். தனியார் துறைக்கும், அவர்கள் கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதை எல்லாம் ஒட்டி, சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு இந்த ஆண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் 185 ரூபாய் சென்ற ஆண்டு விலையையே நிர்ணயித்து இருப்பதாக அறிகிறேன்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** ஆக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இன்றைக்குக் கூட விவசாயிகளுடைய கோரிக்கை களை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாய சாகுபடியாளர்கள் சம்மேளனத்தினுடைய கூட்டம் கூட்டியது, தெரியும். சென்ற 4 ஆம் தேதியிலிருந்து, 8 ஆம் தேதி வரை, ஒரு வேலை நிறுத்தப் போராட்டம், கரும்பு ஆலைகளுக்கு சப்ளை செய்வதை நிறுத்தி தங்களுடைய அதிருப்தியையும், அதிர்ச்சியையும் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த நிலைமைகளை எல்லாம் அரசு நன்றாகப் புரிந்து கொண்டு இருக்கிறது. கருணையுள்ள அரசு, ஏழைவிவசாயி களுக்குக் கருணை காட்டக் கூடிய அரசு, விவசாயிகளுக்கும் கருணை காட்டி, ஆலை அதிபர்கள் பக்கம் இல்லாமல், அந்த விலையை அளிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கரும்பு விவசாயியாக இருக்கிற காரணத் தால் அவருடைய உணர்வுகளை எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். தனியார்கள் நீதிமன்றத்திற்கு எந்த நோக்கத்திற்காகப் போகிறார்கள் என்கிற உண்மையைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்டினேன். இந்த ஆண்டு கரும்பு உற்பத்தியைப் பொறுத்த வரையில் உரிய விலை நிர்ணயிப்பதை அரசு மீண்டும் பரிசீலனை செய்யும்.

**திரு பொ. உத்திராபதி:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரை, தற்போது கரும்பு வெட்டப்பட்டு ஆலைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த ஆலைகளைத் துவக்குவதற்கு முன்னதாக இந்தப் பிரச்சினையை அரசு தீர்த்திருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. நான் கேட்பதெல்லாம், சர்க்கரைக்கு மூட்டைக்கு ரூ. 40– உயர்த்தப் பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கரும்பு விவசாயிக்கு மற்ற மாநிலங்களை விட தமிழகத்திலே டன்னுக்குக் குறைவாகக் கொடுப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள். அது உண்மையா? அப்படியானால், மற்ற மாநிலங்களுக்கும், நம்முடைய மாநிலத்திற்கும் விலையில் என்ன வித்தியாசம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பதோடு, இந்த விலை அறிவிப்பை

காலம் தாழ்த்தாமல் அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு இனிப்பு வழங்குவதுபோல் உடனே அறிவித்தால், விவசாயிகளுக்கு மகிழ்ச்சி கரமாக இருக்குமே!......(மணியடிக்கப்பெற்றது)....

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் சேர்த்துத்தான் அ சு பரிசீலிக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கிறபோது அரசு நிர்ணயித்த விலையை வழங்குவதில், தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு போது மான நிதிவசதி இல்லை என்று அவர்கள் சொல்வதாக குறிப்பிட்டார்கள். முதலாளிகள் தரப்பிலே சொல்லப்படுகிற இந்த கருத்தை அரசு அங்கீகரித்து விட்டதா? அவர்களுக்கு உண்மையிலேயே நிதி போதவில்லையென்று. வரையறுத்துச் சொன்ன நீதிபதி யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள் என்ற உண்மைதான் தெரியும். நீதிபதி யார் என்று எனக்குத் தெரியாது.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை நிர்ணயிப்பதைக் குறிப்பிடும்போது அரசு அனைத்தையும் பரிசீலிக்கிறது என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக இந்த ஆண்டு மத்திய அரசும், விலை நிர்ணயக் கமிஷனும் நிர்ணயித்திருக்கக்கூடிய விலை போதுமானதாக இருக்கிறது என்று யாரும் சொல்லவில்லை. அதுவே பற்றவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடிய நேரத்தில், இங்கே மாநில அரசு, ஒவ்வொரு மாநில அரசும் செய்வது போல சென்ற ஆண்டு இருந்த அந்த மார்ஜின் இல்லாத காரணம் என்ன? சென்ற ஆண்டு மத்திய அரசு ரூ.140 அறிவித்தபோது, இங்கே மாநிலஅரசு ரூ.45 சேர்த்து ரூ. 185 அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 165 அறிவிக்கப் பட்டதற்குப் பிறகு, அதே மார்ஜின் ரூ. 45 என்ற அளவில் அறிவிப்பதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது? கன்ட்ரோல் சர்க்கரை விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. வெளி மார்க்கெட் சர்க்கரை விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த லாபம் முழுவதும் ஆலை களுக்குத்தான் சேர்கிறதே தவிர, விவசாயிகளுக்கு எந்த லாபமும் இல்லை. நான்கு மாதங்களுக்குப் பிறகு அந்தக் கரும்பை அறுத்து, அந்த விலையில் விற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்த விவசாயிகளுக்குச் சென்ற ஆண்டு கொடுத்ததைப் போல, இந்த ஆண்டும் கொடுப்பதற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட நாம் அதிகமாகத்தான் நிர்ணயிக்கிறோம். காரணம், விவசாயிகளுக்கு அது போதுமானதாக இருக்காது என்பதை உணர்ந்துதான் நாம்



அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்கிறோம். அந்த வகையில்தான் இந்த ஆண்டும் விவசாயிகளுக்கு அத்தகைய விலையை கொடுக்க வேண்டும் என்றும், அதே நேரத்தில், தனியார் ஆலை முதலாளிகள் நீதிமன்றங்களுக்குப் போகின்ற நிலைமைகள் ஏற்பட்டு, தடை வாங்கக்கூடிய நிலைமை வரக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டும், கூட்டுறவுத் துறையின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டும்தான் இதுபற்றி அறிவித்திருக்கிறது. மேற்கொண்டும் அரசு இதுபற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழக நிதி உதவி.

72—(*வினா எண். 1595)—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள சில ஊர்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் நிதி உதவி செய்ய முன் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 1969-70-ம்ஆண்டு முதல் ஆயுள் பாதுகாப்பீட்டுக் கழகம் நகர்ப்புற குடிநீர் திட்டங்களுக்கு கடனுதவி அளித்து வருகிறது. 1983-84-ம் ஆண்டு முதல் கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்கும் கடன் உதவி தந்துதவுகிறது. 1984—85 முடிய 294 நகர்ப்புற திட்டத் திற்கு மொத்தம் ரூ. 76.50 கோடி மற்றும் 226 கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ. 11.20 கோடி கடன் தந்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே. ஆண்டுக்கொருமுறை தீபாவளியும் பொங்கலும் வருவதைப்போல் தமிழகத்திலே ஆண்டுக்கொரு முறை வறட்சி என்பது நிரந்தர நிலையாகிவிட்ட காரணத்தினால் எல்லா ஊர்களி லும் குடிநீர் பற்றாக்குறை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலே அரசு இதற்காகக் கடன் பெற் றுள்ளதைப் போல வேறு ஏதாவது நிறுவனங்களிலிருந்து தமிழக அரசு குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காகக் கடன் பெற்றுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடமிருந்தும் கடன் உதவி பெற்றிருக்கிறோம். அதிலே 1 0 கோடி ரூபாய் அளவில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

திரு. என்: எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வழங்குகின்ற திட்டத்தில் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற ஊர்களில் ஆய்வு செய்வதற்காக என்று இன்வெஸ்டிகேஷன் பீஸ் கட்ட வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. குறிப்பாகப் பேரூராட்சிகளிலே நிதிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினாலே இன்வெஸ்டிகேஷன் பீஸ் முதலிலே வசூலிக்கப்படாமல் குடிநீர் வழங்கிய பிறகு கடனை ஒட்டு மொத்தமாகக் கணக்கிட்டு பின்னாலே வசூலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

## மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகள்.

73—(*வினா எண். 361) டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகளுக்கு வாகன வசதியும், தனியாக நிர்வாக அலுவலக வசதியும் இல்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) இவைகளை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே : (அ) மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகளுக்கு வாகன வசதி தற்பொழுது இல்லை. ஆனால் நிர்வாக அலுவலக வசதி உள்ளது.

(ஆ) மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகளுக்கு வாகன வசதி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

திரு. எஸ். எ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவ மாவட்ட அதிகாரிக்கு வாகன வசதியும் அலுவலக வசதியும் செய்து தராமல் இருந்தால் அந்த அதிகாரி எப்படிச் செயல்படுவார்? அதைச் செய்வதற்கு பணம் பற்றாக் குறை என்ற காரணமா அல்லது அதற்கான திட்டம் அரசிடம் இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அண்மையில் மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகள் District Siddha Medical Officers என நாம் அறிவித்திருக்கிறோம். அவர்களுக்கு அலுவலகத்திற்கு வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம்.





சென்ற 8 ஆண்டுகளிலே இதற்காக நாம் எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதைப் பார்க்கலாம். 1977–78 ஆம் ஆண்டிலே 66 லட்ச ரூபாய் இந்திய முறை மருத்துவத்திற்காக செலவிட்டிருக்கிறோம். 1985–86-இல் 3,30,47,000 ரூபாய் செலவு செய்து இருக்கிறோம். இப்படி ஏறக்குறைய ஆரம்பத்தில் இருந்ததை விட 5 மடங்குக்கு மேலே தொகையை 8 ஆண்டுக்காலத்திலே ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே நிதிநிலைமைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சித்த மருத்துவப் பல்கலைக் கழகம்.

74—(*வினா எண். 2074) திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றினைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ): சித்த மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்று துவங்குவது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரே வரியில் சித்த மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கின்ற உத்தேசம் தற்போது இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஒருவேளை ஆங்கில மருத்துவ முறைக்கு அலோபதி மருத்துவ முறைக்கு ஈடான செயல்திறன் சித்த மருத்துவ முறையில் இல்லை என்று இந்த அரசு கருதுகிறதா? "நோய்நாடி நோய்முதல் நாடி, அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்." என்று மருத்துவ முறைக்கே ஒரு வழிகாட்டக் கூடிய முறையாக இருந்த சித்த மருத்துவம், அலோபதி, ஹோமியோபதி, யூனானி, ஆயுர்வேதம் ஆகிய மருத்துவ முறைகளுக்கு எல்லாம் முதன்மையானது. ஏதோ காலத்தால் இன்றைக்கு அது பலவீனப்பட்டிருந்தாலும் அது வளரவேண்டிய ஒன்று என்பதை மனதிலே நிறுத்தி சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கு இந்த அரசு இனியாவது விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

[1986 சனவரி 21

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அகில இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் கூட மருத்துவப் பல்கலைக் கழகமே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் இங்கே நம்மைப் பொறுத்த வரையில்—தமிழகத்தைப் பொறுத்தவரையில், நான் ஏற்கனவே சொன்ன பதிலில் சொன்னது மாதிரி 66 இலட்சம் ரூபாயிலிருந்து கிட்டத்தட்ட மூன்றரை கோடி ரூபாய் வரையில் சென்ற ஏழாண்டுகளில் செலவழித்துக் கொண்டிருக்கிறோம் என்பது சித்த வைத்தியத்திற்கு நாம் கொடுக்கின்ற முக்கியத்துவத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி மூலமாக, மறைமுகமாக, நாகரிகமான முறையிலே சொன்ன அந்தக் குற்றச்சாட்டு மறுக்கப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் சித்த மருத்துவம் சம்பந்தமாக இப்பொழுது இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. அந்த இரண்டு கல்லூரிகளுக்காக ஒரு பல்கலைக் கழகத்தைத் துவக்குவது என்பது அவ்வளவு சாத்தியமாகஇருக்காது, அது ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய கருத்தாகவும் இல்லை.

(முற்பகல் 9–50)

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சித்த மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்ற ஒரு கருத்து டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலேயே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே சென்றபொழுது ஆயுர்வேதப் பல்கைலக் கழகம் என்று டெல்லியில் இருக்கிறது. அதேபோன்று திருவனந்தபுரத்திலேயும் ஒன்று இருக்கிறது; சரஸ்வதி மகாலில் பல ஓலைச் சுவடிகளில் சித்த மருத்துவம் என்பது உயர்ந்தது; இயற்கையோடு இயைந்தது என்ற முறையில் சிறந்த சுவடிகள் இருக்கின்றன. இவைகள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு சித்த மருத்துவ முறைகள், ஆயுர்வேதத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்ற முறைகள் இருக்கின்றன. பல்கலைக் கழகம் அமைந்தால், சித்த மருத்துவம்தான் அலோபதி முறையைவிட சிலாக்கியமானது என்பதை நிரூபிக்க முடியும். இதற்குப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்கள் வேலூரில் ஆப்பரேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. மு. இராமநாதன் : அலோபதி முறை கைவிடப்பட்டு, சில கேஸ்கள் சித்த மருத்துவ முறையில் நிவர்த்தியாக்கப்பட்டிருக் கின்றன. ஆகவே, பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்ற இந்த வேண்டுகோளை அமைச்சரவர்களுக்குத் தங்கள் மூலமாக வைத்திருப்பதன் காரணம், சித்த மருத்துவம் பற்றிய நாடோடிப் பாடல்கள் பல நாடு முழுவதும் பரவிக் கிடக்கின்றன. எனவே,



1986 சனவரி 21]

நிபுணத்துவம் உடையவர்கள் கலந்து இதை ஒருங்கிணைத்தால் இந்தத் துறை செழிப்படையும். அதற்கு இந்தப் பல்கலைக் கழகம் பயனுடையதாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்து இதற்கு முன்முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக, இப்பொழுது சென்ற ஆறேழு ஆண்டுகளுக்கிடையிலே நாம் எவ்வளவு தொகையை செலவழித்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டாகச் சொன்னேன். அதுமட்டுமல்லாமல், நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் இன்றைக்கு சித்த மருத்துவ முறைக்கு நல்ல முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பல்வேறு வகைகளில் சிறப்பாக, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பாராட்டும் அளவிற்கு இந்தத் துறை வளர்ந்து கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் மறுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஏதோ பல்கலைக் கழகம் துவக்குவதாக ஒரு பிரச்னை ஏற்பட்டது மாதிரியாக, யோசனையை சொன்னது மாதிரியாகச் சொன்னார்கள். நம்மடத்திலே ரெக்கார்டுகள் இருக்கின்றன, அப்படிப் பல்கலைக் கழகம் துவக்குவதுபற்றி எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை அந்த நேரத்தில். ஆனால் நாம் படிப்படியாக சித்த மருத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுக்கு ஏற்கனவே நான் இந்த மாமன்றத்திலே நன்றி தெரிவித்திருக்கிறேன், பழனியில் சித்த மருத்துவக் கல்லூரி வந்ததற்காக. இப்பொழுது அதில்—இந்தக் கேள்விக்கு அது சம்பந்தம் இல்லாவிட்டாலும்கூடக் கேட்கிறேன்—அதிலே மாணவர்களைச் சேர்ப்பதிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத துணைக் கேள்வியைக் கேட்கக் கூடாது. உறுப்பினரே, மூலக்கேள்விக்குத் தாம் கேட்பது சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார். அப்படியிருக்கும்போது How can the Minister answer?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : I am coming to the point Sir. முடித்து விடுகிறேன். அதிலே, மாணவ, மாணவிகளைச் சேர்ப்பதில் 50 பேர்கள் சேங்க்ஷன் என்று இருந்தும், இதுவரையில் 25 பேர்கள் தான் சேர்ந்திருக்கிறார்கள். எனவே, பாக்கியுள்ளவர்களையும் உடனடியாகச் சேர்க்க வேண்டும். அத்துடன், அதில் ஆசிரியர்களை நியமனம் செய்வதிலேயும் இன்னும் காலதாமதம் இருக்கிறது. எனவே, பயோ கெமிஸ்ட் போன்றவர்களையும் நியமனம் செய்ய வழிவகை செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 சனவரி 21

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிச்சயமாகச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தெங்குமராட்டா கிராமத்தில் சுகாதார நிலையம்.

75—(* வினா எண். 1032)—திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட தெங்கு மராட்டா கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெங்குமராட்டா என்பது என்னுடைய தொகுதியில் ஒரு தீவாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 80 கிலோ மீட்டர் தூரம் சென்று தான் மக்களுடைய குறைகளைக் கேட்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அங்கே நான் நேரில் சென்று கேட்டபொழுது அந்தப் பகுதி மக்களுக்கு எந்த விதமான மருத்துவ வசதியும் இல்லாத காரணத்தால், நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில், இந்த ஆண்டு அதை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நெடுகுலா, கட்டபெட்டு என்ற இந்த இரண்டு இடங்களிலே ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், 2355 ஜனத்தொகை உள்ள தெங்குமராட்டா என்ற அந்தக் கிராமத்தில் ஒரு தாய்-சேய் நல விடுதி செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து நிச்சயமாகப் பரிசீலிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகிரி மருத்துவமனை.

76—(* வினா எண். 3513)—திரு. ஆர். ஈஸ்வரன் மற்றும் திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சிவகிரி மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை படுக்கைகள் கொண்டதாக கட்டப்படும்?



1986 சனவரி 21]

(இ) எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) 20 படுக்கைகள்.

(இ) அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரி மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா? அது எப்பொழுது கட்டிக் கொடுக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ மனையாக விஸ்தரிக்கக்கூடிய ஒரு யோசனை இருக்கிறது என்பதை தான் மூலக்கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே சொன்னேன். அதற்கு ரூ. 4.55 இலட்சம் மதிப்புள்ள ஒரு திட்டத்தை மெடிக்கல் சர்வீஸ் இலாகாவிடமிருந்து நாம் பெற்றிருக்கிறோம். அது பரிசீலனை செய்யப்பட்டு, நம்முடைய நிதிநிலைக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனைக்குரிய இடங்கள் எல்லாம் தயாராக இருக்கின்றன. மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்ட நிலையில் எப்பொழுது கட்டி முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்ட்—2 ஸ்கீம் ஃபைனலைஸ் முடிந்த பிறகு தான் சொல்லமுடியும். இதற்கென்று ரூ. 4.55 இலட்சம் திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் தொழு நோய் அதிகமாக இருப்பதாகவும். தமிழகத்திலே சிவகிரி பகுதியிலே அதிகமாக இருப்பதாகவும், ஆராய்ச்சிக் குறிப்புகள் வெளியிடு கின்றன. ஆகவே, அமைக்கப்படுகின்ற அந்த மருத்துவ மனையிலே தொழுநோய்ப் பிரிவு ஒன்று ஏற்படுத்த அதற்கான தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? ஏற்கனவே சிவகிரியிலேயிருந்த தொழுநோய்ப் பிரிவை சங்கரன்கோவிலுக்கு மாற்றிவிட்டார்கள். அதை மீண்டும் சிவகிரியிலேயே வைத்து, அங்கே இருக்கக்கூடிய தொழுநோயாளிகளுக்குத் தக்க பரிகாரம் காண அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 சனவரி 21

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய்ப் பிரிவைப் பொறுத்த வரையிலே தமிழகத்திலே கூடுதலாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக, தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களை 'மல்டி டிரக் ரெஜிமென்ட்' என்ற திட்டத்திலே எல்லைக்குள்ளே கொண்டுவருவதற்கு நாம் திட்டம் தீட்டியிருக்கிறோம். மத்திய அரசாங்கமும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, வெகு விரைவில் இந்தத் தொழுநோய்க்கு நாம் ஒரு நல்ல பரிகாரம் காணுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 77 முதல் 80 வரை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

கிழக்குக் கோயில் பகுதியில் சாக்கடை அமைப்புப் பணிகள்.

வினா 19—திரு. கு. ரமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாநகரத்தின் கிழக்குப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தில் குழாய்கள் பாதிக்கப்பட்டு சில ஆண்டுகளாயும் எதுவும் செய்யப்படாமல் விடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வேலைகள் நடைபெறாமல் போனதற்கு என்ன காரணம்?

(இ) அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கழிவுநீர் சுத்தப்படுத்தும் குளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கழிவுநீர் உந்து குழாய் பெறப்பட்டு அதைப் பதிக்கும் வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கேட்கப் பெற உள்ளது.

(இ) இப்பணிகள் இரண்டு ஆண்டுகளில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1986 சனவரி 21]

2—

கோவை நகரை அழகுபடுத்துதல்.

வினா 72—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரை அழகுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

3—

புதிய மருத்துவக் கல்லூரிகள்,

வினா 75—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஒரு புதிய மருத்துவக் கல்லூரி காமராஜர் மாவட்டத்தில் தொடங்க அரசு பரிசிலனை செய்துள்ளதா?

விடை —

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

4—

கும்பகோணம் பேருந்து நிலையம்.

வினா 77—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணம் நகரப் பேருந்து நிலையம் போதிய இடவசதி இன்றி செயல்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை விரிவுபடுத்தவோ அல்லது வேறு இடத்திற்கு மாற்றியமைக்கும் திட்டமோ அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கும்பகோணம் நகராட்சியில் புதிய இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க நகர் ஊரமைப்பு வாரியக் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் ரூ.23.00 இலட்சம் செலவில் ஏற்கனவே தொடங்கப்பட்டு தற்பொழுது அடித்தளம் மற்றும் தூண்கள் கட்டப்பட்டுள்ளன.

5—

### பாம்புத் தோல் ஏற்றுமதி.

வினா 79—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளத்தனமாக பாம்புத்தோல் ஏற்றுமதி செய்வதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) 1983-84-ல் கள்ளத்தனமாக பாம்புத் தோல் ஏற்றுமதி செய்து கண்டுபிடிக்கப்பட்டவர்கள் விவரம் யாது;

(இ) அரசே பாம்புத் தோல் ஏற்றுமதி செய்யும் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

(அ) பாம்புத் தோல் ஏற்றுமதி மத்திய அரசின் ஏற்றுமதி கட்டுப்பாடு விதிக்கு (Export Control Order) உட்பட்டது. மாநில அரசைப் பொறுத்தமட்டில் கள்ளத்தனமாக பாம்புத் தோல் வியாபாரம் செய்வதைத் தடுக்க வனக் குற்றங்களைத் தடுப்பதற்கென்று நிறுவப்பட்டுள்ள நடமாடும் வனப்பாதுகாப்புப் படைகள் குற்றம் புரிபவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்கின்றன.

(ஆ) கள்ளத்தனமாக பாம்புத் தோல் ஏற்றுமதி செய்து பிடிபட்டவர் விவரம் தனியாக இல்லை. ஆனால், சட்டத்திற்குப் புறம்பாக, உரிமம் இல்லாமல் வைக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட பாம்புத் தோல்களின் விவரங்கள் சில பின் வருமாறு:—



| வருடம். | தோல்களின் எண்ணிக்கை | சுமார் மதிப்பு | கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | ஈடுபட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை. | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1983—84 | 64,445 | ரூ 6 இலட்சம். | 5 | 5 | 2 |
| 1984—85 | 1,35,182 | ரூ.10.50 இலட்சம். | 31 | 51 | 9 |
| | 225 பாம்பு தோல் பொருட்கள். | ரூ.2,500 | | | |

(இ) இல்லை.

6—

### வைக்கோலில் இருந்து காகிதம் தயாரித்தல்.

வினா 147—திரு. கு. சுப்பராயன், திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கும் வைக்கோலையும் வடபாதி மங்கலத்தில் கிடைக்கும் கரும்பு சக்கையையும் பயன்படுத்தும் வகையில் அப்பகுதியில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

7—

### சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 179—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் அருகில் மேட்டூர் சாலையில் சரபங்கா ஆற்றின் குறுக்கே உள்ள குறுகிய பாலத்தை அகலமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

8—

ஒன்றியப் பகுதிகளில் வீட்டு வசதித் திட்டம்.

வினா 186—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டத்தை பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பெரிய நகரங்களைச் சுற்றியுள்ள 70 பஞ்சாயத்து நகரங்களில் வீட்டுவசதித் திட்டங்களை செயல்படுத்த தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம் உத்தேசித்துள்ளது. மேற்கண்ட பகுதிகளில் வீட்டுவசதித் தேவை (Demand) கணிக்கப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

9—

மேட்டூர்—ஆத்தூர் பகுதிகளில் குடிநீர் வழங்கல்.

வினா 190—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டு மத்தியில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.



10—

புதிதாக நடப்பட்ட மரங்கள்.

வினா 314—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் புதிதாக நடப் பட்ட மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு?

விடை—

(அ) 1106.860 லட்சம் மரங்கள்.

(ஆ) ரூ. 14,74.70 லட்சம்.

11—

தென்காசியிலுள்ள காசிவிஸ்வநாதர் ஆலயத் திருப்பணி.

வினா 332—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதர் ஆலயத் திருப் பணிக்கு அரசு ஏதாவது உதவி செய்துள்ளதா?

விடை—

தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதர் ஆலயப் திருப் பணி வேலைக்கு இதுவரை அரசு நிதி உதவி ஏதும் அளிக்க வில்லை.

12—

ஜெயங்கொண்டத்தில் கலைக் கல்லூரி.

வினா 398—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டத்தில் ஒரு அரசுக் கலைக் கல்லூரி அமைக் கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

விடை—

இல்லை.

13—

ஜெயங்கொண்டம் நகருக்கு சாக்கடை அமைத்தல்.

வினா 408—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் நகரத்தில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

காவிரி நீர் மாசுபடுவதைத் தடுத்தல்.

வினா 421—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நீரில் அசுத்தங்களும் ஆலைகளின் கழிவுநீரும் கலப்பதால் உயிர்ச் சேதமும், பயிர்ச் சேதமும் ஏற்படுகிறது என்று நிபுணர்கள் குழு அரசிடம் சுட்டிக் காட்டி இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், இதை நிவர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

விடை—

(அ) காவிரி ஆற்றில் உள்ளாட்சி மற்றும் தொழிற்சாலைகளின் கழிவுநீர் கலப்பதால் நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப் படலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஆ) அனைத்து உள்ளாட்சி மன்றங்களின் மூலமும் தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலமும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

15—

முதுமலை காட்டில் உள்ள யானைகள்.

வினா 438—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985 ஆம் ஆண்டு பிப்ரவரியில் முதுமலை சரணாலய காட்டில் மூன்று யானைகளைக் கொன்று தந்தங்களை எடுத்துச் சென்றதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

16—

சென்னை நகரில் இளம் பிள்ளை வாதத் தடுப்பு நடவடிக்கைகள்.

வினா 454—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் குழந்தைகளுக்கு அதிக அளவில் ஏற்படும் இளம்பிள்ளை வாதத்தை தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

விடை—

சென்னை நகரில் மூன்று மாதம் முதல் பனிரெண்டு மாதம் வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு பல்வேறு திட்டங்களில் இளம் பிள்ளை வாத தடுப்பு மருந்து (Oral Polio Vaccine) அளிக்கப்பட்டு வருகிறது.

17—

வத்திராயிருப்பு ஒன்றியத்தில் காலரா தடுப்பு நடவடிக்கை.

வினா 457— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தில் 1984 ஆம் ஆண்டு காலராவினால் பாதிக்கப்பட்டு பலர் இறந்ததாகவும் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசுக்கு புகார் வந்ததா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை விவரம் யாது?

விடை—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தில் 1984 ஆம் ஆண்டு காலராவினால் பாதிக்கப்பட்டதாகவும் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் ஏதும் பெறப் படவில்லை. காலரா நோயினால் பாதிப்பு மற்றும் இறப்பு ஏதும் 1984 ஆம் ஆண்டு ஏற்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(வினா 18 நீக்கப்பெற்றுள்ளது.)

19—

தஞ்சை மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்தல்.

வினா 481—திரு. இ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தை தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

20—

பிற்பட்ட மக்களுக்கான சலுகைகள்.

வினா 608—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன?

(ஆ) மத்திய அரசு என்னென்ன உதவிகளை வழங்கு கிறது?

விடை—

(அ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் ஆகியோரின் மேம்பாட்டுக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மேற்கொண்டுள்ள பல்வேறு நலத்திட்டங்கள் பின் வருமாறு:—

1. படிப்பு உதவித்தொகைகள் அளித்தல்.
2. சீர் மரபினர் பள்ளிகளில் முதலமைச்சரின் நண்பகல் சத்துணவு 15 வயது வரையுள்ளவர்களுக்கு வழங்குதல்.
3. அரசு மாணவர் இல்லங்கள் பராமரித்தல்.
4. உடைகள் வழங்குதல் (பள்ளிகள்), சீருடைகள் வழங்குதல் (மாணவ—மாணவியர் இல்லங்கள்(.
5. பள்ளிகள் நடத்துதல்.
6. சீர் மரபினர் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.



7. பாசனக் கிணறுகள் தோண்டுதல்.
8. முடிதிருத்துவோர், சலவைத்தொழிலாளர் மற்றும் போயர் ஆகியோருக்குத் தொழில் கருவிகள் வழங்குதல்.
9. பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள் மற்றும் தொழிற் பயிற்சி நிலையங்கள் நடத்துதல்.
10. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக வீட்டு மனைகள் கையகப்படுத் துதல்.
11. குழந்தை நல நிலையங்கள் நடத்துதல்.
12. பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்களைக் கட்டுதல்.
13. சலவைத்துறைகள் கட்டுதல்.
14. உணவு மானியம் வழங்குதல்.
15. வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சியாளர்களுக்காக மாணவர் இல்லங்களை ஏற்படுத்துதல்.
16. ஐ. ஏ. எஸ்., ஐ. பி.எஸ்., தொடர்பான பணிகளுக்குச் சிறப்புப் பயிற்சிக்கூடங்கள் நடத்துதல்.
17. சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சியளித்தல்.
18. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார வளர்ச்சிக் கழகம்,

(ஆ) இத்துறையின் மூலம் அமுல்படுத்தப்படும் திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து மானியமோ அல்லது வேறு நிதி உதவிகளோ ஏதும் வழங்கப்படவில்லை.

21—

ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்

வினா 622—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களையும் பஞ்சாயத்துக்களையும் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—

பரிசீலனையில் உள்ளது.

22—

கூடம் குளம் அருகே புதிய அணு மின் நிலையம்

வினா 628—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், கூடம்குளம் அருகே அணுமின் நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

23—

தமிழ் இசை ஆய்வு அறக்கட்டளை.

வினா 632—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப் பல்கலைக் கழகம் சார்பில் தமிழ் இசை ஆய்வு அறக்கட்டளை நிறுவ அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

24—

நெரிசல் நிறைந்த சாலைகளை தார் சாலைகளாக்கல்.

வினா 643—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாகனப் போக்குவரத்து மிகுந்த சாலைகள் அனைத்தையும் தார் சாலையாக மாற்றும் பெரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஆண்டுதோறும் கிடைக்கின்ற நிதி ஒதுக்கீட்டினைப் பொறுத்து சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



25—

கரும்பு விளைச்சல்.

வினா 648—திரு. இரா தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகிலேயே, தமிழ்நாடு தான் கரும்பு விளைச்சலில் முதலிடம் வகிக்கிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் கரும்பு விளைச்சல் ஒரு ஹெக்டேருக்கு 100 டன்கள். அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் முறையே 88·60 மற்றும் 80·90 டன்கள் தான். இந்தியாவில் உத்திரபிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களை விட தமிழ்நாட்டில் கரும்பு விளைச்சல் அதிகம்.

26—

முத்தெடுப்போருக்கு முகமூடிகள் வழங்கல்.

வினா 704—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கை முத்துச் சிப்பிகளை எடுப்பதற்கான பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பிராணவாயு குழாய் பொருந்திய முகமூடி கொடுக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

27—

புதிய விதைகள்.

வினா 734—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் புதிய விதைகளைக் கண்டு பிடித்து அறிவித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை *அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

28—

**ஒன்றியங்களிலுள்ள கைப்பம்புகளை பழுது பார்த்தல்.**

வினா 757—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குடிநீர் கைப்பம்புகளை பராமரிக்க கூடுதல் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோடை காலத்தில் கையிறைப்பான்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிபார்க்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கையிறைப்பான்களின் எண்ணிக்கைக்கேற்பவும், பழுதுகளை சரிபார்ப்பதற்கு ஏற்படும் கால அளவின் அடிப்படையிலும் கூடுதலான பணியாளர்களை தற்காலிகமாக நியமிக்கவும் அவர்களுக்கு தகுந்த முறையில் ஊதியம் வழங்கிடவும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

29—

**சென்னை நகரத் தெருக்களுக்கு சோடியம் ஆவி விளக்குகள்.**

வினா 776—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகர் தெருக்கள் அனைத்திற்கும் (Sodium Vapour Lamp) போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

சென்னை நகரத் தெருக்கள் அனைத்திற்கும் சோடியம் ஆவி விளக்குகள் போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள சாலைகளிலும், சாலைச் சந்திப்புகளிலும் சோடியம் ஆவி விளக்குகள் போடும் திட்டம் மாநகராட்சியால் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகராட்சிக்கு கிடைக்கக்கூடிய நிதி வசதிகளின்படி இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

---

*177—180-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





30—

**இலங்கையிலிருந்து வந்துள்ள மீனவர்களை குடியமர்த்தல்.**

வினா 785—திரு, பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இலங்கைக் கடலோரப் பகுதியிலிருந்து சிங்கள ராணுவத்தின் கொடுமை தாங்காமல் தப்பித்து படகுடன் வந்த தமிழ் மீனவர்கள் தங்கள் படகுகளை பராமரிக்கவும், தொழில் செய்யும் வகையிலும் மண்டபம், இராமேஸ்வரம் போன்ற கடலோரப் பகுதிகளில் அவர்களைக் குடியமர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இலங்கைத் தமிழ் மீனவர்களை மண்டபம், இராமேஸ்வரம் போன்ற கடலோரப் பகுதிகளில் நிலையாக குடியமர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

31—

**விவசாயக் கருவிகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணம்.**

வினா 812—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய வேலைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படும் (Chaff Cutter) கருவியை இயக்கும் மின்சாரத்திற்கு விவசாய மின் கட்டணமாக 0.15 பைசா வசூல் செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

இல்லை.

32—

**விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.**

வினா 813—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய பம்பு செட்டுகளுக்கு 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்கு பின்னால் விண்ணப்பித்துள்ளவர்களுக்கு எப்போது மின் இணைப்பு கொடுக்கப்படும்?

விடை—

விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கோரி 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்குப் பின்னால் வந்துள்ள 3,78,943 மொத்த விண்ணப்பங்களில் 25,292 விண்ணப்பங்களுக்கு நடப்பு ஆண்டு 1985-86 இல் மின் இணைப்பு வழங்கப்படும்.

[1986 ஜனவரி 21

33—

### திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பனைப்பொருள் உற்பத்தி வளாகம்.

வினா 860—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட இடங்களை வளப்படுத்தும் திட்டத்தின்கீழ் பனைப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை வளாகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில், பனைப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை வளாகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் சிறிய முதலீட்டுடன் பனைப்பொருள் உற்பத்தி மையம் ஒன்றினை நிறுவுவதற்கு தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியமும் மாநிலப் பனை வெல்ல இணையமும் ஆலோசித்து வருகின்றன.

34—

### புதிய பேருந்து வழித் தடங்கள்.

வினா 878— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாநிலம் முழுவதும் பல்வேறு வழித்தடங்களில் புதிதாகப் பேருந்து வசதி வேண்டும் என அரசுக்கு எத்தனை கோரிக்கைகள் வந்தன.

(ஆ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாநிலம் முழுவதும் பல்வேறு வழித்தடங்களில் புதிதாக பேருந்து வசதி வேண்டும் என 305 கோரிக்கைகள் வந்தன.

(ஆ) அவற்றில் 129வழித்தடங்களுக்கு தற்காலிக இசைவுச் சீட்டுகள் வழங்கப்பட்டு பேருந்துகள் இயங்கி வருகின்றன. 154 மனுக்கள் ஆய்விலுள்ளன. மீதமுள்ள 22 மனுக்களில் சொல்லப்பட்டுள்ள தடங்கள் பேருந்து போக்குவரத்திற்கு சரியில்லாமை, ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கும் வண்டிகளின் எண்ணிக்கை போதுமானதாக இருத்தல், இன்ன பிற, காரணங்களுக்காக ஏற்கப்படவில்லை.



1983 ஜனவரி 21]

35—

### சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

வினா 908—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் சிறு விவசாயிகளுக்கு இலவச மின் சாரத் திட்டத்தின்கீழ்' பயன்பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்படும் இழப்பு எவ்வளவு?

விடை—

(அ) 99,850 சிறு விவசாயிகள்.

(ஆ) ரூ. 8.70 கோடி.

36—

### குடிசைக்கு ஒரு மின் விளக்கு.

வினா 932—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசைக்கு ஒரு மின் விளக்கு மூலம் எத்தனை பேர்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது?

விடை—

1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31—ஆம் தேதி வரை 6,35,771 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

37—

### சந்தனக் கட்டைகள் திருட்டுபோவதைத் தடுத்தல்.

வினா 952—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக காடுகளிலிருந்து சந்தனக் கட்டைகள் திருடு போவதைத் தடுக்க வனத்துறையின் மூலம் தனிக்குழு அமைக்கும் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை, வனக் குற்றங்களைத் தடுக்க ஏற்கனவே மாநிலத்தில் 15 குழுக்கள் உள்ளன.

38—

### திருப்பத்தூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா 955—திரு தி. அன்பழகன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப்பிரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரிப்பதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஊராட்சி சட்டம் விதி 7 (1)-ன் கீழ் 23-5-1985-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆறு வாரங்களுக்குப் பின்னர் இதன் மீதான இறுதி ஆணை வெளியிடப்படும்.

39—

இலங்கை அகதிகளுக்கு வங்கிக் கடன்கள்.

வினா 1006—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கை அகதிகளுக்கு வங்கிகள் மூலமாகக் வணிகக்கடன் அல்லது வீட்டுக்கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இலங்கை அகதிகளுக்கு வங்கிகள் மூலமாக வணிகக் கடன் அல்லது வீட்டுக்கடன் வழங்க அரசு திட்டமிடவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

40—

காலரா, அம்மை, டைபாய்டு தடுப்பு ஊசி.

வினா 1008—திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காலரா, அம்மை, டைபாய்டு மூன்றுக்கும் சேர்த்து ஒரே தடுப்பு ஊசி போட அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அது விரைவில் செயல்படுத்தப் படுமா?

விடை—

(அ) அத்தகைய திட்டம் ஏதும் அரசிடமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

41—

கேத்தரீன் நீர் வீழ்ச்சியை சுற்றுலா மையமாக்கல்.

வினா 1022—திரு. எம். சிவக்குமார் : மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—



கோத்தகிரிக்கு அருகிலுள்ள அரவேன் பகுதியில் உள்ள 'கேத்தரீன்' நீர்வீழ்ச்சியை, சுற்றுலா தலமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

42—

ரெட்டிக்குப்பம் சாலை வடிகாலுக்கு மேல்மூடி அமைத்தல்.

வினா 1221—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை 143—வது வட்டம் ரெட்டிக்குப்பம் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்வாய்க்கு மேல்மூடி அமைக்கும் பணி மற்றும் சீரமைக்கும் பணிகள் காலதாமதம் ஆவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இப்பணிகள் துரிதப்படுத்தப்படுமா?

விடை—

(அ) சைதை 143 ஆவது வட்டம் ரெட்டிக்குப்பம் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்வாய் சீரமைக்கும் பணி ரூ.3,49,000 மதிப்பீட்டில், மாநகராட்சி நிர்வாகத்தினரால் நடைபெற்று வருகின்றது. இதற்குக் கட்டுமான தேவையான பொருட்களான சிமெண்ட், இரும்புக் கம்பிகள் முதலானவைகள் போதுமான அளவில் கிடைக்கப் பெறாததால் சீரமைக்கும் பணி முடிக்க சிறிது காலதாமதம் ஆகிறது.

(ஆ) காலதாமதம் தற்காலிகமானது. தேவையான பொருட்களை துரிதமாகப் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

43—

மதுரை நகருக்கு குடிநீர் வழங்கல்.

வினா 1255—திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளாவில் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளின் தண்ணீரை திருப்பி, மதுரை மாநகருக்கு குடிநீர் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

44—

### வீட்டு வசதி வாரிய வீடுகள் ஒதுக்கீடு.

வினா 1338—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படுகிற வீடுகளில் பின்தங்கிய வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கி வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படுகிற வீடுகள் ஒதுக்கீட்டில் ''தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு'' 18 விழுக்காடுகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பினருக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் தனி விழுக்காடுகள் தற்போது இல்லை. இருப்பினும் மொழிப்போர் தியாகிகளுக்கு என தனி விழுக்காடு ஒதுக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

45—

### எல்லா நகரங்களுக்கும் குடிசைப் பகுதி வாரியப் பணிகளை விரிவு படுத்தும் திட்டம்.

வினா 1340—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகுவீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) சென்னை நகரில் இயங்கிவரும் குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகளை எல்லா நகரங்களுக்கும் விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அது செயலுக்கு வரும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் இயங்கி வரும் குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகளை தமிழ்நாட்டில் எல்லா நகரங்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டது. முதல் கட்டமாக அதன் பணிகளை 15 இடங்களுக்கு விரிவுபடுத்த ஏற்கனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

46—

### ஏற்கப்படாத மைய அரசின் மானியத் தொகை.

வினா 1380—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1983-84 ஆம் ஆண்டில் மத்திய அரசு அளித்த மானியத் தொகையில் ஏற்கப்படாமல் திருப்பப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

1983-84 ஆம் ஆண்டில் மத்திய அரசு அளித்த மானியத் தொகையில் ஏற்கப்படாமல் திருப்பப்பட்ட தொகை (Lapsed amount) ஏதும் இல்லை.

47—

### மின் உற்பத்தி.

வினா 1411—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்த மின் உற்பத்தி திறன் எத்தனை மெகாவாட்?

(ஆ) இதில் பெரிய தொழிற்சாலைகளுக்கு எத்தனை மெகாவாட் வழங்கப்படுகிறது? சிறு தொழில்களுக்கு எவ்வளவு மெகாவாட் வழங்கப்படுகிறது?

(இ) விவசாயம் மற்றும் வீடுகளுக்கு எவ்வளவு மெகாவாட் வழங்கப்படுகிறது?

(ஈ) மொத்த பற்றாக்குறை எவ்வளவு? பற்றாக்குறைக்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) 3,344 மெகாவாட்.

(ஆ) பெரிய தொழிற்சாலைகளுக்கு 500 மெகாவாட். சிறிய தொழிற்சாலைகளுக்கு 150 மெகாவாட்.

(இ) 650 மெகாவாட்.

(ஈ) தற்போதைய பற்றாக்குறை 550 மெகாவாட்—மின் வெட்டு மூலம் நிலைமை சரி செய்யப்படுகிறது.

48 —

### திண்டுக்கல் நகராட்சி நிலத்தில் ஆக்கிரமிப்பு.

வினா 1416—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் ஒடுக்கம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சுமார் நாற்பது ஏக்கர் நிலம் தனி நபர் ஒருவரின் ஆக்கிரமிப்பில் உள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை நீக்க நகராட்சி இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

49—

மைய அரசின் அனுமதிக்காக உள்ள தொழில்கள்.

வினா 1426—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழில் தொடங்க அரசு தரப்பிலும் தனியார் தரப்பிலும் மத்திய அரசின் அனுமதி கோரி 1980–81–ல் அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) மத்திய அரசு அதில் எத்தனை தொழில்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது?

விடை —

(அ) தமிழகத்தில் தொழில் தொடங்க அரசு தரப்பிலும், தனியார் தரப்பிலும் கீழ்க்கண்டவாறு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டன:—

| | 1980 | 1981 |
|---|---|---|
| அரசு தரப்பில் .. .. | 4 | 7 |
| தனியார் தரப்பில் .. .. | 287 | 219 |

(ஆ) மத்திய அரசால் அனுமதி வழங்கியவை:

| | 1980 | 1981 |
|---|---|---|
| அரசு தரப்பில் .. .. | 3 | 4 |
| தனியார் தரப்பில் .. .. | 193 | 192 |

50 —

குடிசைக்கு ஒரு விளக்கு திட்டம்.

வினா 1428—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைக்கு ஒரு விளக்கு திட்டம் பேரூராட்சிப் பகுதியில் உள்ள குடிசைகளுக்கு வழங்கப்படுவது இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?



விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தை நகரப் பகுதிக்கோ அல்லது ஓரளவு நகரமாகியுள்ள பகுதிகளுக்கோ விரிவாக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

51 —

சங்கு குளிப்பு.

வினா 1484—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் எந்தெந்த கடற்கரைப் பகுதிகளில் சங்கு குளிப்பு நடைபெறுகிறது?

(ஆ) இதில், எத்தனை தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர்?

(இ) இவர்களுக்கு என்ன விலை கொடுக்கப்படுகிறது?

(ஈ) வேறு என்னென்ன வசதிகள் அரசு செய்து தருகிறது?

விடை—

(அ) (ஆ) (இ) மற்றும் (ஈ) பேரவை முன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

52—

சுரண்டை பெரிய குளம்.

வினா 1491—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பெரிய குளத்தில் நடப்பட்டுள்ள மரங்களின் காரணமாக குளம் மேடாகிவிட்டது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) சுரண்டைப் பெரிய குளத்தை பொதுப்பணித்துறை அலுவலர்கள் பார்வையிட்டு இக் குளத்தில் வனத் துறையால் மரங்கள் எழுப்பப்பட்டிருப்பினும் கண்மாயின் கொள்ளளவு குறையவில்லை என அறிக்கை கொடுத்துள்ளார்கள். எனவே நடவடிக்கை எடுக்க அவசியமில்லை.

* 181 182ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது

53—

பொன்னகரம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா 1506—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னகரம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா'

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

54—

ஊத்தங்கரை ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா 1508—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து மத்தூரை ஒன்றியம் ஆக அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தை பிரிப்பதற்கான மேல் நடவடிக்கை ஊராட்சி சட்டம் விதி 7(1)—ன்கீழ் 23—5—85ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 6 வாரங்களுக்குப் பின்னர் இதன் மீதான இறுதி ஆணை வெளியிடப்படும்.

55—

ஊட்டமலையைத் தனி ஊராட்சியாக்கல்.

வினா 1509—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல்—ஊட்டமலையை தனி பஞ்சாயத்து ஆக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.



56—

கல்லிடைக் குறிச்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி.

வினா 1523—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி நகர பஞ்சாயத்துப் பகுதி பொதுமக்களிடமிருந்து, பெண்கள் மேல்நிலை பள்ளி வேண்டுமென்று கேட்டு மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

57—

சீனியாபுரம் கோட்ட விவசாயிகளுக்கு மின்சக்தி வழங்கல்.

வினா 1526—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் நகர பஞ்சாயத்து சீனியாபுரம் கோட்ட விவசாயிகளிடமிருந்து, பகலில் 8—10 மணி வரை உள்ள மின் சப்ளையைக் குறைந்தது பகலில் 8—12 (4 மணி நேரம்) நீடிக்க வேண்டி மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா*

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

58—

திருப்புவனம் ஒன்றியத்தில் கையிறைப்பான்களைப் புதுப்பித்தல்,

வினா 1567—திரு. க. பாரமலை: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி திருப்புவனம் யூனியனில் அடிக்குழாய்கள் (Hand Pump) அகற்றப்பட்டு பல மாதங்கள் ஆகியும் புதிய குழாய்கள் அமைக்கப்படாததை அரசு அறியுமா?

[1986 ஜனவரி 21

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கையிறைப்பான்களைப் புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் திருப்புவனம் ஒன்றியத்தில் 29 குடியிருப்புகளில் கையிறைப்பான் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் 18 குடியிருப்புகளில் பழைய கையிறைப்பான்களை அகற்றி மேடை அமைத்து இந்தியா மார்க் கையிறைப்பான் பொருத்தி பொது மக்கள் உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மீதியுள்ள 11 குடியிருப்புகளில் விரைவில் புதிய இந்தியா மார்க் கையிறைப்பான்கள் 2 பொருத்தப்படும்,

59—

சென்னை மாநகராட்சிப் பூங்காக்கள்.

வினா 1572—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் பூங்காக்களை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஏற்கனவே உள்ள பூங்காக்களை சீர் திருத்தவும் பராமரிக்கவும் குழு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) தற்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சில இடங்களிலும், சென்னை மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட பேரூராட்சிகளில் அடங்கிய சில இடங்களிலுமாக மொத்தம் 41 இடங்களை மாநகராட்சிக்கு ஒப்படைத்தபின், புதியதாக பூங்காக்கள் அமைப்பதற்கான நடவடிக்கை சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஏற்கனவே உள்ள பூங்காக்களை சீர்திருத்தவும் பராமரிக்கவும் குழு அமைக்கும் திட்டம் இல்லை.

60—

மதுரை நகர் சாலைகளில் வாழ்பவர்களுக்குக் குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் வீடுகட்டிக் கொடுத்தல்.

வினா 1587—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1986 ஜனவரி 21]

(அ) மதுரை நகரில் சாலைகளில் வாழ்பவர்களுக்கு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டி கொடுக்கும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

61—

கடல் நீரிலிருந்து மின் உற்பத்தி.

வினா 1597—திரு. டி. ஆர். வேங்கடரமணன், திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) அது எப்போது அமுல்படுத்தப்படும்?

(இ) அதற்கு செலவு மதிப்பீடு என்ன?

விடை—

(அ) மத்திய அரசு ஏற்காததால், இத்திட்டம் கைவிடப் பட்டது.

(ஆ) மற்றும் (இ): திட்டம் கைவிடப்பட்டதால், இவ் வினாக்கள் எழ வாய்ப்பில்லை.

62—

பஞ்சாயத்துக்கள் நில அளவை.

வினா 1598—திரு. டி. ஆர். வேங்கடரமணன், திரு. ஈ. வெ. இ. ச. இளங்கோவன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) வரும் பஞ்சாயத்து தேர்தல்களுக்கு முன் பஞ்சாயத்துக்களின் நில அளவு திருத்தி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) பொதுவாக திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

63—

### மீனவர்களுக்கு வழிகாட்டி விளக்குகள்.

வினா 1606—திரு. இரா. தாமரைக்கனி, திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மீனவர்களுக்காக வழிகாட்டி விளக்குகள் எத்தனை இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) அனுமதி அளிக்கப்பட்டு, வேலை நடைபெறும் இடங்கள் எத்தனை?

(இ) இந்த ஆண்டு எத்தனை வழிகாட்டி விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

(ஈ) வழிகாட்டி விளக்குகள் இயங்காமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): 43 இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது, 18 வழிகாட்டி விளக்குகள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ளவற்றில் 7 இடங்களில் வேலை முடிக்கப்பட்டு ஒப்படைக்கும் தருவாயில் உள்ளன. 18 இடங்களில் வேலை நடைபெற்று வருகின்றன.

(இ) இந்த ஆண்டு 7 இடங்களில் வழி காட்டி விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(ஈ) செயல்பட்டு வரும் 18 வழிகாட்டி விளக்குகளில், தென்னாற்காடு மாவட்டத்தில் எம். ஜி. ஆர். திட்டில் உள்ள வழிகாட்டி விளக்கு பழுதடைந்து, இதை மீண்டும் இயங்க வைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

64—

### உணவுப் பங்கீட்டுக் கடைகள்.

வினா 1608—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது உள்ள உணவுப் பங்கீட்டுக் கடைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இது மேலும் அதிகரிக்கப்படுமா?

(இ) ஆம் எனில் அதுபற்றிய விவரம் யாது?

விடை—

(அ) தமிழ்நாட்டில் தற்போது உள்ள பொது விநியோக நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை 20,728.





(ஆ) ஆம்.

(இ) 1,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இன்னும் 98 கடைகள் திறக்கப்பட வேண்டியுள்ளது. இவை விரைவில் திறக்கப்படும்.

65—

### மணவாளக்குறிச்சி காவல் நிலையக் கட்டிடம்.

வினா 1626— திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டம், மணவாளக்குறிச்சி காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி வழங்கியும் பணி துவங்கக் கால தாமதமாவதின் காரணம் என்ன?

(ஆ) பணி எப்போது துவங்கப்படும்?

விடை —

(அ) குமரி மாவட்டம் மணவாளக்குறிச்சியில் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

(வினா 66-நீக்கப்பெற்றுள்ளது.)

67—

### அரசினர் தோட்டத்தில் உள்ள மரங்கள்.

வினா 1711—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் தோட்டத்தில் உள்ள மொத்த மரங்கள் எத்தனை?

(ஆ) கடந்த ஆண்டு வீசிய புயல்காற்றில் விழுந்த மரங்கள் எத்தனை?

(இ) விழுந்த மரங்கள் என்ன ஆயின?

(ஈ) அரசினர் தோட்டத்தில் புதிய மரங்களையும் பூங்காக்களையும் அமைக்க திட்டமுள்ளதா?

விடை—

(அ) கடந்த 1984ஆம் ஆண்டில் வீசிய புயல்காற்றுக்கு முன் உள்ள மரங்களின் எண்ணிக்கை 1,098.

(ஆ) கடந்த ஆண்டு புயல்காற்றில் விழுந்த மரங்கள் 99.

(இ) புயல்காற்றில் விழுந்த மரங்கள் பொதுப்பணித் துறையால் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

(ஈ) இல்லை.

68—

கைத்தறித் துணி ஏற்றுமதி.

வினா 1712—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலிருந்து பாரீஸ், ஜப்பான், அமெரிக்கா, இத்தாலி போன்ற வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணி என்ற பெயரில் விசைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்வதை அரசு அறியுமா?

விடை—

இப்பொருள் பற்றி அரசின் கவனத்திற்கு தகவல் ஏதும் வரப் பெறவில்லை.

69—

மணிமுத்தாற்றில் மின் உற்பத்தி.

வினா 1719—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மணிமுத்தாறு அணைத்திட்டத்தின்கீழ் மின்சாரம் தயாரிக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

விடை—

ஆம்.

70—

பெருந்துறையை நகராட்சியாக்கல்.

வினா 1788—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை, கருமாண்டி செல்லிப்பாளையம் பேரூராட்சிகளை இணைத்து, பெருந்துறை நகராட்சியாக அறிவிக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொது முதல் நகராட்சியாக செயல் படத் தொடங்கும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

71—

பிற்பட்ட மாணவர் இல்லங்கள்.

வினா 1813—திரு. பு. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பிற் படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் மாணவர் விடுதி, மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இந்த ஆண்டு புதிய விடுதிகள் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் மாணவர் விடுதிகளின் எண்ணிக்கை 414. அவற்றின் விவரம்:—

| விவரம். | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்— | | |
| பள்ளி மாணவர் விடுதி | 46 | 3,510 |
| கல்லூரி மாணவர் விடுதி | 1 | 75 |
| தொழிற் பயிற்சி மாணவர் விடுதி | 312 | 16,574 |
| சீர் மரபினர்— பள்ளி மாணவர் விடுதி | 55 | 4,409 |
| மொத்தம் | 414 | 24,568 |

(ஆ) ஆம்.

(இ) நடப்பு நிதியாண்டில் 20 புதிய விடுதிகள் பள்ளி மாணவர் மாணவியருக்கென திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

72—

சுற்றுப்புறச் சூழல் திட்டத்தின் கீழ் வழக்குகள்.

வினா 1827—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1986 ஜனவரி 21

(அ) சென்ற ஆண்டில் சுற்றுப்புற சூழ்நிலையைக் கெடுப்பதாக சென்னையில் தொழிற்சாலைகள்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அமெரிக்கன் கம்பெனி, திருமுல்லைவாயில் மற்றும மெட்ராஸ் எலக்ட்ரோ பிளேட்டர்ஸ், வேளச்சேரி ஆகிய தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

73—

அறிவியல் நூல்கள் மொழி பெயர்ப்பு.

வினா 1883—திரு.செ. செம்மலை: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தினர், அறிவியல் நூல்களை மொழி பெயர்த்து வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தை தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

74—

கோயில் நிலங்கள் மற்றும் சொத்துக்கள் நிர்வாகம்.

வினா 1884—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட கோயில்களின் நிலங்கள் மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தையும் அவற்றின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

75—

பள்ளி மாணவர்களுக்கு இலவசக் காலணிகள்

வினா 1895—திரு.எம். தங்கமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1986 ஜனவரி 21]

பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவசமாக காலணி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

76—

காஞ்சிபுரம் அருகே ஜரிகைத் தொழிற்சாலை.

வினா 1921—திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அருகில் ஜரிகைத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

77—

கல்லுப்பட்டி ஒன்றியத்தில் குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா 2002—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

"மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி ஒன்றியம், ரெட்டிப்பட்டி, மீனாட்சிபுரம், வெங்கிடாசலபுரம் ஆகிய குடிதண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ரெட்டிப்பட்டி கிராமத்தில் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய ஒரு மின்னிறைப்பான் அமைக்கப்படவிருக்கிறது. கூவலாபுரம் ஊராட்சியில் அடங்கிய மீனாட்சிபுரம் கிராமத்தில் தற்போது திறந்த வெளிக் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு இரும்பு மேல் நிலைத்தொட்டி மூலம் ஒரு மின் இறைப்பான் இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் ஒரு கை இறைப்பானும் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. வெங்கிடாசலபுரம் கிராமத்தில் ஒரு மின்னிறைப்பான் மேல்நிலைத் தொட்டியுடன் ஏப்ரல் மாதம் 1985-86-ம் ஆண்டு அமைக்கப்பட்டு தற்போது பரிசோதனையில் உள்ளது.

78—

பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்கல்.

வினா 2005—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாகத் தொழில் தொடங்க தனியார் அனுமதி கோரும் போது தொழில்துறையில் மிக பின்தங்கிய பகுதிகளில் தொடங்கிட அறிவுறுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, சேடப்பட்டி பகுதிகளில் தொழில் தொடங்கிட அறிவுறுத்தப்படுமா?

விடை—

(அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

79—

**உசிலம்பட்டி, சேடப்பட்டி பகுதிகளில் தொழிற்பேட்டை.**

வினா 2011—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சிப்காட் நிறுவனம் மூலம், உசிலம்பட்டி, சேடப்பட்டி, வட்டாரங்களில் தொழில்பேட்டை ஆரம்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

80—

**தே. கல்லுப்பட்டியில் பேருந்துப் பணிமனை.**

வினா 2014—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்று தே. கல்லுப்பட்டியில் தொடங்கிடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணிமனை கட்டி முடிக்கும் பணி எந்நிலையில் உள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தே. கல்லுப்பட்டியில் பணிமனை ஆரம்பிக்கத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டபின் வேலை ஆரம்பிக்கப்படும்.

81—

**தி. இராமநாதபுரம் கிராமத்தில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம்.**

வினா எண் 2015: — திரு. இரா. முத்தையா: மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் தி. இராமநாதபுரம் கிராமத்தில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டுகோள் விடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



82—

**வணிகத்துறையில் வருவாயைப் பெருக்குத் திட்டம்.**

வினா எண் 2057—: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வணிகத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வணிகத்துறையில் வருவாயைப் பெருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

வணிகத்துறையில் வருவாயைப் பெருக்க அரசு பல்வேறு முயற்சிகள் செய்து வருகிறது. குறிப்பாக—

(1) நடப்பு நிதியாண்டில் சாராயத்தின் மீது விற்பனை வரி 6 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசிற்கு 22 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் புளி, மிளகாய், மஞ்சள், தனியா, மிளகு ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட 5 விழுக்காடு பலமுனைவரி 8 விழுக்காடு ஒரு முனை வரியாக மாற்றப்பட்டுள்ளது. இதன்கண் சில்லரை வியாபாரிகள் மூலமாக ஏற்படும் வரி ஏய்ப்பு தடுக்கப்பட்டு அரசிற்கு வரவேண்டிய வருவாய் முழுமையாக முதற்கட்டத்திலேயே வசூலிக்கப்பட்டுவிடும்.

(2) அரசியல் நிர்ணயச் சட்ட 46-வது திருத்தத்தினைத் தொடர்ந்து தவணை முறை விற்பனை, பணி ஒப்பந்தங்களுக்கு முறையே 29—5—1984 மற்றும் 1—10—1984 முதற்கொண்டு வரி விதிக்கப்பட்டு வருகிறது. மற்றும் குத்தகை இனங்களுக்கு விதிக்கப்பட வேண்டிய வரி விகிதம் குறித்து ஆராய இரு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பரிந்துரைகளைப் பெற்று ஆராய்ந்து அரசு வரி விதிக்கும். இதன் மூலமும் கூடுதல் வருவாய் அரசிற்கு கிட்டும்.

(3) மற்றும் துறையின் செயலாக்கப் பிரிவினரால் திடீர் சோதனைகள் மற்றும் சோதனைச் சாவடிகள் மூலம் வரி ஏய்ப்பு தடுக்கப்பட்டு அரசுக்கு வருவாய் கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

83—

**சென்னை நகரப் போக்குவரத்து நெரிசலைத் தடுத்தல்.**

வினா 2187— திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கவும், போக்குவரத்தினை மேம்படுத்தவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன:—

(1) போக்குவரத்து விதிகளைத் தீவிரமாக செயற்படுத்துதல்.

(2) சாலைகளையும் அதன் சந்திக்கும் இடங்களையும் திட்டமிட்டு அமைத்து பராமரித்தல்.

(3) போக்குவரத்துக் கல்வியின் மூலம் மக்களுக்கு அறிவூட்டுதல்.

(4) சாலையின் மையத்தில் தடுப்பு சாதனங்கள் அமைத்தல்.

(5) அகலமில்லாத சாலைகளை ஒரு வழிப் பாதையாக்கி போக்குவரத்து ஒழுங்குப்படுத்தப்படுகிறது.

(6) மெதுவாகச் செல்லும் ஊர்திகளுக்குப் படிப்படியாக உரிமங்கள் வழங்காமல் குறைத்து, இறுதியில் அவற்றை நகரில் போக்குவரத்திலிருந்தே நீக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(7) ஜார்ஜ் டவுன் மற்றும் பார்க் டவுன் ஆகிய இடங்களிலுள்ள லாரி கொட்டகைகள் நகரின் எல்லைக்கு அப்பால் அப்புறப்படுத்தப்படும். மேலும் நகரின் சாலைகளில் லாரிகளின் நடமாட்டங்களைப் படிப்படியாக கட்டுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(8) சுரங்க நடைபாதையும் மேம்பால நடைபாதையும் கட்டி பாதசாரிகள் சாலையின் குறுக்கே நடக்காமல் செய்தல்.

84—

பட்டுக்கோட்டை தொகுதியில் காகித தொழிற்சாலை.

வினா 2188—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதியில் காகித தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

85—

கிராமப்புற வீட்டுவசதிக்கென வழங்கப்படும் கடன் தொகை.

வினா 2207—திரு. கோ. வீரய்யன். மாண்புமிகு திரு. (வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் [பேரவைத் துணைத் தலைவர்] திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 6,000 கடனாகவும், மானியமாகவும்



வழங்குவதை இன்றைய விலைவாசி உயர்வு கருதி, உயர்த்திக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு உயர்த்திக் கொடுக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

ஒன்றியங்களுக்கான மானியம்.

86—

வினா 2211—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு மான்ய ஒதுக்கீடுகள் செய்யும்போது, ஒன்றியங்கள் என்று மட்டும் கணக்கிடாமல் அதில் அடங்கி இருக்கும் ஊராட்சி மன்றங்கள் மற்றும் மக்கள் தொகை ஆகியவையும் சேர்த்து கணக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவற்றை நிறைவேற்ற அரசு முன் வருமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

87—

பம்மல் பேரூராட்சியில் குடிநீர் வழங்கல்.

வினா 2225—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி பம்மல் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

(இ) பணிகள், எப்பொழுது தொடங்கி எப்பொழுது முடியும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

88—

மேலூர் தொகுதியில் காகித ஆலை.

வினா 2306—திரு. க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி மேலூர் அல்லது கொட்டம்பட்டியில் காகித ஆலை துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

89—

**புதிய நூற்பாலைகள்.**

வினா 2432— திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு ஆயத்தீர்வை கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிதாக நூற்பாலைகள் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா.

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கடந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 5 புதிய கூட்டுறவு நூற்பாலைகள் கீழ்க்கண்ட இடங்களில் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.—

(1) தேனீ (மதுரை மாவட்டம்).

(2) ஊத்தங்கரை (தர்மபுரி மாவட்டம்).

(3) அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்).

(4) எட்டயபுரம் (திருநெல்வேலி மாவட்டம்).

(5) கமுதி (இராமநாதபுரம் மாவட்டம்).

இந்நூற்பாலைகள் மற்றும் பழைய நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூல் கைத்தறி நெசவாளர்களின் தேவைக்குப் போதுமானது. எனவே தமிழகத்தில் மேலும் புதிய கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

90—

**கதர்த் தொழிலுக்கு வடிவமைப்பு நிலையம்.**

வினா 2465—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கதர் தொழிலுக்கு வடிவமைப்பு நிலையம் ஆரம்பிக்கும் கருத்துரு ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு ஆரம்பிக்கப்பட உள்ளது?



விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் ஏற்கனவே பவானிசாகரில் ஒரு பரிசோதனை, ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு நிலையம் இயங்கி வருகிறது. புதியதாக வடிவமைப்பு நிலையம் ஆரம்பிக்கும் கருத்துரு ஏதும் இப்பொழுது இல்லை.

91—

**போக்குவரத்துக் கழகங்கள் ஊழியர்களது வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை.**

வினா 2478—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் பணியிலிருந்து ஓய்வு பெறும் ஊழியர்களின் வாரிசுகளுக்கு போக்குவரத்துக் கழகங்களில் பணி முன்னுரிமை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

92—

**சென்னை அண்ணா சாலையை சுத்தமான பகுதியாக்கல்.**

வினா 2617—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அண்ணா மேம்பாலத்தில் இருந்து, பெரியார் பாலம் வரை 'அண்ணா சாலை—சுத்தமான பகுதி' என்று அறிவித்து அரசு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயல்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

93—

**நாகை கலங்கரை விளக்கம்.**

வினா 2635—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை கலங்கரை விளக்கம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிவர்த்தி செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): நாகை கலங்கரை விளக்கம் 15–5–1984 நாள் வரை மண்ணெண்ணெய் ஆவியால் இயங்கி வந்தது. பின்பு 20–3–1985 தேதியில் இருந்து மின்சாரத்தால் இயங்கும் வண்ணம் அது மாற்றியமைக்கப்பட்டது. இடைப்பட்ட காலமான 15–5–1984 முதல் 20–3–1985 வரை தற்காலிகமாக வாயுவினால் செயல்படும் கருவியினால் இயக்கப்பட்டது. எனவே, நாகை கலங்கரை விளக்கம் தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளது.

94—

**பால்பண்ணைகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்களித்தல்.**

வினா 2866—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வெட்டிலிருந்து பால் பண்ணைகளுக்கு விலக்கு அளிக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) ஏற்கனவே பால் பண்ணைகளுக்கு மின் வெட்டிலிருந்து முழு விலக்கு உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

95—

**கும்பகோணம் நகரில் சாலையோர விடுதி.**

வினா 2996—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் கும்பகோணம் நகரில் ஒரு சாலை ஓர தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை)



96—

**மகாபலிபுரத்தில் வழிகாட்டிகள் நியமனம்.**

வினா 3111—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளிநாட்டுப் பயணிகளுக்கு மகாபலிபுரத்தின் வரலாறு மற்றும் சிறப்பை விளக்க 'கெய்டுகளை' அரசே நியமித்திடும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

இல்லை.

97—

**வால்பாறையை சுற்றுலா மையமாக்குதல்.**

வினா 3231—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை பகுதியை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

98—

**குற்றாலத்தை தேசிய சுற்றுலா நகரமாக்குதல்.**

வினா 3486—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலத்தை தேசிய சுற்றுலா நகரமாக அறிவிக்க மாநில அரசு மைய அரசை கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

99—

**அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட கடனுதவி.**

வினா 3683—திரு. இ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட வழங்கப் படும் கடன்தொகையை மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப் படும் அளவிற்கு உயர்த்தும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீல னையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போதிருந்து வழங்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 11—6—1985 முதல் தமிழக அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட வழங்கப்படும் கடனுதவியின் உச்சவரம்பு ரூ. 1,50,000 லிருந்து ரூ. 1,75,000 ஆகவும், வீட்டினை விரிவுபடுத்துவதற்கு வழங்கப்படும் முன்பணத்தின் உச்சவரம்பு ரூ. 50,000 லிருந்து ரூ. 75,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் இந்த உச்ச வரம்புக்குட்பட்டு ஒவ்வொருவருடைய கடன்பெறும் தகுதியைக் கணக்கிட 60 மாத சம்பளம் மற்றும் பஞ்சப்படி என்றிருந்ததை 75 மாதச் சம்பளம் மற்றும் பஞ்சப்படி என உயர்த்தப்பட்டுள்ளது.

(வினா 100—நீக்கப்பெற்றுள்ளது.)

101—

### காமராஜர் மாவட்ட வேளாண்மை அலுவலகம்.

வினா 3752—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்ட தலைநகரான விருதுநகரில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதால் திருவில்லிபுத்தூர் தொகுதியில் வேளாண்மை தலைமை அலுவலகம் நிறுவ அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

102—

### அக்கரைப்பட்டி ஆதிதிராவிடர் பகுதியில் திருமண மண்டபம்.

வினா 3753—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி அச்சந்தவிர்த்தான் கிராமம் அருகே உள்ள அக்கரைப்பட்டி சமீபம் ஆதிதிராவிட மக்களுக்காக திருமண மண்டபம் (தாட்கோ மூலமாக) கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் எப்பொழுது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

103—

### நெய்யாறு இடதுகரைக் கால்வாய்.

வினா 3754—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரைக் கால் வாயில் தூர் எடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடது கரைக்கால் வாயில் தூர் எடுக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. கள அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டு, தூர்வாரும் தேவை இருந்தால், அடுத்த ஆண்டு கிளைக்கால்வாய் மூடும் காலத்தில் தூர் எடுக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

104—

### நெல்லிக்குப்பம் பேருந்து நிலையம்.

வினா 3768—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகராட்சியில் ஐ.யு.டி.பி. (I.U.D.P.) திட்டத்தின் கீழ், பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

105—

### நெல்லிக்குப்பம் நகரில் புதிய சந்தை.

வினா 3855—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகராட்சியில் சந்தை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அனுமதி வழங்குவதில் கால தாமதம் ஆகக் காரணம் என்ன?

விடை—

(அ) ஏற்கனவே வாரச் சந்தை ஒன்று இந்நகராட்சியில் உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

106—

ஊராட்சி ஒன்றியங்களில் வழங்கப்படும் மான்ய கடன் திட்டம்.

வினா 3856—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் வழங்கப்பெறும் மான்ய கடன் திட்டத்தில் ஏற்படும் குறைகளை அகற்ற சட்ட மன்ற உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் வழங்கப்பெறும் மான்ய கடன் திட்டத்தில் ஏற்படும் குறைகளை அகற்ற சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்க உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

107—

திருவக்கரை சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்.

வினா 3858—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திருவக்கரையில் சந்திர மௌலீஸ்வரர் ஆலய இராசகோபுரத்தை புதுப்பிக்கவும், தங்கும் விடுதிகள் கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளும் உத்தேசம் உள்ளதா?

விடை—

தென்னாற்காடு மாவட்டம், திருவக்கரை அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில், இராஜ கோபுரம், புதுப்பித்தல் வேலைக்கு 13—6—1985-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதனடிப்படையில் விவர மதிப்பீடுகள் தயாரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தில் தங்கும் விடுதி கட்டுதல் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



108—

இராஜபாளையத்திலிருந்து நகரப்பேருந்துகள்.

வினா 89—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையத்தில் இருந்து முகவூர், தளவாய்புரம் கிராமங்களுக்குக் கூடுதலாக நகரப் பேருந்து விட பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோரிக்கைமீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பல முனை வழித்தட இசைவின் (Multi-pronged) கீழ் ஒரு நகரப் பேருந்து கீழ்க்கண்ட தடங்களில் இயங்கி வருகிறது:—

(1) இராஜபாளையம்—சிவகிரி (வழி) கிருஷ்ணாபுரம், தளவாய்புரம், முகவூர், சேத்தூர்.

(2) இராஜபாளையம்—சுந்தரராஜபுரம் (வழி). கிருஷ்ணாபுரம்—4 நடைகள்.

(3) இராஜபாளையம்—சிவகிரி (வழி) சேத்தூர், தேவதானம்—4 நடைகள்.

(4) இராஜபாளையம்—தக்கநேரி (வழி) கிருஷ்ணாபுரம்—4 நடைகள்.

109—

வத்திராயிருப்பு ஒன்றியத்தில் தெருவிளக்குகள்.

வினா 126—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், சுந்தரபாண்டியம் பேரூராட்சி, வ. புதுப்பட்டி பேரூராட்சி, எஸ். கொடிக்குளம் பேரூராட்சி, வத்திராயிருப்பு பேரூராட்சிகளில் நிதி வசதியில்லாமையால், அடிக்கடி தெரு மின் விளக்குகள் எரியாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதை நிவர்த்தி செய்ய அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) சுந்தரபாண்டியம் மற்றும் புதுப்பட்டி பேரூராட்சிகள் தொடர்ந்து மின் கட்டணம் செலுத்தத் தவறியதால் தெரு விளக்குகளுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளன. மின் கட்டணப் பாக்கியை கட்டியவுடன் மின் இணைப்பு வழங்கப்படும்.

[1986 ஜனவரி 21

(ஆ) நிதிநிலையில் நலிந்துள்ள பேரூராட்சிகளுக்கு நிதி உதவி செய்வது குறித்து அரசின் ஊரக வளர்ச்சித் துறை பரிசிலனை செய்து வருகிறது.

110—

திருத்துறைப்பூண்டி நகரத்தில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

வினா 129—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி நகரத்தில் சோழன் போக்குவரத்துக் கழக பணிமனை கட்டுவதற்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையகப்படுத்துவதில், உயர்நீதி மன்றம் தடை விதித்துள்ளது. தடை நீங்கியபின் நிலம் கையகப்படுத் தப்பட்டு, கட்டுமான பணிகள் துவங்கப்படும்.

111—

த. பழூர் ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா 412— டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி டி. பழூர் ஒன்றியத்தில் மேலும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையம் துவங்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

விடை—

இல்லை.

112—

விவசாய விளை நிலங்கள்.

வினா 345—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் நிலம் எத்தனை ஏக்கர்?

(ஆ) அவற்றில் நஞ்சை, புஞ்சை எவ்வளவு?

விடை—

(அ) தமிழ்நாட்டில் 57,40,083 எக்டேர் நிலம் விவசாயத் திற்குப் பயன்படுத்தப்படுகிறது.



1986 ஜனவரி 21]

(ஆ) நிகர சாகுபடி பரப்பில், 34,24,904 எக்டேரில் நஞ்சைப் பயிர்களும் 23,15,179 எக்டேரில் புஞ்சைப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

இவ்விவரங்கள் புள்ளியல் துறையால் வெளியிடப்பட்ட 1981—82 ஆம் ஆண்டு பருவமும் பயிரும் அறிக்கையின்படி எடுக்கப்பட்டன.

113—

காட்டுமன்னார்குடி சென்னை விரைவு பேருந்து.

வினா 392—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக துரித வண்டி விடப்படுமா?

விடை—

காட்டுமன்னார்குடியிலிருந்து சென்னைக்கு உள்ள தூரம் 250 கி.மீ-க்குக் குறைவாக உள்ளதால், இவ்வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்க இயலாது. பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தற்போது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் நான்கு பேருந்துகளை இத்தடத்தில் இயக்கி வருகிறது.

114—

நட்டத்தில் இயங்கும் அரசு நிறுவனங்கள்.

வினா 450—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1981 முதல் 1984 முடிய தமிழ்நாட்டில் நட்டத்தில் இயங்கிய அரசு நிறுவனங்கள் எத்தனை? அவை யாவை?

(ஆ) அந்நிறுவனங்களில் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு?

(இ) நட்டத்தைப் போக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): மன்றத்தின் முன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

*183-184-ம் பக்கங்களில் இணைப்புIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1986 ஜனவரி 21

115—

*7. கோவை குற்றாலம் நீர்வீழ்ச்சிப் பகுதியை சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

**வினா 493**—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாடிவயல் அருகிலுள்ள ''கோவை குற்றாலம்'' என்று அழைக்கப்படும் நீர்வீழ்ச்சிப் பகுதியை சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): மாவட்ட உலாத் தலமாக அறிவித்து அடிப்படை வசதிகளைச் செய்யும் கருத்து ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது.

116—

திண்டுக்கல்லில் கொசுத் தொல்லையைப் போக்கும் நடவடிக்கை.

**வினா 522**—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் கொசுத் தொல்லையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

1979-ம் ஆண்டு முதல் மதுரை மாவட்டம், திண்டுக்கல் நகராட்சியில் நகர மலேரியா திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் (1) தேங்கிய கழிவு நீரில் கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்க பூச்சிகொல்லி மருந்து வாரந்தோறும் தெளிக்கப்படுகிறது, (2) காய்ச்சல் ஏற்பட்டவர்களின் இரத்தம் பரிசோதிக்கப்படுகிறது, (3) மலேரியா காய்ச்சல் கண்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. இச்செயல் முறையால் அங்கு 1980-ல் மலேரியா காய்ச்சல் 659 என்றிருந்தது 1984-ல் 197 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் நகரில் 1982-ல் மலேரியா கொசுக்களின் அடர்த்தி 24.04-லிருந்து, 1984-ல் 6.97 என்ற அளவிற்கு குறைக்கப்பட்டிருக்கிறது.

117—

புதுக்கோட்டை அரசு கல்லூரி பெண்கள் தங்கும் விடுதி.

**வினா 560**—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் உள்ள அரசு கல்லூரி பெண்கள் தங்கும் விடுதிக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?



1986 ஜனவரி 21]

விடை—

இல்லை.

118—

திருமயம் பேருந்து நிலையம்.

**வினா 566**—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் பேருந்து நிலையத்தைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

119—

கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம்.

**வினா 585**—திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டைப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

120—

உசிலம்பட்டியில் கழிவுநீர் அகற்றும் பணிகள்.

**வினா 596**—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி பேரூராட்சி எல்லைக்குள் கழிவறை, கழிவுநீர் அகற்றும் வசதி செய்துதர அரசு திட்டமிட்டுள்ளதா?

விடை—

இல்லை.

121—

மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண நிதி.

**வினா 807**—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1986 ஜனவரி 21

(அ) மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணம் என்ற திட்டத்தின் மூலம், எத்தனை மீனவர்கள் நெல்லை மாவட்டத்தில் பயனடைந்து வருகின்றனர்?

(ஆ) மாநிலம் முழுவதும் எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்?

விடை—

(அ) கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண நிதி திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளாக பயனடைந்த மீனவர்களது விவரம் வருமாறு:—

| ஆண்டு. | பயனடைந்தோர் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1983–84 .. .. .. .. | 1,961 |
| 1984–85 .. .. .. .. | 3,493 |

(ஆ) இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலம் முழுவதிலும் பயனடைந்தோர் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | பயனடைந்தோர் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1983–84 .. .. .. .. | 6,647 |
| 1984–85 .. .. .. .. | 17,384 |

122—

புதுக்கோட்டை மகளிர் கல்லூரியில் பட்ட வகுப்புகள் துவங்குதல்.

வினா 817—திரு. ஜே. முகம்மதுகனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரத்தில் உள்ள மகளிர் கலைக்கல்லூரிக்கு எம்.ஏ. சரித்திரம், எம்.எஸ்.சி. உயிரியல், எம்.எஸ்.சி., கணிதம், பி.காம்., போன்ற பட்ட வகுப்புகள் துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரத்தில் உள்ள மகளிர் கலைக்கல்லூரியில் 1985-86 ஆம் கல்வி ஆண்டில் விலங்கியல், கணிதவியல், வரலாறு முதலிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்க கருத்துருக்கள் பெறப்பட்டு அவைகள் திருச்சி, பாரதிதாசன் பல்கலைக் கழகப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன. (வணிகவியல்) பட்ட வகுப்பு திறப்பதற்கு மேற்கண்ட கல்லூரி முதல்வரிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை.



1986 ஜனவரி 21]

(ஆ) பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டிற்குத் தகுந்தவாறு மேற்கண்ட கல்லூரியில் கணிதத் துறையில் மட்டும் 1985–86 ஆம் ஆண்டு நிறை நிலை வகுப்பு திறக்க முடிவு செய்யப்பட்டு, தக்க கருத்துருக்கள் பெறப்பட்டு, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

123—

வேடசந்தூர் வட்டத்திற்கு மருத்துவமனை.

வினா 902—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் நகரில் தாலுகா தலைமை மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

124 —

கொடநாட்டை மேம்பாடு செய்தல்.

வினா 1042—திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோத்தகிரிக்கு பக்கத்திலுள்ள கொடநாடு என்ற இடத்தை சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் மேம்பாடுகள் செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா? .

விடை—

நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரிக்கு அருகாமையிலுள்ள கொடநாடு காட்சிமுனை என்ற இடம் மாவட்ட உலாத்தலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சேரன் போக்குவரத்துக் கழகம் ரூ. 8.00 இலட்சமும் மலைவாழ் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 1.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், பிற துறைகளிலிருந்து ரூ. 5.50 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இடத்தில் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவரக்கூடிய முறையிலும், வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளை உருவாக்கவும் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் உணவு விடுதி சீரமைத்தல், பார்வை கோபுரம் உள்ள இடத்தில் தொலை நோக்கி அமைத்தல், அடிப்படை வசதிகள் செய்தல். நிலத்தினை அழகுபடுத்துதல் போன்ற பணிகள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினரால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

[1986 ஜனவரி 2

125—

கவராயப்பட்டியில் குடிநீர் வழங்கல்.

வினா 1091—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—-

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் கவராயப்பட்டியில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் கவராயப்பட்டியில் இரண்டு கையிறைப்பான்கள் இந்த 1985-86 ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

126—

நத்தம்—சாத்தம்பாடி பேருந்துப்பணி.

வினா 1129—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், நத்தத்திலிந்து உலுப்பக்குடி வழியாக, புன்னப்பட்டி, மதுக்காரம்பட்டி, ராஜ கோபாலபுரம், சாத்தம்பாடி செல்ல பேருந்து விட திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

இவ்வூர்களுக்குப் பேருந்து வசதி கோரி எவ்வித கோரிக்கையும் வரவில்லை. மேலும் இத் தடத்தின் தன்மை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை.

127—

கோட்டைப்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி.

வினா 1138—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், கோட்டைப்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளுக்கு மின்விளக்கு பொருத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

கோட்டைப்பட்டி ஆதிதிராவிடர் காலனிக்கு ஏற்கெனவே மின் இணைப்பு அளிக்கப்பட்டு ஐந்து குழல் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக தெரு விளக்குகள் போடுவதற்கு விண்ணப்பம் பெறப்பட்டால் மின் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.



1986 ஜனவரி 21]

128—

கால்நடைப் பண்ணைகளில் உள்ள தினக்கூலிகள்.

வினா 1159—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில அரசிற்கு சொந்தமான கால்நடைப் பண்ணைகளில் 10 முதல் 15 ஆண்டுகள் வரை பணியாற்றியும் அவர்களை பணி நிரந்தரம் செய்யாமல் வைத்திருப்பது ஏன் ?

விடை—

கால்நடைப் பண்ணைகளில் தினக்கூலிப் பணியாளர்கள் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது நியமனம் செய்யப்படுகிறார்கள். இவர்களுக்கு வேலை செய்த நாட்களுக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படுகிறது. பல வருடங்களாக தினக்கூலிப் பணியாளர்களாக வேலை செய்து வந்தாலும், இவர்கள் தற்காலிகப் பணியாளர்களே. எனினும் வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப்பட்டு தொடர்ச்சியாக 5 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் தினக் கூலிப் பணியாளர்களை அவர்களின் நியமன முதுநிலைப்படி நிரந்தரப் பதவியில் அமர்த்துவதற்காக கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்குத் தகுந்த பிரேரணை அனுப்புமாறு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவர்களுக்கு அவ்வப்போது நிரந்தரப் பணியாளர்களின் பதவி காலியாகும்பொழுது, பதவி உயர்வும் வழங்கப்படுகிறது.

129—

பட்டதாரி ஆசிரியர் பதவிகள்.

வினா 1376—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணியாளர் தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில். எப்பொழுது கொடுக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஏற்படும் காலியிடங்களின் எண்ணிக்கையை யொட்டி தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் அளிக்கப்பட்ட தரவரிசைப்படி நியமனம் அளிக்கப்படும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுகுறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1986 ஜனவரி 21

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை, வியாசர்பாடி காவல் நிலையத்திற்கருகே நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களும், துப்பாக்கிச் சூடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் அ. ரகுமான்கான், மு. இராமநாதன், பொன் முத்துராமலிங்கம், பரிதி இளம்வழுதி, கு. சுப்பராமன், பொ. உத்திராபதி, எ.எஸ்.ஏ. ஆறுமுகம், கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, வி. பி. சிந்தன், சு. பாலன் ஆகியோர், "20-1-1986 அன்று சென்னை வியாசர்பாடி காவல் நிலையத்தில் கைதி ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்திருப்பதாகக் கூறப்பட்டதை ஒட்டி அப்பகுதியைச் சார்ந்த மக்கள் பலர் காவல் நிலையத்திற்கு நியாயம் கேட்கச் சென்றபொழுது போலீஸ், மக்கள் மீது தடியடி பிரயோகம் செய்தும், துப்பாக்கிச் சூடு நடத்தியும் அதன் காரணமாக சிலர் மரணமடைந்திருப்பதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வியாசர்பாடியில்......

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஆளுநர் உரையின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற போது ஒத்திவைப்புத் தீர்மானங்களை அனுமதிப்பதில்லை என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். இப்போது நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். தங்களுடைய முடிவு, தீர்ப்பு இப்படி மாறக்கூடாது. அனுமதிப்பதாக இருந்தால் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையும் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொடுத்துள்ள பொருளின் முக்கியத்துவத்தைக் கருதி எடுத்துக்கொள்ள முடிவு செய்கின்ற உரிமை எனக்கு இருக்கிறது. (திரு. டி. ஆர். வெங்கடராமணன் குறுக்கீடு) நீங்கள் ஏற்கெனவே கொடுத்த தீர்மானம் காலம் கடந்த சம்பவமாக இருக்கலாம்; அதனால் மறுத்திருப்பேன். இப்போது அவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி இது. எனவே இதன் அவசர முக்கியத்துவம் கருதி இந்த தீர்மானத்திற்கு அனுமதி அளித்திருக்கிறேன். (குறுக்கீடு).



1986 ஜனவரி 21]

**திரு. பரிதி இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடியில் காவல் துறையினர் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்றவரை அடித்து, சாகடித்திருக்கிறார்கள். சாகடித்திருப்பதைத் தெரிந்து கொள்ளக் கூடாது, மக்களுக்கு இது தெரியக்கூடாது என்பதற்காக இறந்துபோன பிணத்தை எடுத்துச் சென்று மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைத்திருக்கிறார்கள். இதை அறிந்த மக்கள் நியாயம் கேட்க வேண்டி காவல் நிலையத்திற்குச் சென்று கோஷமிட்டிருக்கிறார்கள். அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் ஒன்று சேர்ந்து காவல் நிலையத்திற்குச் சென்று கோஷமிட்டிருக்கிறார்கள். விஷயம் வெளியே தெரிந்துவிட்டதே என்ற நோக்கத்தில் போலீசார் மக்களை விரட்டி இருக்கிறார்கள். விரட்டி அடித்ததோடு மட்டுமல்லாமல், தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகை வீச்சு நடத்தி, கடைசி கட்டமாக துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறார்கள். அதில் மூன்று பேர் இறந்திருக்கிறார்கள். கடைசியாக வந்த தகவல்படி நான்கு பேர் இறந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஏராளமானவர்கள் படுகாயமடைந்து, பலருடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இறந்தவர்களில் எட்டாவது வகுப்பு பள்ளி மாணவன் கஜேந்திரன் ஒருவன். ரவி என்பவரும் இறந்திருக்கிறார்.

குற்றவாளி என்று அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவர் குற்றவாளியாகக் கூட இருக்கலாம்; குற்றம் செய்திருக்கலாம்; ஆனால் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்றவரை காவல் நிலையத்தில் அடித்து நொறுக்கி, சாகடித்திருக்கிறார்களே, இது மிகப் பெரிய கொடுமை. சாகடித்தது வெளியே தெரியக்கூடாது என்பதற்காக ஒரு புதிய காட்சியை உருவாக்கி இருக்கிறார்கள். மக்கள் போலீஸ் நிலையத்தைத் தாக்க வந்தார்கள் என்று மற்றவர்களுக்குச் சொல்வதற்காக சோடனை செய்திருக்கிறார்கள். அடித்து நொறுக்கி, சாகடிக்கப்பட்டார் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் என்ற விவரம் தெரிந்து, நியாயம் கேட்கச் சென்ற மக்களை, காவல் நிலையத்தைத் தாக்க வந்தார்கள் என்று கூறி ஒரு சம்பவத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் குற்றம் செய்திருக்கலாம், செய்யாமலும் இருக்கலாம். முறைப்படி விசாரணை செய்வதை விட்டு, அவரை அடித்துக் கொல்ல காவல் துறையினருக்கு என்ன உரிமை இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அண்மைக் காலத்தில் இப்படி அழைத்துச் செல்லப்படுபவர்கள் போலீஸ் லாக்கப்பில் மரணம் அடைவது சாதாரணமாகிவிட்டது. இந்த விஷயத்தைப் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டுமென்றால்,

** ** ** **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போலீஸ் கமிஷனர் பற்றி குறிப்பிட்ட வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப் படுகின்றன.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ உருவாக்கிச் சொல்கிறேன் என்று நினைக்கக்கூடாது. நான் உண்மையைத்தான் சொல்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member should not talk like that. The hon. Member can explain how it would come under Adjournment Motion.

திரு. பரிதி இளம்வழுதி : இதுபற்றி என்ன சொல்கிறார்கள் தெரியுமா? விசாரணைக்காக அழைத்துக் செல்லப்பட்டபோது அவர் தப்பித்துப் போகும்போது கீழே விழுந்து தலையிலே காயம் பட்டு இறந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். தப்பித்து ஓடினால் காலில்தான் காயம் ஏற்படுமே தவிர தலையில் எப்படி காயம் ஏற்படும். ஆனால் அவர் கீழே விழுந்து தலையில் அடிபட்டது என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுக்கு ஒரு மாதிரியாகப் பத்திரிக்கைகளுக்குச் செய்தி தந்திருக்கிறார்கள். நான் துணை கமிஷனர் அவர்களை அணுகிக் கேட்ட போது தப்பித்துப் போக முயற்சி செய்தபோது கீழே விழுந்து இறந்துவிட்டார் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் பத்திரிக்கையில் என்ன வருகிறது என்றால் இரயில்வே பாலத்தில் இருந்து கீழே விழுந்து செத்து விட்டார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே இதிலிருந்து அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறதா என்பதைப்பார்க்கவேண்டும். ஒருபொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்கிறார்கள் என்ற அளவுக்குத்தான் இது இருக்கின்றது. அவரைஅடித்துநொறுக்கிசாகடித்துவிட்டு அதுவெளியே தெரியாமல் மூடி மறைக்கின்ற வகையில் அவர் தப்பித்து ஓட முயற்சி செய்த போது இறந்து விட்டார் என்று சொல்கிறார்கள்.

இதை எல்லாம் எதற்காக சொல்கிறேன் என்றால் நீதி விசாரணை வைத்து இச்சம்பவம் குறித்து முறையாக நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும். எனவே நீதி விசாரணை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இப்பிரச்சினை குறித்து மேலும் விவாதிக்க வேண்டி இருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



* திரு கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டதற்காகத் தங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவை நடந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் அனேகமாக காவல் துறையினருடைய சட்டவிரோதமான நடவடிக்கைகள் என்ற வகையில் தொடர்ச்சியாக அடிக்கடி இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது ஆழ்ந்த பரிசீலனைக்குரியது என்பதை அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு மாநில அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு நடந்திருக்கின்ற இந்தச் சம்பவம் என்பது மிகச் சாதாரண சம்பவம் அல்ல. ஒரு மனித உயிரைப் பாதுகாப்பதற்கான கடமையுள்ள மாநில அரசின் கீழ் இயங்குகின்ற காவல்துறை, மனித உயிரை ஏதோ கடைச் சரக்கைப்போல் தங்களுடைய இஷ்டத்திற்கு எதையும் செய்யலாம் என்ற நிலையில் இயங்கி இருக்கின்றது என்பதைத்தான் நடைபெற்றிருக்கின்ற சம்பவம் காட்டுகிறது.

இந்த மாநில அரசு போலீசாருக்குக் கடிவாளமிட்டு இழுத்து நிறுத்துகின்ற வலிமையை இழந்துவிட்டது என்பதைத்தான் நடைபெற்றிருக்கிற சம்பவம் மிகத் தெளிவாகக் காட்டுகிறது. காவல் துறையினர் மாநில அரசினை இயக்கிக் கொண்டிருக்கிறார்களா அல்லது மாநில அமைச்சரவை இந்த காவல் துறையை இயக்கிக் கொண்டிருக்கின்றதா என்பதே ஐயத்திற்குரியதாக இருக்கின்றது என்பதுதான் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்ற சம்பவத்தின் உள்ளடக்கமாகும்,

குறிப்பாக இங்கே நடந்து இருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டிருக்கின்ற அந்த டெல்லி என்ற நபர் என்ன குற்றம் செய்தார் என்பது நம்முடைய விவாதத்திற்குரிய பிரச்சினை அல்ல. ஆனால், குற்றவாளி என்று கருதப்படுகிறவர்களை நீதி மன்றத்திற்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்த வேண்டிய காவல் துறை, தானே தண்டம் எடுத்து தண்டிக்கின்ற உரிமையை எப்போது பெற்றார்கள் என்று நான் இந்த மாநில அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநில அரசு ஆளுகிற பொறுப்பிலே இருக்கிறது என்ற காரணத்தாலேயே போலீசாருடைய சட்ட விரோத செயலுக்குத் தனத்துக்கு அவர்கள் திரையிடுவார்களானால், போலீசார் இத்தகைய அராஜகத்தைத் தொடர்ந்து செய்துகொள்ள அனுமதிப் பார்களேயானால் இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பட்டப் பகலிலேயே படுகொலை செய்ய போலீசாருக்கு உரிமை தந்ததாக ஆகும். எனவே காவல் துறையினுடைய நடவடிக்கை கட்டுப் படுத்தப்படவில்லை என்றால் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடக்கும். கடந்த காலத்திலும் இத்தகைய சம்பவங்கள் நடை பெற்றிருக்கின்றன. ஒரு சாதாரண தொழிலாளி தெருவிலே போகிறபோது ஒருவனைக் குத்தி விட்டால் அவன் கொலைகாரன். ஆனால், காக்கிச் சட்டை அணிந்து கொண்டு சட்டப்படி

தண்டிக்கிறேன் என்று சொல்லி ஒருவனைக் கொன்று விட்டால் அதற்கு என்ன அர்த்தம் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஒரு காவல் துறை அதிகாரி ஒரு பிரஜையைக் கொன்றிருந்தால் அவர் குற்றவாளி அல்ல. ஆனால். சாதாரணப் பிரஜை மட்டும்—தான் அவ்வாறு செய்தால் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கப் படுகிறான் என்பது உண்மையிலேயே வேதனைக்குரியதாகும். இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து இந்த மாநில அரசின் கீழ் நடந்து கொண்டிருக்கின்றன. அதுவும் விசாரணை என்ற பெயரால் நடந்து கொண்டிருக்கிறது. போலீஸ் லாக்-அப்பிலே வைத்து கொலைக் கொடுமை செய்வது போலீஸ் இராஜ்ஜியத்தின் வாடிக்கையாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு ஆளுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர் தரப்பிலே வந்தாலும் இதே நிலைமையைத்தான் மேற்கொள்ளும்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி ஏன் விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. கு. சுப்பராயன்:** ஏன் இதை எடுத்து விரிவாக விவாதிக்க வேண்டும் என்று சொல்கிறேன் என்றால், ஆளுகின்ற கட்சி எந்தக் கட்சி என்று அல்ல. எந்தத் தரப்பினர் வந்தாலும் போலீசார் இந்த நிலைமையைத்தான் மேற்கொள்ளுகிறார்கள். ஆகவே, போலீசாருடைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியுமா என்ற ஒரு நிலைமை ஏற்படாவிட்டாலும், நடைபெற்ற சம்பவம் ஒரு அசாதாரணமான நிகழ்ச்சி என்பதிலே யாருக்கும் ஐயமில்லை. இதற்கு இறுதியிலே பதில் சொல்ல இருக்கிற நிதியமைச்சர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, மக்கள் கேட்டிருப்பது ஜுடிசியல் என்குயரி ஆனால், அரசு அறிவித்திருப்பது அபிசியல் என்குயரி. அது போதுமானது அல்ல.

இன்னும் இதில் நாங்கள் வலியுறுத்திக் கேட்க விரும்புவது எதிர்க்கட்சி தரப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் உள்அடங்கிய குழுவை போட்டு, நடைபெற்ற சம்பவங்கள் என்ன என்பதை விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மக்களால் தேர்வு செய்யப்பட்ட அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் உட்பட, எதிர் தரப்பு சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும். அப்படி அமைக்கிறபோதுதான், போலீசார்களுடைய அராஜகத்திற்கு ஒரு முடிவு கட்ட முடியும் என்பதைச் சொல்லிக் கொள்வதோடு, இறந்து 5 நாள் கைக்குழந்தையோடு தன்னுடைய மனைவியை அனாதையாக, விதவையாக விட்டுச் சென்றிருக்கும் டெல்லி என்பவரின் குடும்பத்திற்கு இந்த மாநில அரசு ஏதாவது நஷ்ட ஈட்டுத் தொகையை, இந்தச் சபையிலேயே ஒரு நிவாரணமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



***திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன் தினம் அதிகாரிகள், வியாசர்பாடிக்கு அருகில் உள்ள கல்யாணபுரத்தைச் சேர்ந்த டெல்லி என்ற இளைஞனை காவல் துறைக்கு, களவு குற்றத்திற்காக அழைத்துச் சென்றிருக்கிறார்கள், அங்கே அடிக்கப்பட்டு, அவன் மாண்டதாகவும் செய்தி வந்திருக்கிறது. அந்த டெல்லி என்பவரை, காவல் துறையினர் களவு குற்றம் சம்பந்தமாக தேடிச் சென்றதாகவும், அவர் பயந்து ஓடியதாகவும், அதனால் அவர் பாலத்திலிருந்து விழுந்து காயம் அடைந்ததாகவும், அங்கிருந்து அவரை போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றபோது இறந்து விட்டதாகவும் சொல்லுகிறார்கள். இப்படி இரு தரப்பு செய்திகளும் பத்திரிகையில் வந்திருக்கின்றன.

ஆனால், காவல் துறையினர் அடித்ததனால் தான் அவர் காயம் உற்று, இறந்தார் என்பதற்கு சரியான சான்றில்லை என்றாலும், அந்தப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் காவல் நிலையத்தின் முன்னால் கூடி, நிலையத்தை தாக்கச் சென்றிருக்கிறார் என்ற செய்தி வந்திருப்பதால்; காவல் நிலையத்தின் முன்னால் கூடுகின்ற அளவுக்கு அந்த மக்களுடைய உணர்வு அங்கே வெளிப்பட்டிருக்கிறது என்றால், அந்த இளைஞன் குற்றம் அற்றவனோ என்றே ஐயப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்னொரு ஐயம். தவறு செய்தவர்கள் என்றால், குற்றம் செய்தவர்கள் என்றால் அல்லது களவு செய்தவர்கள் என்றால், அவர்கள் இந்த சமுதாயத்திலேயிருந்தே அப்புறப்படுத்தப்பட வேண்டுமா? அல்லது இந்த நாட்டை விட்டே உலகத்தை விட்டே அனுப்பி விட வேண்டுமா என்று தான் அந்த ஐயம் கேள்வியாக என் முன்னால் எழுகிறது. திருட்டு என்பது சமுதாயத்திலே பொருளாதார ஏற்றத்தாழ்வின் காரணமாக ஏற்படுகின்ற ஒரு உணர்வு. அந்தக் குற்றத்திற்காக போலீஸ் லாக்அப்பிலே வைத்து அடித்துக் கொல்வது என்பது மன்னிக்க முடியாத பெரிய குற்றம். இந்தக் கொலையைச் செய்தகாவலர்கள், அங்கே கூடிய கூட்டத்தைக் கலைக்க மரத்திலே கூட சுட்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடச் சிறுவன் கூட இறந்திருக்கிறான். 24 வயது இளைஞன் இறந்திருக்கிறான். 50-க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். இதில் நான் கேட்க விரும்புவது, கூட்டத்தைப் பார்த்து காவல் துறையினர் சுடும்போது, முழங்காலுக்கு கீழே தான் சுட வேண்டும் என்ற சட்டம் இருந்ததே, அது இப்பொழுது இருக்கிறதா இல்லையா? அது மாதிரி முழங்காலுக்கு கீழே சுட்டதாக செய்திகள் வரவில்லை. இவைகளை எல்லாம் அரசு இன்னும் தீவிரமாக ஆராய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்கிறோம் வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்பை வலியுறுத்தி நான் பேசுகிறேன். ஒத்தி வைக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி நான் பேசுகிறேன். சென்னை நகரத்திலே சமீப காலமாக நடந்து வருகிற போலீசாருடைய அத்து மீறல் செயல்களின் காரணமாக எல்லாப் பகுதிகளிலும் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. போக்குவரத்தையே முறையாக நடத்த முடியுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. முறையாக வேலைக்குச் செல்ல முடியுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் எந்தச் சூழ்நிலையில் என்ன செய்வார்களோ என்று அறியாத காரணத்தினாலே அஞ்சி அஞ்சி செல்ல வேண்டிய நிலைமை நாட்டிலே அதிகம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால்தான், அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

சமீப காலமாக போலீசாருடைய அத்து மீறிய நடவடிக்கைகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன என்பதையும், அவையினுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வர விரும்புகிறேன். சரோஜா என்ற 7 குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண்ணை, போலீசார் அடித்துக் கொலை செய்தார்கள். மருத்துவமனையிலே மார்ச்சுவரியிலே சென்று நான் அவர்களைப் பார்த்தேன். அந்த அம்மாவினுடைய தலையை நான் கையாலே தொட்டுப் பார்த்தபோது, என்னுடைய கை பூராவும் ரத்தமாயிற்று. ஆனால் அதற்கு எந்த விசாரணையும் நடத்தவில்லை. அந்தப் பகுதியிலே எவ்வளவு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இப்போதும் யார் வேண்டுமானாலும் போய் பார்க்கலாம். அதே முறையில் மீனவர்களுடைய பிரச்சனையிலே துப்பாக்கிப் பிரயோகம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுகுறித்து ஏன் விவாதிக்க வேண்டுமென்று மட்டும் சொல்ல வேண்டும்.

திரு. வி. பி. சிந்தன் : அந்த விளக்கத்திற்குள் போகவில்லை, இதை நான் வலியுறுத்துவதற்கு காரணம் இப்போது இந்தப் பிரச்சனையில் கலெக்டரின் பி.ஏ.-வை விசாரணை செய்ய வைத்திருக்கிறார்கள். இந்த விசாரணை மட்டும் போதாது என்பதை வலியுறுத்தி, போலீஸ் அராஜகத்திற்கும், அத்துமீறல்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கிற முறையிலே அந்த விசாரணையின் முடிவு அமைய வேண்டும் என்பதற்காக, எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் அந்த விசாரணையில் ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது பத்திரிகைச் செய்தி அப்படி சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பது எல்லாம் ஒரு நாடகமாகவே நடைபெறுகிறது. நான் விளக்கத்திற்குள் போக விரும்பவில்லை. ஆகவே இந்தச் சென்னை நகரத்தில் இப்படி பதட்ட நிலைமை ஏற்கனவே ஏற்பட்டு ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இன்னும் ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு அர்த்தாலுக்கு



சென்னை நகரம் பூராவும் நாங்கள் தயார் செய்ய வேண்டுமோ என்று யோசிக்க வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். ஒரு போலீஸ் ராஜ்யம் இங்கு ஏற்பட்டு விட்டதோ என்ற ஐயப்பாடு உருவாகியுள்ளது என்பதை இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, இந்த அக்கிரமத்தையும், அநியாயத்தையும் தைரியமாக விசாரணை செய்து உரியவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பதால் இதுகுறித்து மேலும் விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்வதில்லை என்று ஒரு மரபு இருக்கிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நடந்து கொண்டிருக்கும்போது நிகழ்ந்த இந்தப் பிரச்சனையின் முக்கியத்துவத்தைக் கருதி அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

* திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பொதுவாகவே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தின் போது ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அந்த மரபை மீறி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள் என்றால், இந்தப் பிரச்சனையில் இருக்கிற முக்கியத்துவத்தைத் தாங்களும், இந்த மன்றமும் நன்றாக உணர்ந்திருக்கிறீர்கள் என்று முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு எதிர் வரிசையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டமன்றம் கூடிக்கொண்டிருக்கிற இந்த வேளையில் தமிழகத்தினுடைய தலைநகரில் இப்படிப்பட்ட துயரமான சம்பவம், நெஞ்சை உலுக்குகின்ற நிகழ்ச்சி நடைபெற்றிருப்பது உண்மையில் வேதனைப்படக் கூடிய ஒன்றாகும். வியாசர்பாடியில் நடைபெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டிலே 3 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அதிலே நமக்கு மெத்த வேதனையைக் கொடுப்பது கஜேந்திரன் என்ற ஒரு பள்ளி மாணவன் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியாகி இருக்கிறான். 6 பேர்கள் குண்டு காயம் பட்டிருக்கிறார்கள். 50-க்கும் மேற்பட்டவர்கள் இதில் காயம் பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சனை மிக முக்கியமான பிரச்சனை என்பதோடு, இந்தப் பிரச்சனையில் இருக்கிற முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருக்கிற காரணத்தால் ஒரு இன்ஸ்பெக்டரும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும், காவலர்களும் இன்றைக்கு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை எங்களால் பத்திரிகையில் பார்க்க முடிந்தது.

பொதுவாக காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைக்கப்படுகிற நேரத்தில் குற்றவாளியாகவே கருதப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் இருப்பவர்களால் தண்டனை கொடுக்கிற வழக்கம் இன்றைக்கு அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஆகவே தான் இந்த வரிசையில் இருப்பவர்கள் பேசுகின்றபோது நாங்கள் சொல்கிறோம், லாக்கப்பிற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்வார்களானால், லாக்கப்பிற்கு வெளியே ஒரு போர்டு வைக்க வேண்டும். இன்னின்னாரை இன்னென்ன காரணத்திற்காக அழைத்திருக்கிறோம் என்று அந்த போர்டில் பட்டியல் போடுவர்களானால் இந்தமாதிரி சம்பவங்கள் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப்போல லாக்கப்பில் இருப்பவர்கள் இறக்கிறார்கள் என்று சொன்னால், ஒன்று தூக்கு போட்டுக் கொள்கிறார் அல்லது அவருக்கு மாரடைப்பு ஏற்படுகிறது. அல்லது குதித்து இறந்து விடுகிறார் என்று வழக்கமாகச் சொல்லப்படுகிறது. இந்தக் காரணங்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் அல்ல.

இன்றைக்கு காலையில் செய்திகளில் பார்க்கிறபோது ஆர். டி. ஓ. விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதாக அறிகிறோம். மாண்புமிகு முன்னவர் அவர்கள் பதில் அளிக்கிற நேரத்தில், இதற்கு முன்னாலே இப்படித்தான் நடந்தது. அந்த முறையிலே இன்றைக்கு இந்த விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடும். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்தப் பிரச்சனையின் முக்கியத்துவத்தைக் கருதி, எதிர்காலத்தில் இது போன்ற ஒரு பிரச்சனை தமிழகத்தில் நிகழாமல் தடுப்பதற்கு உறுதுணையாக, ஒரு முன் மாதிரியாக நீதி விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, இது ஒரு முக்கியமான பிரச்சனையாக இருப்பதால் மேலும் இதுகுறித்து விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும் என்ற வகையில் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிற பிரச்சனையைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படியும், தங்களுடைய நோக்கத்தின்படியும் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வியாசர்பாடி பகுதியில் நேற்று வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்று இருப்பதும், பிறகு துப்பாக்கிச் சூடு ஏற்பட்டு இருப்பதும், அதன் காரணமாக மூவர் இறக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதும், பொதுவாகவே வேதனை தரக்கூடியவைகள், வருத்தப்படக் கூடியவைகள். இந்த அவைக்கும் வருத்தத்தை தரக் கூடியவைகள்தான். ஆனால் எப்படிப்பட்ட சூழ்நிலையில், என்ன காரணங்களினால், இவைகள் எல்லாம் ஏற்படுகின்றன என்பதை





இந்த அவையினர் உற்று கவனிக்க வேண்டும். ஆகவே சிறைக் காவலிலே, லாக்காப்பிலே இருக்கிறவர்கள், அடித்துக் கொள்கின்றது என்ற ஒரு முறையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோதெல்லாம், இதற்கு முன்னாலே, விசாரணை நடத்தி, அப்படிப்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள், உரிய தண்டனையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சில சமயங்களிலே ஐயப்பாடு ஏற்படுகிறபோது, அந்த ஐயப்பாட்டை நீக்குகின்ற அளவிற்கு விசாரணையினுடைய முடிவுகள் நமக்கு கிடைக்க வேண்டியவைகளாக இருக்கின்றன. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட, பெண்களாக இருப்பார்களாயானால், எந்தக் காரணத்தைக் கொண்டும், லாக்கப்பிலே இரவிலே வைக்கக் கூடாது என்ற உத்தரவைத் தந்திருக்கிறார்கள். லாக்கப்பிலே இருப்பவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும், தாக்கப்பட்டு, அதன் காரணமாக உயிர் இழக்கும்படியான சூழ்நிலை ஏற்படக் கூடாது என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் லாக்கப்பிலே இருப்பவர்கள் கூட சில சமயங்களிலே தற்கொலை செய்வதற்கான, சில பல முயற்சிகளை எந்த நாளிலும் அவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் அதிலே சில சமயங்களிலே தடுக்கப்பட்டு இருககிறார்கள், தவிர்க்கப்படட்டு இருக்கிறார்கள், சில சமயங்களிலே தற்கொலை செய்து கொண்டும் இருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். இவற்றையெல்லாம் கவனிக்கிறபோது, பொதுமக்களுக்கு அமைதி ஏற்படுத்தவேண்டிய பொறுப்பும் காவல் துறையினருக்கு இருக்கிறது. ஆகவே அந்தக் கடமையை அவர்கள் ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே ராஜ்யம் என்பது, போலிசை வைத்துத்தான் நடத்தவேண்டும் என்பதல்ல. இது போலீஸ் ராஜ்யம் அல்ல. ஜனநாயக அரசு தான். ஆனால் இந்த ஜனநாயக அரசும், போலீசை வைத்துத் தான், காவல் துறையினரை வைத்துத்தான் காரியங்களை ஆற்ற வேண்டிய தன்மையிலே இருக்கிறது. ஆகவே அந்த வகையிலே நாள் முழுவதும் மற்றவர்களைச் சுடுவதிலே இந்த அரசுக்கு மகிழ்ச்சி இல்லை, காவல்துறையினருக்கும் மகிழ்ச்சி இல்லை. நாள்தோறும் சில பேரைச் சுட்டாவது தீரவேண்டும் என்ற ஒரு சபதத்தை இந்த அரசும் கொள்ளவில்லை. அப்படிச் சுடுவதன் காரணமாக, தங்களுக்கு பெருமையும் ஏற்படும் என்று காவல் துறையினரும் எண்ணமாட்டார்கள். அப்படிப்பட்ட விளைவுகள் அவர்களுக்கே பழிவரக்கூடிய வகையிலே அமையும் என்ற அச்ச உணர்வோடுதான் அவர்களும் பாடுபடுவார்கள். ஆனால் பலரைக் காப்பாற்றவேண்டிய ஒரு நெருக்கடி ஏற்படுகின்றபோது, தடியடிப்பிரயோகம், கண்ணீர்ப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என்று இன்றியமையாத தன்மைகள் எங்கு பார்த்தாலும் ஏற்பட்டு விடுகின்றன. இது எல்லா மாநிலங்களிலேயும் ஏற்பட்டு விடுகின்றன. இரண்டு நாட்களுக்கு முன்னாலே கூட கர்நாடக மாநிலத்திலே ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி பத்திரி

கையிலே பார்த்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் அதை உணர்வார்கள். இது எல்லா ஆட்சி புரிபவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தொடர்புடையன என்று எந்தக் காலத்திலும், எந்தச் சமயத்திலும் சொல்ல இயலாது.

ஆனால் இங்கே ஏற்பட்டு இருக்கிற தன்மையைப் பொறுத்த வரையிலும், அரசுக்குக் கிடைத்து இருக்கிற தகவலைப் பொறுத்த வரையிலும், 19–1–86 அன்று இரவு எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, சுந்தரம் சாலை சந்திப்பின் அருகில், பி–3 வியாசர்பாடி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் திரு. பி. எம். சீனிவாசா தமது சகாக்களான உதவி ஆய்வாளர்கள், ராஜகோபால். மற்றும் காத்தமுத்து ஆகியோருடன் சென்று, நிலுவையில் உள்ள வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தேடிக்கொண்டு இருக்கும்போது, காவல்படையைப் பார்த்தவுடன் ஒரு குழுவினர் ஓடினர். அதில் ஒரு நபர் ரயில்வே பாலத்தின் மீது ஓடும்போது தவறி கீழே விழுந்தார். பின்னர் அந்த நபர் இ. கா. ச. 457 மற்றும் 380/பி–3 வியாசர்பாடி. காவல்நிலைய குற்ற எண். 874/85, 981/85 ஆகிய வழக்குகளில் சம்பந்தப்பட்ட, வியாசர்பாடியைச் சேர்ந்த காளியப்பன் என்பவரது மகன் டில்லி, வயது 28 என்று தெரியவந்தது. அவர் தம் சுயநிலையை இழந்து காணப்பட்டதால், அரசினர் ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே அவர் மரணம் அடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக பி–3 காவல்நிலைய குற்ற எண். 13/86, 174–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, காவல் நிலைய சட்ட எண். 145–ன் கீழ் மேல் விசாரணைக்காக சென்னை கலெக்டரின் நேர்முக உதவியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. அவர்கள் விசாரணையைத் தொடங்கி இருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து, காவலர்கள் அடித்துதான் டில்லி இறந்துவிட்டதாக எழுப்பிய வதந்தியின் காரணமாக, சுமார் 3,000 சமூக விரோதிகள், பொதுமக்கள், பி–3 வியாசர்பாடி காவல்நிலையம் அருகில் மற்றும் சுற்றியுள்ள பகுதியில் கூடி, 20–1–86 பிற்பகல் காவல் நிலையத்தையும் காவல் வாகனங்களையும், இன்ன பிற வகைகளையும் தாக்கினார்கள். இதிலே, ஒரு காவல் உதவி ஆணையர் அவர்களும், 5 ஆய்வாளர்களும், 2 உதவி ஆய்வாளர்களும், மற்றும் 25 கான்ஸ்டபிள்களும் காயம் அடைந்தனர். பி–3 வியாசர்பாடி காவல் நிலையம் மட்டும் அல்லாமல் 9 காவல் வாகனங்கள் நாசம் ஆயின. தகுந்த எச்சரிக்கைக்குப் பின்பு, கண்ணீர்ப் புகை விட்டும், தடியடிப்பிரயோகம் நடத்தியும், கட்டுக்கு அடங்காத கூட்டம், கலைந்து செல்ல மறுத்ததினால், உயிருக்கும், பொருட்களுக்கும் மேலும் சேதம் ஏற்படாமல் தடுப்பதற்காக 12.30 மணிக்கு சத்தியமூர்த்தி நகர் என்ற இடத்திலே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

கஜேந்திரன், வயது 14 என்பவர் ஸ்தலத்திலேயே மரணம் அடைந்தார். 10 நபர்கள் காயம் அடைந்தார்கள். காயம் அடைந்த 10 பேர்களில் முகமது அலி மற்றும் 7 பேர்களை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையிலும் ஆர். செல்வம் மற்றும்



மங்கம்மாள், வியார்பாடியைச் சேர்ந்தவர்கள் அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் மற்றும் அரசினர் பொது மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். கும்பலிலிருந்து ஓடிய சிலர் 2 புகை வண்டிகளை நிறுத்தி கற்களை வீசி நாசம் விளைவித்தனர். மேலும், 2 பி.டி.சி. பஸ்களை நாசம் ஆக்கி மற்றொரு பேருந்தை தீ வைத்து போக்குவரத்து ஸ்தம்பிக்கச் செய்தனர். பின்னர் சுமார் 4 மணிக்கு மூர்த்திங்க ஐயர் தெருவில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வெடித்துப் போன டையர் கொண்ட காவல் ரோந்து வாகனத்தை ஒரு கலக கும்பல் தாக்கியது. ஒரு உதவி ஆணையாளர், 3 உதவி ஆய்வாளர் மற்றும் 10 கான்ஸ்டபிள்கள் இதனால் காயம் அடைந்தனர். நிலைமை மிகவும் மோசமாக ஆகியதாலும் வாகனத்தில்இருந்தவர்களை காப்பாற்றவேண்டும்என்பதற்காகவும் ஒரு ரவுண்ட் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. முத்து முதலி தெருவைச் சேர்ந்த 24 வயதுள்ள ஆண், இளங்கோ என்பவர் இறந்து போனார். இது சம்பந்தமாக 3 வழக்குகள் பதிவு செய்து இன்றுவரை 10 நபர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். கஜேந்திரன் மற்றும் இளங்கோ ஆகியோர் மரணம் குறித்து விசாரணை நடத்த சென்னை கலெக்டரின் நேர்முக உதவியாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நிலைமை கண்காணிப்பில் உள்ளது. மேலும் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறாத வண்ணம் பந்தோபஸ்து போடப்பட்டுள்ளது. இது தவிர அங்கு அமைதிக் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக நியாயமாக மற்றும் தடை இல்லாத ஒரு விசாரணை ஏற்படவேண்டும் என்பதற்காக பி–3 காவல் நிலைய குற்றப்பிரிவு அதிகாரிகள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அது தவிர துப்பாக்கிச் சூட்டில் படுகாயம் அடைந்து நேற்று ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த திரு. முத்து, வயது 38 என்பவர் இன்று காலை மரணம் அடைந்ததாக செய்தி கிடைக்கப்பெற்று இருக்கிறது. ஆக, இந்த 3 மரணம் பற்றிய இந்த ஆய்வு நடத்தப்படும். ஆய்வு நடத்தப்பட்டு விசாரணைக் குறிப்புகள் வந்த பிறகு மேல் நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக தொடங்கி செய்யும். ஆக, இந்த விசாரணைக்கு பல பேரும் சொல்லுகின்ற கருத்துக்கு ஆக்கம் தருகின்ற முறையில் தான் அந்த காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று பேரையும் இப்போது அந்த விசாரணைக்கு தடையாக இருக்க வேண்டாம் என்பதற்காக அவர்கள் தற்கால வேலை நீக்கம் செய்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்கு நிவாரணம் நஷ்ட ஈடு தரவேண்டும் என்ற கோரிக்கையை தந்தார்கள். அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு முறைப்படி நாம் தந்து வருகிற அளவிலே இந்த அறிக்கை அரசுக்கு வந்த உடனே அது பற்றியும் கவனிக்கப்படும் என்பதையும் எடுத்துத் தெரிவித்து இருந்த மேல் இது பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு இல்லை என்ற காரணத்தாலே இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : * *

மாண்புகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீமானம் குறித்து, நான் எனது தீர்ப்பை வழங்கிய பின் பேசப்பட்டவைகள் அனைத்தும் நீக்கப்பெறவேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

(கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)

## 3. அறிவிப்பு

### சென்னை பல்கலைக்கழக ஆட்சிக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Scn 'tc) ஏழாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திருவாளர்கள் (1) சி. கோபால், (2) பி. வெங்கட சுப்பிரமணியன், (3) எல். இளையபெருமாள், (4) என்.வி. என். சோமு ஆகியோர் மீண்டும் இச்சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெறாததாலும், மாண்புமிகு திரு. பு. கோ. ஜகதீசன், அவ்வாட்சிக் குழுவில் இருந்து 26-6-1985 அன்று விலகிவிட்டதாலும், அவ்வாட்சிக் குழுவிற்கு 21-2-1987 வரை பணியாற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஐவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

(முற்பகல்—10—30)

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 23-1-1986 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்சள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



நியமனத்தாள்கள் 24—1—1986 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 25—1—1986 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஐவருக்கு மேற்படுமாயின் 28—1—1986 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 4. கவன ஈர்ப்புகள்

### (அ) பவானி சாகர் பாசனத்தின் மீதான வரி வசூல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு.ஆ. செங்கோட்டையன், பு.கோ. நாராயணன், வி. கே. சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. பு. கோ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பவானிசாகர் அணையிலிருந்து (எல்.பி.பி.) எள்ளுக்குத் தண்ணீர் விடப்பட்டுள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், எள்ளுக்குரிய வரி தான் போட வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்தும், பயிர்வாரி வரிதான் விதிக்கப்படும் என்று வருவாய்த் துறை அதிகாரிகள் அறிவித்துள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதிஅமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை

1959—இல் அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட மண்டலத் திட்டப்படி பாசனத்திற்காக கீழ்பவானித் திட்ட ஆயக்கட்டு முழுவதும் இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல்முறை பாசன காலத்தில் விவசாயிகள் நஞ்சைப் பயிர்கள் சாகுபடி செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் இரண்டாம் முறை பாசன காலத்தில் தண்ணீர் இடைவெளியிட்டு விநியோகிக்கப்படுவதால், இருபோகம், மற்றும் நஞ்சைப் பயிர்கள் சாகுபடி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் விடுவதற்கான அறிவிக்கையிலும் அரசு ஆணைக்கு எதிராக நஞ்சை மற்றும் இருபோக பயிர்கள் சாகுபடி செய்தால் தண்டத் தீர்வை விதிக்கப்படும் எனவும் விவசாயிகள் எச்சரிக்கப்படுகிறார்கள். 1985 ஆம்

ஆண்டில் பவானிசாகர் அணையில் தண்ணீர் இருப்பு மிகவும் மோசமாக இருந்ததால் முதன்முறைப் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இரண்டாம் முறைப் பாசன காலத்திலும் மேற்படி நிலைமை தொடர்ந்து இருந்ததால் எள்ளுப் பயிர் சாகுபடி செய்ய மட்டுமே தண்ணீர் மிகக் குறைவாக இருந்தது. இரண்டாம்முறைப் பாசனத்திற்கு 20-12-1985 ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்பட்டது. மேற்படி ஆணையின் அறிவிக்கையில் எள்ளுப் பயிர் தவிர இதர பயிர்கள் அனைத்துமே சாகுபடி செய்வது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மாதந்தோறும் நடத்தப்படும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் சில விவசாயிகள், தற்பொழுது நிலையில் உள்ள நஞ்சை மற்றும் இருபோகப் பயிர்களுக்கு தீர்வை எவ்வாறு விதிக்கப்பட உள்ளது என விளக்கம் கோரியதில், மேலே சொல்லப்பட்ட ஆணைகள் பற்றி அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. தற்போது சாகுபடி செய்யப்பட்ட நஞ்சை அல்லது புஞ்சைப் பயிர்கள் சாகுபடி விஸ்தீரணம் முதலிய விபரங்கள் அடங்கிய உண்மை நிலவரம், பயிராய்வுக்காக நியமனம் செய்யப்பட இருக்கும் தனிப் பணிக்குழுவினர் பயிராய்வுப் பணியை முடித்த பின்னரே தெரியவரும். அதன் பின்னரே, வரி விதிப்பு சம்பந்தமாய் முடிவு எடுக்கப்படும். அத்தருணத்தில் மேலே விதிகளில் கூறியுள்ளபடி தீர்வை வசூலிக்கப்படும் என பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

திரு. பு. கோ. நாராயணன்: துணைத்தலைவர் அவர்களே, இந்தப் பாசனத்தில், எள்ளைத் தவிர மற்றப் பயிர்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக இந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, தீர்வை விதிக்கும்போது, புஞ்சைப்பயிர்த் தீர்வைதான் விதிக்கப்படுமா என்பதைப் பற்றியும், ஆயக்கட்டும் பூமிகளுக்கு தண்ணீர் பாயும்போது அக்கம்பக்கம் உள்ள பூமிகளுக்கு தானாகவே ஊற்று எடுத்து, கிணற்றில் உற்பத்தி ஆகும் நீரைப் பயன்படுத்தி, பயிர் செய்யும்போது அதற்கும் கூட தண்டத் தீர்வை விதிக்கும் ஒரு பழக்கம் வருவாய்த் துறையிலேயே இருந்து வருகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தானாகவே ஊறும் அந்தத் தண்ணீரை, கிணற்றிலிருந்து பம்புசெட் மூலம் எடுக்கும் தண்ணீரைப் பயன்படுத்தி பயிர் செய்யும்போது கூட தண்ணீர்த் தீர்வை அதிகமாக விதிக்கப்படுவதை நிறுத்தி, விவசாயிகள் நலன் கருதி அதை மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, தானாகவே எங்கேயும் ஊறி வரும் என்று இருந்தால் யாரும் கண்டுபிடிக்கவே முடியாது. அது மட்டுமல்லாமல், ஆற்றுப் பாசனத்தில், ஆற்றிலே தண்ணீர் வருகிறபோதுதான் கீழே நீர் மட்டம் வருவதும், கிணறு வெட்டும்போது ஊறுகின்ற சூழ்நிலை ஏற்படும். ஏற்கனவே பயிர்களுக்கு எந்தெந்த வகையிலே வரிவிதிப்பது என்பதற்கு ஒரு நிரந்தரமான, நிலையான முறைகள் இருந்து வருகின்றன. அதனையொட்டித் தான் நான் குறிப்பிட்டிருப்பது, சாகுபடி



செய்யப்பட்ட நஞ்சை அல்லது புஞ்சைப் பயிர்கள், சாகுபடி விஸ்தீரணம் முதலிய விபரங்கள் அடங்கிய உண்மை நிலவரம், இவற்றைக் கண்டுபிடிப்பதற்கு, ஆராய்வதற்கு, பயிராய்வுக்காக நியமனம் செய்யப்படஇருக்கும் தனிப் பணிக்குழுவினர் அதைப் பற்றி பகுத்து ஆராய்வார்கள். அப்படிப் பகுத்து ஆராய்ந்த பிறகு, நிலைமைகளை அவர்கள் தெரிவிப்பார்கள். அப்படித் தெரிவித்தபிறகு எந்தெந்த பயிருக்கு எந்தெந்த வகையிலே தடை செய்யப்பட்ட பயிரை அவர்கள் விளைவித்து இருப்பார்களேயானால்—தண்டத் தீர்வை போட வேண்டி வரும். எள் மட்டும் போடப்பட்டிருந்தால் அதற்குரிய வரிபோடவேண்டிவரும். அந்த விவர அறிக்கை வந்த பிறகு தீர்வை விதிக்கப்படுகின்ற, வசூலிக்கப்படுகின்ற சூழ்நிலையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் அறிவிக்கப்படும்.

திரு. வே.கு.சின்னசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்மிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தின் பேரில் நீங்கள் குறிப்பிட்ட பவானி சாகர் பாசனம் சம்பந்தப்பட்டு வரி விதிக்கிறார்கள். அந்தப் பாசனப் பகுதிகளில் ஏற்கனவே கால்வாய் வெட்டப்பட்டதற்கு முன்பே கிணறுகள் வெட்டப்பட்டு அங்கே சாகுபடி செய்து விட்டார்கள். ஆக வாய்க்கால் பாசனத்திற்கு முன்பாக தண்ணீர் இருந்து, கிணற்றுத் தண்ணீரிலிருந்து விவசாயம் செய்யப்பட்டது. ஆக ஏற்கனவே கிணறுகளிலுள்ள தண்ணீரை இறைத்து விவசாயம் செய்யப்பட்டு ஆயக்கட்டுகள் மூலம் இன்றைக்கு எள்ளை சாகுபடி செய்வதற்கு அங்கே தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. 2200 கன அடி தண்ணீர் திறந்து விடவேண்டிய இடத்தில், 1,000, 1,200 கன அடி தண்ணீர் தான் விடப்படுகின்றது. பாசனப்பகுதி 25 கிலோ மீட்டருக்கு பாய வேண்டிய பகுதியில், இன்றையதினம் 10, 15 கிலோ மீட்டருக்குத்தான் பாய வேண்டிய நிலைமை இருக்கிறது. அதே நேரத்தில், நாம் எள்ளுக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு முன்னால் அந்த ஆயக்கட்டுப் பகுதியில் .. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு வே. கு. சின்னசாமி: கருப்பு, மஞ்சள், மற்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வந்திருக்கிறது. ஆக கிணற்று நீரை இறைத்து சாகுபடி செய்கிறார்கள் இந்த விவசாயிகள். இந்த எள்ளுக்கு என்ன தண்ணீர் வரி போடுகிறார்களோ, அதைத்தான் போட வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

அது மட்டுமல்லாமல், கீழ் பவானி வாய்க்காலிலிருந்து நீர்க் கசிவு ஏற்பட்டிருக்கிறது. அது மணலால் கட்டப்பட்ட கால்வாயாகும். கசிவு நீர் இருக்கும் பகுதியில் நெல்லைத் தவிர, வேறு பயிர்களை சாகுபடி செய்ய முடியாது. அப்படி பயிர்செய்கிற விவசாயிகளுக்கு, நெல்லுக்கு என்ன வரி விதிக்கப்படுகிறதோ அந்த வரியை விதிக்கவேண்டுமென்று பலமுறை வலியுறுத்தியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைச் சுருக்க மாகக் கேளுங்கள்.

திரு. வே. கு. சின்னசாமி: 20 மடங்கு, 15 மடங்கு வரியாகப் போடுகிறார்கள். ஆக நான் சொல்வது இந்த முறை வசூலை ரத்து செய்ய வேண்டும். பயிர் சாகுபடியில் வரி விதிக்கின்ற முறையை ரத்து செய்து, எந்த பாசனத்திற்காக தண்ணீர் பாய்கிறதோ அதற்கான வரியை மட்டும் விதிக்க வேண்டுமென்பதை அரசு நிச்சயமாக மறுபரிசிலனை செய்யவேண்டும். பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து முடிவு எடுக்கவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வரி வசூல் செய்வதில் ஒரு முறையான முறை தொடர்ந்து கையாளப்பட்டு வருகிறது. அந்த முறையினுடைய அடிப்படை யிலே தான் எப்போதும் ஆய்ந்து பார்த்து வரி வசூல் செய்யப்படு கிறது. அவற்றை நம்முடைய விருப்பத்தின்படி அவ்வப்போது மாற்றுவது என்பது முரண்பாடானது; மாற்றுவதும் சரிப்பட்டு வராது. ஆய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அந்தக் குழு மாண்பு மிகு உறுப்பினர் கூறுவதுபோல் உண்மைகளைக் கண்டு ஆராயும். ஆராய்ந்து பார்த்து, வரி விதிப்பு சம்பந்தமான முடிவு எடுக்கும், முடிவு எடுக்கப்பட்ட பிறகு, விதிக்கப்பட்ட வரி வசூலிக்கப்படும். இந்த நிலையில், இப்போது இவ்வளவு தான் வசூலிக்கவேண்டும். அல்லது தள்ள வேண்டும் என்று சொல்வது சரியாகப்பொருந்தாது. பயிர் ஆய்வுக்குழுவினுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு அந்த நிலைமையை ஆராய்ந்து அறிந்தபிறகு, எடுக்கவேண்டிய முடிவு களை இந்த அரசு எடுக்கும்.

### (ஆ) காஞ்சிபுரம் அருகே கள் குடித்து சிலர் இறந்துள்ளதாக கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, ப. பொன்னுரங்கம், பரிதி இளம்வழுதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''சமீபத்தில் காஞ்சிபுரம் அருகே கள் குடித்து எட்டு பேர் இறந்ததினால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு ஆயத்தீர்வை கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக், கொண்டு வருகிறேன்.





மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் அருகே உள்ள தாமல் கிராமத்தில் 7 நபர்கள் கள் குடித்ததினால் இறந்துவிட்டார்கள் என்பதனைக் குறித்து சில செய்திப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின. இந்த நபர்களால் குடிக்கப்பட்ட கள், போதை தரத்தக்க அல்லது விஷத்தன்மை வாய்ந்த பொருட்களால் கலப்படம் செய்யப்பட்டிருந்தது எனும் கருத்துப்பட மிகத் திறமையுடன் வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டிருந்தன. பாலு செட்டி சத்திரம் காவல் நிலைய அதிகார எல்லைக்குள் மேற்கு செங்கல்பட்டு காவல் மாவட்டத்தில் காவல் நிலையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது தாமல் கிராமம்; 8,000 மக்கள் தொகை கொண்டது. அக்கிராமத்தின் ஒரு மாத சராசரி இறப்பு விதம் 5. பாதிக்கப்பட்ட 7 நபர்களின் பெயர் களும் அவர்கள் இறந்த தேதி மற்றும் அவர்கள் இறந்ததற்கான கிராம ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள காரணங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

| | | இறந்த நாள். | இறந்ததற்கான காரணம். |
|---|---|---|---|
| 1. | திரு. சக்ரவர்த்தி (47 வயது) | 26—11—85 | மாரடைப்பு |
| 2. | திரு. ஏமக்குப்பன் (50 வயது) | 2—12—85 | ,, |
| 3. | திரு. வீரபத்ர நாயக்கர் (60 வயது) | 12—12—85 | காய்ச்சல் |
| 4. | திரு. நாகப்பன் (28 வயது) | 12—12—85 | ,, |
| 5. | திரு. கே. கே. நடேசன் (62 வயது) | 19-12-85 | ,, |
| 6. | திரு. வேலு (45 வயது) | 21—12—85 | காச நோய் |
| 7. | திரு. கண்ணப்ப நாயகர் (65 வயது) | 22—12—85 | காய்ச்சல் |

இதில் மேலே 7ஆம் எண்ணில் குறிக்கப்பட்டுள்ள திரு. கண்ணப்ப நாயக்கர் 21—12—85 அன்று காஞ்சிபுரம் தலைமை மருத்துவ மனையில் ''அதிகக் காய்ச்சல்'' என அனுமதிக்கப்பட்டு 22—12—85 அன்று மருத்துவமனையிலிருந்து திரும்ப வந்து பிறகு இறந்துவிட்டார். அதற்கான மருத்துவ ஆவணச் சான்று இதனை உறுதிப்படுத்துகிறது. சம்பந்தப்பட்ட நபர்களின் உடல்கள் எரியூட்டப்பட்டுவிட்டன. எனவே புதைத்த பிணங்களை வெளியில் எடுத்து பிண ஆராய்வு செய்ய தற்போது வாய்ப் பில்லை. மேலே 1, 2 இலக்கமிட்டவர்கள் மாரடைப்பால் இறந்து விட்டனர். 3,4,5 மற்றும் 7 இலக்கமிட்டவர்கள் காய்ச்சலினால்

இறந்துவிட்டனர். 6 ஆம் இலக்கமிட்ட நபர் காச நோயினால் இறந்தார். ரகசியப் புலன் விசாரணை, உள்ளூர் காவல் நிலையத்தினர், மேற்கொண்டதில் 4, 5 இலக்கமிட்ட நபர்கள் உண்மையாக, முறையே, 2–12–85 மற்றும் 19–12–85 தூக்கில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது. காவல் துறையின் விசாரணைக்குப் பயந்து அவர்களுடைய உறவினர் கிராம நிர்வாக அதிகாரியிடம் தவறான தகவல்களைத் தந்துள்ளனர் எனத் தெரிகிறது. 1985 ஆம் ஆண்டு நவம்பர் மத்தியில் தொடங்கப்பட்டு, திரு. முருகன் என்ற உரிமதாரரால் நடத்தப்பட்டு வருகின்ற எண். 24/85–86 என்ற கள்ளுக் கடை ஒன்று அக்கிராமத்தில் உள்ளது. உரிமைதாரர் ஆம்பூரைச் சேர்ந்தவர். டிசம்பர் 1985 மத்தியில் திரு. மனு என்பவர் அதே ஊரில் எண். 20 உள்ள ஒரு சாராயக் கடை நடத்தத் தொடங்கியுள்ளார். மக்கள் தொடர்ந்து கள்ளைக் குடித்து வந்தால் தன்னுடைய சாராய வியாபாரம் பாதிக்கப்படும் என சாராய உரிமதாரரின் அச்சம் காரணமாக இரு உரிமதாரர்களிடையே வியாபாரப் பகை இருப்பதாகவும், இரு உரிமதாரர்களுக்கும் உள்ளூர் பிரபலபிரமுகர்களின் ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. பிரஸ்தாபக் கள்ளுக் கடையில் ஒரு நாளின் விற்பனை சுமார் 260 லிட்டர். எனவே, சராசரி 150, 200 நபர்கள் தினசரி கள் குடிக்கிறார்கள் எனத் தெரிகிறது. மேலே குறிப்பிட்டுள்ளபடி, அந்த 7 நபர்கள் வேறு வேறு தேதிகளில் இறந்துள்ளனர்; உண்மையிலேயே கள்ளில் கலப்படம் செய்யப்பட்டிருந்தால் அதனைக் குடித்த பலரில், குறைந்த பட்சம் உடல்நலக் குறைவாவது ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி ஏற்பட்டதற்கான எவ்விதத் தடயமுமில்லை. மதுவிலக்கு அமல் பிரிவு அவ்வப் பொழுது முன்னெச்சரிக்கையாகக் கள்ளுக் கடையிலிருந்து மாதிரி எடுத்து பரிசோதனக்கு அனுப்பி வருகிறது. 23–12–85 அன்று பிரஸ்தாபக் கள்ளுக் கடையிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரி தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகத்துக்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, சோதனை முடிவு அறிக்கையிலும் இத்திரவத்தில் உள் உற்பத்தி ஈத்தைல், ஆல்ககால், கிளிசரின், சர்க்கரைகள் அமிலங்கள் மற்றும் சுண்ணாம்பு உள்ளது எனவும், ஆக இது கள் தான் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 22–12–85 அன்று சில பத்திரிக்கை நிருபர்கள் தாமல் கிராமம் சென்றபோது திரு. சுந்தரம் என்பவர் சில தகவல்கள் கொடுத்ததாகவும் அதன்படி திரு. சுந்தரம் தினசரி கள் குடித்து வந்ததாகவும், அப்படிக் கள் குடித்தவுடன் தான் உடல் நலமற்று போவதால் உடனடியாக அப்பழக்கத்தினைக் கைவிட்டதாகவும் கூறியுள்ளார். அவர் எந்த மருத்துவரிடமும் எந்தவித சிகிச்சை பெற்றதாகத் தெரியவில்லை. பாலுசெட்டிச் சத்திர காவல் நிலையத்தில், மேற்கு செங்கற்பட்டு காவல் கண்காணிப்பாளரின் அறிவுரைப்படி ஒரு வழக்கு 304 எ. இ.பி.கோ. வின் கீழ் கு.எண். 307/85-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் காவல் ஆய்வாளர் மேற்கூறப்பட்டுள்ள திரு. சுந்தரத்தை அவர் தெரிவித்துள்ள வாக்குமூலத்தின் தராதரத்தினை அறிய மருத்துவப் பரிசோதனை செய்ய உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே பத்திரிகைச்செய்தியில்



600 008.

குறிப்பிட்டுள்ள நபர்கள் கலப்படம் செய்யப்பட்ட கள்ளைக் குடித்ததினால் தான் இறந்தார்கள் என்பதற்கு எவ்விதத் தடயமும் இல்லை. மேற்கூறிய சூழ்நிலையில் இந்நிகழ்வு சம்பந்தமாக யாதொரு நடவடிக்கையும் தேவையில்லை.

(முற்பகல் 10-40)

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் அவர்கள் கள் குடித்து இறக்கவில்லை, வியாதியின் காரணமாக இறந்திருக்கிறார்கள் என்று தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அந்த அறிக்கையில், பத்திரிகையில் வந்த செய்தியில் போட்டுள்ளபடி கலப்படம் செய்த கள் குடித்ததன் காரணத்தினால் இறந்தார்கள் என்பதற்கான எந்தவித தடயமும் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது, அது முற்றிலும் உண்மையாகத்தான் இருக்கும். வதந்தியையும் பீதியையும் கிளப்ப வேண்டுமென்ற முறையிலே, நல்ல முறையிலே, விசாரிக்காமல் சமூக விரோத அடிப்படையிலே அந்தச் செய்திகளைப் போட்ட பத்திரிகைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அந்தப் பத்திரிகைகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் ஒருமாத இடைவெளியில் 7 பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஆனால் உண்மைக்கு மாறாக 7 பேரும் ஒரே நாளில் ஒரு புதன் கிழமையில் கள் குடிக்கச் சென்று கள் குடித்தவுடனே அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டு வாந்தி, பேதி ஏற்பட்டு சுருண்டு விழுந்து இறந்தார்கள் என்று ஏதோ இறந்தவர்களின் கையைப் பிடித்துக் கொண்டே போனதுபோல் பத்திரிகைச் செய்தி வந்தது வருந்தத் தக்கது. அந்த சம்பந்தப்பட்ட ஊரில் பரபரப்பு இல்லை. தவறான செய்தியை வெளியிட்டதால்தான் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரி தவறான செய்தியை வெளியிட்ட பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆய்வு செய்யும்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அளித்த அறிக்கையிலே அவர்கள் கள்ளால் சாகவில்லை இயற்கையாக இறந்தார்கள் என்று போட்டிருப்பது உண்மை என்று உறுப்பினர் கூறினார். இந்த அறிக்கையே கன்ப்யூஸ்டாக இருக்கிறது, நீங்கள் வேண்டுமானால் படித்துப் பாருங்கள், தெரியும். 3 பேர்கள் தூக்குப் போட்டுக் கொண்டு செத்தார்கள் என்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். காவல் நிலையத்திலிருந்து தாமல் கிராமம் 3 கி.மீ. தூரத்திலே தான் இருக்கிறது. 3 கி. மீ. தூரத்திலே 3 பேர்கள் தூக்குப் போட்டுக் கொண்டார்கள் என்றால் 3 கி. மீ. தூரத்திலே போய் பிடிக்க முடியாத போலீஸ் என்ன போலீஸ்? இதிலே சொல்லப்

பட்டிருக்கிறது 307-வது செக்ஷன்படி கேஸ் ரிஜிஸ்டர் பண்ணப்பட்டிருக்கிறது என்று. எதை வைத்து ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள்? திரு. சுந்தரம் என்பவரை டெஸ்ட் பண்ணி கள் குடித்ததால் பாதிக்கப்பட்டிருக்கிறாரா என்று பரிசோதனை செய்வதற்காக டாக்டரிடம் அனுப்பியிருக்கிறார்கள். அதற்காகத்தான் 307-கீழ் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிரசங்கம் மாதிரி செய்யக் கூடாது. கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம்: திரு. சுந்தரத்தை பரிசோதனைக்கு அனுப்பி இருக்கிறார்கள். இப்போது விற்கிற—நாட் நேச்சுரல் டாடி, நான் அறிந்த வரையில் அது ஆர்டிபிஷியல் டாடி. பூசனிக்காயிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற கள் அது என்று பரவலாகப் பேசப்படுகிறது. அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இன்னொரு விநோதமான நிலைமை. எரியூட்டப்பட்ட பிணங்களை மீண்டும் பரிசோதனை செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று இதிலே சொல்லிவிட்டு இன்னொரு இடத்திலே, ''எனவே புதைத்த பிணங்களை வெளியில் எடுத்து பிண ஆய்வு செய்ய தற்போது வாய்ப்பில்லை'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. தம்முடைய சபையிலிருந்து இப்படிச் சொல்வதன் மூலமாக bad guideline is given to the police என்றாகிவிடும். தற்கொலை செய்து கொண்டால், அல்லது கொலை செய்யப்பட்டால் அந்தப் பிணத்தைப் புதைத்து விட்டால் இனிமேல் அதைப் பரிசோதனை செய்ய முடியாது என்று சொல்வதாக அமையும். ஆகவே போலீஸ்-க்கு தவறாக நடந்துகொள்வதற்கு இது உறுதுணையாக இருக்கிறது. இந்த அறிக்கையிலே கள் குடித்ததால் அவர்கள் சாகவில்லை என்று கண்டுபிடித்தாகி விட்டது என்று சொல்லக்கூடிய முறையிலே அமைந்திருக்கிறது. திரு. சுந்தரத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஏன் 307 செக்ஷன்படி வழக்குப் போடவேண்டும்? எனவே இந்த சாவுகள் கள்ளால் ஏற்பட்டிருக்கும் என்ற நிலையிருக்கிற காரணத்தால் திரு. சுந்தரத்தையொட்டி மீண்டும் அதை விசாரணை செய்து சம்பந்தப்பட்ட நபர்கள்மீது பாய்சன்ஸ் டாடி விற்ற நபர்களின் மீது துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்கார் அறிக்கையிலே கள் குடித்து இறந்ததாகக் குறிப்பிடப்படவில்லை. சிலர் மாரடைப்பாலும் மேலும் சிலர் காய்ச்சலாலும் ஒருவர் காசநோயினாலும் இறந்ததாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் புலன் விசாரணையில் 7 பேர்கள் இறந்ததில் 2 பேர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று தெரிகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஊரில் கிராம அதிகாரியினுடைய ரெக்கார்டில் அது இருக்க வேண்டும் அல்லது இறந்துபோனவர்களின் உடலைப் பரிசோதித்து அதிலே, கள் சாப்பிட்டு, அது விஷம் உள்ள கள்ளாக இருந்தது என்று சான்றிதழ் இருக்க வேண்டும் அல்லது இறந்தவர்களுடைய உற்றார் உறவினர், ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் யாராவது புகார் செய்து, கள் குடித்ததால் இறந்தார்கள் என்று சொன்னாலும் பரவாயில்லை. ஆனால் ஆதாரமே இல்லா



திருக்கின்றபொழுது மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் புலன் விசாரிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். சம்பந்தப்பட்ட சுந்தரத்தையே விசாரித்தபொழுது அவர் தனக்கு இந்த கள் குடித்ததால்தான் உடல் நலம் இல்லை என்று சொல்ல மருத்துவர்கள் சான்றிதழ் இல்லை. அதுமட்டுமல்ல, சுந்தரம் சொன்னதை வைத்துத்தான் ஆம்பூர்க்காரர் ஒருவர் கள் கடை வைத்திருக்கிறார், அதிலே உள்ள கள்ளை எடுத்து பரிசோதனை செய்து, 6—1—1986 அன்று அது கள்ளே தவிர அதிலே வேறு கலப்படம் எதுவுமில்லை என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினரவர்கள் இது உண்மையான கள் இல்லை என்று சொன்னால் அவர் எந்தக் கள் கடையிலே இருந்தாலும் சரி அது உண்மையான கள் இல்லை என்று ஆதாரத்துடன் சொன்னால் அதன்மீது சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்.

### ஊராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான தகுதி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு. சட்டப் பேரவை விதி 111-இன் கீழ் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பேரவைக்கு அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

* மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 13—2—1986 அன்று தேர்தல்கள் நடைபெற உள்ளன.

1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 25 (2) (C)-ன்படி ஒருவர் வேட்பு மனு தாக்கல் செய்யும் தேதியன்று அல்லது தேர்தல் தேதியன்று ஒரு ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தோடு செய்துள்ள நடப்பு ஒப்பந்தத்திலோ அல்லது அதற்காக செய்யப்படும் எந்த வேலையிலோ, பற்றுடையவராக இருந்தால் ஊராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியற்றவராவார்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைகளை முன்னின்று செய்ய கேட்டுக் கொள்ளப்பட்ட நபர்கள் அந்த வேலைகளை ஊராட்சிக்காக செய்வதால் அவர்கள் ஊராட்சிகளுக்கு செய்யும் வேலைகளில் பற்றுள்ளவர்கள் என்று கருதி, அவர்கள் மேற்கூறிய சட்டப் பிரிவின் கீழ் ஊராட்சி தேர்தல்களில் போட்டியிட தகுதியற்றவர்களாக ஆவார்கள்.

எனினும், அரசின் சார்பில் இந்தப் பணிகள் செய்பவர்கள் எவரேனும் நடைபெற உள்ள தேர்தலில் கலந்து கொள்ள விரும்பினால் வேட்பு மனு தாக்கல் செய்யுமுன், செய்துள்ள பணியோடு நிறுத்திக்கொண்டு கணக்கை முடித்துக்கொண்டு அதற்குண்டான சான்றிதழினை ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் பெற்று தேர்தலில் போட்டியிடலாம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவு.

### பச்சையப்பன் அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986-ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஒரு முறை வருகின்ற போனஸ் மாதிரி இது வருகிறது. ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசனிலே அழகாகச் சொல்கிறார்கள், ஏதோ பெரிய பட்ஜெட் மாதிரி போட்டிருக்கிறார்கள். என்ன ரீசன் தருகிறார்கள் என்றால், பெரிய பட்ஜெட்டைப்போல போட்டுவிட்டு, ஹைகோர்ட்டிலே இருந்து கைட்லைன்ஸ் வர வேண்டுமாம். ஆண்டுக்கு ஒருமுறை கைட்லைன்ஸ் வருகிறது வருகிறது என்று சொன்னால் இது சர்க்காரா என்று கேட்க விரும்புகிறேன். ஹைகோர்ட்டிலேயிருந்து ஒரு கைட்லைனை வாங்குவதற்கு ஐந்நூறு வருஷங்கள் வேண்டுமென்றால்...

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த பச்சையப்ப அறக்கட்டளையை மேலாண்மை செய்யும் குழுவைத் திருத்தியமைப்பதற்கான ஒரு அனுமதியை நாம் கேட்டிருக்கிறோம். அந்த அனுமதியை எதிர்த்து இன்றைக்கு வழக்காடிக் கொண்டிருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்தவர்கள்தான். காமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், சம்பந்தப்பட்ட நபர்களிடம் பேசி ஒத்துழைப்பைத் தரச் சொன்னால் அது வெகுவிரைவிலே முடியும்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்கள் சென்றிருக்கிறார்கள் என்ற பாணியிலே சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கமே முயற்சியெடுத்துக்கொண்டு, அக்கறை எடுத்துக்கொண்டு, உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும்; எலக்டெட் பாடி இருக்க வேண்டும்; நாமினேட்டெட் பாடி இருக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்திலே, தனி முயற்சியெடுத்து, ஏன் இந்தக் கேசை வேகமாக டிஸ்போஸ் செய்யக்கூடாது?



(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்குப் போகும்போது அரசு எல்லா விதமான முயற்சிகளும் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை எதிர்த்து வழக்காடுவதற்குச் சம்பந்தப்பட்ட சிலபேர் வந்திருக்கிறார்கள். அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் ஒத்துழைப்பு தந்தால் மிக விரைவிலே அது முடியுமே தவிர, அங்கே எதிர்த்து வழக்காடிக் கொண்டு, இங்கே வந்து ஏன் தாமதம் ஆகிறது, ஏன் தாமதம் ஆகிறது என்றால் வழக்கு முடிகிற வரைக்கும் நீதிமன்றம் தீர்ப்பு தருகிற வரைக்கும் அரசு அதை மீறி எதையும் செய்ய முடியாது.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்வதிலிருந்து எப்பொழுது வழக்கு முடிகிறதோ அப்பொழுதுதான் தேர்தல் என்று தெரிகிறது. அப்படி இருக்கும்போது ஏன் டைம் லிமிட், ஒரு வருஷம், ஒரு வருஷம் என்று எப்பொழுது பார்த்தாலும் கேட்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய நல்லெண்ணத்தைக் காட்டுகிறது. நாங்கள் 1 வருஷத்திற்குள்ளேயே முடிக்க வேண்டுமென்றுதான் நினைக்கிறோம். அது அங்கே தள்ளிப் போகிற காரணத்தால்தான் மறுபடியும் இங்கே வருகிறது. எங்களுக்கே இப்படி 1 வருஷம் இருந்தால் போதும் என்றுதான் தோன்றுகிறது. அதற்குள்ளே முடிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தை இதிலே இருந்தே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: அமைச்சர் நல்லெண்ணத்தினாலே 1 வருஷம் என்று சொல்கிறார்கள். ஏன் 6 மாதம் கேட்கலாமே; 6 மாதம் கேட்பதற்குத் தடை இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்போஸ் பண்ணுவதாக இருந்தால், அப்போஸ் பண்ணுகிறேன் என்று சொல்லிவிட்டு அமர வேண்டும், 1 வருடம், 6 மாதம் பற்றியெல்லாம் கன்சிடரேஷன் ஸ்டேஜிலே சொல்ல வேண்டும். இன்றையதினம் ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தில் பேச 17 பேர்கள் பெயர்கள் கொடுத்திருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். பாராளுமன்றத்திலே ஒரு பில்லை அப்போஸ் செய்யும்போது ஒரே வரியில் 'ஐ அப்போஸ் தி பில்' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுவார்கள். கன்சிடரேஷன் ஸ்டேஜில் விவரமாகப் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது அப்போஸ் பண்ணுகிறேன் என்று மட்டும் சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுங்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம்** : அப்போஸ் பண்ணாமல் போகிற மாதிரி இருக்கக்கூடாது அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1986 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானம்— விவாதம் (தொடர்ச்சி).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திருத்தம் கொடுத்துள்ள திருவாளர்கள் திண்டிவனம் கே.எம். தங்கமணி, ப. தீர்த்தராமன் ஆகியோர் இருக்கையில் இல்லை.

**திரு. கோ. வீரய்யன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 8 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு என்னுடைய பெயரிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கு. ரமணி, திரு. வி. பி. சிந்தன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. எம். செல்லமுத்து ஆகியோரின் பெயராலும் கொடுத்திருக்கிற கீழ்க்கண்ட திருத்தங்களை நான் மொழிகிறேன்:

(1) பெருகி வரும் வேலை இல்லா திண்டாட்டத்தைத் தடுக்கவும், வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த, பொதுத் தொழில்கள் ஏற்படுத்துவது பற்றியும்;

(2) அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்திற்கும் பெருமளவு விலைவாசிகள் ஏறிக் கொண்டிருப்பதைத் தடுக்க உறுதியான எந்த நடவடிக்கைகள் பற்றியும்;

(3) தமிழகத்தில் பஞ்சாலைகள், எஞ்சினியரிங் தொழிற்சாலைகள் நீண்ட நாட்களாக மூடிக் கிடப்பது பற்றியும்;



(4) தமிழக அரசு நடத்தி வரும் பொது விநியோக திட்டத்தில் வழங்கி வந்த அரிசி அளவு குறைக்கப்பட்டது பற்றியும்;

(5) தமிழகத்தில் காவல் நிலையங்களிலும் மற்றும் மக்களை கொடுமைபடுத்தி வருவது பற்றியும்;

(6) அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான நிவாரணம் அளிக்காதது குறித்தும், அதற்குத் தேவையான நிதியை மத்திய அரசிடமிருந்து பெறாமல் இருப்பது பற்றியும்;

(7) சர்க்காரியா கமிஷனின் முன்னால் தமிழக அரசு சமர்ப்பித்துள்ள அறிக்கையின் விவரங்களைப் பற்றியும்;

(8) கைத்தறி தொழிலில், மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையின் காரணமாகவும், துணி தேக்கத்தினாலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலை இழந்துள்ளதைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும்;

(9) விவசாய தொழிலாளர்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் நிலம் பகிர்ந்தளிக்க தகுந்த சட்டம் இயற்றுவது பற்றியும்;

(10) விவசாய கூலி தொழிலாளிகளுக்கு வாழ்க்கைக்குப் போதுமான குறைந்தபட்ச கூலி உத்தரவாதம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்வது பற்றியும்;

(11) அதிகரித்து வரும் போலீஸ் அடக்குமுறையும் அதனால் தொழிலாளிகள் போன்ற பல்வேறு பகுதி மக்களுக்கு ஏற்பட்டு வரும் பாதுகாப்பற்ற நிலையை போக்குவதற்கு உள்ள நடவடிக்கைகளை பற்றியும்;

(12) அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்திற்கும் பெருமளவு விலைவாசிகள் ஏறிக் கொண்டிருப்பதைத் தடுக்க உறுதியான எந்த நடவடிக்கைகள் பற்றியும்;

(13) நாட்டில் எல்லா பகுதிகளிலும் லஞ்ச ஊழல்கள் அதிகரித்து வருவதை தடுக்க எந்த உறுதியான நடவடிக்கை எடுப்பது பற்றியும்;

(14) மாணவர்களுக்கு காலாகாலத்தில் கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகை, பாடநூல்கள் மற்ற படிப்பு வசதிகள் செய்து கொடுப்பது பற்றியும்;

(15) விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு நியாய விலை கிடைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றியும்;

(16) 4-12-1985 அன்று சென்னை மெரீனா கடற்கரையில் மீனவர்கள் மீது நடந்த துப்பாக்கி சூட்டில் ஏழு பேர் இறந்ததற்கும், பலர் காயம் அடைந்ததற்கும் அனுதாபம் தெரிவிக்காததும், நீதி விசாரணைக்கு உத்திரவிடாமல் இருப்பது பற்றியும்; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திரு. எம். செல்லமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பெயரிலும் திரு. அ. ரகுமான்கான் பெயராலும் கொடுத்திருக்கிற கீழ்க்கண்ட திருத்தத்தை நான் மொழிகிறேன்:

"4-12-1985 அன்று சென்னை மெரீனா கடற்கரையில் மீனவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஏழு பேர் இறந்ததற்கும், பலர் படுகாயம் அடைந்ததற்கும் அனுதாபம் தெரிவிக்காததும், நீதி விசாரணைக்கு உத்தரவிடாமல் இருப்பது பற்றியும்; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது."

திரு. மு. இராமநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இத்திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மான விவாதத்திலே பங்குகொள்ள இன்று 17 மாண்புமிகு உறுப்பினர்களின் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே விவாதத்திலே பங்குகொள்கிற உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டுகிறேன்.

திரு. ஏ. பாலுச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறுமை ஒழிப்புத் திட்டமான 20 அம்சத் திட்டத்தை மற்ற மாநிலங்களைவிட, தமிழகம் நல்லமுறையில் முதன்மையாக முடித்திருக்கிறது என்பதை அறியும்போது, புரட்சித் தலைவர் அரசு ஏழை, எளிய மக்களின் அரசாக இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக இன்றைதினம் விளங்குகிறது.

தொடர்ச்சியாக எதிர்க்கட்சிகள் தருகின்ற நெருக்கடியோடு இயற்கையின் நெருக்கடியான புயல், வெள்ளம், வறட்சி போன்றவற்றையும் சேர்த்து, இந்த அரசு போர்க்கால நடவடிக்கையாக மக்களுக்கு ஆற்றிய பணிகளை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சென்ற ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தது. அதுபோல், இந்த ஆண்டும் கடுமையான வறட்சிக்கு உள்ளாகி, வறட்சியான மாவட்டம் என்ற பெயரை ஆண்டுதோறும் தக்க வைத்துக் கொள்வது போல், இயற்கை சோதனை செய்து கொண்டிருக்





கிறது. எனவே உடனடியாக இராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்று அறிவித்து விவசாயிகளிடமிருந்து நில வரி, மற்றும் விவசாயிகள் கடனை ரத்து செய்ய முயற்சி செய்வதோடு, வறட்சிப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுகிறேன். அங்கு வறட்சியாக இருப்பதால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு வாய்க்கால்கள் அமைத்துக் கொடுத்து, பாசன வசதி செய்து தர கேட்டுக்கொள்கிறேன்.

வைகை ஆறு நீர்ப்பாசனத்தில் மாவட்டங்கள் நீர்ப் பங்கீடு பெற்றுக்கொள்வதில் எங்கள் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு வட்டங்களின் பாசன வரவைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நீர்ப் பங்கீடு அமைய, புதிய ஏற்பாட்டைச் செய்ய அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிப் பெருக மின்சாரம் அத்தியாவசியத் தேவை என்பதை உணர்ந்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,000 கோடி ரூபாய் செலவிடவிருப்பதை வரவேற்கிறேன்.

ஊரக வளர்ச்சியில் அக்கறைகாட்டி, இதனால் 2.73 இலட்சம் குடும்பங்கள் பயன்படவேண்டுமென்று இலக்கு நிர்ணயித்திருப்பதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10,000 குடும்பங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உத்தேசித்திருப்பதை வரவேற்கிறேன். அதேநேரத்தில் என்னுடைய தொகுதியில் பல இடங்களில் கட்டப்பட்ட மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் இன்றைய தினம் காட்சிப்பொருள்களாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் கூடிய விரைவில் நல்லமுறையில் செயல்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடியிலும், பரமக்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆரம்பச் சுகாதாரம் மிகவும் சீர்கெட்டிருக்கிறது. அதனால் அங்கே மஞ்சள்காமாலை, காலரா, இளம்பிள்ளைவாதம் போன்ற நோய்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இத்தகைய நோய்களைப் போக்க அங்கே நிரந்தரமான சுகாதார வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் துணிக்கொள்கை கைத்தறித் துறைக்குப் போதுமான ஆதரவு அளிக்காது என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருக்கும் பொருட்டு, அத்துறையை நவீனமயமாக்குவது மட்டுமின்றி தகுந்த ஊக்கத் தொகைகளையும் நிதி வகையிலான அடிப்படை வசதிகளையும் செய்வதற்கு ஏற்பாடு செய்திருப்பதை வரவேற்கிறேன்.

நெசவாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை காலதாமதம் இல்லாமல் கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினால் கைத்தறித் துணிகள் தேக்கம் அடைந்து கைத்தறிச் சங்கங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. ஆகவே, காலதாமதம் இல்லாமல் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் என்று ஏழை எளிய மக்களுக்கு ஆதிதிராவிட மக்களுக்கு இந்த அரசு கட்டித்தர முன்வந்திருப்பதை வரவேற்று, மீண்டும் இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கின்றது என்பதை இதன்மூலம் உலகுக்கு காட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன் அடையாளமாகத்தான் நமக்கு எதையும் செய்யும் அரசு இது என்று கருதி, எதையும் செய்கின்ற அரசுக்கு செய்யாறு இடைத்தேர்தலில் வாக்களித்து மக்களின் வாழ்க்கைப் பிரச்சனையைத் தீர்ப்பது இந்த அரசின் கொள்கை என்பதை நாட்டுக்கு அறிவித்திருக்கிறார்கள் என்று கூறி, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிறேன்.

ஆண்டுதோறும் மேதகு ஆளுநர் இந்த மன்றத்திற்கு வந்து, கூட்டு அவையில் உரையாற்றுவது சம்பிரதாயமாக இருக்கிறது. இந்த ஆண்டு மேதகு ஆளுநர் இந்த மாமன்றத்திற்கு வந்து உரை நிகழ்த்தியது மட்டுமல்ல; அந்த உரை சம்பிரதாயமாகவும் அமைந்துவிட்டது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு மேதகு ஆளுநர் உரையைப் படிக்கும்போது பாயாசம் சாப்பிட்ட மாதிரியான உணர்வு இருந்தது. இந்த ஆண்டு ஆளுநர் உரையைப் படிக்கும்போது ஆறினகஞ்சி சாப்பிடுவது போன்று சப்பென்று இருந்தது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மேதகு ஆளுநர் உரையை தமிழிலே வாசித்தபோது ஒரே ஒரு முறை ஆளும்கட்சி உறுப்பினர்கள் மேசையைத் தட்டி வரவேற்ற ஒரே ஒரு அம்சம் ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் கட்டித்தரும் திட்டம்தான். அது ஒன்றுதான் இந்த மேதகு ஆளுநர் உரையின் சிறப்பு அம்சம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர்கள், மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களுக்கு கொண்டு வந்திருக்கிற திட்டத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் ஆளுநர் உரையிலே பொது மக்களும் நாங்களும் எதிர்பார்த்த பல்வேறு திட்டங்கள் பிரதிபலிக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் பல்வேறு கருத்துக்களை ஒருசில கொள்கைகளை இந்த உரையிலே தெரிவித்திருப்பதை வரவேற்கிறேன். மின்சார உற்பத்திக்காக 2000 கோடி ரூபாய் செலவு செய்ய இருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு உத்திரப்பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தொழில் தொடங்க அதிக முதலீடு செய்திருப்பதாக நேற்று ஆளும்கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். சென்னை, சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொழில் வளத்தைப் பெருக்கியது போல இந்த அரசு கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் தொழிற்சாலைகளைத் தொடங்கியிருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இது மாற்றான்தாய் மனப்பான்மை இல்லையா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

டெல்லிக்கு அருகிலே உத்திரப்பிரதேசமும், பஞ்சாபும் இருப்பதால் அங்கே இருக்கிற அரசுகளைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி டெல்லிக்கு சென்று கோரிக்கைகளை வைத்து, வற்புறுத்தி, வாதாடி, தொழிற்சாலைகளை நடத்த அனுமதி பெறுகிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற அரசு கடிதம் எழுதி போட்டுவிட்டால் போதும், பிரச்சனை தீர்ந்துவிடும், கோரிக்கை நிறைவேறிவிடும், தொழில் வந்துவிடும் என்று கருதிக்கொண்டிருக்கிறது. மத்திய அரசை முறையாக அணுகி, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11–00)

மத்திய அரசு 91 தொழில்களுக்கு டெல்லியை அணுக வேண்டாம் என்று தெரிவித்து மாநில அரசே 91 தொழில்களுக்கு லைசன்ஸ் வழங்கிக் கொள்ளலாம் என்று அறிவித்திருக்கின்றது. அது மட்டுமல்ல. 35 இலட்சம் ரூபாய் முதலீட்டுக்கான தொழில்களுக்கு மாநில அரசு தொழில் லைசன்ஸ் வழங்கிக் கொள்ளலாம் என்று பல்வேறு சலுகைகளை மத்திய அரசு அறிவித்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாநில அரசு தன்னுடைய திறமையின்மையை மறைக்க மத்திய அரசின் மீது புழுதிவாரித் தூற்றுவது அவ்வளவு சரியல்ல என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன். தமிழகத்தின் மீது மத்திய அரசுக்கு அக்கறை இல்லை என்றும், எந்தத் திட்டமாக இருந்தாலும் போராடிதான் பெற வேண்டி இருக்கின்றது என்றும் நேற்று ஆளும் கட்சித் தரப்பிலே பேசப்பட்டது. தமிழக மக்களின் நல்வாழ்விலே இளைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் மிகுந்த அக்கறை உள்ளது என்பதை நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசு முன்வந்து அறிவித்த திட்டங்களைப் பயன் படுத்திக் கொள்ள தமிழக அரசு முயற்சி செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சேலத்தில் விமான நிலையம் அமைக்க மத்திய அரசு 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒப்புதல் அளித்துவிட்டது. அதுமட்டுமல்லாமல் அவ்வாறு சேலத்திலே விமான நிலையம் அமைக்க 300 ஏக்கர் நிலத்தை மாநில அரசு தரவேண்டும் என்று மாநில அரசுக்கு மத்திய அரசு கடிதம் எழுதி இருக்கின்றது. ஆனால் இதுவரையில் இந்த அரசு மத்திய அரசுக்கு 300 ஏக்கர் நிலத்தைக் கொடுத்து அந்த சேலம் விமான நிலையத்தைக் கொண்டுவர எந்தவிதமான முயற்சி எடுத்திருக்கிறார்களா என்று சொன்னால், இல்லை என்றுதான் சொல்ல முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய மத்திய ராஜாங்க விமானத் துறை அமைச்சர் திரு. ஜகதீஷ் டைட்லர் அவர்கள் 14–11-1985 அன்று மத்திய அரசு சேலத்திலே விமான நிலையம் திறக்கத் தயாராக இருக் கிறது என்றும் ஆனால் அதற்கான நிலத்தை மாநில அரசு செலவு செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டதற்குப் பிறகும், நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால் மத்திய அரசு விமான நிலையங்களை அமைப்பதற்காக ஒதுக்கி யுள்ள தொகையை அப்படியே வைத்துக்கொண்டிருக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகாவது இந்த அரசு முன்வந்து அந்த 300 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து மத்திய அரசுக்குக் கொடுத்து சேலம் விமான நிலையம் அமைக்க முயற்சிகளை எடுத்திருக் கிறார்களா என்று சொன்னால் இல்லை என்பதைத் தான் இந்த நேரத்தில் நான் மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த ஆளுநர் உரைக்கு பதிலளித்துப் பேசுகின்றபோது சேலம் விமான நிலையம் சம்பந்தமாக நல்ல திட்டத்தை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



சாராயத்தை சில்லறை விற்பனை செய்யும் உரிமையை மாநில வாணிபக் கழகத்திடம் இந்த அரசு ஒப்படைத்தது மிகப் பெரிய தவறாகும். மாநில வாணிபக் கழகம் சாராயத்தை விற்பதில் பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அரசு நம்பிக்கையோடு கொடுத்ததை இந்த மாநில வாணிபக் கழகம் துஷ்பிரயோகம் செய்திருக்கின்றது. தவறான ஏஜென்சி முறை மூலம் அரசுக்கு மாநில வாணிபக் கழகம் களங்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு தன்னுடைய நல்ல பெயரை இந்த வாணிபக் கழகத்தின் மூலம் இழக்கப் போகிறதோ என்ற சந்தேகத்தை மாநில வாணிபக் கழகம் உருவாக்கி இருக்கின்றது என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

இந்த அரசு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளில் மிக முக்கியமான பிரச்சினை வேலையில்லாத்தன்மை என்று உங்களுடைய ஆளுநர் உரையிலே தெரிவிக்கிறீர்கள், அப்படி என்றால் வேலையில்லாத இளைஞர்களுக்கு இந்த சாராயக் கடை ஏஜென்சியைக் கொடுத்திருக்க வேண்டாமா? யார் யாருக்கோ சாராயக்கடை லைசென்சைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குப் பதிலாக இந்த வேலையற்ற பட்டதாரி இளைஞர் களுக்குக் கொடுத்திருக்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் பேரியக்கத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் சாராயக்கடை ஏஜென்சியை யாருக்குக் கொடுக்கிறீர்கள் என்பதில் எங்களுக்கு அக்கறை இல்லை. ஆனால் 1975-ஆம் ஆண்டிலே ஆண்ட அரசின் மீது என்ன குற்றம் சாட்டப் பட்டதோ, அதே குற்றச்சாட்டிற்கு இந்த அரசும் ஆளாகி விடக்கூடாது என்ற கவலைதான் எங்களுடைய உள்ளத்தில் இருக்கின்றது.

நேற்று இங்கே பேசுகின்றபோது ஆளும் கட்சித் தரப்பிலே சொன்னார்கள். எதிர்க் கட்சியினர் பரிந்துரை செய்ய வில்லையா, எதிர்க்கட்சியினர் நடத்தவில்லையா என்றெல்லாம் சொன்னார்கள். நான் கேட்கிறேன். தமிழகம் முழுவதும் உள்ள சாராய ஏஜென்டுகளை மாநில வாணிபக் கழகம் நியமனம் செய்த பட்டியலை சட்டமன்றத்தில் வைக்க இந்த அரசு தயாராக இருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். மாநில வாணிபக் கழகம் சாராயக்கடை ஏஜென்சியைக் கொடுத்ததில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன. துஷ்பிரயோகம் செய்திருக்கின்றது. எனவே அது குறித்து விசாரணைக் கமிஷன் வைக்க இந்த அரசு தயாராக இருக்கின்றதா என்று நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாகக கேட்க ஆசைப்படுகிறேன்.

தமிழக அரசு செயல்படுத்தி வரும் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சமுதாயக் காடுகள் வளர்ப்புத் திட்டம் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாயக்

காடு வளர்ப்பு சம்பந்தமாக கணக்குகளில் தான் காட்டப்படுகிறதே தவிர உண்மையிலேயே மரக்கன்றுகள் நடப்பட்டதாகத் தெரியவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன பேசுகிறார். எப்படி பேசுகிறார். எந்தப் பாதையில் போகிறார் என்பது புரிகிறது. புரிந்து போகின்ற பாதைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயக் காடுகள் வளர்ப்பதற்காக, ஊராட்சி ஒன்றியங்களிலே, கன்றுகளை வளர்த்து நர்சரிகளையும் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியங்களைப் போய் பார்க்க வேண்டும். அப்படி ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற நர்சரிகளைப் போய் பார்ப்பதற்குப் பிறகு, இங்கே வந்து பேச வேண்டுமே தவிர ஒட்டு மொத்தமாக எதுவுமே நடக்கவில்லை என்று குற்றச்சாட்டு சொல்லக் கூடாது.

எந்த நீதி விசாரணைக்கும் தயாராக இருக்கிறோம். பயப்பட மாட்டோம். காங்கிரஸ் கட்சியாக இருந்தால் மட்டும் பயந்து விடுவோமா என்ன? பயப்பட மாட்டோம். உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பேசுவது நியாயமல்ல என்றும், பதிலும் அதே ரீதியில் வரும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி)

திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சமுதாயக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் நடைபெற்ற முறைகேடுகளை எடுத்துச் சொன்னோம் என்று சொன்னால், அந்த முறை கேடுகள் களையப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் எடுத்துச் சொல்லுகிறோமே தவிர..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒட்டுமொத்தமாகச் சொல்லக்கூடாது. ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும்.

திரு. கே. அன்பழகன்: என்னை அனுமதித்தால் தானே சொல்ல முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே சென்று பார்த்துவிட்டு வந்துதான் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். நான் அப்படிப் பார்த்து விட்டு வந்துதான் சொல்கிறேன். என்னுடைய ஓமலூர் தொகுதியில் உள்ள காடையாம்பட்டி ஒன்றியத்திலே அப்படிப்பட்ட முறை கேடுகள் நடந்திருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.



ஓமலூர் தொகுதியில் உள்ள கணவாய்புதூர், பூமரத்தூர், வீரச்சியூர் போன்ற பகுதிகளில் உள்ள மலைவாழ் மக்கள் வாழும் கிராமங்களில் அவர்களுக்கு மின்சார வசதியும் இல்லை, போக்கு வரத்து வசதியும்இல்லை.இந்த அரசு அவற்றை அம்மக்களுக்காகச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் முன் மொழிந்த இந்த தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் சம்பிரதாயத்திற்காகவோ, சடங்கிற்காகவோ இந்த உரையை இங்கே ஆற்றவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே முதலிலே தெளிவு படுத்தி எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய செம்மையான ஆட்சியினுடைய கொள்கைகளை விளக்குகிற உரையாகவும், சாதனைகளை விளக்குகின்ற உரையாகவும் இந்த ஆட்சியின் குறிக்கோள்களை எடுத்துச் சொல்கிற உரையாகவும் அது அமைந்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் எடுத்துச் சொன்ன மேதகு ஆளுநர் அவர்கள், அந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் இருக்கிற சங்கடங்களையும் இந்த உரையிலே எடுத்துச் சொல்லாமல் இல்லை.

சாதனைகளை விளக்கிக் கூறிய ஆளுநர் அவர்கள், அந்த சாதனைகளை சாதிப்பதில் இருக்கிற சங்கடங்களையும் எடுத்துச் சொல்லாமல் இல்லை. அந்த நிலைமைகளுக்கு எல்லாம் என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்ப்போமேயானால், நிதி பற்றாக்குறை இருக்கிறது என்பது தான் பதிலாக வருகிறது. இதை நாம் அனைவரும் ஒத்துக் கொண்டாக வேண்டும்.

மத்தியிலே குவிக்கப்படுகின்ற நிதிக் குவியலிலிருந்து மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய நியாயமான பங்கீடு கொடுக்கப்படவில்லை என்பதுதான் இன்றைக்கு அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஒட்டு மொத்தமான மனக்குறையாக இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். அவன் அவன் தன் விதியை எண்ணி 'எல்லாம் அவன் செயல்' என்று ஆண்டவனைப் பார்த்துச் சொல்கிறான். அப்படியே இன்றைக்கு நிதிநிலைமையை எண்ணி மாநில அரசுகளும் 'எல்லாம் அவன் செயல்' என்று மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற ஆட்சியைப் பார்த்து கூறிக் கொண்டிருக் கிறார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை என்பதையும் நாம் எல்லோரும் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

அதேபோல மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் ஏழைகளுக்குச் செய்ய வேண்டும் என்ற தாராள மனது இருக்கிறது என்று இங்கே பேசிய அனைத்து தோழமைக் கட்சி நண்பர்களும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நம் ஆட்சியைப் பொறுத்த வரையில் கர்ணனைப் போன்ற மனத்தைப் பெற்றிருந்தாலும், நம்முடைய நிதி நிலைமை குசேலரின் நிலைமைகளைப்போல் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் அனைவரும் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். அதைத்தான் 8 வது நிதிக் குழுவிடத்திலே சென்று, இன்னும் அதிகமாக நிதி உதவி கொடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்து, நமது அரசின் பரிந்துரைகளில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The t ansfer of the Revenue Receipts through Finance Commission f om Centre to States was only 25% of the Centre's revenue,

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக மாநிலங்களிலேயிருந்து 100 ரூபாய் வரியாக மத்திய அரசுக்குச் செல்கிறது என்று சொன்னால், அங்கேயிருந்து மாநிலத்திற்கு வருகிற பங்கு 25 ரூபாய்தான். அதை இங்கே இருக்கிற உறுப்பினர்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த 25 ரூபாயும் நமக்குக் கிடைக்காத ஒரு சூழ்நிலை தான் இருக்கிறது. அதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11–10)

About 20% of the amount flow back to the Centre in the form of interest on the loans.

மத்திய அரசு கடனாகக் கொடுக்கின்ற அந்தப் பணத்திற்கு 20 சதவீதத்தை வட்டியாக எடுத்துக் கொள்கிறார்கள். ஒட்டு மொத்தமாக பார்க்கிறபோது 100 ரூபாய் வரியாக செல்கிறதென்றால் நமக்கு இடைக்கிற தொகை 20 ரூபாய்தான். அந்த 20 ரூபாயில்தான் நாம் திட்டங்களைத் தீட்டி ஏழை எளியவர்களுக்கு, நலிந்தவர்களுக்கு அவற்றை செயல்படுத்த வேண்டுமென்ற சூழ்நிலையை நிச்சயமாக உணர்ந்து பார்க்க வேண்டும். அதைத்தான் மாண்புமிகுஇராமலிங்கம்அவர்கள் சொன்னார்கள். உலக வங்கியிலிருந்து கொடுக்கிற கடனைக் கூட ஒட்டு மொத்தமாக நமக்குக் கொடுக்காமல் ஒரு வட்டிக்காரனைப் போல மத்திய அரசு நடந்து கொள்வது என்று அவர் குறிப்பிட்டார். அதுமட்டுமல்லாமல், 50 ஆண்டுகளுக்கு நீண்டகால கடனை வாங்கிக் கொண்டு மத்திய அரசு நமக்கு 10 ஆண்டு, 15 ஆண்டு என்று கொடுத்துவிட்டு அவர்கள் அதை வேறு வகையில் பயன்படுத்துகிறார்கள்.



அதுமட்டுமல்லாமல் கொடுக்கிற பணத்தை முழுவதுமாகக் கொடுக்காமல் தவணையாக கொடுக்கிறார்கள. 100 கோடி ஒதுக்குகிறார்கள் என்றால் 10 கோடி, 10 கோடி என்று தவணைகளாக பிரித்துக் கொடுக்கிற ஒரு துர்ப்பாக்கிய நிலைமை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் நிதி ஒதுக்கீட்டுக் கொள்கையில் மத்திய அரசு தயவு செய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், திட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு ஆர்.எம்.வி. அவர்களும் மத்திய அரசினிடத்தில் இதனை வலியுறுத்தி, அனைத்து மாநிலங்களுக்கும் உதவுகிற வகையில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டுக் கொள்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதுகூட புயல், வெள்ளத்திற்காக மத்திய அரசு ரூபாய் 66·81 கோடியை நமக்கு உதவியிருக்கிறார்கள். அது வரவேற்கக் கூடியது. அதற்காக நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் இங்கே இருக்கிற உறுப்பினர்களில் சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஏதோ நமக்கு இனாமாக கொடுத்து விட்டது. அவர்கள் உதவி தாராளமாக கிடைக்கிறது என்று. ஆனால் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தப் பணத்தை மத்திய அரசு திட்டச் செலவிலே கழித்துக் கொள்கிறார்கள். அதாவது ஏழாவது திட்டக் காலத்திற்கு 5,750 கோடி ரூபாய் நமக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், நடப்பாண்டில் 960 கோடி நமக்கு கிடைக்கிறது என்றால், இப்படி புயல் வெள்ளத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கிற 66.81 கோடி ரூபாயை இந்தத் திட்டச் செலவில் அவர்கள் குறைத்துக் கொள்கிறார்கள். அப்படி குறைத்துக் கொள்கிற தன்மை நிச்சயமாக நீக்கப்பட வேண்டும். துயர் துடைப்பு நிதிக்கென்று மத்திய அரசு ஏதாவது ஒரு பொது நிதியை ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக தேசிய அளவில் துயர் துடைப்பு நிதி அமைப்பை எல்லா மாநிலங்களுக்கும் உதவுகிற அளவிற்கு மத்திய அரசு அமைக்க வேண்டும். எல்லா மாநிலங்களிலிருந்தும் மத்திய அரசுக்கு இன்கம் டாக்ஸ், எக்சைஸ் டியூட்டி. கஸ்டம்ஸ் டியூட்டி என்று வரிகளாக செல்கிற அந்தத் தொகையில் குறிப்பிட்ட சதவீதத்தை அந்தப் பொது நிதியில் வைத்து, ஒவ்வொரு மாநிலத்திலும் இயற்கை இடர்பாடுகள் ஏற்படுகிறபோது தேவைக்கு தகுந்த அளவிலே இந்தப் பணத்தைப் பிரித்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் துயர் துடைப்பிற்காக கொடுக்கிற பணத்தை திட்டச் செலவில் கழித்துக் கொள்கிற நிலைமை இருக்கக் கூடாது.

'தலைவலி தனக்கு வந்தால்தான் தெரியும்' என்று கிராமப் புறத்தில் சொல்வார்கள். மாநிலங்களிடத்தில் மத்திய அரசு இப்படி நடந்து கொள்கிறார்கள். ஆனால் மத்திய அரசினுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் யூனியன் பிரதேசங்களில் அவர்கள்

எந்த அணுகுமுறையை கையாளுகிறார்கள் என்றால, ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். டெல்லி ஒரு யூனியன் பிரதேசம். அங்கே மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மின்சாரக் கட்டணத்தை ஏற்றாமல், அந்த இழப்பிற்கு சப்சிடி கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் பினான்ஷியல் டெசிட் என்று காரணம் காட்டி டெல்லி எலக்ட்ரிசிட்டி அன்டர்டேக்கிங்கிற்கு 80 கோடி ரூபாய் 1985–86ஆம் ஆண்டிற்கு நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு கொடுத்திருக்கிறார்கள். மாநிலங்களுக்கு நிதியுதவி செய்தால் மாநிலங்கள் அதற்கு வட்டி செலுத்த வேண்டும். ஆனால் யூனியன் பிரதேசங்களுக்கு அந்த வட்டியை தள்ளுபடி செய்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் சென்ட்ரல் பவர் ஸ்டேஷனிலிருந்து பெறுகிற மின்சாரத்தை அவர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் அளிக்கிறார்கள். ஆனால் மாநிலங்களுக்கு அதற்கு தனியாக ஒரு கட்டணத்தை வசூலிக்கிறார்கள். ஏன் இந்த பாரபட்சம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சுண்டைக்காய் அளவிற்கு பரப்பளவு இருக்கிற டெல்லி யூனியன் பிரதேசத்திற்கு ஒரு நீதி, தமிழகத்திற்கு ஒரு நீதி என்றால் இது மாற்றான்தாய் மனப்பான்மை இல்லையா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். (குறுக்கீடு)

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. உறுப்பினர் செம்மலை அவர்கள் ஒரு உதாரணத்தை எடுத்துக்கொண்டு, மத்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்டு இருக்கிற டெல்லிக்கு ஒரு நீதியா? மற்ற மாநிலங்களுக்கு ஒரு நீதியா? என்று சொன்னார்கள். அதுவரையில் நாங்கள் கேட்டுக் கொண்டு இருந்தோம். ஆனால் தமிழகத்திற்கு ஒரு நீதியா? என்று கேட்கிற நேரத்திலேதான் நாங்கள் தலையிட வேண்டியதாக இருக்கிறது. டெல்லியைப் பொறுத்தவரையில் அது ஒரு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம். நம்முடைய நாட்டின் தலைநகராக இருக்கின்ற காரணத்தால், அதற்குக் கொஞ்சம் அதிகமான அக்கறையை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் எல்லா மாநிலங்களைப் பொறுத்தவரையிலும், மத்திய அரசாங்கம் ஒரே அளவிலேதான் இருக்கிறார்கள். வேண்டுமானால் நம்முடைய கோரிக்கையை வலியுறுத்தலாம்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, நானும் அதை ஒத்துக் கொள்கிறேன். டெல்லிக்குச் செய்யவேண்டாம் என்று சொல்லவில்லை. நமது மாநிலத்தினுடைய நிலைமையையும் தயவுசெய்து எண்ணிப்பார்த்து, உதவி செய்யவேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையிலே வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் ஒரு அருமையான கொள்கையை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதிகமான வேலைவாய்ப்பை கிராம மக்களுக்கு அளிக்கக்கூடிய கைத்தறி, கதர், குடிசைத் தொழில் மற்றும் அமைப்பு ரீதியிலே



இல்லாமல் உள்ள இதர சிறு தொழில் ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்தை இந்த அரசு குறிக்கோளாக வைத்திருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் எடுத்துச் சொல்கிறபோது ஆசிரியர்களுடைய போராட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் ரமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கையெழுத்துப் போடத் தெரியாத ஒரு தொழிலாளி 1,500 ரூபாய் சம்பளம் வாங்கும்போது, படித்த பட்டதாரிக்கு ஏன் கூடுதல் சம்பளம் கொடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். அரசாங்க அலுவலர்களைப் பொறுத்தவரையில் அதிக சம்பளம் கொடுக்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அளவிற்கு மீறிய சம்பளம், அளவுக்கு மீறிய சலுகைகள் அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற நேரத்தில் சமுதாயத்தில் என்ன நிலைமை ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் விளக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே, அரசாங்க வேலை மீது ஒரு மோகம் ஏற்படுகிறது. இன்று 10–வது படித்துவிட்டு, இன்றைக்கு வேலை வேண்டும் என்கிறார்கள். வாட்ச்மேன் வேலை போதும், அல்லது பியூன் வேலை போதும் என்கிறார்கள். அவர்கள், வேறு வேலை செய்வதற்குத் தயாராக இல்லை. ஒரு விவசாயி தன்னுடைய மகன் விவசாயத்தைச் செய்யவேண்டும் என்ற நிலைமையிலே தன்னுடைய மகன் இருக்கவேண்டும் என்று விரும்பவில்லை. அதுபோல், ஒரு நெசவாளி, தன்னுடைய மகன் நெசவுத் தொழிலைச் செய்யவேண்டும் என்ற நிலைமை இன்றைக்கு இல்லை. ஆனால் அரசாங்க வேலை செய்பவர்களுக்கு அளவுக்கு மீறிய சலுகை கொடுப்பதாலே, அந்த வேலையின் மீது மோகம் இருக்கிறது. அந்த மோகம் குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு நம்முடைய மேதகு ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிற இந்த அரசினுடைய குறிக்கோளாக இருக்கிற அந்த வேலைத் திட்டத்தை, நல்லமுறையில் செயல்படுத்த வேண்டும். எந்தத் தொழிலைச் செய்தாலும், அரசாங்க வேலைக்குச் செல்வதைவிட இந்தத் தொழிலிலே ஈடுபட்டால், அதிக வருமானம் வரும், சமுதாயத்திலே நல்ல மரியாதை கிடைக்கும் என்ற நிலைமையை இந்த அரசாங்கம், இந்தக் கொள்கை மூலம் நிச்சயமாக நிறைவேற்றும். அப்படிப்பட்ட நிலைமை மாறினால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு பெய்த மழையின் அளவைவிட இந்த ஆண்டு பெய்த மழையின் அளவு குறைவாக இருக்கிறது. ஏப்ரல், மே மாதங்களில் ஓரளவுக்கு அல்ல கடுமையான குடிநீர்ப்பஞ்சம் வருமோ என்ற அச்சம் பரவலாக இருக்கிறது. எனவே நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில், இந்தக் குடிநீர்ப்

பிரச்சனையைத் தீர்க்கிற அளவிற்கு, சேலம் மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அதிக குழாய்க் கிணறுகளை அமைத்து, இந்தக் குடிநீர்ப் பிரச்சனையைப் போக்குவதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குடிநீர்ப் பிரச்சனைகளைப் பற்றிச் சொல்லும்போது, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களுக்கு மட்டும்தான் போர்வெல் போடுகிறார்கள். டவுன் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், நிதியே இல்லாத டவுன் பஞ்சாயத்துக்கள், கிராமப் பஞ்சாயத்துக்களைவிட மோசமான நிலைமையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட நகர பஞ்சாயத்துகளுக்கும் இந்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர்ப் பிரச்சனையைப் போக்குவதற்கு குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு மத்திய அரசு மறைமுகமாக இந்தியைத் திணிக்கிறதோ என்ற அச்ச உணர்வு தமிழ்நாட்டு மக்களுக்கு எழுந்திருக்கிறது. அந்த நியாயமான சந்தேகத்தைப் போக்குவது மத்திய அரசினுடைய கடமை என்று நான் கருதுகிறேன். காரணம் தொலைக்காட்சியின் மூலமும், கல்விக் கொள்கையிலே, மாடல் ஸ்கூல், மாதிரிப் பள்ளிகளை அமைப்பதன் மூலமும், மறைமுகமாக, இந்தித் திணிப்பைச் செயல்படுத்துகிறார்கள் என்ற அச்ச உணர்வு ஏற்படுகிறது. மத்திய அரசு இன்சாட்டின் மூலமாக ஒரு சேனல் அமைத்து இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்புகிறபோது, மாநிலங்களுக்கு சில கூடுதல் சேனல்களை ஆரம்பித்துக்கொடுத்து, அந்தந்த மாநிலங்களுடைய நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பலாம். இதிலே எந்தவிதமான தவறும் இல்லை. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதைப்போல, மனது வைத்தால் நிச்சயமாக மத்திய அரசு இதைச் செய்யலாம்.

அதுபோல் மாதிரிப்பள்ளி என்ற முறையிலே மாவட்டத்திற்கு ஒரு பள்ளி என்று ஆரம்பிக்க இருக்கிறார்கள். இது ஒருவேளை பரிட்சார்த்தமாக ஆரம்பிக்கும்போது நல்ல தரமுள்ள பள்ளியாகக் கூட இருக்கும். இன்றைக்கு ஒரு பள்ளி ஆரம்பிக்கிறார்கள். நாளைக்கு இதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்று சொல்லி, மாவட்டத்திற்கு 10 பள்ளிகளை ஆரம்பிக்கலாம். எனவே இப்படி போட்டிப் பள்ளிகளை ஆரம்பிப்பதை தயவுசெய்து தவிர்க்க வேண்டும். வரும் 23, 24 ஆகிய நாட்களில், டெல்லியிலே கல்வி அமைச்சர்கள் மாநாடு நடக்க இருப்பதாக அறிகிறேன். நம்முடைய அரசின் சார்பில் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு மாதிரிப் பள்ளிகள் ஆரம்பிப்பதை தயவுசெய்து உடனடியாக நிறுத்துவதற்கு மத்திய சர்க்காருக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் இப்படிப்





(முற்பகல் 11–20)

பட்ட பள்ளிகளை ஆரம்பிப்பதின் மூலம் மறைமுகமாக இந்தி திணிப்பை ஏற்படுத்துவதாக நம்முடைய மாணவர்கள் மத்தியில் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஒரு பயம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த பயத்தைப் போக்குவது மைய அரசினுடைய கடமை, பொறுப்பு என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

*திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது தி.மு.க. சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் குறிப்பிட்டது போல் ஆளுநர் உரை என்று சொல்வது ஒரு அரசினுடைய கொள்கை, குறிக்கோள், சாதனை இவைகளை உள்ளடக்கியது என்பதை எதிர் கட்சியில் உள்ள நாங்கள் உணர்கிறோம்; மேதகு ஆளுநர் அவர்கள் பொங்கல் வாழ்த்தோடு இந்த உரையை தொடங்கினார்கள். ஆனால் தங்கள் மூலம் இந்த அரசுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புவது இந்த பொங்கல் மீனவ மக்கள் பாவப்பட்ட அப்பாவி மீனவ மக்கள் 7 பேரை கொன்ற பொங்கலாக ஆசிரிய பெருமக்கள் 14-க்கு மேற்பட்டவர்களை கொன்ற பொங்கலாக அமைந்து ஆளுநர் உரை ஒரு ரத்த பொங்கல் உரையாக அமைந்துவிட்டது என்பதை வேதனையோடு சொல்வதற்கு நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சாதனைகளை விளக்குகின்ற அல்லது குறிக்கோள்களை விளக்குகின்ற உரை என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லுவது அவர்களுக்கு இருக்கின்ற உரிமை. ஆனால் இது ஒரு வளம்படு உரையாக இல்லாமல் வதைபடும் உரை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் புயல் வெள்ளம் ஏற்பட்டதால் போர்க்கால நடவடிக்கையை போல் ஒரு நடவடிக்கையை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். போர்க்கால நடவடிக்கை என்பது ஏட்டில் இருப்பதால் லாபம் இல்லை. அறிக்கையில் இருப்பதால் லாபம் இல்லை, யதார்த்த நிலையில் அப்படி ஒரு போர்க்கால நடவடிக்கையை இந்த அரசு எடுத்து மக்களுடைய வாட்டத்தை போக்கி இருக்கிறார்களா என்று இந்த அறிக்கையைப் பார்த்தேன்.

இந்தக் குறிப்பில் மாநில அரசினுடைய சார்பாக வெள்ள நிவாரண நடவடிக்கைக்காக இந்த அரசு மத்திய அரசை கேட்ட தொகை 187 கோடி ரூபாய். மத்திய அரசு ஒதுக்கி இருக்கின்ற தொகை 66.81 கோடி ரூபாய். தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கிற வெள்ள சேதத்தை பார்வையிடுவதற்கு இந்தியப் பிரதமர் வருகை தந்தார்கள். அவரிடம் தமிழக முதலமைச்சர் அவர்கள் முதல் மனு கொடுத்தது 91 கோடி ரூபாய் இந்த வெள்ள நிவாரணப் பணிகளை

மேற்கொள்வதற்கு வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு பிறகு திருத்திய மதிப்பீடு என்று குறிப்பிட்டு கிட்டத்தட்ட 130 கோடி கோரியிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தினுடைய கார்ப்பரேஷனின் தனி அதிகாரி மட்டும் 40 கோடி ரூபாய் இந்த சென்னை மாநகரில் ஏற்பட்ட சேதத்தை நிவர்த்திச் செய்வதற்கு வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். ஆனால் நான் இந்த மன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன் எந்த காரியத்திலாவது இந்த அரசு சுறுசுறுப்போடு செயல்பட்டது உண்டா? தும்பை விட்டுவிட்டு வாலை பிடிப்பது போல்தான் இந்த மாநில அரசு காரியங்களை ஆமை வேகத்தில் போய் இருக்கிறதே தவிர உரிய நேரத்தில் ஒரு சரியான மதிப்பீட்டை மத்திய அரசினுடைய கவனத் திற்கு நீங்கள் சொல்வதற்கு தவறி விட்டீர்கள் என்ற குற்றச் சாட்டை தங்கள் மூலம் இந்த அரசுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு தற்போது 5,750 கோடி ரூபாய் என்று உயர்த்தப்பட்டதற்கே ஒரு பெருமிதத்தை இந்த அரசு தனக்குத் தானே சொல்லி பெருமைப் பட்டுக்கொண்டு இருக்கிறது. பரவாயில்லை. அது அப்படித்தான் இருக்கும். ஆனால் நீங்கள் ஆளுநர் உரையில் கொடுத்து இருக்கின்ற விவரத்தைப் பார்த்தால், 960 கோடி ரூபாய் இந்த திட்ட முதல் ஆண்டிற்கு செலவு செய்வதற்கு பதிலாக 1,050 கோடி ரூபாய் செலவு ஆகும் என்ற குறிப்பை நான் இந்த அறிக்கையில் பார்த்தேன். அப்படி ஆனால் ஒரு திட்ட முதல் ஆண்டில் 100 கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்று சொன்னால் இந்த 100 கோடி ரூபாயை சரி கட்டுவது எப்படி? யார் மீது வரி போடப் போகிறீர்கள்? அல்லது யாரை தண்டிக்கப் போகிறீர்கள் என்பதை தங்கள் மூலம் இந்த அரசை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்தினுடைய சாதனை என்கிற முறையிலே இந்த அறிக்கையினுடைய பல பக்கங்களில் தூத்துக்குடி அனல் மின் நிலையம் மேலும் அதிக திறன் கொண்டதாக மாற்று வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. எண்ணூரர் அனல் மின் நிலையம் மேலும் திறன் கொண்டதாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று திருப்பி, திருப்பிச் சொன்ன பழைய கதையையே ஆளுநர் உரையில் சொல்லி இருக்கிறீர்கள்.

நான் இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீர் மின்சாரம் என்று சொல்லக்கூடிய ஐடல் பவர் பருவ மழை பொய்த்து அணைகளில் தண்ணீர் இல்லை ஆகவே நீர் மின்சாரம் எடுக்க முடியவில்லை என்று ஒரு குறிப்பு வருமானால் நியாயம், ஆனால் நிலக்கரி போட்டு எரித்து, எரி வாயு எண்ணெய் முதலிய வற்றை உபயோகப்படுத்த் அனல் மின் நிலையம் செயல் ஆற்று வதிலே ஆண்டுக்கு ஆண்டு அதனுடைய முழு உற்பத்தியை அது செய்யவில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.



நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எண்ணூராக இருந்தாலும், தூத்துக்குடியாக இருந்தாலும், எப்போதுதான் இவைகள் எல்லாம் தன்னுடைய முழு உற்பத்தியை இந்த நாட்டுக்குத் தரும் என்று ஆராய்வதற்காகவாவது ஒரு நிபுணர் குழுவை இந்த அரசு அமைக்கவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதல்லாமல், வெறும் புள்ளிவிவரக் கோர்வைகளாக 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1416 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடிய ஒரு பெரிய யூனிட்டை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்வது—புள்ளி விவரம் காட்டுவதற்குப் பயன்படுமே தவிர, அது நாட்டு மக்களுடைய வாட்டத்தைப் போக்காது. பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல, காகிதப் பூவாக இருக்குமே தவிர, காகிதப் பூ மணக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு முழுவதும் சிறு தொழில் நிறுவனங்கள் சார்பாக அதனுடைய தலைவர் குறிப்பிட்டு இருக்கிற அறிக்கையை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு தொழில்கள் மின் இணைப்புக்காக கடந்த மூன்று ஆண்டுகளாக காத்துக் கிடக்கின்றன. அதிலே மூடக்கப்பட்டிருக்கின்ற மூலதனம் 500 கோடி ரூபாய்; கோவை மாநகரத்தில், கோவை மாவட்டத்தில், சிறு தொழில்கள் பவுண்டரிகள் மூடப்படக்கூடிய ஒரு அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கோல் இந்தியா லிமிடெட் என்றிருக்கக்கூடிய மத்திய நிறுவனம் சரியான முறையிலே இந்த சிறு தொழில் அமைப்பு களுக்கு கோல் அல்லது பிக் ஐயர்ன் என்று சொல்லக்கூடிய இரும்பை சரியான முறையில் ஒதுக்கீடு செய்யவில்லை. சரியான நேரத்தில் வந்து சேரவில்லை. கேட்டால் இரயில்வே வேகன் வசதி இல்லை என்று சொல்வதைத் தவிர வேறு வழி இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, சிறு தொழிலை அபிவிருத்தி செய்து, தொழில்களை படிப்படியாக வளர்த்துவதற்கு நாங்கள் முயற்சி எடுக்கிறோம் என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறதே தவிர, அடிப்படையைப் பார்த்தால் ஒரு பெரிய தொழில் கேந்திரமான கோவை மாவட்டத்தில் முழுமையாக சிறு தொழில் பட்டறைகள் மூடப்படக்கூடிய அபாயம் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் இப்போது மத்திய அரசு புதிதாகப் போட்ட உத்தரவு காரணமாக, ஸ்டீல் விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, கோவை மாவட்டத்திலே அடியோடு சிறு தொழில்கள் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கின்றது என்ற அச்சத்தை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதை நிவர்த்தி செய்வதற் குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

டெல்லியினுடைய 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய பட்ஜெட்டைச் சமர்ப்பித்து, 1,80,000 கோடி ரூபாயில் அந்த 7-வது ஐந்தாண்டுத் திட்டம் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. ஆளுநர் உரையில் நான் படித்துப் பார்த்தேன். தமிழ் நாட்டில் தொழில் துறைக்கு மத்திய அரசு முதலீடு செய்வது குறைந்திருக்கிறது என்ற கவலையை ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

நாம் எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும், நாட்டினுடைய முன்னேற்றம் கருதி சில பிரச்சினைகளைப் பேசுவதில், கட்சி வேற்றுமையைப் பார்க்கக்கூடியதில்லை என்ற நல்ல ஒரு பண்பாட்டை அண்ணாவும், அண்ணாவுக்குப் பிறகு எங்களை வழி நடத்திச் செல்கிற கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் சொன்னதை நினைவு கூறுகிறேன். இதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானாலும், திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் வேறுபாடு இருக்க நியாயம் இல்லை. தமிழ்நாட்டின் முன்னேற்றம் தான் இதிலே முக்கியமானது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நாவலர் அவர்கள் நேற்றைக்கு ஒரு கேள்வியிலே குறுக்கீட்டிலே பதில் சொன்னார்கள். நமது நாடு முழுவதும் 98 மாவட்டங்களை தொழில் துறையிலே பின் தங்கிய மாவட்டம என்று அறிவித்திருக்கிற மத்திய அரசு, ஒரு மாவட்டத்தைக்கூட, தமிழ்நாட்டின் சார்பாக அறிவிக்கவில்லை என்ற வேதனையைச் சொன்னார். நான் அந்த வேதனையோடு பங்கு கொள்கின்றேன். அப்படிப்பட்ட ஒரு நிலையைத் தான் கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசும், மத்திய அரசினிடத்திலே சுட்டிக் காட்டி இருக்கின்றது.

தமிழ்நாட்டில் தொழில் வளம் ஏற்படவில்லை, சேலம் உருக்காலை வேண்டும் என்று மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரிடத்திலே கேட்டு, இன்றைய தொழில் அமைச்சரும், அன்றைய முதலமைச்சரும் ஒரு விழாவை நடத்தி, தொடங்கிய உருக்காலை, உருட்டாலையாகத்தான் இருக்கிறதே தவிர, இன்னும் உருக்காலையாக ஆகவில்லை.

ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, கோவை மாவட்டத்தோடு ஒட்டியிருக்கின்ற நீலகிரி மாவட்டத்தில் 200 கோடி ரூபாயில் கலர் பிலிம் தொழிற்சாலை, 170 கோடி ரூபாயில் எக்ஸ்ரே பிலிம் தொழிற்சாலை வேண்டும் என்று வாதாடிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அதுபற்றி மத்திய அரசு ஒரு பச்சை விளக்கு காட்டி இருக்கிறதா என்றால், என்னைப் பொறுத்த வரையில் உருக்காலையே உருட்டாலையாகப் போனபிறகு, கலர் பிலிம் தொழிற்சாலை, எக்ஸ்ரே பிலிம் தொழிற்சாலை இவைகள் என்னகதிக்கு ஆளாகுமோ என்ற அச்சத்தை இந்த மன்றத்தில் சொல்லாமல் இருக்க முடியவில்லை.





அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் நேற்றையதினம் பேசும்போது சொன்னார். இப்போது கூட உறுப்பினர் அன்பழகன் பேசும்போது குறிப்பிட்டார். டெல்லி யிடத்தில் நீங்கள் கேட்கவேண்டிய அளவுக்குக் கேட்கவேண்டும். வாதாட வேண்டிய அளவுக்கு வாதாட வேண்டும். உங்களுடைய அணுகுமுறை சரியான முறையில் இருக்கவேண்டும். சும்மா, 'லெட்டர்ஸ் ஆஃப் இன்டென்ட்' என்று எதிர்பார்த்துக் கொண்டி ருந்தால் முடியுமா என்று எல்லாம் சொன்னார்கள். நான் அந்தக் கருத்திலும் உடன்பாடு கொண்டவன் தான்.

(முற்பகல் 11-30)

அதே நேரத்தில் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1956 இல் ராமேஸ்வரம் தீவுக்கும், மன்னார் துறைமுகத்திற்கும் மத்தியிலே இருக்கிற பாக் ஜலசந்தியிலே சேதுக் கால்வாயை வெட்டி தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வரக்கூடிய கப்பல்கள் 400 மைல் தூரத்திலே வரவேண்டிய கப்பல்கள், 755 மைல்கள் தூரம் கொழும்பைச் சுற்றிக் கொண்டு வருகிறது, ஆகவே சேதுகால்வாய்த் திட்டம் 1956 இல் 8 கோடி ரூபாயில் மத்திய அரசால் திட்டமிடப்பட்டது. அதற்குப் பிறகு 7 முறைகள் பட்ஜெட் ரிவைஸ் செய்து, இன்றைக்கு 1985 இல் 250 கோடி ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. 7 தடவைகள் இந்தத் திட்டத்தை மாற்றி மாற்றி அறிவித்திருக்கிறதே தவிர சேது கால்வாயைத் தோண்ட வேண்டும், தூத்துக்குடி துறைமுகம் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானது என்று சொன்னால் அது தமிழ்நாட்டிற்கும் சேர்த்துத் தான், தூத்துக்குடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதும் பாக் ஜல சந்தியிலே சேது கால்வாயைத் தோண்டுவதும் இந்தப் பகுதியைச் செழிப்பாக்கவும் இன்னும் சொல்லப் போனால் இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கும் பொருத்தமானது என்ற நிலையிலே உள்ள இவ்வளவு பெரிய திட்டத்தை மத்திய அரசு இன்றைக்குக் குப்பைக் கூடையிலே போட்டிருப்பதன் மர்மம் என்ன என்பதை நான் வேதனையோடு கேட்க விரும்புகிறேன்.

இப்படி சேது கால்வாய்த் திட்டமாக இருந்தாலும் சரி, வேறு எந்தப் பெரியத் திட்டங்களாக இருந்தாலும் சரி, ஏதோ ஏட்டிலே இருக்கிற திட்டங்களாக இருக்கின்றனவே தவிர நிறைவேற்றக் கூடிய திட்டங்களாக இல்லை. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன் உங்கள் நாட்டுப் பற்றிலே நான் ஐயம் கொண்டவன் அல்ல; ஆனால் இதே செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே கவர்னராக இருந்த விஷ்ணுராம் மேதி அவர்கள் ஒரு காலத்திலே அசாம் மாநிலத்தின் முதல்வராக இருந்தார்கள். அவர்கள் பழுத்த காங்கிரஸ்காரராக இருந்த வர்கள் அசாம் மாநிலத்திலே எண்ணெய் கிணறுகளும், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையும், பெரிய தொழிற்சாலைகளும்

ஆரம்பிக்கவில்லையென்றால் அவர்கள் பண்டித நேரு அவர்களிடம் அறிவித்தார்கள், அவ்வாறு ஆரம்பிக்கவில்லையென்றால் அசாம் மாநிலம் புறக்கணிக்கப்பட்டால், அசாம் மாநிலம் தொழில் துறையில் பின்தங்கினால் அசாம் மாநிலம் இந்தியாவிலிருந்து பிரிந்து போகும் என்று அறிவித்தார்கள். அசாம் பிரிய வேண்டுமென்ற எண்ணத்திலே அவர்கள் சொல்லவில்லை. இருந்தாலும் அவர்களுடைய உணர்வுகளை வெளிக்காட்டினார்கள். அதைப் போலவேதான் தமிழ்நாட்டிலே இருக்கிற காங்கிரஸ்காரர்களுக்கும் அந்த உணர்வு இருக்கிறது, அது செயல்வடிவத்தில் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். ஆண்டு 1-க்கு இந்த அரசு 10 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். வீடுகள் கட்டிக் கொடுப்பதை நான் எதிர்க்கக் கூடியவன் அல்ல. ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள், ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியோருக்காக ஆண்டுக்கு 5 லட்சம் வீடுகளும், வறுமைக் கோட்டிற்குக் கீழே,-பிலோ தி பாவர்ட்டி லைன்-உள்ள மக்களுக்காக ஆண்டுக்கு 5 லட்சம் வீடுகளும் ஆக மொத்தம் ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் போகிறோம், 3 ஆண்டுகளிலே 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இதை சாதனை என்று ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் பேசுகிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். அவர்களுக்கு இருக்கிற உரிமையின் காரணமாக அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் ஒரு வீடு கட்ட என்ன செலவாகிறது என்பதைக் கணக்கிடுகிறபோது, அது சிலம் கிளியரன்ஸ் போர்டிலிருந்து கட்டிக் கொடுக்கப்படுகிற வீடாக இருந்தாலும் சரி, அரிசன நலத் துறையிலிருந்து கட்டிக் கொடுக்கப்படுகிற வீடாக இருந்தாலும் சரி, ஒரு வீட்டிற்கு 10 ஆயிரம் ரூபாய் ஆகும். ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் என்றால் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் தேவை. 3 ஆண்டுக்கு 30 லட்சம் வீடுகள் என்றால் 3 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும். தமிழ்நாட்டின் பட்ஜெட் என்ன? என்ன நிதி ஆதாரம்? அதை திட்டக் கமிஷன் அனுமதித்ததா? எதோ மந்திரத்தாலே மாங்காய் வரச் செய்கிற காரியமா, ஏழைகளை ஏமாற்றக்கூடிய காரியமா என்று கேட்க விரும்புகிறேன் ஏழை மக்களை ஏமாற்றக்கூடிய திட்டத்தைப் போடாமல் உருப்படியான காரியத்தை நியாயபூர்வமாக ஏழை எளிய மக்களுக்கு செய்யுங்கள் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். எனவே இந்த ஆளுநர் உரை ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதது என்பதைச் சொல்லி உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8 ஆம் நாள் அன்று ஆளுநர் அவர்கள் இங்கே வாசித்தளித்த உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னராசு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வரவேற்றுப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையிலே நல்ல சீரிய திட்டங்களைத் தமிழகத்தினுடைய மக்களுக்காக தெளிவுப்படுத்தியிருப்பதை நான் முதலிலே பாராட்டுகிறேன். இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலே பேசுகின்ற எதிர்க்கட்சி சட்டமன்ற மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும், இதிலே ஒன்றுமே இல்லை, சென்ற ஆண்டு வாசித்ததைத்தான் இந்த ஆண்டும் சொல்லி இருக்கிறார்கள் என்று அவர்களுக்குரிய பாணியிலே எடுத்துச் சொன்னார்கள் இந்த நாட்டின் பொருளாதாரவளர்ச்சியையும் இந்த நாட்டு மக்களின் தேவைகளையும் வைத்துத்தான் பல்வேறு திட்டங்களை இந்த உரையிலே மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.



அந்த அடிப்படையிலே இன்றைக்கு தமிழகத்தினுடைய தேவைக்கு வேண்டிய மனித சமுதாயத்திற்குத் தேவையான மின்சாரத்தை நாம் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே இம்மாநிலம் முழுவதும் ரூ. 5,750 கோடி ஒதுக்கிச், செய்ய இந்த ஆண்டு மட்டும் 2,000 கோடி ரூபாயை அந்த மின்சக்தி உற்பத்திக்காகச் செயல்படுத்துகின்ற அளவிற்கு அறிவித்திருப்பதை உண்மையிலேயே தமிழக மக்கள் மனதாரப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. நம்முடைய ஆட்சி, தமிழர்களின் அரசு. மாண்புமிகு எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவரவர்கள் அரசு, கல்வித் துறையிலே மிகச்சிறப்பான பணிகளை ஆற்றி வருகிறது. 1985–86 ஆம் ஆண்டில் 85 புதிய உயர்நிலைப் பள்ளிகளையும், 49 புதிய மேல்நிலைப் பள்ளிகளையும் தமிழகத்திற்கு அளித்து கல்வி வளர்ச்சியிலே சிறப்பு பெற வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே இந்த அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை உண்மையிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, எங்கள் மாவட்டத்தில் கேட்டிருக்கின்ற உயர்நிலைப்பள்ளிகளில் ஏழு பள்ளிகள்தான் கிடைத்திருக்கிறது. இன்னும் அங்கே தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சரவர்களும் அங்கே தேவையான உயர்நிலைப் பள்ளிகளை வழங்கிட வேண்டுமென்று பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அத்தனை நிதியையும், இந்த நாட்டினுடைய மக்களுக்காக சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கும், ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதற்கும் மிகச் சிறப்பாகத் தமிழக அரசு

செயல்படுத்தி, இந்த ஆண்டு ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் 75 ஆதி திராவிடர் குடியிருப்பு காலனியைக் கட்டுகின்ற மிகச் சிறப்பான காரியத்தை நாடு முழுவதும் செய்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு எடுக்க இருக்கின்ற பல்வேறு திட்டங்களைப்பொறுத்த வரையில் என்னுடைய தொகுதியைச்சேர்ந்த பல்வேறு சாலைகளைப்பற்றி நான் ஏற்கனவே இங்கே அரசுக்குத் தெரிவித்திருக்கிறேன் தீர்த்தத்திலிருந்து பதிமடுகு தீர்த்தம் முதல் நெல்லூர் ரோடு வரையுள்ள கர்நாடகம் இணைப்புச் சாலை என்று இப்படி எல்லையை ஒட்டியுள்ள கிராமங்களுக்குச் சாலை மேம்பாட்டை தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததின் காரணமாக மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தண்ணீரின் அளவு குறைந்து விட்டது. தர்மபுரி மாவட்டத்திற்குத் தென்மேற்கு பருவமழைதான் வரப்பிரசாதமாக இருக்கிறது. அந்தத் தென்மேற்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, தர்மபுரி மாவட்டத்தில் கர்நாடக எல்லையை ஒட்டியிருக்கின்ற தேன்கணி கோட்டை, ஓசூர், பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய வட்டாரங்களிலே இன்றைக்குக் குடிதண்ணீர்ப் பிரச்னை எழுந்திருக்கிறது. அந்தக் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக அரசு நல்லதொரு நடவடிக்கையை எடுத்து, அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 11–40)

தமிழ்நாட்டுக்கும் மைய அரசு இந்த ஆண்டு அதிகமாக அரிசி வழங்க வேண்டுமென்று அறிக்கையிலே கேட்டிருப்பதை உண்மையிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு சரியானபடி காவேரியிலே தண்ணீர் இல்லாத காரணத்தினால் தஞ்சைப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டது. முடிந்த அளவுக்கு விவசாயம் செய்து அறுவடை செய்கிற நேரத்தில், வடகிழக்குப் பருவ மழை பொய்த்து அறுவடை செய்ய முடியவில்லை. அந்த வகையில் மைய அரசு மாதந்தோறும் தமிழகத்திற்குத் தரவேண்டிய அரிசியைத் தர வேண்டுமென்று இந்த அறிக்கையிலே கேட்டிருப்பதை உண்மையிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் வீடுகள் கட்டித் தருகிறோம், அதற்கு வேண்டிய குடிநீர் போன்ற எல்லா வசதிகளையும் செய்து தருகிறோம் என்ற வகையிலே சொல்லியிருப்பதை எதிர்க்கட்சியினர் விமர்

சித்தார்கள். எப்படி 10 இலட்சம் வீடுகளை ஆண்டு ஒன்றுக்குக் கட்ட முடியும் என்று கேட்பதோடு, 3 ஆண்டுகளிலே எப்படி 30 இலட்சம் வீடுகள் கட்டப் போகிறீர்கள், எந்த மதிப்பீட்டள விலே கட்டப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஓராண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் என்று சொன்னால், 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் கட்ட, எவ்வளவு தொகை தேவை என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குப் பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்த ஆட்சியில் தன்னிறைவுத் திட்டம் வந்த நேரத்திலே, எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள், என்ன சொன்னீர் கள் என்பது உங்களுக்கு நன்றாக நினைவில் இருக்கும். இது தன்னிறைவுத் திட்டமா? எப்படி நடைமுறைப்படுத்த முடியும் என்று புரட்சித் தலைவரைப் பார்த்து கேட்டதுண்டு. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், தமிழகத்திலே அந்தத் தன்னிறைவுத் திட்டத்தை எப்படிச் சிறப்பாக நடத்தி, முடித்து, செம்மையாக, கிராமப்புற வளர்ச் சிக்குத் திட்டம் தீட்டித் தந்தாரோ, அதே போல் 30 இலட்சம் வீடுகளை, 3 ஆண்டுகளிலே, கண்டிப்பாக கட்டி, உங்களுடைய பாராட்டை, எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் பெறத்தான் போகிறார் என்பதை நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிடப் பழங்குடி மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தருகிறேன் என்று சொல்லும்போது, இந்த நாட்டிலே வாழ் கின்ற மக்களுக்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல், மனிதன் வாழ்வதற்கு 3 அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். அவன் ஒழுங்காகச் சாப்பிட வேண் டும், அணிவதற்குச் சரியான உடை வேண்டும், குடியிருப்பதற்கு வீடு வேண்டுமென்ற அடிப்படையிலே, இந்த நாட்டிலே யாரும் வீடில்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக, வறுமைக் கோட் டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்குப் பின்தங்கிய மக்களுக்கு வீடு கட்டித் தருகிற அந்தத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் வகுத்திருக்கிறார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வருங்கால சந்ததியினராக இருக்கக்கூடிய 85 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு தந்தோம். அது மாத்திரமல்லாமல் அவர்களுக்கெல்லாம் பாட நூல் வழங்கி, அவர்களெல்லாம் சீராகப் பள்ளிக்கு வரவேண்டுமென்பதற்காக, சீருடையும் தந்து இன்றைக்கு, சிறப்பாக, தமிழகத்தினுடைய வருங்கால சந்ததி களைப் பாதுகாக்கின்ற ஒரு நல்ல தலைவராக, நாடு போற்றும் உத்தமராக, இருந்து கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, 4—வது ஊதியக் குழு இங்கே வருமா என்று கேட்டவர்களுக்கெல்லாம், அதைச் சிறப்பாக இங்கே அமைத்து, அரசு அலுவலர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதன்

அடிப்படையில் சம்பளம் கொடுக்கிற ஒரு திட்டத்தை வகுத்து, அவர்கள் பின்னால் போராட்டத்தில் ஈடுபட்டாலும், தொடர்ந்து பேச்சுவார்த்தை நேரத்திலே, பொங்கல் பரிசாகத் தருகிறேன் என்று சொன்னதையும் தந்து, அவர்களை எல்லாம் செம்மையாக அணைத்து நடத்திச் செல்கிற பாங்கிற்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவருக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. கிருஷ்ணகிரி வட்டத்தை தொழிலிலே பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று தொழில் அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் சார்ந்திருக்கும் ஜனதா கட்சியின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டு, அவையில் உள்ள அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் வாழ்த்துக்களையும் கூறி எனது உரையைத் துவக்குகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையானது சென்ற ஆண்டு அரசு செய்த தவறான காரியங்களைச் சுட்டிக் காட்டாமல் ஆளுங்கட்சி கொடுத்த அறிக்கையை வாசிப்பதோடு முடிந்து இருக்கிறது. சென்ற ஆண்டு இந்த அரசு பல்வேறு பிரசனைகளில் பிடிவாதத்தையும், மெத்தனப் போக்கையும் கையாண்டதால் பல உயிர்கள் பலியாவதற்குக் காரணமாகவும், ஆயிரக்கணக்கானவர்கள் அவதிப்படுவதற்கும் காரணமாகவும் இருந்திருக்கிறது.

உதாரணமாக ஆசிரியர்கள் பிரச்னை. 4-11-1985 ஆம் தேதி தொடங்கப்பட்ட ஆசிரியர் போராட்டம் 10-12—1985 அன்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் முதல்வரைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னால், முதல்வர் அவர்கள் அன்றைக்கு மறுத்தார் கடைசியில், முதல்வர் பார்த்துதான் இந்தப் பிரச்னை முடிக்கப்பட்டது. அதற்கு முன்னதாக, 17 ஆசிரியர்கள் இறந்திருக்கிறார்கள். தாய்க்குலத்தின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்ததாகச் சொல்கிற இந்த அரசு, 10,000, 15,000 ஆசிரியைகளையும் சிறையில் வைத்து அவர்களை சிரமப்படுத்தி இருக்கிறது.

அதைப்போல மீனவர்கள் பிரச்சனை. மீனவர்களுடைய பிரச்சனையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய வலைகளையும் கட்டுமரங்களையும் மெரீனா கடற்கரையை அழகுபடுத்தப் போவதாகக் கூறி, பிடுங்கிக் கொண்டார்கள். நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடியவர்கள் மீது துப்பாக்கிச் சூ





நடத்தி அதனால் ஏழு பேர் பலியானார்கள். பலர் படுகாயம் அடைந்தார்கள். அதன் பிறகு அவர்களுடைய குடிசைகள் சூறையாடப்பட்டு, பல இன்னல்களுக்குப் பின்னால் நியாயம் காட்டப்படுகின்றது.

அதைப்போன்று மதுராந்தகம் ஏரி உடைப்பால் பழுதாகிப் போன கிளியாறு பாலத்தை ஒரு வாரத்தில் செப்பனிட முடியும். ஆனால் 25 நாள் கழித்துதான் செப்பனிடப்பட்டிருக்கிறது. அதனால் பஸ்கள், லாரிகள் பல மைல்கள் சுற்றி வந்ததனால், காலதாமதம் ஏற்பட்டதோடு பொது மக்களுக்கு பல இன்னல் களும் ஏற்பட்டன. அது மட்டுமல்லாமல் அந்நியச் செலாவணி கொடுத்துப் பெறக்கூடிய டீசல், பெட்ரோல் ஆகியவைகளுக்காக இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து, பொதுமக்கள் பணம் விரையமாவதற்கு இந்த அரசு காரணமாக இருந்திருக் கிறது.

அதைப்போன்று தலைமைச் செயலக ஊழியர்கள் ஆசிரியர் போராட்டத்தை ஆதரித்தும் மற்றும் பல்வேறு கோரிக்கை களுக்காகவும் போராடினார்கள். அதற்காக அவர்களுடைய சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்துசெய்து, அவர்களைப் பழி வாங்கும் போக்கில் அரசு நடந்துகொண்டிருக்கிறது.

சாராயக் கடைகளை அரசே ஏற்று நடத்துகிறது. சாராயக் கடைகளை மூடச்சொல்லி பலமுறை நாங்கள் வாதாடிவிட்டோம். அரசு செவி சாய்ப்பதாக இல்லை. சாராயக் கடைகளை ஊருக்கு வெளியேயாவது வைக்கலாம். அதையும் செய்யவில்லை.

ஊருக்குள்ளே சாராயக் கடைகளை நடத்தாமல் இருந்தால் அதனால் ஊருக்குள் ஏற்படும் தகராறுகள், அரிவாள் வெட்டு, வழிப்பறி போன்றவை குறையும். இளைஞர்களும் ஓரளவுக்கு கெடாமல் இருப்பார்கள். சாராயக் கடைகளை நடத்த ஆளும் கட்சியினருக்கு உரிமம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கடை வைக்க இடம் கொடுக்காவிட்டால் மிரட்டுகிறார்கள். விருதுநகரில் சாராயக் கடைகள் மக்கள் நிறைந்த மத்திய பகுதியில் வைக்கப் பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதியில் ஏற்படும் தகராறுகள் பற்றி காவல் துறையினரிடம் புகார் செய்தும் தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கட்டபொம்மன் தெரு என்று ஒரு பகுதி விருதுநகரில் இருக் கிறது. கட்டபொம்மன் வெள்ளையனை எதிர்த்தான் என்று சரித்திரம் கூறுகிறது. ஆனால் இந்தப் பகுதியில் கடந்த சட்ட மன்றத் தேர்தலில் ஜனதா கட்சிக்கு தேர்தல் வேலை பார்த்தார் கள், ஜனதா கட்சிக்கு வாக்களித்தார்கள் என்பதற்காக அந்தப் பகுதி மக்களை மிரட்டுகிறார்கள். அதுபற்றி போலீஸ் சூப்பரின் டெண்டென்டிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். அவர்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அரசு இதை எல்லாம் சீர்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மின் உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்துவதாகவும், சென்ற ஆண்டு உற்பத்தித் திறன் அதிகரித்திருப்பதாகவும், இந்த ஆண்டும் அதிகம் செலவிட இருப்பதாகவும் சொல்லியிருக்கிறது. ஆளுநர் சொன்னபடி நடந்திருந்தால் 30 சதவீதம் மின் வெட்டாக இருந்தது 40 சதவீதம் மின் வெட்டாக உயர்ந்திருக்காது. ஜெனரேட்டர் மூலம் மின் உற்பத்தி செய்தால் தொழிலதிபர்களுக்கு மூன்று மடங்கு செலவாகிறது என்ற காரணத்தால் நம்மவர்கள் புதுத் தொழில்களை ஆந்திராவில் தொடங்குகிறார்கள். அதனால் தொழில் பாதிக்கப்படுகிறது; ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு குறைகிறது. ஆகவே, மின் வெட்டு இல்லாமல் செய்ய இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி பற்றி பிரமாதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களில் பள்ளிகள் சரியாக இயங்கவில்லை. இருக்கின்ற பள்ளிக் கட்டிடங்களும் இடிந்து விழும் நிலையில் இருக்கின்றன. கிராமப் பள்ளிகளை சீரமைக்க அரசு ஆவன செய்ய வேண்டியது அவசியம். படித்தவர்களுக்கு வேலை கிடைக்க அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இலங்கைப் பிரச்சனையில் அரசின் சார்பில் அனைவரும் உண்ணாவிரதம் இருப்போம் என்று முதலமைச்சர் அழைத்து, பிறகு தனித்தனியாக உண்ணாவிரதம் இருக்கச் செய்து, இந்த அரசு அதிலும் ஒரு அரசியல் நடத்தியது, அதுசமயம் வசூல் செய்த கோடிக்கணக்கான ரூபாய் இலங்கைத் தமிழர்களுக்காகச் செலவழிக்கப்படவில்லை. ஏற்கெனவே வசூல் செய்த பணமும் அப்படியே இருக்கிறது.

ஊரக வளர்ச்சி பற்றி கூறப்பட்டிருக்கிறது. அனைத்தும் ஏட்டளவில் இருக்கிறது. குடி தண்ணீர், சுகாதாரம், சாலைகள், மின்சாரம் முதலிய எந்த வசதியும் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

எங்கள் பகுதியில் ஒரு வட்டார வளர்ச்சி அதிகாரி இருக்கிறார். அவர் கிராமங்களுக்கு வரவே பயப்படுகிறார். பல தடவை வருவதாகச் சொல்லிவிட்டு, ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி வர மறுக்கிறார். நாங்கள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்தும் அவர் வருவதாக இல்லை. அதன் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது. அந்த பி.டி.ஓ. இனி போய்வருவார் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார். அதன் பிறகும் அந்த அதிகாரி வரவில்லை. மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அந்த அதிகாரி வரமறுக்கிறார் என்று சொன்னோம். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் டி டி.ஓ -விடம் சொல்லுங்கள், அவர் நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று சொன்னார். இப்படிப்பட்ட நிலைமை அங்கே இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு எல்லாம் காரணம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களைச்



சந்திக்க பயப்படுகிறார்கள். அதற்குப் பின்னாலே டி. ஆர். டி. யிடம் சொன்னால் அவர் சொல்கிறார், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது, அவரிடமே சொல்லுங்கள் என்று. இந்த மாதிரிதான் அரசின் நிர்வாக இயந்திரம் செயல்படுகிறது. இப்படி இருந்தால் ஏழை எளிய மக்களின் குறைகள் எப்படி தீர்க்கப்படும்?

சத்துணவை ஏழை எளிய மக்களுக்கு மட்டும் வழங்குவதை நாங்கள் வரவேற்கிறோம். பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் அதைத்தான் செய்தார். அனைவருக்கும் போடுவதாகச் சொல்வது பல தவறுகள் நடக்கக் காரணமாகவும் வருங்கால சந்ததியினரைச் சோம்பேறிகளாக ஆக்கும் திட்டமாகவும் இருக்கிறது. இதற்குச் செலவிடும் 200 கோடி ரூபாயில் மாவட்டத்திற்கு பத்து கோடி ரூபாய் ஒதுக்கி, தொழில் மையங்களை அரசு நிறுவினால் தமிழ்நாடு தொழில் துறையில் முதலாவது இடத்தைப் பிடிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று ஆண்டுக்கணக்கில் மூடிக்கிடக்கும் பஞ்சாலைகள் இன்னும் திறக்கப்படவில்லை. சென்ற ஆண்டும் இதுபற்றி இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாலைகள் மூடிக்கிடப்பதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்விழந்து நிற்கின்றார்கள். ஆகையால் இந்த ஆலைகளை உடனடியாக அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

மேட்டூர் டெக்ஸ்டைல் மில் ஆறு மாதமாக மூடிக் கிடக்கிறது. அமைச்சர்கள் அளவில் பேசியும் இன்னும் தீர்வு காணப்படவில்லை. பல போராட்டங்களை அவர்கள் நடத்தினார்கள். அது இன்னும் தீர்க்கப்படவில்லை. அவற்றை எல்லாம் தீர்த்து அந்தத் தொழிலாளர்கள் வாழ வழிவகை செய்யவேண்டும்.

பருவமழை தவறியதால் கண்மாய்கள் பெருகவில்லை. அதன் காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் தாங்கள் செலவழித்த பணத்தைக் கூட திரும்பப்பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு மானியம் கொடுப்பதோடு இந்த அரசு காமராஜர் மாவட்டத்தை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காமராஜர் மாவட்ட நீர்ப்பாசன மாநாடு சென்ற நவம்பர் மாதம் 28, 29 ஆகிய தேதிகளில் மதுரையில் நடைபெற இருந்தது. அது ஒத்திவைக்கப்பட்டது. அது இன்னும் நடைபெறவில்லை. காமராஜர் மாவட்டம் முழுவதும் பல கண்மாய்கள் தூர்ந்துபோயும் மராமத்து செய்ய வேண்டிய நிலையிலும் இருக்கின்றன. அந்தக் கண்மாய்களை ஆழப்படுத்தவேண்டும்.

காமராஜர் மாவட்டம் ஆரம்பித்து ஒரு வருடம் ஆகியும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் இன்னும் நடைபெறவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டால் அரசிடமிருந்து முறையான உத்தரவு இன்னும் வரவில்லை என்று சொல்கிறார். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டினால்தான் சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லி அவற்றிற்குப் பரிகாரம் காண வசதியாக இருக்கும் பிரிந்த மாவட்டம் பற்றி அரசுக்கு நினைவில்லையோ என்றுகூடத் தோன்றுகிறது. காரணம் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டு டைரியில் நாங்கள் இன்னும் காமராஜர் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களாகக் காட்டப்படவில்லை.

1981–ல் மதுவிலக்கைத் தளர்த்துவதாகச் சொன்ன அரசு படிப்படியாக முன்னேற்றம் அடைந்து இன்று அரசே அதனை விற்பனை செய்கின்ற அளவுக்கு வந்திருக்கின்றது. இது மேலும் முன்னேற்றம் அடைந்து அனைவரும் மதுவைச் சாப்பிடவேண்டும் என்று சட்டம் போட்டு விடுவீர்களோ என்ற அச்சம் இருக்கின்றது. வருடத்திற்கு 1,000 கோடி ரூபாய் சாராயக் கடைகளில் ஏழைகளால் செலவழிக்கப்படுகிறது.

அரசின் குடும்பநலத் திட்டம் தோல்வி அடைவதற்கு அரசின் கொள்கைகள்தான் காரணம். அரசே மதுக்கடைகளைத் திறந்திருக்கிறது. சினிமாவைப் பொறுத்தவரையில் 5 காட்சிகளைக் காட்ட அரசு அனுமதி வழங்கி இருக்கிறது. இவைகளால் மக்களின் உணர்ச்சிகள் தூண்டப்படுகின்றன. இந்த குடும்பநலத் திட்டம் வெற்றிபெற வேண்டுமென்றால் மதுக்கடைகளை உடனே மூடவேண்டும். சினிமாக் காட்சிகளுக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் ஜவுளிக் கொள்கை கைத்தறித் துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகச் சொல்கிறீர்கள். இந்தத் துறையில் மத்திய அரசை எதிர்த்துக் குரல் கொடுக்க ஜனதா கட்சி தனது ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீடில்லாதவருக்கு ஆண்டுக்கு பத்து இலட்சம் வீடுகள் கட்டித் தருவதாக அரசு அறிவித்திருப்பது விளம்பர நோக்கமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 10 இலட்சம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இருப்பதாகச் சொல்லி



யிருக்கிறார்கள். வருடத்திற்கு 2 ஆயிரம் குடியிருப்புகளுக்குத்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நீங்கள் 10 இலட்சம் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை எப்படி வழங்குவீர்கள் என்று தெரியவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதில் பல கட்டுப்பாடுகளை வைத்து அரசு அலுவலகங்களுக்கு அவர்களை அலைய விடுகிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது.) வீடுகட்டிக் கொடுப்பதைப் பொறுத்தவரையில் பல இடங்களில் அதற்கான பணத்தைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டால் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை, ஏனென்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதில் பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். எனது தொகுதியில் கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் எம்.டி.ஏ. ஹெச், எஸ்.ஜி. 43 துரவிப்பட்டி, நமஸ்கரித்தான்பட்டி, வெள்ளூர் மற்றும் பல கிராமங்களில் அரிசனங்களிடம் ரூ. 60 பெற்றுக் கொண்டு சங்கத்தில் உறுப்பினராக்கி வீடுகட்ட கடன் கொடுப்பதாகவும், பேஸ்மட்டம் கட்டிவிட்டு வாருங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்படி பேஸ்மட்டம் போட்டும் இன்னும் வீடு கட்ட முடியாத நிலைமை இருக்கின்றது. எனவே அரசு இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில்துறையிலும், வணிகத்துறையிலும் வளம் பெற சேது சமுத்திரத் திட்டம், கரூர்—திண்டுக்கல்—தூத்துக்குடி அகல ரெயில்பாதை போடுவது ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இவைகளை உடனடியாக நிறைவேற்றிட மத்திய அரசுடன் போராடி உரிய வகையில் ஏற்பாடு செய்து உதவ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதியாண்டில் சேது சமுத்திரத் திட்டத்தை அறிவிக்கவும், அகல இரயில் பாதைக்கு அதிக நிதி பெறவும் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகரில் மாவட்ட நீதிமன்றம், மாவட்டத் தொழில் மையம், நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் அலுவலகம், மாவட்ட குடிநீர் வடிகால் வாரியம், வேளாண்மைத் துறையின் உதவி செயல் பொறியாளர் அலுவலகம் மற்றும் பல்வேறு அரசுத் துறையின் தலைமை அலுவலகங்கள் உடனடியாக வரவேண்டும். அவை இன்னும் வரவில்லை. உடனடியாக வருவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்ற அலுவலகங்கள் முறையாகக் கட்ட ஆரம்பிக்கப்படவில்லை. உடனடியாக மாவட்ட அலுவலகங்களைக் கட்டுவதற்குத் தகுந்த நிதி ஒதுக்கீடு செய்து இந்த அரசு அறிவிக்கவேண்டும்.

மேலும் ஏற்கனவே சென்ற வருடம் ஆளுநர் உரையின்மீது நான் பேசியபோது கேட்டுக்கொண்டது போல பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயரால் போக்குவரத்துக் கழகம் ஒன்று துவக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விருதுநகரில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் படுக்கை வசதிகளும்

மற்ற வசதிகளும் நோயாளிகளுக்கு இன்னும் முறையாகச் செய்யப்படவில்லை. அங்கே 134 படுக்கைகள்தான் இருக்கின்றன என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எனது தொகுதியில் எம். புதுப்பட்டி அர்ஜுனா நதியில் மேம்பாலமும், கன்னிசேரி ஆற்றில் ஒரு மேம்பாலமும், விருதுநகரில் ரெயில்வே லெவல் கிராஸிங்கில் ஒரு மேம்பாலமும் அவசியம் கட்டவேண்டும். எனது தொகுதி முழுவதும் நெடுஞ்சாலைத்துறை, ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சியின் சாலைகள் பல ஆண்டுகளாகப் பழுதுபார்க்கப்படாமல் குண்டும், குழியுமாகப் போக்குவரத்துக்கு லாயக்கில்லாமல் இருக்கின்றன என்பதையும் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆதலால் சாலைகள் சீர் செய்யப்பட வேண்டும். தொகுதி முழுவதும் சுகாதாரம் மிகவும் சீர் கேடடைந்து குப்பைகள் குவிந்தும், சாக்கடைகள் பராமரிக்கப் படாமலும் இருக்கின்றன. ஆதலால் இவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும்.

மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த சதுரகிரி மலைப் பகுதியில் முன்பு சர்வே செய்யப்பட்ட இடத்தில் அணை கட்டி விவசாயத்திற்கும், குடிதண்ணீருக்கும் வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அணையை உடனடியாகக் கட்டவேண்டும்.

விருதுநகருக்கு ஒண்டிப்புலி நாயக்கனூர் கல்குவாரியிலிருந்து தண்ணீர் எடுக்கும் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தல்களை அரசு அறிவித்தபடி நடத்தி, அண்ணல் காந்திஜியும், வினோபாஜியும் வலியுறுத்திய கிராம ராஜ்யத்தை நிறுவி மக்களை வாழ்விக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் இந்த அவையிலே உவந்து அளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள், புரட்சி நடிகராக இருந்த காலத்தில் நாடோடி மன்னன் என்ற திரைப்படத்தில் பாடல் காட்சி ஒன்றில் நடித்தார்கள் அது எனக்கு இன்றைக்கு நினைவிற்கு வருகிறது அந்தப் படத்திலே வருகிற அந்தப் பாடலிலே, சகோதரியார் பானுமதி அவர்கள் ''காடு விளைந்தென்ன மச்சான் நமக்கு கையும் காலும் தானே மிச்சம் என்று'' பாடுகிறபோது. நம்முடைய இதய தெய்வம் அவர்கள்



சொல்கிறார், ''நாளை போடப்போறேன் சட்டம், பொதுவில் நன்மை பயக்கும் திட்டம், நாடு நலம் பெறும் திட்டம்'' என்று பாடினார். அப்படி கூறிய அந்தக் காவிய வரிகள் இன்றைக்கு நாட்டிலே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அவர்களுடைய வாழ்க்கையிலே இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் உலகம் புகழும் உன்னத திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். மைய அரசு மகிழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது. அண்டை நாடுகள் எப்படி இந்த திட்டங்கள் நடைபெறுகின்றன என்று அதிசயத்தோடும், ஆர்வத்தோடும் பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், அன்றைய ஆட்சியாளர்களில் சிலர் அப்போது தங்களுடைய திட்டங்களைச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்களோடு கல்யாணத்தின் மூலமாக சம்பந்தம் செய்து கொண்டால் மட்டுமே, அந்த சமுதாயம் உயர்ந்து விடும் என்று சொல்லி, ஒரு புதிய தத்துவத்தையே சொன்னார்கள் அதுவும் முதல்வர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே திருமண சம்பந்தம் வைத்துக் கொண்டால் மட்டுமே அது அவர்களுக்கு அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தந்து விடும் என்ற புதிய தத்துவத்தையே சொன்னார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் அல்லல் படும் ஆதி திராவிட மக்களுடைய அடிப்படை உணர்வுகளை புரிந்துக் கொண்டு அவர்களுக்கு நேசக்கரம் நீட்டுகிற நல்ல பல திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய விளைவாக இன்றைக்கு ஆதிதிராவிட மக்களுக்கும், நரிக்குறவ மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் வீடு கட்டித் தருகின்ற ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைப் பார்த்து மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர், சகோதரர் திரு. இராமநாதன் அந்தத் திட்டம் நடைபெறுமா என்று கேட்டார்.

நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே அறிமுகப்படுத்தப்படுகிற திட்டங்களில் எந்தத் திட்டத்தைத்தான் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள், எந்தத் திட்டம் தான் நடைமுறைப்படுத்தப் படும் என்று நீங்கள் நம்பினீர்கள் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியபோது, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா? இயலுமா? இதற்கு நிதி ஆதாரம் போதாது என்றெல்லாம் கேள்விக் கணைகளைத் தொடுத்தீர்கள். ஆனால் இந்தத் திட்டம் இன்று உலகம் போற்றும் அளவில், நிறைவேற்றப்படுகின்ற சூழ்நிலையில், அதே திட்டத்தை நாங்களும் போடுவோம், எங்களுக்கும் வாய்ப்புக்களை தாருங்கள் என்று கேட்ட திராவிட முன்னேற்றக் கழகம், இலவச மின்சாரத்தை ஏழைகளின் குடிசைகளுக்கு தருகிற திட்டத்தை அறிமுகம் செய்தபோது, அந்தத் திட்டம் நடை

பெறுமா என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகம், அந்த
திட்டம் செம்மையாக நடைபெறுவதை பார்க்கிற காலத்திலேயும்
திருந்தாமல், மேலும் மேலும் இப்படிப்பட்ட திட்டங்கள் வருகிற
நேரத்திலேயெல்லாம், இப்படி இந்த திட்டம் நிறைவேற்றப்
படுமா, நிறைவேற்றப்படுமா என்றே கேட்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அடுத்த சட்ட
மன்றக் கூட்டத்திலே இந்த திட்டம் செம்மையான முறையிலே
சிறப்பான முறையிலே நடைபெற்றிருப்பதைப் பார்த்து, இதை
விட்டு விட்டு, அப்போது நடைமுறைப்படுத்த எடுத்துக் கொண்ட
ஒரு திட்டத்தை பார்த்து எப்படி இதை நடைமுறைப்படுத்து
வீர்கள் என்கிற கேள்விகளைத்தான் தொடுப்பீர்கள் என்று நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நேற்று பேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்
திருக்கிற சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் அவர்கள்
ஒரு கருத்தைச் சொன்னார்கள். புரட்சித் தலைவருடைய
ஆட்சியிலே கல்வியின் தரம் குறைந்து விட்டது என்று
சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை தெளிவு படுத்த
விரும்புகிறேன். நான் அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக இருக்கிற காரணத்தினாலே
நான் சொல்கிற கருத்துக்கள், எங்களுடைய இதய தெய்வத்தி
னுடைய கருத்துக்களாக இருக்கும் என்று நீங்கள் சொல்கிற
காரணத்தினாலேயே உங்களுக்கு ஒரு கருத்தை இந்த அவையிலே
தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்களும், இந்திய தேசீய காங்கிரசை சேர்ந்தவர்களும்
நம்பிக் கொண்டிருக்கிற, நல்லவராக இருக்கிற இளம் பிரதமர்
ராஜீவ் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.
இந்தியாவிலே, மையப் பேரரசினுடைய கல்விக் கொள்கையை
வெளியிடுகின்ற ஆவணத்திலே ஒரு அறிவிப்பை அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். இந்தியத் திருநாட்டினுடைய
டாக்குமென்டில் கல்விக் கொள்கையாக அது வெளியிடப்
பட்டிருக்கிறது. அவர்களுடைய கரத்தாலேயே அது வெளியிடப்
பட்டிருக்கிறது. அந்தக் கல்விக் கொள்கையிலே அவர் சொல்கிற
நேரத்திலே, இப்போது நடைமுறையில் இருக்கிற கல்வியெல்லாம்
நல்ல முன் உதாரணமாக இருக்கக்கூடிய கல்வியாக இல்லை.
வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய கல்வியாக இல்லை. அந்தக்
கல்வியை நாம் இன்றைக்கு 'சாலஞ் இன் எஜுகேஷன்' என்ற
நிலைமையிலே கொண்டு வர வேண்டிய நிலையில் இருக்கிறோம்.
எனவே அந்தக் கல்வியோடு போட்டியிட்டு, அதை வாழ்க்கைக்கு
உகந்த கல்வியாக மாற்றுவதற்கு, வாழ்க்கை தரத்தை உயர்த்தக்
கூடிய கல்வியாக மாற்றி அமைக்க வேண்டும் என்று சொல்லி
அதை மாநிலங்கள் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி, இந்த
ஆண்டு இந்த மாற்று வழிகளை சொல்லியிருக்கிறார்கள். ஆனால்
புரட்சித் தலைவர் அவர்கள் 1984 ஆம் ஆண்டிலேயே, அந்தகை





லல்வித் திட்டத்தை தமிழகத்திலே அறிமுகப்படுத்தியிருக்
கிறார்கள். அதனுடைய விளைவாக அந்த ஆவணத்திலே
இருக்கிற 1600 பள்ளிகளில்-இந்தியாவிலே முழுவதுமாக 1600
பள்ளிகள் இருக்கின்றன என்று சொன்னால்— அவைகளில் 50-க்கும்
மேலான பள்ளிகள் நம்முடைய தமிழகத்தில் இருக்கின்றன
என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.
எனவே காங்கிரஸ் கட்கி உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய
பிரதமரின் கருத்துக்களையாவது ஏற்றுக் கொண்டு, தமிழகத்திலே
உள்ள மக்கள், மற்ற மாநிலங்களுக்கே முன் உதாரணமாக
கல்வியில் சிறந்திருக்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்வார்கள்
என்று நான் நம்புகிறேன்.

(நண்பகல் 12-00)

அதே சமயத்திலே இந்த புதிய கல்விக் கோட்பாடு என்ற
ஆவணத்திலே இருக்கிற புதிய கருத்துக்களை பாரதப்
பிரதமர் அவர்கள் சொல்லும்போது, இந்தியத் துணை கண்டம்
முழுவதும் ஒரே படிப்பை கற்றுக் கொள்ளக்கூடிய கல்வியாக, ஒரே
தேர்வினை நடத்தக் கூடிய கல்வி முறையாக, மாதிரிப் பள்ளிகளை
நிறுவ வேண்டும் என்ற தன்னுடைய ஆசையைத்தெரிவித்திருக்
கிறார்கள். அந்த ஆசையைப் பார்க்கிற நேரத்தில் எனக்கு ஒரு
அச்சம் வருகிறது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்ன
அந்தத் திட்டத்தை, அன்னை இந்திரா காந்தி அவர்கள் காத்த
அந்தத் திட்டத்தை பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மறந்து தடம்
மாறி விடுவார்களோ என்ற அச்சம் நமக்கு வருகிறது. இந்தியா
முழுவதும் ஒரே மாதிரியான கல்வித் திட்டம், ஒரே மாதிரியான
தேர்வு முறை என்கிற போது மும்மொழித் திட்டத்துடன் இந்தி
இந்த மாநிலத்தில் நுழைந்து விடுமோ அல்லது அது நுழைவதற்கு
பிரதமர் உறுதுணையாக இருப்பார்களோ என்ற அச்சம் நமக்கு
வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணாவின்
வழியில் உறுதியாக நின்று, தமிழ்நாட்டின் காவலராக இருக்கிற
சூழ்நிலையில் தமிழ்நாட்டின் உணர்வுகளை பிரதமர் அவர்கள்
புரிந்து கொள்வார் என்று நம்புகிறோம்.

நேற்றைக்கு பேசிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்த உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் ஒரு
கருத்தைச் சொன்னார்கள். குடும்ப நலத்திட்டத்திலே தமிழக
அரசு மத்திய அரசிடமிருந்து 2.5 கோடி ரூபாய் பரிசாகப்
பெற்றிருக்கிறது. அப்படிச் சொல்கிறபோது போலியாக ஒரு
புள்ளி விவரத்தைத் தருவதாகக் கூட சொன்னார்கள். அவருக்கு
ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசின்
சுகாதார அமைச்சர் கிருஷ்ணகுமார் அவர்கள் டெல்லியில் ஒரு
கருத்தை சொல்லி இருக்கிறார்கள். குடும்ப நலத் திட்டத்தில்
இந்தியாவைப் பொறுத்தவரையில் பீகாரில் 70 சதவீதம்

ஆந்திரா, உத்தரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தானில் 80 சதவீதம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கேரளாவிலே 95 சதவீதம் நிறைவேற்றி இருக்கிறார்கள். குறியீட்டளவான 100 சதவீதத்தையும் தாண்டி 110 சதவீதம் என்ற அளவிற்கு தமிழகத்தில் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் குடும்ப நலத் திட்டத்தை தீவிரமாக நிறைவேற்றி இருக்கிறார்கள் என்று மத்திய சுகாதார அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் தமிழக அரசு மத்திய அரசிடம் பரிசினைப் பெற்றிருக்கிறது. பரிசுகளையும், பாராட்டுதல்களையும் பெறுவது மட்டும் நல்ல வாய்ப்புகளை தந்து விடாது. பரிசையும், பாராட்டுதல்களையும் தரக்கூடிய மத்திய அரசு இப்படிப்பட்ட நல்ல மாநிலங்களுக்கு பெரிய முதலீட்டிலே தொழில்களைத் துவங்க வேண்டும். இலக்கியத்திலே வஞ்சப் புகழ்ச்சி அணி என்று ஒன்று வரும். பாராட்டுவதைப் போல திட்டுவார்கள்; அல்லது திட்டுவதைப் போல பாராட்டுவார்கள். அதைப்போல குடும்ப நலத்திட்டத்தை தீவிரப்படுத்தி இருப்பதாக ஒருபுறத்திலே சொல்கிறார்கள். அந்தப் பாராட்டுதல்களை ஏற்றுக்கொண்டு இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகம் முதல் இடத்தில் இருக்கும் வகையில் நாம் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். அதற்கு மத்திய அரசின் பரிசாக 2.5 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆனால் மறுபக்கத்தில் நம்முடைய மாநிலத்திலேயிருந்து வசூலித்துச் செல்கிற ஆயத்தீர்வை, வருமான வரி போன்றவற்றிலிருந்து மாநிலத்திற்கு வரக்கூடிய நிதியாதாரங்களை மத்திய அரசு குறைத்துக் கொண்டே வருகிறது. ஆகவே ஒருபுறம் பாராட்டு கிடைக்கிறது, மறுபுறம் நமக்கு வருகிற நிதியாதாரங்கள் குறைந்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு பிரதமர் அவர்கள் இப்படி துடிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற மாநிலங்களில் அதிக முதலீட்டில் பெரிய தொழில்களைத் தொடங்கச் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்வது தான் உண்மையான பரிசாக, பாராட்டாக அமையும். மத்திய அரசின் நல்ல திட்டங்களை அமல்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் பொதுத் துறை நிறுவனங்கள் எல்லாம் ஓரளவிற்கு இலாபம் இல்லாத நிலையில் தான் செயல்பட்டு வருகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற பொதுத் துறை நிறுவனங்கள் நல்ல இலாபத்தோடு இயங்கி வருகின்றன. எனவே தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதற்கு நல்ல சூழ்நிலை இருக்கிறது.

அதேபோல தமிழகத்தில் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் நல்ல பல சட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் தான் தொழில் அமைதி நிலவுகிறது. ஆகவே தமிழகத்தில் பெரிய தொழிலை ஆரம்பிக்க முன் வந்தால் அது வாய்ப்பாக அமையும். இது குறித்து ஒரு புள்ளி விவரத்தைத் தர விரும்புகிறேன்.



உழைக்கிற வர்க்கத்திற்காக குரல் எழுப்புகிறோம் என்று சொல்கிற மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆளுகின்ற மாநிலமான மேற்கு வங்கத்தில் இருப்பதை விட தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் இந்தப் புள்ளி விவரங்கள் சாதகமாக இருக்கின்றன. அதாவது 1982 ஆம் ஆண்டிலே 22.5 மில்லியன் மனித உழைப்பு நாட்கள் வீணாகி இருக்கிறதென்று சொன்னால், மேற்கு வங்கத்திலே 15.6 மில்லியன் வீணாகி இருக்கிறது. 1983 ஆம் ஆண்டிலே மொத்தம் 21.94 மில்லியன் மனித உழைப்பு நாட்கள் வீணாகியிருக்கிறது என்றால் மேற்கு வங்கத்தில் 14.42 மில்லியன் மனித உழைப்பு நாட்கள் வீணாகி இருக்கிறது. 1984 ஆம் ஆண்டில் மொத்தம் 16.9 மில்லியன் மனித உழைப்பு நாட்கள் வீணாகி இருக்கிறதென்றால், மேற்கு வங்கத்திலே 7.8 மில்லியன் மனித உழைப்பு நாட்கள் வீணாகி இருக்கிறது. இது 57 சதவீதமாகும். அதே நேரத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி செய்யும் தமிழகத்தில் 1982 ஆம் ஆண்டில் ஸ்ட்ரைக்கின் மூலம் 1.7 மில்லியனும், லாக்அவுட்டின் மூலம் 0.5 மில்லியனும் மொத்தமாக 2.2 மில்லியன் வேலை இழப்பு நாட்கள் வந்து இருக்கிறது. 1984 ஆம் ஆண்டில் ஸ்ட்ரைக்கின் மூலம் 3.7 மில்லியனும் லாக்கவுட்டின் மூலம் 0.4 மில்லியனும், ஆகமொத்தம் 4.1 மில்லியன் மனித உழைப்பு நாட்கள், வேலை இழப்பு நாட்களே வந்திருக்கிறது. எனவே தமிழ்நாட்டிலே தொழில் தொடங்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும், ஒரு சில கருத்தைச் சொல்லி விடைபெற விரும்புகிறேன். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம், என்னுடைய தொகுதியிலே கசிவு நீர்க் குட்டைகள் வெட்டப்பட்டு வருகின்றன. அப்படி வெட்டப்படுகிற அந்த கசிவு நீர்க் குட்டைகளினால், மக்களுக்கு நிரந்தரமாக இரண்டாண்டுகளுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. அதேபோல் அரசினுடைய ஆய்வுமுடிந்து இருக்கிற கஞ்சாநாய்க்கன்பட்டி, வையம்பட்டியில் உள்ள மின்னக்காடு, கோழி சின்னம்பாளை, மணப்பாறையில் உள்ள கருப்பூர் போன்ற பகுதிகளில் எல்லாம் இந்தக் கசிவு நீர்க் குட்டைகள் வெட்டப்படும் என்று சொன்னால், அப்படி வெட்டப்படுகின்ற கசிவு நீர்க் குட்டைகளினால் மக்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு, கிடைக்கும்; பாசனத்திற்கு தண்ணீரும் கிடைக்கும். அதே சமயத்தில், தஞ்சைத் தரணியை மட்டும் நம்பிக்கொண்டு இருக்காமல், மற்ற பகுதிகளையும் நெல் விளையும் பூமியாக மாற்றும் எண்ணம் நாம் செய்யவேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை தஞ்சைத் தரணியில் உள்ள நெல்லைக் காப்பாற்றுவதற்காக கர்நாடக அரசோடு பேச்சு வார்த்தை நடத்துவதும், மத்திய அரசு அதிலே தலையிடவேண்டும் என்று சொல்வதும் என்கிற அவலநிலைமையை மாற்றவேண்டும் என்று சொன்னால், தேசியம் தேசியம் என்று பேசிக்கொண்டு இருக்கிற பிரதமர் அவர்கள் இந்த நதிகளை எல்லாம் தேசியமயமாக்கவேண்டும்.

அதோடு மட்டுமில்லாமல், இன்றைக்கு மேற்கு நோக்கிப் பாயும் நதி நீரை திருப்பி—அவைகள் எல்லாம் வீணாகச் சென்று அரபிக் கடலிலே கலக்கின்றன—கேரள மாநிலத்திலே இருக்கிற ஆலடி என்ற அந்த இடத்திலேயிருந்து எடுத்து வந்து, பெரிய குளம், தேனி, உத்தமபாளையம், மாண்புமிகு துணைச் சபாநாயகர் தொகுதியாக இருக்கிற வேடசந்தூர் பகுதியாக வந்து, என்னுடைய தொகுதியில் இருக்கிற பொன்னியாறு அணைக்கும் வரக்கூடிய அந்த மிகப் பெரிய நதி நீர் திட்டம் மத்திய அரசினுடைய ஆய்வு முடிந்து தயார் நிலையில் இருக்கிறது. எனவே தஞ்சைத் தரணியை மட்டும் நெல்லுக்கு நம்பாமல், இந்தத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் கரத்தால், விரைவிலே தொடங்கி வைக்கப்படும் என்று சொன்னால், அந்தப் பகுதியில் எல்லாம் நெல் விளையும் பூமியாக மாறும் என்பதைச் சொல்லி, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து பேசுவதற்கு முன்னாலே நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்திற்கு நன்றி தெரிவித்து ஒருசில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே நலிவு அடைந்த மக்களுக்கும், ஆதி திராவிட பழங்குடியினர், நரிக்குறவர் ஆகியோருக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் வீடுகள் கட்டித் தருவதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்கான நிதி ஒதுக்கீடு இந்தியப் பேரரசிலிருந்து கிடைக்கின்றதா மாநில அரசு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படுகின்றதா? என்பதை இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் படித்த பின்னர்தான் தெரியும். இருந்தபோதிலும் இந்தத் திட்டத்தை நாங்கள், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்று, தமிழகத்தினுடைய விவசாயிகளைப் பொறுத்த வரையில் ஒருசில கருத்துக்களை நான் கவர்னர் உரையின் மேலே கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் குறிப்பாக தஞ்சை மாவட்டம் பல ஆண்டுகளாக இயற்கையினுடைய சீற்றத்தாலும், வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதுக்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டும் அதே வகையிலே குறுவை சாகுபடியைய தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகள் பல்வேறு சிரமத்திற்கு இடையே சாகுபடி செய்து அறுவடை செய்கின்ற நாட்களிலே, பெய்த மழையின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அதற்குப் பின்னால், பயிர் செய்த, சம்பா, தாளடி சாகுபடிப் பயிர்கள் காய்ந்து, விடுகின்ற நிலையிலே சென்ற வாரத்திலே பெய்த மழையின் காரணமாக ஓரளவிற்கு காப்பாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து காப்பாற்றவேண்டுமானால், இன்னும் இரண்டு முறையாவது தண்ணீர் விடுவதற்கு மாநில அரசு உரிய முயற்சியை மேற்கொண்டால்தான் தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகள் காப்பாற்றப்படுவார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





அதே நேரத்தில், மாநில அரசு கடந்த குறுவையிலே கொள் முதல் செய்த நெல்லுக்கு 1-11-85—க்கு முன்னால் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 20 ஊக்கத் தொகையாக அளித்தது. இந்த நவம்பர் மாதம் முதற்கொண்டு அதை 35 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து இருக்கிறது. ஆனால் அக்டோபர் மாதத்திலே அரசுக்கு நெல்லை விற்றவர்களுக்கு அந்த ஊக்கத் தொகை 20 ரூபாயாக அளிக்கப்பட்டது. இதை 35 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க அரசு உரிய முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயப் பெருங்குடி மக்கள், மின் இணைப்பை ஒருசில மாதங்களுக்கே பயன்படுத்துகிற காரணத்தால், அவர்களுக்கு ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்று விதிக்கப்படுகிற நிரந்தரக் கட்டணத்தைக் குறைத்து, அதை 50 ரூபாயாகக் குறைக்கவேண்டும் என்று சென்ற ஆண்டே நாங்கள் ஆளுநர் உரையில் கேட்டுக் கொண்டோம். இந்த ஆண்டாவது அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனாலும் கூட, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், தஞ்சை மாவட்ட விவசாய மக்களைக் காப்பாற்றுகின்ற வகையில், அவர்களுக்கு நலம் பயக்கின்ற வகையில், கடந்த பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு, வறுமையிலே வாடிக்கொண்டு இருக்கிற மக்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். இந்த மின் கட்டணத்தைக் குறைத்துக் கொடுக்கவேண்டும். பல ஆண்டுகளாக கட்ட முடியாத நிலையில் இருக்கின்ற கூட்டுறவுக் கடன்களை உரிய முறையில் அவர்களுக்கு தள்ளுபடி செய்து அவர்களை வாழ வைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதே நேரத்திலே மின்சாரத்தைப் பொறுத்தவரையில் பல மின் மோட்டார்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப்படாமல் மனுக்கள் தேங்கி இருக்கின்றன. மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் மாதம் ஒன்றுக்கு இத்தனை மின் இணைப்புகள் கட்டாயமாக கொடுக்கவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை விதிக்கவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் பல ஆயிரக்கணக்கான மனுக்கள் மின்சார வாரியத்தில் தேங்கி இருக்கின்றன. அந்த மனுக்களை பரிசீலித்து மாதத்திற்கு இத்தனை வீடுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கட்டளையை விதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஒவ்வொரு இணைப்புக்கும் முன் பணமாக ரூபாய் 10 கட்ட வேண்டும் என்று இருக்கிறது. எத்தனையோ புரட்சிகரமான திட்டங்களை அறிவிக்கின்ற தமிழக அரசு இந்த ஏழை எளிய மக்களுடைய வீடுகளுக்கு விளக்கு போடுவதற்கு மின் இணைப்பு

கொடுப்பதற்கு முன் பணமாக கட்டவேண்டிய 10 ரூபாயை அரசு கட்டி மின் இணைப்பு கொடுப்பதற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு இடவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு திட்டங்களான ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின் மூலம் சாலைகள் செப்பனிடப்பட்டு இருக்கிறது. அதை பின்னால் பராமரிக்க முடியாத காரணத்தால் இன்று பாழடைந்த நிலையில் இருக்கின்றன. சாலைகளில் எந்த விதமான வாகனங்களும் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றன. குறிப்பாக எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் அரலூர், தள்ளாரக்குடி சாலையிலே சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்று சென்று கொண்டு இருந்தது. சாலை சரியாக இல்லாத காரணத்தால் அப்பேருந்தை நிறுத்திவிட்டார்கள். ஆகவே அந்த சாலை ஆர்.எல்.இ ஜி.பி. திட்டத்தின் மூலம் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும் என்று குறிப்பிட்ட பின்னாலும் அதை எந்தத் திட்டத்திலும் சேர்த்து செயல்படுத்தாத காரணத்தால் பராமரிக்கப்படாமல் இருக்கிறது. அதை பராமரித்து ஓடிக்கொண்டு இருந்த பேருந்தை தொடர்ந்து ஓட்டுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 ஆயிரம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இன்னும் ஆயிரக்கணக்கான கிராமங்களில் உள்ள மக்கள், குளங்களிலும், ஏரிகளிலும் தண்ணீரை எடுத்து அருந்துகின்ற நிலையில் குறிப்பாக எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளாக பழுதுபட்ட குடிநீர் குழாய்கள் இந்த ஆண்டு செப்பனிடப்பட இருக்கின்றன. இருந்தாலும் போர்வெல், ஆழ்குழாய் கிணறுகள் பஞ்சாயத்து யூனியன் மூலமாக செப்பனிடப்பட முடியாத காரணத்தால் அவர்கள் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செப்பனிடப்படவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் ஆழ்குழாய் கிணறுகள், போர்வெல்கள், இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அதையும் செப்பனிட்டு குடிநீர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக்கூடங்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றியத்தினுடைய பராமரிப்பில் இருந்த பள்ளிகள் இன்று கல்வித் துறைக்கும், ஒன்றியத்திற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தால் பல பள்ளிகள் பழுதுபட்டு இருக்கின்றன. அந்தப் பள்ளிகளை செப்பனிடுவதற்கு வழி வகை செய்யவேண்டும். தனியார் பள்ளிகளை அரசு ஏற்கின்ற திட்டத்தில் சட்ட ரீதியாக ஏதாவது மாற்றங்களை செய்து விதிகளை வகுத்து சட்டத்தை நிறைவேற்றி தனியார் பள்ளிகளை



அரசு ஏற்றால்தான் தனியார் பள்ளிகள் சிறப்பாக அமையும். தமிழகத்தில் பல்வேறு தனியார் பள்ளிகள் சரியாக நிர்வாகத்தை செய்ய முடியாத காரணத்தால் பழுதுபட்ட நிலையில் கட்டிடங்கள்இல்லாமல், கூறைகள் இல்லாமல், சுகாதார வசதிகள் இல்லாமல் அந்தப் பள்ளிகள் இருக்கின்றன. தமிழக அரசு அவைகளையும் விரைந்து சட்ட ரீதியாக எடுக்க ஏதாவது ஏற்பாடு செய்து அரசு ஏற்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பல பள்ளிகளுக்கு இன்னமும் சீருடை வழங்கப்படாமல் இருக்கின்றது. பாடப் புத்தகங்கள் வழங்கவில்லை. தனியார் கடைகளிலும் பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. இதையும் விரைவிலே கவனித்து அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவரின் புனித ஆட்சியில் புகழ் மிக்க காரியங்களும், உழைக்கும் வர்க்கம் உண்மையான பலனைப் பெறுகின்ற வகையில் திட்டங்களைத் தீட்டி செயலாக்கி வருகின்றார்கள். அந்த வகையில் வளர்ந்து வரும் புதிய உலகுக்கு தமிழகம் செழிக்க வேண்டி சிறு தொழில்களும் பெரும் தொழில்களும் பெருகி வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதைக் கருதி, இதற்கு எல்லாம் முக்கியமாகக் கருதுவது, அதிக உதவியாக இருப்பது மின்சாரம்தான் என்ற அடிப்படையில் இன்றைய தினம் மின்சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் சுமார் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசு போடுகின்ற எந்தத் திட்டமானாலும், அதை நமது புரட்சித் தலைவர் அரசு மக்களுக்கு பயன் தரத் தக்க வகையில் செயலாக்கி வருகிறது என்பதை எவரும் மறுக்க இயலாது.

அந்த வகையில், தேசிய வேலைவாய்ப்புத் திட்டமானாலும், 20 அம்சத் திட்டமானாலும், குடும்ப நலத் திட்டமானாலும், நல்ல முறையில் செயலாக்கி, இந்தியாவில் நல்ல முன்னோடியாகக் கருதுகின்ற அளவுக்கு இந்த மாநிலம் இன்றையதினம் புரட்சித் தலைவரின் கீழ் விளங்கிக் கொண்டு வருகிறது என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், இலங்கைப் பிரச்சினையில் எந்த அளவுக்கு தன் சக்தியைப் பயன்படுத்தி மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தி, இலங்கைத் தமிழருக்கு உதவி

செய்து, பாதுகாப்பைத் தரமுடியுமோ, அந்த அளவுக்குத் தொடர்ந்து செயலாற்றி வருவதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் இந்திய யூனியனிலுள்ள அந்தமானில் அவதியுறும் தமிழனையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கவனித்து அவர்களுக்கு நிறைவான வாழ்வை அளிக்கின்ற வகையில் உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இன்றைக்குக் கூட செய்தித் தாள்களில் பார்த்தேன். ஜப்பானில் தமிழ் மொழி பயிற்சிப் பள்ளி துவக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளதை பார்த்து மகிழ்கின்றோம். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்தில், அந்தமானிலே தமிழ் பள்ளி, தமிழைக் கற்பதற்கு பள்ளிக்கூடம் தேவை என்று கேட்டு, நமது மத்திய சர்க்காரோடு போராடி பெறுகின்ற சூழ்நிலையில்தான் அவர்கள் இருந்திருக்கிறார்கள், பெற்று இருக்கிறார்கள்.

ஆகவே, அந்தமானிலுள்ள தமிழர்களுக்கும், மத்திய அரசை வற்புறுத்தி உதவிகள் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காற்று, மழை, வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட வெள்ளப் பகுதிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோடு வருகை தந்து பார்வையிட்டுச் சென்ற நமது இந்தியப் பிரதமர் அவர்களையும் பாராட்டி, அதே சமயத்தில், வெள்ளச் சேதத்திற்கு நிவாரணம் செய்திட, 66.61 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, படிப்படியாக உதவிகளைச் செய்து வருகின்ற மத்திய அரசை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனது தொகுதியில் பல ஏரிகள் உடைந்துவிட்டன. குறிப்பாக, கமலாம்பூண்டி, கைந்தண்டலம், நெற்குன்றம் போன்ற 20 ஏரிகளில் பெரும் உடைப்பு ஏற்பட்டு, கடுமையான உடைப்பு ஏற்பட்டு, நூற்றுக்கணக்கான விவசாய நிலங்கள் மணல் மேடிட்டு, விவசாயக கிணறுகள் தூர்ந்தும் போய் விட்டு இருக்கின்றன.

அதோடு மட்டும் அல்லாமல், சுமார் 200 சிறு சிறு ஏரிகள் பாதிப்புக்குள்ளாகி உடைந்து, கிராமங்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்கி இருக்கிற சூழ்நிலை அன்றையதினம் இருந்தது. ஆகவே, எனது தொகுதிக்கு மட்டும் சுமார் 5 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து நிவாரணப் பணிகளைச் செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு, மழைக் காலங்களில் எப்போதும் தண்ணீர் சூழ்ந்து தீவு போல் ஆகிவிடுகிற மேகனூர் என்ற கிராமத்திற்கு பிரிட்ஜ் ஒன்றை அவசியம் கட்டித் தருமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல், அழிசூருக்கும், சலாம்பாக்கத்திற்கும் இடையில் சிறிய பிரிட்ஜையும், மானாம்பதி—கண்டிகைக்கும், தாரணிக்கும் இடையில் ஒரு சிறிய பிரிட்ஜையும் கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். செய்யாறு, பாலாறு, மேகவதி ஆறு ஆகிய மூன்று ஆறுகள் கூடுகின்ற திருமுக்கூடல் என்ற கிராமத்தின் அருகில் தரைப்பாலம் ஆற்றில் செல்கின்றது. இந்தத் தரைப் பாலம் அந்த மூன்று ஆறுகளிலிருந்து தள்ளிவருகின்ற காரணத்தால் மணல் மேடிட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்ட நிலையில், சுமார் 100 மைல்களுக்கு மேல் அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறது. அங்கே 10 அடிக்கு மேலாக உயரமாக இருக்கக்கூடிய அளவிற்கு ஒரு சிறிய பிரிட்ஜை அந்த ஆற்றின் குறுக்கே அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–20)

எனது தொகுதியில் பழுதடைந்த மேல்நிலைப் பள்ளிகள் பெருநகர், உத்திரமேரூர் போன்ற பகுதியில் உள்ளன. அவைகளை அவசியமாக, உடனடியாக, பள்ளிப் பிள்ளைகளின் நன்மை கருதி, சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தினால், மாணவரின் வருகை பள்ளிகளில் அதிகரித்துள்ளதால், ஆசிரியர்களின் பற்றாக் குறை பள்ளிகளில் இருந்து வருகிறது. அதைப் போக்குகின்ற வகையில், மாணவர்கள் கல்வி வளர்ச்சியில் மேலும் பயன்பெறும் வகையில், ஆசிரியர்களை அதிகப்படுத்த உதவ வேண்டுமாறு இந்த நேரத்துல் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். எந்தவித நிதி வசதியும் அதிகரிக்கப்பட வாய்ப்பில்லாத உத்திரமேரூர், வாலாஜாபாத் பேரூராட்சிகளில் ஒரு கழிப்பிடம் கூட கட்டமுடியாத நிலையில், இன்றையதினம் மிகவும் சிரமப் பட்டிருக்கக்கூடிய பொருளாதார நிலை உள்ளது.

பேரூராட்சிகளில், தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திலோ, அல்லது வேறு எந்தவித திட்டத்தின் அடிப்படையிலோ அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அந்த நகரப் பஞ்சாயத்துக்கள் நலம் பெறுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொண்டு, இது புரட்சித் தலைவர் ஆட்சி, புண்ணிய ஆட்சி, கண்ணான ஆட்சி, காலம் காலமாக காத்து நிலைநிறுத்தப்பட வேண்டிய அளவில் காலக் கண்ணாடியாக இருந்து வருகிறது. இதில் பத்திரிகையாளர்களுக்கு கொடுத்திருக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, சில பத்திரிகையாளர்கள் தவறான வழியில் எழுதி மக்களை திசை திருப்ப முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய எண்ணத்தை எழுதி, காகிதங்களை வீணாக்கி,

சமுதாயத்தில் புரையோடிய புண்களுக்கு மருந்தாக இல்லாமல், இன்றைக்கு விருந்தாக இருக்கிறார்கள். மக்கள் புறக்கணிக்காத வகையில், சமூக வளர்ச்சியைக் கருதி, நடுநிலையிலிருந்து பணியாற்றும் பத்திரிகையாளர்களை வரவேற்று அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கோ. **வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டுள்ள ஆளுநர் உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். என்னுடைய கருத்தைக் கூறுவதற்கு முன்னால், இங்கே ஆளுங்கட்சித் தரப்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சோலைராசு அவர்கள் இந்த மனித இழப்பு நாட்களில் ஏற்படக் கூடிய இழப்பில் அதிகபட்சம் இழப்பு மேற்கு வங்கத்திலே தான் ஏற்படுகிறது என்று எடுத்துக் கூறினார்கள். நான் உங்களின் மூலமாக இந்த அவைக்கு கூறுவது அங்கே மனித இழப்பு நாட்கள் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால், அதற்கு அங்கு ஆண்டு கொண்டிருக்கக்கூடிய மாநில அரசு பொறுப்பானது அல்ல என்பதை இந்த நாடு அறியும். நண்பர் சோலைராசு அவர்களும் அறிவார்கள். அங்கே ஆலைகள் மூடிக் கிடப்பதும், மத்திய அரசின் மாற்றான் தாய் மனப்பான்மையும் சேர்ந்துதான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆரம்பத்திலே உங்கள் மூலமாக இந்த அவைக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே ஒன்றுமே சொல்லப்படவில்லை என்று நான் கூறவில்லை. சொல்லப்பட்டிருக்கிறது, சொல்லப்பட்டதை விட சொல்லப்படாத விஷயங்கள் அதிகமாக இருக்கின்றன என்பதைத் தான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக 12-வது பாராவில் உணவு உற்பத்தியைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த உணவு உற்பத்தியில் ஆறாவது ஐந்தாண்டு திட்ட இறுதியில், ஆண்டொன்றுக்கு 69.17 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியானது, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஆண்டு ஒன்றுக்கு 105 இலட்சம் டன் இலக்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மிகவும் மகிழ்ச்சி. தமிழகத்தில் உணவு தானியம் அதிகரிக்கப்பட்டு வருகின்றது என்பது சிறப்பானது, நல்லது. இந்த இலக்கு என்பது ஏறத்தாழ இன்று இருப்பதைவிட 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டு, 70 இலட்சம் மெட்ரிக் டன் இருக்கக்கூடிய தமிழகத்தில் 105 இலட்சம் மெட்ரிக் டன் என்பது ஏறத்தாழ 50 சதவீத உணவு தானிய உற்பத்தியை அதிகரித்திருக்கிறது போதுமானதா என்றால், கிடையாது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலே அரசு தன்னுடைய கொள்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.



அதிலே நான் கேட்க விரும்புவது, இப்படி விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் மட்டும் கவனம் செலுத்தப்படுமா அல்லது உற்பத்தியோடு சமூக நீதியை இணைத்துச் செயல்படப் போகிறார்களா என்பதுதான். ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களிலேயும் பெருக்கப்பட்ட உற்பத்தியோடு சமூக நீதி இணைக்கப்படவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே 35 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 70 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டது. ஏறத்தாழ 100 சதவீதம் அதிகமாக உணவு உற்பத்தி செய்ததற்குப் பிறகும்கூட மறுபக்கம் பார்த்தால் வறுமை தான் வளர்ந்திருக்கிறதே தவிர வறுமை போக்கப்படவில்லை. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே மேலும் 35 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியைக் கூட்டுவது என்று சொன்னால் உணவு உற்பத்தியைக் கூட்டுவதால் மட்டும் பிரச்சினை தீராது. உற்பத்தியோடு சமூக நீதி இணைக்கப்பட வேண்டும். குறிப்பாகத் தமிழகத்திலே நில பிரபுக்கள், மடாதிபதிகள் ஆகியவர்களிடம் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அப்படி சிலர் கையில் லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களை விட்டுவிட்டு எவ்வளவு தான் நாம் திட்டம் போட்டு உணவு உற்பத்தியை அதிகரித்தாலும் அதனால் ஏற்படக்கூடிய பலன் முழுவதும் தனிப்பட்டவர்களின் கையில் தான் மீண்டும் போய்ச் சேருமே தவிர வறுமையைப் போக்குவது சாத்தியமல்ல.

தஞ்சை மாவட்டத்திலே எனக்குத் தெரிந்த வரையிலே
** ** **

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, அவையில் உறுப்பினராக இல்லாத ஒருவருடைய பெயரைச் சொல்கிறார். அது அவைக் குறிப்பிலே இருக்கலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையில் உறுப்பினராக இல்லாதவர் பற்றிப் பேசியது சரியல்ல. அது நீக்கப்படுகிறது.

திரு. கோ. **வீரய்யன் :** தமிழகத்திலே விரல்விட்டு எண்ணக் கூடிய நிலப்பிரபுக்களின் கையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலங்களிலே விஞ்ஞான முறைகள் மூலமாகவோ அல்லது அரசு சலுகைகள் வழங்குவதன் மூலமாகவோ உற்பத்தியைப் பெருக்கினாலும் அந்த உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாகக் கிடைக்கும் பலன்கள் முழுவதும் சில குடும்பங்களுக்குத்தான் போய்ச்சேருகிறதே தவிர சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கவில்லை. சமூக நீதியை இணைக்காமல் உற்பத்தியை மட்டும் பெருக்குவதால் இந்த உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் வசதிக்காரர்களைத்தான் மேலும் வளமாக்கும், ஏழை எளியவர்களை மேலும் ஏழைகளாக

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆக்கும். உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய அந்த நோக்கம் சமூக நீதியை இணைத்தால் தான் ஈடேறும். அப்படி சமூக நீதி இணைக்கப்பட வேண்டுமானால் இன்றைக்கு லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சில நிலப்பிரபுக்களின் கைகளில் உள்ளன, சில பினாமிகள் வைத்து இருக்கிறார்கள், சட்டத்தை ஏமாற்றித் திருட்டுத்தனமாக வைத்திருக்கிறார்கள், அந்த நிலங்களை எல்லாம் எடுக்க அதற்குரிய சட்டத்தை நிறைவேற்றி அந்த நிலங்களை எடுப்பதன் மூலமாகத்தான் சாதாரண மக்களுக்கு அந்தப் பலன் முழுவதும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த முறையிலே நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் சரியான முறையிலே திருத்தி உபரி நிலங்களை எடுக்க வேண்டும். ஒரு குடும்பத்திற்கு என்பதை வரம்புகட்டி, சாதாரண ஏக்கர் என்று வரம்பு கட்டி மீதி உள்ள நிலங்களை எல்லாம் எடுத்துவிட்டால ஏறத்தாழ 20 லட்சம் ஏக்கர் நிலங்கள் உபரியாகக் கிடைக்கும். அதை 20 லட்சம் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு வழங்க முடியும். அப்படிச் செய்கிறபோதுதான் சமூக நீதி இணைக்கப்பட முடியும், பலன் முழுவதும் சாதாரண மக்களுக்குப் போய்ச் சேரும். அந்த வகையிலே நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் முழுவதும் என்ன நோக்கத்திற்காகப் போடப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. அந்த வேலைகள் எல்லாம் காண்ட்ராக்டிற்கு விடப்பட்டு, காண்ட்ராக்டர்கள் மூலமாக நிறைவேற்றப்படுகிறதே தவிர சாதாரண ஏழை எளிய மக்களுக்கு பயன்படவில்லை. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால் நாகையிலே என்.ஆர்.இ.பி. திட்டத்தின்கீழ் 1985-86ஆம் ஆண்டு 4 நடைபாதை பாலங்கள் கட்டுவதற்கு 3 லட்சம் ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு முடியப்போகிறது. இந்த நிதியாண்டு முடிய இன்னும் இரண்டு மாதங்கள்தான் இருக்கின்றன. ஆனால் இந்த வேலை தொடங்கப்படவில்லை. இப்படி அதற்காக ஒதுக்கப்படும் தொகையைக் காட்டுகிறீர்களே தவிர, நடைமுறையிலே அது சாதாரண மக்களுக்குப் போய்ச் சேராத நிலைதான் நீடிக்கிறது. இதனால் விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.





(பிற்பகல் 12–30)

குறிப்பாகத் தமிழ்நாட்டிலே விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டு மூன்றாண்டுகள் தாண்டிவிட்டன. இந்த மூன்றாண்டுகளில் ஏறிவிட்ட விலைவாசி உயர்வுக்கேற்ப புதிய ஊதிய உயர்வு கமிஷனை நியமித்து, அவர்களது நிலையைப் பரிசீலனை செய்து, புதிய ஊதிய உயர்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து இதிலே 13-வது பாராவிலே குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னொரு பக்கத்திலே தமிழகத்தில் வறட்சி பெரும் மாவட்டங்களைப் பாதித்திருக்கிறது. ஆனால் அது சம்பந்தமாக இதிலே குறிப்பிடப்படாமல் விடுபட்டிருக்கிறது. ஆகவே, வறட்சிப் பகுதியை முழுவதும் கணக்கிட்டு, அவை வறட்சிப் பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டு, அங்கே வறட்சி நிவாரண வேலைகள் தொடங்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலே வெள்ள நிவாரணப் பணி வேலைகள் நடப்பதிலேயும் மிகவும் மந்தப் போக்கும், தேக்க நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த வெள்ள நிவாரணத்திற்கு, ஒரு தொகையை வைத்து, நிவாரணம் தீர்மானிக்கப்படுகிறதே தவிர, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென்று தீர்மானிக்கப்படவில்லை. ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் இத்தனை ஆயிரம் ரூபாய்களை நிவாரணமாக வழங்க வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லாமல், வழங்குகின்ற பணத்திற்கேற்ற முறையில் எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட முடியுமோ அத்தனை நபர்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டுமென்று கூறுவது சரியல்ல.

இப்பொழுது காவேரிப் பாசனப் பகுதி முழுவதும் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. தொடர்ந்து ஏறத்தாழ 12 ஆண்டுகளாக காவேரிப் பாசனப் பகுதியிலுள்ள பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிறது. கடைசியாக இப்பொழுது மின்சாரத்தைக் கொடுத்து 5 டி.எம்.சி. தண்ணீரை விலைக்கு வாங்குகின்ற நிலைமைக்கு வந்திருக்கிறது. ஜனவரி மாதம் 4 ஆம் தேதி தமிழக முதலமைச்சரவர்களும், கர்நாடக முதலமைச்சரவர்களும் பேசுவதாக இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அது நடைபெறவில்லை. ஏனென்று தெரியவில்லை. இப்படி நிச்சயமற்ற நிலையில், காவேரிப் பிரச்னை நீடிக்கின்ற வரையில் அந்தப் பகுதிகளிலுள்ள இலட்சோப இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வு பாதிக்கப்படும். அவர்கள் வேலை கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள்; விவசாயம் பாதிக்கப்படுகிறது. விவசாயக் குடும்பங்களும் கஷ்டப்படுகின்றன.

எனவே, உடனடியாக காவேரிப் பிரச்னையில் தீர்வு காண் பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

நேரடிக் கொள்முதல் நிலையங்களில் 35 ரூபாய் மானியம் என்று கொடுத்தார்கள். அதை டோக்கனாகக் கொடுத்தார்கள். ஆனால் அவர்களுக்கு உரம் கிடைக்கவில்லை. சிவில் சப்ளைஸ் டோக்கனைக் கொடுத்துவிடுகிறது. கூட்டுறவுத் துறைக்குச் சென்று கேட்டால் உரம் இல்லை என்று சொல்கிறார்கள். வாணிபக் கழகத்திற்குச் சென்று கேட்டால், நாங்கள் 9 கோடி ரூபாய்க்கு உரம் கொடுத்திருக்கிறோம், இன்னும் பணம் வர வில்லை என்று சொல்கிறார்கள். எனவே, அந்த டோக்கனை, உரம் கிடைக்காத நிலையில் விவசாயிகள் 100 ரூபாய் மதிப்புள்ள டோக்கனை 70 ரூபாய்க்கும், 80 ரூபாய்க்கும் வசதி படைத்தவர்களுக்கு விற்கக் கூடிய சங்கடம் இருக்கிறது. அந்த 35 ரூபாய் மானியத்தை 50 ரூபாயாக உயர்த்தி, அதை ரொக்க மாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தமிழகம் முழுவதும் உற்பத்தியாகும் உணவு தானியங்கள் அத்தனையையும் அரசே கொள்முதல் செய்ய முன்வர வேண்டும்; மானியத்தையும் 50 ரூபாய் என்று நிர்ணயித்து அதை ரொக்கமாகக் கொடுக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிதண்ணீர் என்பது தமிழகத்திலே ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எப்படி வீடுகள் கட்டுவதற்கு என்று தனிச் சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல, தமிழ கத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தனிச் சிறப்புத் திட்டத்தை அறிவித்து, தமிழக மக்களுக்குக் குடி தண்ணீர் கிடைப்பதற்கு, ஒரு சில ஆண்டுகளில் அதைநிறைவேற்று வதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, சென்ற ஆண்டும் கேட்டேன், இந்த ஆண்டும் கேட்கிறேன், மாவட்டத்தைப் பிரிக்கும் முறையில் தஞ்சை மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப் போகிறோம் என்று அறிவித்திருப்பதை இந்த நிதியாண்டிலேயே நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு மரியாதைக்குரிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது பேசுகின்ற அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த எங்களுடைய இதய தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்தப் பேரவைத் தலை வருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த காலங்களிலே என்ன, என்ன நன்மைகளை, ஏழை, எளிய சமுதாயத்திற்குச் செய்திருக் கிறார்கள், திட்டங்களைக் கொண்டு வந்து செயலாற்றியிருக்

கிறார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டி இருக்கின்ற வகையில் ஆளுநர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற பல்வேறு திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏழை, எளிய சமுதாயத்திற்காக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்திலே பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார்கள். குறிப்பாக, ஏழைக் குழந்தைகள் வாயார உண்ண வேண்டுமென்பதற்காக, கொண்டு வரப்பட்டிருக்கிற திட்டம் சத்துணவுத் திட்டம். அதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு கொண்டு வந்து நிறைவேற்றப்படுகின்ற திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்குகின்ற திட்டம், சீருடை வழங்குகின்ற திட்டம், இப்படிக் கொண்டு வந்திருக்கிற திட்டங்களின் வாயிலாக, சமுதாயத்திலே இருக்கிற ஏழை, எளியவர்கள், குறிப்பாக 40,000-க்கு மேற்பட்ட தாய்மார்கள் பயன் அடைகின்ற திட்டமாக, புரட்சித் தலைவர் அவர்கள், இந்தத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த ஆண்டு ஒரு மாபெரும் திட்டத்தை ஆளுநர் உரையிலே அறிவித்து இருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே கொண்டு வரப்பட்டிருக்கிற பல்வேறு கருத்துக்களை, எதிர்க்கட்சியிலேயிருக்கிற பல்வேறு உறுப்பினர்கள் விமர்சனம் செய்து பேசியிருக்கிறார்கள். 30 இலட்சம் வீடுகளை, 3 ஆண்டுகளிலே கட்டி முடித்து, ஏழை எளிய, நடுத்தர மக்களுடைய வாழ்வு மலர வேண்டுமென்பதற்காக, தீட்டப்பட்டிருக்கிற பல்வேறு புரட்சித் திட்டங்களில், இந்தத் திட்டம் ஒன்றாகும். 30 இலட்சம் வீடுகள் என்றால், ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள். அவற்றில் 5 இலட்சம் வீடுகள் ஆதி திராவிட மக்களுக்கும், மீதம் இருக்கிற 5 இலட்சம் வீடுகள், சமுதாயத்திலே வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கிற மக்களுக்காகவும் என்று இங்கே அறிவித்து இருக்கிறார்கள். இந்திய நாட்டிலே மட்டுமல்லாமல், உலக நாடுகளிலே எந்த ஒரு தலைவனும் கொண்டு வராமல் இருக்கிற ஒரு நல்ல திட்டத்தை அறிவித்த அரசாக அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு இருக்கிறது. தமிழகத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த அரசு சார்பாகக் கொண்டு வந்திருக்கிற, பல்வேறு திட்டங்களையும், செயலாற்றி முடிப்பதிலே, இந்தியத்துணைக் கண்டத்திலேயே தமிழக அரசு முதலிடம் பெறுகிறது என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

இங்கே இருக்கிற குடும்பக் கட்டுப்பாடுத் துறை இந்தியத் திருநாட்டிலே முன்னணியிலே இருக்கிறது என்பதற்காக மத்திய அரசாங்கம் ரூ. 2.5 கோடியைத் தமிழ்நாட்டிற்குப் பரிசாக அளித்திருக்கிறது என்கிற செய்தியைப் பத்திரிகை வாயிலாகப் படிக்கின்ற வாய்ப்பு கிடைத்தது. அந்த அளவு அரசு செயல்பட்டு,

மைய அரசிடமிருந்து ரூ. 2.5 கோடி பரிசாகப் பெறுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கிற அரசு, புரட்சித் தலைவர் அரசு என்பதை இங்கே நாம் நன்றியோடு ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

அதே போன்று, இங்கே அண்டையிலேயிருக்கிற ஸ்ரீலங்காவிலிருந்து வரக்கூடிய அகதிகள் எண்ணிக்கை நாள்தோறும் உயர்ந்து கொண்டே போனாலும், அவர்களுக்குத் தேவையானதைச் செய்ய இந்திய அரசோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் சேர்ந்து பணியாற்றுகிற பணி, ஸ்ரீலங்காவிலிருந்து வந்து இறங்குகின்ற அகதிகள் நிரந்தரமாக, தங்கள் நாடு திரும்பி சுபிட்சமாக வாழ வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-40)

அதைப் போன்று ஏழை எளிய விவசாயிகளுக்கு இந்த அரசு பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஏழை எளிய மக்கள், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள்பால் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்களுக்குத் தேவையானவற்றை, அவர்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும். செய்து கொடுத்துக் கொண்டு வருகிறது டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு.

விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கிற கரும்புக்கு அதிக விலை தரவேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அவர்களுடைய தேவையை உணர்ந்து, பரிவோடு ஆய்ந்து, தாய்மை உள்ளத்தோடு கருணை காட்டி, அவர்களுக்கு நிச்சயமாக உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்கு மின்னிணைப்பு வேண்டுமென்று கேட்டு, அவர்கள் 7 அல்லது 8 ஆண்டுகள் காத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்புப் பெறுவதில் 8,9 ஆண்டுகள் காத்துக்கொண்டிருக்கிற சூழ்நிலை ஏற்படுகிறது என்றால் இது மிகவும் அதிக காலதாமதமாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதிலே ஒரு காலவரையறை வைத்து, மிகக் குறுகிய காலத்தில் மின்னிணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்து, ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடைகின்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பல்வேறு பிரச்சன்கள் இருக்கின்றன. குறிப்பாக அவர்கள் குடியிருக்கின்ற



குடிசைக்கு மின் வசதி செய்து கொடுக்கும் திட்டம் இருக்கிறது. ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை வேகப்படுத்த வேண்டும். இன்னும் சொல்லப்போனால் அவர்களாகவே முன் வந்து மின்னிணைப்பு எடுத்துக் கொள்ளுகின்ற வாய்ப்பினை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கிற குடிநீர்த் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவதாக இருந்தால் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் கிராமப்புற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை இன்னும் வேகப்படுத்தி, இலக்கு நிர்ணயித்து செயலாற்றி வருகிறார்கள். ஆனால் அதிகாரிகள் மட்டத்தில் அந்த வேகம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது.

ஏழை எளிய மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு புரட்சித் தலைவர் அரசு செய்கின்ற பணிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்னும் சில நன்மைகளை எதிர்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக விரைவிலே குடிதண்ணீர் வசதி பெற வேண்டுமென்று அரசை எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு கொண்டு வருகின்ற திட்டங்களை, எந்த எந்த ஆண்டில் எந்த எந்த கிராமத்திற்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்று திட்டமிடுகிறதோ அதை அந்த பட்ஜெட் ஆண்டுக்குள்ளேயே நிறைவேற்றித் தர தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கையை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று கல்வி. கல்விக்காக ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அரசு. இந்தக் கல்வித் திட்டத்தில் எதிர்கால சமுதாயத்தினர் நலன் கருதி தொழில் கல்வி, மருத்துவக் கல்வி, இன்னபிற கல்வித் திட்டங்களைச் சேர்த்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பல பள்ளிக் கட்டிடங்கள் பழுதடைந்திருக்கின்றன. குறிப்பாக, ஏழை எளிய மக்கள் நலனுக்காகக் கட்டப்பட்ட பள்ளிக்கூடங்கள் பழுதுபட்டிருக்கின்றன. அவற்றை உடனடியாகச் சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று கிராமப்புறங்களில் இருக்கிற சத்துணவுக் கூடங்களையும் பால்வாடிகளையும் ஆர்.எல்.இ.ஜி.பி, என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்ட கிராமப்புறச் சாலைகள், நெடுஞ்சாலைகள், இணைப்புச் சாலைகளையும் சீர் செய்ய வேண்டும். பல இடங்களில் சாலைகள் பழுதுபட்டிருக்கின்றன, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களைப் பயன்படுத்தி புதிய சாலைகள்

போடுவதோடு, பழுதுபட்ட சாலைகளை எல்லாம் செப்பனிட்டு சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களிலும், நகரப்புறங்களிலும் இருக்கின்ற மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு உதவுகின்ற வகையில் படுக்கைகளின் எண்ணிக்கையைக் கூட்டித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியிலே கல்லல் என்ற இடத்தில் இருக்கின்ற மருத்துவமனையிலே படுக்கை எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு கட்டித் தருகின்ற வீடுகளைப் பொறுத்தவரையில் 30 இலட்சம் வீடுகளை மூன்று ஆண்டுகளில் கட்டுவது என்ற வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அவர்கள் தமிழகத்திலே ஏழை, எளிய மக்களின் பிரதிநிதியாக இருக்கிறார்கள். இந்த மன்றத்திலே பல்வேறு முதலமைச்சர்கள் அமர்ந்திருந்து இருக்கிறார்கள். அந்த நாற்காலியிலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அமர்ந்து ஏழை. எளிய மக்களுக்காகப் பல்வேறு முன்னேற்றப் பணிகளைச் செய்து பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தீட்டி மக்களுக்காகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டப் பணிகள் எல்லாம் மிகவும் சிறப்பான பணிகளாகும்.

ஏழை எளிய மக்களின் உண்மையான நிலையை அறிந்து அவர்களுக்கு உதவுகின்ற வகையில் இவ்வாறு வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டம் அதாவது 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதை உடனடியாகச் செயலாற்ற வேண்டும். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் மனம் உவந்து உடனடியாக நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் வடாற்காடு மாவட்டத்தைப் பிரிப்பதற்காக உத்தரவு பிறப்பித்திருக்கின்ற மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

*திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னருடைய உரைக்கு நன்றி கூறி, தமிழகத்திலுள்ள பல்வேறு கோரிக்கைகளை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்திலுள்ள விவசாயிகள் மின்சாரத்திற்காக மனுச் செய்து சுமார் 7, 8 ஆண்டுகள் ஆகியும் இன்னும் மின்னிணைப்பு கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் புரட்சிகரமான திட்டமாக ஏற்று இருக்கிறார்கள். மின்சார இலாக்காவினுடைய கணக்குப்படி 1976 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட மனுக்கள்தான் ப்ரையாரிட்டியாக இருக்கின்றார்கள். ஆகவே அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து மின்சார இணைப்பைத் துரிதமாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





தமிழகத்தில் புஞ்சையாக இருந்தாலும் சரி, நஞ்சையாக
இருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு மின்னிணைப்பு கொடுக்
ாததன் காரணத்தால் அந்த விவசாயிகள் ஆயில் என்ஜின்
வத்து பயன்படுத்தி வருகிறார்கள். இதன் காரணத்தால்
ாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் டீசல்
செலவு ஆகிறது. எனவே விரைவாக ஒரு மின்னிணைப்பு
ட்டத்தை உருவாக்கி விவசாயிகளுக்கு வேகமாக மின்னிணைப்பு
காடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இறவைக் கிணறு விவசாயிகளைப் பொறுத்தவரையில்
ஞ்சை நிலமாக இருந்தாலும் சரி, நஞ்சை நிலமாக இருந்தாலும்
ரி, ஒரு கிணற்றிலிருந்து 600 அடிக்கு அப்பால்தான் மற்றொரு
ணறு அமையவேண்டும்; அப்படி அமைந்தால்தான் நிலவளவங்கி
ாக இருந்தாலும் சரி, அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளாக
இருந்தாலும் சரி, அவற்றுக்கு லோன் கொடுக்கப்படும் என்று சொல்
றார்கள். அவ்வாறு இருக்கின்ற அந்தக் கட்டுப்பாட்டை நீக்கி,
ந்த விவசாயியாக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம்
டனடியாக உதவி செய்ய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கோ
ல்லது ஆயில் இன்ஜின் மோட்டார் வாங்குவதற்கோ அந்த
ங்கிகளுக்கு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் உடனடியாகக்
கூட்டுறவுத் துறைகளுக்கான தேர்தலை நடத்தியாகவேண்டும்.
தேர்தல் நடத்ததாதன் காரணத்தால் ஆங்காங்கே இருக்கக்கூடிய
விவசாயிகளுக்கு, ஏழை எளிய விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கி
களிலிருந்து குறிப்பிட்ட காலங்களில் உரம், பணம் போன்றவற்றை
வழங்க முடியவில்லை. குறிப்பிட்ட காலங்களில் அந்த விவசாயி
களுக்கு, அவர்களுடைய செலவுகளுக்குப் பணமும், உரமும்
கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அந்தக்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு தாசில்தாருக்கும்,
ராட்சி ஒன்றிய ஆணையருக்கும் எப்படி ஜீப் வழங்கப்பட்
டிருக்கிறதோ அதேமாதிரி சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஜீப் வழங்கப்
படவேண்டும். அப்படி வழங்கினால்தான் பொதுமக்களின் பிரச்
சினைகளைத் தீர்க்க முடியும். அப்போதுதான் குற்றவாளிகளைப்
பிடிக்க வாய்ப்பு இருக்கும். இல்லாவிட்டால் சாதாரண ஏழை,
எளியவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் மனு கொடுத்தால்
உடனடியாக அவர்கள் வெகு தூரத்திற்குச் சென்று ஏதாவது
வாகன வசதியைக் கொண்டுவர வேண்டும் என்ற நிலைமை இருக்
கின்றது. இப்படிப்பட்ட காரணத்தால் சப்-இன்ஸ்பெக்டருக்கு
அரசு வாகனம் வழங்கவேண்டும். அப்படிக் காலதாமதப்படுத்துகிற
போது குற்றவாளிகளைப்பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.
ஆகவே அந்தக் காவல் துறை உதவி ஆய்வாளருக்கு எல்லாம்
உடனடியாக ஒரு ஜீப் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

(பிற்பகல் 12-50)

திருநெல்வேலி ஜில்லா இரண்டாகப் பிரிக்கப்பட இருக்கிறது. தூத்துக்குடியை தலைநகராகக் கொண்ட ஜில்லா என்றும், திருநெல்வேலி ஜில்லா என்றும் பிரிக்கப்பட இருக்கிறது. அவை பிரிக்கப்படுகிற நேரத்தில் சிவகிரி, சங்கரன்கோவில் ஆகிய தாலுக்காக்கள் இரண்டையும் நெல்லை ஜில்லாவிலேயே இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். தற்போது டிவிஷன் ஆபீஸ் கோவில்பட்டியில் இருக்கிறது. அந்த டிவிஷன் ஆபீஸ் தென்காசியில் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர்களுக்கு ஏற்கெனவே இப்போது 6 ஆயிரம் ரூபாய் செலவில் வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த 6 ஆயிரம் ரூபாய் வீடு கட்டப் போதுமானது அல்ல. அவர்களுக்கு ஒரு வீட்டுக்கு 10 ஆயிரம் ரூபாயாவது இருந்தால்தான் ஒரு சாதாரண வீடாவது கட்டிக் கொடுக்கமுடியும். இப்போது கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகள் 16 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்டதாக இருக்கிறது. இந்த வீட்டில் சாதாரண ஒரு குடும்பம் குழந்தை குட்டிகளோடு வாழமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே பத்தாயிரம் ரூபாயாவது கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் மேடும் பள்ளமுமாக இருக்கிறது. நெடுஞ்சாலையில் சில இடங்களில் ஆங்காங்கே இருக்கக்கூடிய விவசாயிகள், ரோட்டிலேயே நெல்கதிர்களைக் கொட்டி அதை களமாக மாற்றிவிடுகிறார்கள். அது நெல் களமாக இருந்தாலும் சரி, அல்லது கேழ்வரகு, சோளம், கம்பு, போன்ற கதிர்கள் சீசனாக இருந்தாலும் சரி, அவற்றை ரோட்டிலேயே மொத்தமாக கொட்டி நெடுஞ்சாலையை, களமாக மாற்றி விடுகிறார்கள். இதன் காரணமாக நெடுஞ்சாலைகளில் வருகின்ற பெருந்துகளில் உள்ள பயணிகளின் கண்களிலே அந்த தூசிகள் குத்துகின்ற அபாயமும், ஓட்டுநரின் கண்களிலே தூசு விழுந்து அதனால் பேருந்தே விபத்திற்குள்ளாகும் அபாயமும் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நெடுஞ்சாலைகளில் அவ்வாறு களம் அமைத்திருப்பதை அப்புறப்படுத்த வேண்டும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுக் கூடங்கள் தமிழ்நாட்டில் எங்கும் இருக்கின்றன. சத்துணவுத் திட்டம் நல்ல திட்டம்தான், வரவேற்கக் கூடிய திட்டம்தான். ஆனால் சத்துணவுத் திட்டத்தில் நடைமுறையில் பல தவறுகள் நடக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் உள்ள பல்வேறு சத்துணவுக் கூடங்களிலும், ஆங்காங்கே இருக்கக் கூடிய சத்துணவுக் கூடங்களில் அங்கே இருக்கக்கூடிய எண்ணெய், பருப்பு, அரிசி போன்றவற்றைத் திருடுகிறார்கள். அவர்கள் மீது பல வழக்குகள் தொடரப்பட்டு இருக்கின்றன. பலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தில் ஒட்டு



மொத்தமாக இருக்கக்கூடிய சத்துணவுக் கூடங்களை ஆங்காங்கே இருக்கக்கூடிய ஆணையாளர்கள், தாசில்தார்கள் சென்று இன்ஸ்பெக்ட் செய்து, உடனடியாக சஸ்பெண்ட் பண்ணக்கூடிய உரிமையைக் கொடுத்து, ஆணை பிறப்பிக்க வேண்டும். அப்போது தான் அவர்களைத் திருத்தமுடியும்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் குளங்களில் கருவேல மரங்கள் இருக்கின்றன. அந்த கருவேல மரங்கள் பூராவும் திருடப்படுகிறது. சம்பந்தப்பட்ட பாரஸ்ட் இலாகாவினர்கூட இருந்தே உதவி செய்கிறார்கள். மாட்டு வண்டிக்கு இவ்வளவு, லாரிக்கு இவ்வளவு, சைக்கிளுக்கு இவ்வளவு என்று ரேட் வைத்து, அவர்களே உடந்தையாக இருந்து இந்த கருவேல மரங்களை அழித்து விடுகிறார்கள். எங்கள் தொகுதியில் கூடலூர் குளம் என்று ஒன்று இருக்கிறது. 200, 300 ஏக்கர் நிலத்தில் இருக்கும் கருவேல மரத்தைவெட்டி வேரோடு தோண்டிக்கொண்டு போய்விட்டார்கள். இப்படி பல்வேறு தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரிக்கும்போது, தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு "இந்திரா காந்தி" என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ளாறு நீர்த் தேக்கத் திட்டம் ஏற்கெனவே அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த திட்டத்தை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி கோம்பையாறு நீர்த்தேக்கத் திட்டமும் ஆய்வு செய்யப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் விரைவாக செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சி தேர்தல்களை உடனடியாக நடத்தினால் நன்றாக இருக்கும். இப்போது நீதிமன்றத்திற்கு போயிருக்கிறார்கள். எந்த சூழ்நிலையில் வருகிறதோ எப்படி இருந்தாலும் உள்ளாட்சி தேர்தல்களை உடனடியாக நடத்திவிட்டால் நல்லது. காரணம் தமிழகத்தில் இருக்கக்கூடிய 382 பஞ்சாயத்து யூனியன்களிலேயும் பெரும் தவறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல பஞ்சாயத்துக்களில் அவர்களே பொய்யான வவுச்சர்களை தயாரித்து, தவறான வழிகளில் பணத்தை செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். 382 பஞ்சாயத்து யூனியன்களிலும் தேர்தல்கள் நடந்து அங்கே சேர்மன்களோ, அல்லது கிராமப்புற பஞ்சாயத்து தலைவர்களோ வந்து, அங்கே இருக்கக்கூடிய கேஷ் புக் அல்லது, எது எதற்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தார்களானால், 382 பஞ்சாயத்துக்களில் கிட்டத்தட்ட 300 பஞ்சாயத்துக்களில் உள்ள கமிஷனரையும், எஞ்ஜினியர்களையும்

சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டிய நிலைமைதான் வரும். அந்த அளவுக்கு மக்களுடைய பணம் வீணாக்கப்பட்டு வருகிறது. தன்னிறைவுத் திட்டத்தின் பெயரால் பல லட்சங்கள் செலவிடப் படுகின்றன. என்னுடைய தொகுதியிலுள்ள பல பாலங்கள் 82-83-ம் ஆண்டில் செய்யப்பட்ட பாலங்கள் பழுதடைந்து விட்டன. 80 ஆயிரம் 90 ஆயிரம், 1 லட்சம் என்ற மதிப்பீட்டில் வேலை செய்யப்பட்டது. ஆனால் அந்த வேலைகள் சரியாக செய்யப்படாமல் அந்தப் பாலங்கள் ஒரு ஆண்டுக்குள் பழுதடைந்து, இப்போது மீண்டும் அந்தப் பாலங்களில் போக்குவரத்துப் போக முடியாத நிலையும், வாகனங்கள் போக முடியாத நிலையும் இருந்து வருகிறது. தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் அதிகாரிகள் தங்களை தன்னிறைவு செய்து கொள்கிறார்களே தவிர தொகுதி மக்களுக்கு நிரந்தரமாக பலனளிக்கும் திட்டங்கள் இன்னும் செய்யப்படவில்லை. பல்வேறு பாலங்கள் இன்னும் கட்டவேண்டியிருக்கின்றன. நெடுஞ்சாலைகள் இன்னும் சீர்படுத்த வேண்டியிருக்கின்றன. ஆகவே உடனடியாக உள்ளாட்சித் தேர்தல்கள் வந்தால்தான் மக்களுக்கு துரிதமாக பணிகளைச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன் வைக்க அனுமதித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாநில அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டிருக்கிற இந்த கவர்னர் உரை என்பது இனி வருகிற ஒரு ஆண்டுக் காலத்திற்கு இந்த மாநில மக்களின்பால் இந்த மாநில அரசிற்கு என்ன அரசியல், பொருளாதார கருத்தோட்டங்கள் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துகிற ஒரு 'எக்ஸ்—ரே காபி-யாக இருப்பது தான் இந்த கவர்னர் உரை என்பது. இந்த மாநில அரசாங்கம் இந்த மாநிலத்தில் கடைப்பிடிக்கிற அரசியல், பொருளாதார கொள்கைகளை பற்றிய உரைக் கல்லாக அமைந்திருக்கிற இந்த கவர்னர் உரை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக குறிப் பான விமர்சனங்களை செய்ய விரும்புகிறேன். காரணம் இனி தொடர்ந்து வரவிருக்கிற பட்ஜெட் விவாதத்தில் ஒவ்வொருதுறை வாரியாக முன்மொழியப்படவிருக்கிற மானியக் கோரிக்கைகளில் சொல்ல வாய்ப்பிருக்கிறது. ஆகவே சட்டமன்ற மரபு வழக்கப்படி கவர்னர் உரை என்பது கொள்கை ரீதியான தர்க்கத்திற்கு ஒரு இடம் என்ற முறையில் இந்த மாநில அரசாங்கம் கடைப்பிடிக்கிற சிலபல கொள்கைகளைப் பற்றி பொதுவான விமர்சனங்களை முன் வைக்க விரும்புகிறேன். இங்கே கவர்னரால் ஆற்றப்பட் டிருக்கிற இந்த உரையில், எதிர்தரப்பில் இருக்கிற காரணத்தாலே எதுவும் இல்லை என்று சொல்வதற்கில்லை. நிறைய இருக்கிறது. ஆனால் மக்களுக்கு எது தேவையோ அது மட்டும் இல்லை. அதைத் தவிர மற்ற எல்லா விஷயங்களும் இதிலே இருக்கின்றன என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

இங்கே ஆளுகிற தரப்பு நண்பர்களால் ஜூரம் கட்டி பேசப் படுகிற ஒரே விஷயம் 10 லட்சம் வீடுகள். இந்த 10 லட்சம் வீடுகள் கட்டப்படுவது குறித்து எதிர்த்தரப்பிலே பல்வேறு நண்பர்கள் மிகக் கூர்மையான விமர்சனங்களை முன் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஆளும் தரப்பில் பேசிய நம்முடைய அருமை நண்பர்கள் வலுவற்ற வாதங்களை முன் வைத்தார்களே தவிர. விவரமான பதில்களை அவர்களால் தர இயலவில்லை. அது அவர்களின் தனிப்பட்ட குறையல்ல. இந்த அரசு கடைப்பிடிக்கக் கூடிய கொள்கையின் குறை என்பதை புரிந்து கொள்கிறேன்.

10 லட்சம் வீடுகள் 3 ஆண்டில் கட்டப்படும் என்று சொன்னார்கள். மகிழ்ச்சி அடைகிறேன். மூன்று ஆண்டுக்காலத்தில் 30 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்பது உண்மையில் காரிய சாத்தியமானது என்ற முறையில் புரிந்து இது அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த வீடுகள் கட்டப்படுவது என்பது ஒரு ஆண்டுக் காலத்தில் என்றால் வீடுகளை கட்டி முடிப்பதற்கு சம்பந்தப்பட்ட துறைப் பொறியாளர்கள் ஏதாவது மாதிரி வடிவமைப்பை அமைத்திருக்கிறார்களா? இப்படிக் கட்டப்படுகிற வீடுகளுக்கு என்ன நிதி செலவழிக்கப்படும் என்று மதிப்பீடு இருக்கிறதா? அப்படி மதிப்பீடு செய்யப்பட்டிருப்பது உண்மையானால் அந்த நிதி யாதாரங்களைச் சேகரிப்பதற்கு என்ன வழிமுறைகளை இந்த மாநில அரசு கைக்கொள்ள இருக்கிறது என்ற ஆலோசனைகள் முன்மொழியப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. (குறுக்கீடு) இங்கே சொல்லப்பட்டிருக்கிற இந்த விஷயங்களில் அர்த்தமற்ற நிலையில் ஆளுகிற நண்பர்கள் ஆத்திரம் அடைகிறார்களே தவிர, அறிவார்ந்த நிலையில் எதிர்த்தரப்பு கருத்துக்களுக்கு காது கொடுத்து கேட்டு மறுப்பளிப்பது ஏனோ விடுபட்டு போயிருப்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

(பிற்பகல் 1–00)

இந்த 10 லட்சம் வீடுகள் கட்டப்படும் விஷயத்திலும் கூட அங்கே சம்பந்தப்பட்ட அரசால் அடிப்படையான சில வேலைகள் செய்யப்படவில்லை என்று சொல்வதிலிருந்து என்ன புரிகிறது என்றால், ஆளுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒன்று தெளிவாக புரிந்திருக்கிறது. தேர்தலில் எப்படி ஓட்டுப் பெறுவது என்பதில் கைத்தேர்ந்த புத்திசாலிகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிற வீடுகட்டும் திட்டம் என்பது என்ன? தேர்தல் குளத்தில் போடப்பட்டு இருக்கிற தூண்டில் முள்ளில் மூடப்பட்டு இருக்கிற புழுப் போன்றவைகள்தானே தவிர, வேறு அல்ல. இந்தத் திட்டம் தேர்தல் உத்திக்காகத்தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகத்தான் இது

அறிவிக்கப்பட்டு இருக்கிறது என்றால், அதற்குரிய தெளிவான, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சிலகாரியார்த்தமான முன்மொழிவுகளை முன் வைத்திருக்க வேண்டும். அது இல்லை என்பது இங்கே தெளிவாகி இருக்கிறது.

அடுத்து மின்சாரம். இந்த மின்சாரத்தைப் பொறுத்த வரைக்கும் இந்த அரசு மாநிலத்தினுடைய மின்சாரத் தேவைகள் என்ன? மாநிலத்தின் வளர்ந்து வருகிற மின்சாரத் தேவைகளைப் பற்றி ஒரு மதிப்பீடு செய்திருக்கிறதா? இந்த மாநிலத்தின் மின்சாரத் தேவைகளை நிறைவு செய்வதற்கு, வெறும் வார்த்தைகளில் சொல்லப்பட்டு இருக்கிறது, மின் உற்பத்திக்கு திட்டமிடப்பட்டு இருப்பதாக. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வளவு கோடி ரூபாய் நங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்றெல்லாம் ஆரவாரமாக அறிவிக்கப்பட்டு இருக்கிறதே தவிர, அறிவிக்கப்பட்டு இருக்கிற இவற்றில் நடைமுறையில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது. ஒரே ஒரு உதாரணத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் துறை முன்னேற்றம் பற்றி பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். கோவை மாவட்டத்தில் இருக்கிறது அவினாசி. இந்த அவினாசி பேக்வார்ட் ஏரியாவாக டிக்ளேர் செய்யப்பட்ட ஒரு தொகுதி. இந்த அவினாசி தொகுதியில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 165 தொழிற்சாலைகள் மின் இணைப்புக்காக காத்துக்கிடக்கின்றன. அது பேக்வார்ட் ஏரியா என்று எதற்கு டிக்ளேர் செய்யப்பட்டது? அந்த ஏரியா தொழில் வளர்ச்சி அடையவேண்டும் என்று. அப்படி டிக்ளேர் செய்யப்பட்டும், 3 ஆண்டுக்காலம் தொழிற்சாலைகள் காத்திருந்தும் கூட, அவற்றுக்கு மின் இணைப்பு தரப்படவில்லை. பேக்வார்ட் ஏரியா என்று அறிவிக்கப்பட்டதை பொருளற்றதாக நடைமுறையில் ஆக்குவது இந்த மாநில அரசின் மின்சாரத்துறை அல்லவா? ஒரு பக்கம் மாநில அரசினர் கண்ணைக் கொடுக்கிறார்கள், மறுபக்கம் கண்ணைக் குத்துகிறார்கள். ஒருபக்கம் பேக்வார்ட் ஏரியா என்று டிக்ளேர் செய்துவிட்டு, தொழிற்சாலைக் கூடங்களைக்கட்ட அனுமதி அளிக்கிறார்கள். மறுபுறம் அந்தத் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு மின்சார இணைப்புத் தர மறுப்பது, உயிரைக் கொடுத்து, விட்டுக் கழுத்தை அறுக்கிற வேலை அல்லவா? இந்த முறை சரிதானா? இந்த முறை கைவிடப்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், காவிரி. காவிரியைப் பற்றி மாநிலஅரசிற்கு என்ன அக்கறை இருக்கிறது? காவிரிப்பிரச்னையைத் தீர்ப்பதில் இந்த மாநில அரசு என்ன அக்கறை கொண்டிருக்கிறது என்பதை அனேகமாக நீர்ப்பாசனத்துறை அமைச்சர்கூட சொல்லக்கூடும், நிறைய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது பற்றி. இதைப்பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. பிரதிபலன் என்ன? பேச்சுவார்த்தை மூலம் விளைந்த விளைவு என்ன என்பது



தான். அனேகமாக நடப்பில் நிலவுகிற இந்தப்போக்கு. தமிழ் நாட்டில் வற்றாத காவிரி என்பது மீண்டும் ஒரு வறண்ட பாலாறாக மாறிப்போய்விடுமோ என்று காவிரிப் பாசன மக்கள் வருத்தப்படுகிறார்கள். அந்த வருத்தத்தை உணர்ந்து, காலத்திலே......

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: காவிரிப் பிரச்சனையைப் பொறுத்தமட்டிலும், இந்த மாநிலக் கட்சிகளைப் பொறுத்த மட்டிலும், மாநிலத்தில் உள்ள மக்களின்பால் மேற்கொண்டு இருக்கிற அக்கறையின் காரணமாக நியாயமான கருத்தை வலியுறுத்தி, அந்தக் கருத்து நிறைவேற வேண்டும் என்று வாதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற தேசியக் கட்சிகள், அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ப தங்களுடைய வாதத்தை எழுப்புவதன் காரணமாக, தமிழகத்தில் உள்ள கம்யூனிஸ்ட்டுகள் தண்ணீர் வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்ற நேரத்தில், கர்நாடகத்தில் உள்ள கம்யூனிஸ்டுகள் தண்ணீரை விடக்கூடாது என்று சொல்வது, எந்த விதத்தில் பொருந்தும். இது தமிழ்நாட்டில் உள்ள பிரச்னைக்கு அவர்கள் ஆதரவு தருவதாக அமையுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுப்பியதற்கு மிகவும் நன்றி. கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தேசிய கட்சி அல்ல. சர்வதேசியக் கட்சி என்பதை அவர்களுக்கு நினைவு படுத்துவதோடு, இங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலக் குழுவும் சரி, கர்நாடக மாநிலக்குழுவும் சரி இரண்டு மாநில மக்களின் பொதுநலன்கள் பாதிக்கப்படாத வகையில் காவிரிப் பிரச்னை பைசலாக்கப்படவேண்டும் என்பதை மிகத் தெளிவகச் சொல்லியிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, கர்நாடக மாநிலக் கட்சி, தனி நிலை எடுத்தும், தமிழ் மாநிலக் கட்சி, தனி நில எடுத்தது என்று சொல்வது உண்மையல்ல என்பதைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் *தலைவர் அவர்களே, காவிரிப்பிரச்சனை நீண்டநெடு நாட்களாக விவாதிக்கப்பட்டு வருகிறது. துரதிர்ஷ்டவசமாக அது அரசியலாக ஆக்கப்பட்டு விட்டது. மேலும் அதை அரசியலாகவே ஆக்கிக்கொண்டு வருகிறோம். நம்மையும் அறியாமல். அந்தந்த மாநிலத்திலே இருப்பவர்கள் செய்கிறார்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசியதற்காகத் தெரிவிக்கிறேன், குற்றத்திற்காக அல்ல; காவிரிப் பிரச்சனை விவாதத்தின்போது, கம்யூனிஸ்ட்கட்சி கேரளாவில் ஆட்சியில் இருந்த நேரத்தில், தமிழகத்தில் வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகளை எப்படி கர்நாடகம் எதிர்த்ததோ- அதேபோல் கம்யூனிஸ்ட் கட்சி ஆண்ட கேரளத்தில் இருந்த முதலமைச்சர் அவர்களும் எதிர்க்கத்தான்

செய்தார்களே தவிர, அதை ஆதரிக்கவில்லை. காரணம் அந்தந்த மாநிலத்திற்காக அவர்கள் வாதாடுகிறார்கள். இதை அரசியல் பிரச்சனையாக ஆக்கிவிட்டார்கள். துர்பாக்கியவசமாக காவிரிப் பிரச்சனையை, அரசியல் பிரச்சனையாக ஆக்கிவிட்ட காரணத்தால்தான் இது தீர்க்கப்படாமல், இழுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறதே தவிர, ஆட்சியினுடைய குற்றம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய காரணத்தாலும், நாங்கள் சார்ந்த இயக்கம் சம்பந்தப் பட்டது என்ற காரணத்தாலும் தான் குறுக்கிடுகிறேன். இல்லை என்றால் நான் தலையிடமாட்டேன். கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்த பின்புதான் இந்த பிரச்சனையில் சுமூகமான முடிவு ஏற்பட்டதும், கோவைக்கு அதுவரை மறுக்கப்பட்ட தண்ணீர் கிடைத்தது என்பதும் அமைச்சர் அவர்கள்.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் குறிப்பிடுவது தெரிகிறது. கோவையில் இருக்கிற பரம்பிகுளம்—ஆளியாறு பற்றி சிறுவாணி தண்ணீர் பற்றி அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

காவிரிப் பிரச்சனையைப் பொறுத்த மட்டில் பவானி ஆற்றில் தண்ணீர் விடுவது பற்றி கேரள அரசுதான தடுத்தது. அதனுடைய பேச்சுவார்த்தையின் முழு விவரம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களுக்கு தெரியவில்லை என்றால் நான் விளக்கிச் சொல்ல தயாராக இருக்கிறேன். பவானி ஆற்றில் தண்ணீர் விடுவது பற்றி அப்போது பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருந்த போது கம்யூனிஸ்ட் கட்சி ஆண்ட போதுதான் இந்த பேச்சு வார்த்தை வந்தது. பவானி ஆற்றில் தண்ணீர் விடுவதற்கு அவர்கள் மறுத்த காரணத்தால்தான் பவானியில் மேற்கொண்டு நமக்கு நீர்ப்பாசனம் கிடைக்காமல் போனது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ ரகுமான்கான் : ஒரே ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் எதுவும் குறிப்பிடவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டபோது இந்தத் தண்ணீர் பிரச்சனையில் என்ன நிலை எடுத்தது என்பதைப்பற்றி சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வைத்துக்கொண்டு நான் விவாதிக்க விரும்பவில்லை.



நான் இன்னொரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆண்ட போது இந்தியாவிற்கே ஒரு முன் உதாரணமான முறையில் பல்வேறு விஷயங்களில் செய்து இருக்கிறது. அத்தகைய விஷயங்களை நாம் கவனத்தில் கொள்ளு வது நல்லது என்பதையும் அதைப்பற்றிய விவரங்களுக்குள்ளே நான் இப்போது போக விரும்பவில்லை. அந்த மாநில அரசு அன்றைக்கு அந்த நிலையை ஏன் எடுத்தது என்பதைப் பற்றி பரிபூரணமான விவரங்களின் அடிப்படையில் விவாதிப்பதற்கு போதுமான நேரத்தை ஒதுக்காமல் விவாதிப்பது பொருத்தமான வழி முறை அல்ல என்பதால் நான் அவற்றிற்குள்ளே போக விரும்பவில்லை. (குறுக்கீடு) ஆளும் தரப்ப நண்பர்கள் விரும்பினால் அதைப் பற்றி விவாதிப்பதற்கு நாங்கள் தயாராகத்தான் இருக்கிறோம்.

காவேரிப் பிரச்சினையில் கடந்த 1974-லிருந்து இன்றைக்கு வரையில் தீர்வு செய்யாமல் இருப்பதன் மூலம் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டினுடைய காவேரி பாசன விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதும் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதன் மூலம் விவசாயத்திற்கு ஏற் படுகிற விளைவுகளை அரசு ஆழமாக உணர்ந்து அவற்றைக் களைய தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவு காண்பதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இங்கே நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே அரசின் சாதனைகளும், குறிக்கோள்களும் என்று சொல்லப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள் இவைகளில் சாதனைகளில் சொல்லப்பட்டு இருக்கிற விஷயங்களில் வெள்ள நிவாரணம் பற்றியும் சொல்லப்பட்டு இருக்கிறது. வெள்ள நிவாரண வேலைகளில். பலயிடங்களில் முறைகேடுகள் நடந்து இருப்பதாக பரவலாக குற்றச்சாட்டுகளும் மக்கள் மத்தியில் கடுமையான முணுமுணுப்புகளும் இருந்து கொண்டு இருக்கின்றன என்பது பத்திரிகைகளிலும் சரி, இங்கே எதிர் தரப்பில் பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேச்சின் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

இங்கே பலயிடங்களில் வெள்ளநிவாரணத்திற்கு மேற்கொள்ளப் பட்ட பணிகளில் அ.இ.அ.தி.மு.கழக கரை போட்ட வேட்டிகள் வழங்கப்பட வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; வேட்டி இல்லா தவர்களுக்கு வேட்டி வழங்கப்பட வேண்டுமே தவிர அந்த வேட்டி களில் தங்களுடைய கட்சியினுடைய குறிகளை பதித்து வழங்குவது என்பது ஒரு முறையான நடைமுறை தானா? அத்தகைய நடை முறைகளை ஊக்குவிப்பதை எப்படி அனுமதிக்கமுடியும் என்பதை இங்கே இருக்கக்கூடிய மாநில அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தெரிவித்துக் கொள்கிறேன்

அதேபோல் செம்பரம்பாக்கம் ஏரி. இங்கே ஆளுநர் உரையில் தங்களுக்குத் தாங்களே பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். மாநில அரசு பெருமைக்கொள்கிற அளவுக்கு என்ன நிகழ்ச்சி நடந்து இருக்கிறது செம்பரம்பாக்கம் ஏரியில் ஏற்படுகிற வெள்ளப் பெருக்குக் குறித்து கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் நிபுணர்களின் கருத்துக்களை மதிப்போடு ஏற்று அங்கீகரிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டதா? வருடந்தோறும் வெள்ளமும், வறட்சியும் ஏற்படும் என்பதைத் தொகுதத்துத் தருகிற நிகழ்ச்சி தொகுப்பாளனா மாநில அரசு. மாநில அரசு என்பது சம்பவங்களை எடுத்துச் சொல்கிற நிகழ்ச்சித் தொகுப்பாளன் அல்ல. மாநில அரசு முறை செய்து காப்பாற்றும் மன்னனாக விளங்க வேண்டும். அப்படி முறை செய்து காப்பாற்ற நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? வெள்ளம் வருடந்தோறும் வருகிறது. அங்கே சுற்றிப் பார்த்துவிட்டு வந்தால் நிவர்த்தி ஏற்பட்டு விடுமா? வெள்ளத்தைத் தடுக்க நீங்கள் 'பாசீட்டிவ் அப்ரோச்' என்ற முறையில் என்ன நடவடிக்கையை மேற்கொண்டீர்கள்? இனிமேல் வெள்ள சேதம் ஏற்படாமல் இருக்க......

(பிற்பகல் 1–10)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருஷம் தோறும் வருகின்ற வெள்ளத்திற்கும், இந்த முறை வந்த வெள்ளத்திற்கும் மிகவும் அதிக வேறுபாடு உண்டு. உதாரணத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் மதுராந்தகத்திலே இருக்கக்கூடிய கிளியாற்றில்—36 ஆயிரம் க்யூசெக்ஸ் தண்ணீர் கொள்ளளவு உள்ள அந்தக் கிளியாற்றில்—2½ இலட்சம் க்யூசெக்ஸ் தண்ணீர் வந்திருக்கிறது. இதுவரை கடந்த 80 ஆண்டுக் காலமாக நிகழாத ஒரு நிகழ்வாக இது நடந்திருக்கிறது. தமிழக அரசு புரட்சித் தலைவருடைய ஆட்சி உருவாகியதற்குப் பிறகு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மேற்கொண்ட பல்வேறு பணிகளின் காரணமாக, நிரந்தரமாக இப் பேர்ப்பட்ட இடையூறுகளிலிருந்து, தஞ்சை மாவட்டம் உள்பட பல்வேறு பகுதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே இப்படிப்பட்ட ஆதாரமற்ற, நியாயமற்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆதாரமும், நியாயமும் இல்லை என்று சொல்கிற மாநில அமைச்சரின் தன்னம்பிக்கைக்கு நான் நனறி தெரிவிக்கிறேன். ஆனால் நான் சவால் விட்டுக் கேட்கிறேன், இத்தகைய வெள்ள நிவாரணங்களில் முறைகேடுகள் நடைபெறவில்லை என்பதை நிரூபிக்க ஒரு விசாரணைக் கமிஷன் போட மாநில அரசு தயாராக இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.



சென்னையில் தொடர்ந்து வெள்ளம் ஏற்படுகிறபோது பெரிய அளவுக்கு வடிகால் இல்லாமல் பாதிக்கப்படுகிறதே, 100 ஆண்டுக் காலத்திற்கு முன்னர் செய்யப்பட்ட வடிகால் வசதி. இந்த வடிகால் வசதியை இன்றைய தேவைக்குரியபடி மாற்ற ஏற்பாடு உண்டா? கோட்டூர்புரமும், நந்தனமும் தொடர்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்படும். இறந்தவர்களுக்கு அஞ்சலித் தீர்மானம் நிறைவேற்றப்படும். ஆனால் தொடர்ந்து பாதிக்கப்படாமல் தடுக்க நீங்கள் என்ன நடவடிக்கைக்கு திட்டம் தீட்டினீர்கள் என்று தான் கேட்கிறேனே தவிர, வேறு விஷயம் அல்ல. நீங்கள் வெள்ளச் சேதத்தைத்தடுக்க திட்டமிடவே இல்லை. ஆகவே இந்நிலையில் நீங்கள் முதுகு தட்டிக் கொள்வதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்னொரு முக்கியமான விஷயம். கோவை போன்ற வறட்சி நிறைந்த மாவட்டங்களில் நிலத்தடி நீர் கிட்டத்தட்ட 300 அடிக்குக் கீழே போய் விட்டது. நிலத்தடி நீர் இறங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 24 இலட்சம் ஹெக்டேர் புஞ்சை விவசாயம் நடக்கக்கூடிய நிலப் பகுதிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச எந்த ரீதித் திட்டமுமில்லை. நிலத்தடி நீர் இறங்குகிறது. இத்தகைய நிலமைகளை மாற்ற மாநில அரசிடம் ஏதாவது ஒரு திட்டம் உண்டா? நடைமுறையில் இல்லை.

இந்த மாநிலத்தின் மொத்தமான முன்னேற்றத்தைப் பற்றியோ, அவற்றின் வளர்ச்சிக்குரிய, புத்திசாலித்தனமான, தெளிந்த பொருளாதார ரீதியான திட்டங்களோ இல்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் கூடப் பேசும்போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள் மத்திய அரசின் மாதிரிப்பள்ளி பற்றி. மத்தியக் கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள இந்த மாநில அரசு, மத்திய அரசைக் குறை சொல்வதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. ஏனென்றால், மத்திய அரசைக் காட்டிலும் நீங்கள் தான் வேகமாகக் கல்வித் துறையில் தனியார் துறையை நோக்கிப் போகின்றவர்கள்.

அரசியல் சட்டம் வழங்கி இருக்கிற கடமைப் பொறுப்பிலிருந்து இந்த மாநில அரசு மத்திய அரசோடு நழுவி ஓடுகிறது. அரசியல் சட்டம் 14 வயது வரைக்கும் ஒவ்வொரு இந்தியக் குழந்தைக்கும் கட்டாய இலவசக் கல்வி என்று சொல்லியிருக்கிறது. அந்த இலவசக் கல்வியை வழங்கவா நீங்கள் பொறியியல் கல்லூரியையும், மருத்துவக் கல்லூரியையும் ஏலம் போட்டு இருக்கிறீர்கள்? தனியாருக்கு விற்பதன் மூலம் கீழ்த் தட்டு மக்கள், ஒடுக்கப்பட்ட, பாவப்பட்ட மக்கள் உயர் கல்வி பெறுகிற உரிமையை நீங்கள் மறுக்கிறீர்கள், மக்களிடமிருந்து பறிக்கிறீர்கள். ஆகவே,

அடிப்படை மக்களின் கல்வி பெறுகிற உரிமையைப் பறிக்கிற ஒரு நிலையை மேற்கொண்டு மத்திய அரசின் மாதிரிப்பள்ளியை பற்றி பேசுகிற உரிமை இல்லை. இருக்கிற இந்த மாநில அரசு, மத்திய அரசினுடைய கல்விக் கொள்கை, 'ஏ'-டூ-'இசட்' ஒழிக்கப்பட வேண்டிய ஒரு கல்விக் கொள்கை, மத்திய அரசாங்கத்தினுடைய . . . . . . . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் உயர்தரப் பாடசாலை வரையில் இலவசக் கல்வி தான். பணம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவில் இருக்கும் என்று நம்புகிறேன். அதற்கும், இலவச ஆரம்பக் கல்விக்கும், புதிதாகத் துவங்கப்பட்டிருக்கும் கல்லூரிகளில் வாங்கப்படக்கூடிய பணத்திற்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. அந்தப் பணத்திற்கும், இங்கே கல்வியைப் பறிப்பதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? வார்த்தைகள் நன்றாக இருக்கின்றன. தொடர்பு சரியாக இல்லை.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, விஷயத் தொடர்பும் சரியாக இருக்கிறது என்பதை நினைவூட்ட நான் விரும்புகிறேன். இங்கே நர்சரி பள்ளிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றனவே, அந்த நர்சரி பள்ளிகளில் ஏழைகள் போய் படிக்கமுடியுமா? அப்படி இலவசக் கல்விக்கு எதிராக, அந்தக் கல்வியினுடைய தரத்தையும் உள்ளடக்கத்தையும் சீரழிக்கிற முறையில் நர்சரிப் பள்ளிகளை அனுமதிக்கிறீர்களே, இது மத்திய அரசினுடைய நிலைக்கு ஒத்தூதுவதல்லவா?

நடைமுறையில், எதிர்கால சந்ததி, இளைய சந்ததி தமிழைக் கற்றுக் கொள்கிற உரிமை கூட பறிக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டும் அல்ல. இந்த ஆரம்பப் பள்ளியினை நடைமுறையில் புறக்கணிப்பதைப் பற்றிய விவரங்களை, ஆதார பூர்வமான பல்வேறு விஷயங்களை நம்மால் முன் வைக்க முடியும்.

இன்றைக்கு பொறியியல், மருத்துவக் கல்லூரியிலே தொடங்கி இருக்கிற விஷயம் அதோடு நின்று விடப் போவதில்லை. சட்டக் கல்லூரிக்கும் வந்தாகிவிட்டது. ஆக, ஆரம்பக் கல்வி வரையிலும் அனைத்தும், தனியாருக்கு விற்றுவிடுகிற ஒரு நிலையை இந்த மாநில அரசு மேற்கொள்ளுமேயானால், அது கடுமையான விளைவை தமிழ்நாட்டில் ஏற்படுத்தும், நீங்கள் இந்தியை எதிர்ப்பதாக பாவனை செய்கிறீர்கள். இந்தி திணிக்கப்படுவதாக அடிக்கடி பாவனை செய்து ஆளுங்கட்சியில் பேசுகிறீர்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தாய் மொழி பற்று இருப்பது உண்மையானால், தமிழ்நாட்டில் உள்ள நர்சரி பள்ளிகளைத் தடை செய்யத் தயாரா? தமிழில் படித்தவர்களுக்குத்தான் வேலை என்ற சட்டம் இயற்றத் தயாரா? தாய் மொழியில் படித்தால்



தான் முதலில் வேலை என்ற சட்டத்தை இயற்றினால்—ஒவ்வொருவரும் வேலைவாய்ப்பிற்குத் தானே படிக்கிறோம்—அந்த வேலை வாய்ப்பு தாய்மொழியில் படித்தால் தான் கிடைக்கும் என்பதற்காக எல்லோரும் தாய்மொழிக் கல்வியை படிக்க மாட்டார்களா? அந்த வேலைவாய்ப்பை தாய்மொழிக் கல்வியோடு இணைத்துச் செய்யலாம் என்று சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 15 நிமிடங்கள்தான் இருக்கிறது. இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : காவிரிப் பிரச்சினை பற்றி அமைச்சரிடமிருந்து விளக்கம் கேட்கிறேன். இது தவறா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காவிரிப் பிரச்சினை என்றால், தஞ்சை மாவட்ட உறுப்பினர் கேட்கிறார் என்றால் சரி. (குறுக்கீடு)

*திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மேதகு ஆளுநர் அவர்கள் இந்தப் பேரவையில் உவந்தளித்த உரைக்கு நன்றி தெரிவித்து இந்தப் பேரவை தெரிவிக்கின்ற ஒருமித்த குரலோடு என்னுடைய இந்து முன்னணி இயக்கத்தின் குரலையும் சங்கமம் செய்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்து நான் நின்று கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நம்முடைய நாடு பொதுவாக சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு என்று அதிகமான சலுகைகள் கொடுத்து அதனால் போலியானதொரு பெருமைப்படுகின்ற ஒரு நாடாகும். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், இந்தப் பேரவையைப் பொறுத்தவரையில், நானும் ஒரு மைனாரிட்டியாக எண்ணிக்கையில் ஒரே ஒருவனாக நின்று கொண்டிருக்கிற காரணத்தால் எனக்குக் கொஞ்சம் சலுகையை—சிறுபான்மைச் சலுகையைக் கொடுத்து சற்று நேரம் பேசுவதற்கு அதிகமாகத் தருகின்ற அந்தச் சலுகையை தந்து அந்தப் பெருமையைத் தருவீர்கள் என்று நம்புகிறேன்.

நம்முடைய மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் 1984—85 ஆம் ஆண்டில் நம்முடைய தமிழக அரசு குடும்பநலத் திட்டத்தை மிகச் சீராக, சிறப்பாக செயற்படுத்திய காரணத்தால், தேசிய விருதாக, ரூ. 2½ கோடி கிடைக்க இருக்கிறது என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. குடும்ப நலத்திட்டம் என்பது பல்வேறு நலத்திட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தாலும், அந்தத் திட்டத்தினுடைய மையமாக, ஆதாரமாக இன்றைக்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால், 1984—85 ஆம் ஆண்டில் தமிழகத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஏற்றுக்

கொண்டு, தங்களுக்கு இனிமேல் குழந்தை தேவையில்லை என்ற முடிவிற்கு ஆளாக்கிக் கொண்டவர்களில் 94 சதவீதம் பேர்கள் இந்துக்கள் என்ற தகவல் புள்ளிவிவரங்களிலிருந்து தெரிய வருகிறது. இப்படி குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை இந்துக்கள் மீது அவர்களுக்கு ஆசை வார்த்தைகளைக் காட்டி, திணிப்பதன் மூலமாக, இந்து சமுதாயம் இன்றைக்கு பலவீனப் படுத்தப்பட்டு, இந்து மக்களுடைய எண்ணிக்கை சற்றுக் குறைக்கபட்டு, அது இந்து சமுதாயத்திற்கும இந்திய திருநாட்டிற்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கிவிடுமோ என்ற சோதனையான, வேதனையான கால கட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் என்பது அகில இந்திய அளவில் இன்றைக்கு ஒரு வேதனையான தேசிய பிரச்சினையாக மாறியிருக்கிறது. நான் சிறுபான்மை சமுதாயத்தை சுட்டிக்காட்டு கிறபோது அவர்களை புண்படுத்துகிறேன் என்று நினைக்கத் தேவையில்லை. இன்றைக்கு இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டம் முரண்பாடு இருந்தால், அல்லா வினுடைய சட்டத்திற்கு முரண்பட்டதாக அது இருந்தால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையேகூட ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று பேரணிகளின் மூலமாகப் பொதுக் கூட்டங்களின் மூலமாக அவர்கள் தெளிவாக எடுத்துச்சொல்லி யிருக்கிறார்கள். அதைத்தான் அருமை கிறிஸ்தவ சகோதரர்களும் திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. யா. சை. மூ. யூசுப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு சமுதாயம் இந்த நாட்டிலுள்ள சட்ட திட்டங்களை ஏற்றுக்கொள்ளாது என்ற கருத்தை மற்றவர்களுக்கு புரியும்படி அல்லது ஏற்றுக்கொள்ளும்படி இங்கே எடுத்துரைத் திருக்கிறார்கள் அது அந்த சமுதாயத்தை நிச்சயமாக பாதிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்கள். இத்தகைய கருத்துக்கள் பொதுக் கூட்டங்களில் பேசப்படுகிறது என்று எடுத்துச் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-20)

அது எந்த அளவுக்கு ஆதாரமுள்ள வாதம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே ஆதாரமற்ற ஒரு வாதத்தைச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்திலே பேசி ஒரு சமுதாயத்தை இன்னொரு சமுதாயத்தின் கோபத்திற்கு ஆளாக்குவதோ அல்லது இன்னொரு சமுதாயத்தின் பெருமைக்கு இழுக்குச் சேர்ப்பதோ சரியாகாது என்ற முறையிலே மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய வாதத்தில் இருக்கிற உண்மையை ஏற்று அவர்கள் சொன்னதைத் திரும்பப் பெறுவார்கள் என்று கருதுகிறேன்.





திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எந்த சமுதாயத்தையும் புண்படுத்த வேண்டுமென்றோ, . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொதுக் கூட்டத்திலே பேசியதை இங்கே சொல்லக்கூடாது.

திரு. வை. பாலச்சந்திரன்: எந்த சமுதாயத்தையும் விவகாரத்தில் இழுக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசையல்ல. ஆனால் பொதுக் கூட்டத்திலே பேசியதை மட்டும் நான் ஆதாரமாக் வைத்துக் பேசுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் கருதுவார் களானால் அது தவறு என்பதை நான் அவர்களுடைய பல்வேறு வேத நூல்களிலிருந்து விளக்கங்களை எடுத்துக் காட்டிச் சொல்ல முடியும். அவர்கள் தினந்தோறும் காலையிலிருந்து இரவு வரை ஓதுகின்ற நூலிலே சொல்லப்பட்டிருக்கிற தத்துவங்களும் கருத்துக்களும் இதுவாகத்தான் இருக்கிறபோது அவைகளை நான் இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டிப் பேசுவது புண்படுத்துவதாக அமையாது என்பது மட்டுமல்ல, உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகத்தான் அமையும் என்று நம்புகிறேன்.

எல்லோரும் இந்தத் திட்டத்தை ஒன்றுபோல் ஏற்றுக் கொள்ளாதபோது எல்லோரும் இதை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டியதுதான் அரசாங்கத்தின் கடமையாக இருக்க வேண்டும்: நான் மிக வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு விளம்பர படங்களில்கூட இந்து சகோதரியின் படத்தைப் போட்டு, இந்துவின் படத்தைப் போட்டு, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வாருங்கள் என்று இந்துக்ளை மட்டும் அழைக்கிற, தூண்டுகிற சூழ்நிலை இருக்கிறது. இஸ்லாமிய சகோதரியின் படத்தைப் போட்டு அல்லது கிறித்துவ சகோதரியின் படத்தைப் போட்டு பிரச்சாரம் செய்வதற்குக்கூட நாம் மனத்துணிவு கொண்டவர்களாக இன்றைக்கு மாறவில்லை. அவர்களே, அவர்கள் சமுதாயத் தலைவர்களே தங்களுடைய கடமை இது என்று கருதி முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கட்டாயமாக ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு முன்வருவார்களேயானால் அவர்களை நான் மெத்தமகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"The implemen'ation of the Family Planning Programme is calcutated attempt of the Government to weaken the Hindu Socieaty by reducing the size of Hindu population." என்ற ஒரு கருத்து தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இருந்து கொண் டிருக்கிறது. சந்தேகக் கண்ணோட்டத்தோடு அணுக வேண்டிய அளவில் இருக்கிற இந்த கருத்தை மாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாக இருந்துகொண்டு இருக்கிறது. இந்தநிலைமை நீடிக்குமானால் இந்து சமுதாயம் தேய்ந்து,

இந்துக்களின் எண்ணிக்கை குறையுமானால் வருங்காலத்திலே இந்தியத் திருநாட்டின் பாதுகாப்பே கேள்விக் குறியாகிவிடும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையிலே இதை ஒரு பெருமையாக சொல்லி இருந்தாலும் அதை ஒரு பெருமையாக நான் சார்ந்திருக்கிற இயக்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இலங்கை எரிந்துகொண்டிருக்கிறது, இலங்கையில் வன்முறை தாண்டவமாடுகிறது என்று சொல்லி அதற்காக தமிழக அரசு ஆழ்ந்த வருத்தத்தையும் வேதனையையும் தெரிவித்து இருக்கிறது. இன்னொரு நாட்டிலே அங்கே இருக்கிற வீடுகள் எரிகிறபோது நாம் கண்ணீர் வடிக்கிறோம் அது தார் மீக நியாயம். இன்னொரு நாட்டிலே கொலை நடக்கிறது, இங்கே கண்ணீர் வடிக்கிறோம், அதை மனிதாபிமானத்தின் அடிப்படையில் செய்கிறோம். இன்னொரு நாட்டிலே கற்பழிப்பு நடக்கிறது, இங்கே நாம் வருந்துகிறோம், அதையும் மனிதாபிமானத்தின் அடிப்படையில் செய்கிறோம். ஆனால் இதே நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலே கொல்லங்கோட்டிலே நூற்றுக் கணக்கான குடிசைகள் எரிக்கப்பட்டன, அதை கண்டிப்பதற்கு அதற்காக கண்ணீர் வடிப்பதற்கு தமிழகத்திலே யாரும் இல்லை. இலங்கையிலே கொலை செய்யப்பட்டதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லங்கோட்டிலே மண்டைக்காடு, கொளச்சல், சின்னமுட்டம் உட்பட பல கடற்கரைப் பகுதிகளில் 1982 முதல் 1985 ஆம் ஆண்டு வரையிலே 15 பேர்களின் கைகளையும் கால்களையும் கயிற்றால் கட்டி இழுத்துச் சென்று கடலிலே ஆழ்த்தி மீனுக்கு இரையாக்கி அவர்கள் கொலைசெய்யப் பட்டார்கள். அந்த 15 பேர்களுடைய மனைவிமார்களின் மாங்கல்யங்கள் பறிக்கப்பட்டன. ஒரு வழக்கு உண்டா? இலங்கையிலே கொலை நடந்தால் இங்கே அழுகிறோம். இலங்கையிலே வீடுகள் எரிந்தால் இங்கே கண்ணீர் வடிக்கிறோம். இதே நாட்டிலே 15 பேர்கள் கொல்லப்பட்டார்கள். இந்திய தண்டனைச் சட்டத்தின் 302–வது பிரிவுகூட— இறந்தவரின் உடல் கிடைக்காத காரணத்தினால் கொலை வழக்கு போட முடியாது என்று காவல் துறையால் சொல்லபபட்டு அது மூலையில் தூக்கி வீசப்பட்டு முனகிக் கொண்டிருக்கிறது. கொலை செய்யப் பட்டவர்களின் மனைவிமார்களுக்கு அவர்களின் கணவன்மார் கொலைசெய்யப்பட்டது நிரூபிக்கப்படாத காரணத்தினால், உதவித் தொகை கொடுக்கமாட்டோம் என்றும் 7 ஆண்டுகள் கழித்துத்தான் ஏதாவது இந்த அரசாங்கத்தால் கொடுக்கப்படும் என்றும் இந்த அரசாங்கம் சொல்லி இன்றைக்குக் குடிசையிலே முடங்கிக் கிடந்து அந்த விதவைகளும் அவர்களது சின்னஞ்சிறு குழந்தைகளும் ஒருவேளை உணவிற்குக்கூட வழியில்லாமல் தவிக்கிறபோது அதற்காக கண்ணீர் வடிக்க தமிழகத்திலே யாரும் இல்லை என்கிறபோது அங்கே இலங்கையில் நடைபெறுகிற வன்முறைகளுக்கு இங்கே வடிக்கிற கண்ணீர் போலிக்கண்ணீரோ என்று சந்தேகம்கூட எனக்கு வருகிறது.





அங்கே எரிகின்ற வீடுகளுக்கு இங்கே கண்ணீர் வடிக்கிறோம் என்று சொன்னால், அதிலே நியாய உணர்வு இல்லை; அதிலே மனித சிந்தனை இல்லை என்பதை என்னாலே உணர முடிகிறது. எல்லாமே வேஷமோ என்று எண்ணிடத் தோன்றுகிறது. 15 பேர்கள் கடல் மீனுக்கு இரையாக்கப்பட்டு, சென்ற ஆண்டு 19-8-1985 ஆம் தேதியன்று பாலகிருஷ்ணபிள்ளை என்ற 42 வயதான ஒருவரைக் கையிலேயும், காலிலேயும் கயிற்றைக் கட்டி, ஒரு மதத்தினுடைய போதகரே: பாதிரியே முன்னின்று இழுத்துச் சென்று கொல்லங்கோடு கடலிலே அழுத்தி அவரைக் கொன்றிருக்கிறார்கள். அவருடைய மனைவி ஒரு அமைதித குழு கூட்டத்தில், மாவட்ட ஆட்சியாளரைப் பார்த்து, டி. ஐ. ஜி. அவர்களைப் பார்த்து, ''ஐயா, என்னுடைய கணவருடைய ஒரு எலும்புத் துண்டையாவது பெற்றுத் தாருங்கள் என் கணவனுக்கு அந்த எலும்புத் துண்டை வைத்தாவது ஈமச் சடங்குகள் செய்கிறேன் என்று கண்ணீர் வடித்தாளே, அந்த கண்ணீர் இன்றைக்குத் தமிழகத்திலே குமுறுகின்ற எரிமலையாக மாறி விடுமோ என்ற சந்தேகம் எனக்கு வந்திருக்கிறது. இவைகளைக் கண்டிக்க வேண்டாமா? கண்டிக்கிற நியாய உணர்வும் உயிர்களைப் பாது காக்கும் கடமை உணர்வும வேண்டாமா?

இவைகளைக் கலவரம் என்று அரசாங்கமே சொல்கிறது. கலவரம் என்றால் மக்கள் இரண்டு மூன்று பிரிவுகளாகத் தனித் தனியாகப் பிரிந்து நின்று பிரிவை வேறொரு பிரிவு தாக்கிக் கொண்டால், அது, கலவரம்,

ஆனால், கொல்லங்கோட்டில் அமைதியாக இருந்த இந்துக்களின் மீது, இந்து மீனவர்களின்மீது கிறித்தவ மீனவர் வந்து தாக்கினால் அது ஒரு பக்கத் தாக்குதல், எரிந்த வீடுகள், இழந்த பொருட்கள் அழிந்த தொழிற் கருவிகள் ஏராளம். இதுவரை அதற்கு வழக்கு உண்டா ? விசாரணை உண்டா என்றால் அது இல்லாமல் இருந்துகொண்டு இருக்கிறது. எங்கெங்கு இந்துக் களெல்லாம் பாதிக்கப்படுகிறார்களோ, எங்கெங்கு இந்துக்களின் வீடுகள் எரிக்கப்படுகின்றனவோ எங்கெல்லாம் இந்துக்கள் அனாதைகளாக்கப்படுகின்றனரோ அங்கெல்லாம் நம்முடைய அரசாங்கம் தன்னுடைய கண்களை மூடிக்கொள்வது எங்களைப் போன்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு, இந்துக்களுக்கு இன்றைக்கு வேதனையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசாங்கம், கிறிஸ்தவர்களின் வணக்கத் திற்குரிய போப் அவர்கள் வருவதற்கு விடுமுறையைத் தெரிவித்து வரவேற்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறது. வேறொரு நாட்டிலே உள்ள மதத் தலைவர் இங்கே வருகின்றபொழுது நம்முடைய அரசாங்கம் விடுமுறை தெரிவித்து வரவேற்கின்ற அந்தக் கட்டாயத்தை ஏற்றிருக்கிறது. நான் வெட்கப்படுகிறேன். ஆனால், இந்தியாவிலேயிருந்து, இந்திய மக்களுடைய, இந்து மக்களி னுடைய தலைவராக இருக்கக்கூடிய எங்கள் மாமனிதர் பாலா

சாகேப் தேவரஸ் அவர்கள் நாகர்கோயிலுக்கு வருகின்றபொழுது நகராட்சி ஸ்டேடியத்திலே வைத்து அவருடைய பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு இடம் தர மாட்டோம் என்று சொல்கின்ற மனப்போக்கு அரசுக்கு இருப்பது நியாயமா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, போப்பாண்டவர் இந்தியா வருகிறார்; இங்கே வரவேற்கப்படுவது ஒரு மதத் தலைவர் என்ற முறையிலே அவர் வரவேற்கப்படவில்லை. வாடிகன் சிட்டி ஒரு பெரிய நாடு; ஐக்கிய நாடுகள் அவையிலே இடம் பெற்றிருக்கிறது. ஒரு நாட்டினுடைய அதிபருக்கு என்ன வரவேற்பு அளிக்க வேண்டுமோ அதை அளிக்கின்ற முறையிலே இருக்கிறது. ஆனால் அந்த நாள் விடுமுறை அளிக்கப்பட்டாலும் கூட, அடுத்து வரவிருக்கின்ற சனிக்கிழமை வேலை நாளாக ஆக்கப் பட்டு இந்த நாள் விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர அதற்கென்று தனியான ஒரு விடுமுறையை அளிக்கவில்லை.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் என்னுடைய ஒட்டுமொத்த வயதுக்கு மேற்பட்ட ஆண்டுக் காலம் பொது வாழ்வில் அனுபவம் உடையவர்கள். அவருடைய விளக்கத்திற்கு நான் மகிழ்வடைகிறேன். ஆனால் ஒரு நாட்டினுடைய நிர்வாக தலைவர் இன்னொரு நாட்டிற்கு வருகின்றபொழுது அங்கே மத போதனை செய்யக்கூடாது என்றுகூட ஒரு சர்வதேச உடன்பாடு international convention உண்டு என்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றி எனக்கு முழுமையாகத் தெரியாததினால்; அப்படிச் சொல்லப்படுகின்ற காரணத்தால் எங்களைப் போன்ற சாதாரண இந்துக்களின் மனத்தில், அப்படிச் செய்யலாமா என்ற எண்ணம் கூட வருகிறது. எனவே, இது தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஆகவே, நான் கேட்பதெல்லாம், ஒரு மதத்தலைவர், ஒரு மதத்தின் அடிப்படையிலே உள்ள ஒரு இயக்கத்தினுடைய தலைவர் இங்கே வருகின்றபொழுது எல்லா வசதிகளையும் நாம் செய்து கொடுக்கிறோம்; வரவேற்கிறோம்; வணங்குகிறோம்; பாராட்டுகிறோம்; இன்னமும் சொல்லப்போனால் நடைபாவாடை விரித்து பல்லக்கில் தூக்குகிறோம். ஆனால் இந்தியாவிலேயே பிறந்து, இந்து மக்களின் தலைவராக இருக்கின்ற ஒருவர் எங்களுடைய மாபெரும் R.S.S. இயக்கத்தின் தலைவர், வணக்கத்திற்குரிய பாலாசாகேப் தேவரஸ் அவர்கள் நாகர் கோயிலுக்கு வருகின்றபோது அந்த ஸ்டேடியத்திலே ஒருநாள் விழாவிற்கு, அருமையான பொதுக் கூட்டத்திற்கு நாங்கள் இடம் தர மாட்டோம், அனுமதிக்க மாட்டோம் என்று சொல்வதை எங்களாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.





அதைப்போல, இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இந்துப் பிரிவு மக்கள் பெறக்கூடிய சலுகைகள் எல்லாம் கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் கொடுக்கப் படும் என்ற அறிவிப்பு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அறிவிப்பைப் பொறுத்த வரையில், ஏழை எளிய மக்கள் ஒருசில வாய்ப்புகளைப் பெறுவதில் எங்களுக்கு மன வருத்தமோ, கருத்து வேறுபாடோ இல்லை. ஆனால் இவையெல்லாம் மத மாற்றத்தைத் தூண்டும் கருவிகளாக இந்தியாவில் ஆகிப் போயிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படு கிறேன். மத மாற்றம் என்பது தான் இந்தியாவில் இன்றைக்கு உருவாகியிருக்கின்ற தடுமாற்றமாகப் போய் இருக்கிறது.

மண்டைக்காட்டில் நடைபெற்ற கலவரத்தின்பொழுது அதைப் பற்றி விசாரணை செய்ய ஒரு கமிஷன் — நீதிபதி வேணுகோபால் கமிஷன் விசாரணை செய்ய நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷனும் தன்னுடைய மதிப்பீட்டை, தீர்ப்பை, அவார்டை இந்த அரசுக்கு கொடுத்திருப்பதாக தெரிகிறது. அந்த அவார்டை இந்த அரசு வெளியிடுமேயானால் இப்படிப்பட்ட பல்வேறு சம்பவங்களில் தவறு செய்பவர்கள் யார் யார் என்பது அதிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கும். அது நாட்டு மக்களுக்குப் பயனுடையதாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனவே அதை உடனடியாக வெளியிட வேண்டுகிறேன்.

ஆனால், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இந்துக் களுக்கு உள்ள உரிமைகள் அதே பிரிவைச் சார்ந்த கிறித்தவர் களுக்கும் கொடுக்கப்படும் என்று சொல்லுகின்றபொழுது அது மத மாற்றத்தைத் தூண்டும் கருவியாக மாறும் என்று நாங்கள் கருதுகின்ற காரணத்தால் அதை நாங்கள் எதிர்க்கின்றபொழுது சில அனுபவங்களை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். இருக்கின்ற உரிமைகளை, இருக்கின்ற சலுகைகளை வைத்துக்கொண்டு எங்களுடைய மாவட்டத்தை வேட்டைக் காடாக கிறிஸ்தவர்கள் மாற்றியிருக்கிறார்கள் என்பதை என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். இப்படி கன்னியாகுமரி மாவட்டத்தைப்போல ஒவ்வொரு மாவட்டமும் வேட்டைக் காடாக மாறிப்போகுமேயானால் அது நல்லதொரு ஆரோக்கியமான சூழ்நிலையை இந்த நாட்டிலே உருவாக்காது என்பதை அடிப்பட்டு, அந்த வேதனையை அறிந்தவன் என்ற முறையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே மதமாற்றத்தைத் தூண்டும் வகையில் சலுகை கொடுக்க இந்த அரசு முன்வரக் கூடாது என்று வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22-1-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

100. தஞ்சாவூரிலுள்ள திருவாளர்கள் புனித சேவியர் தொழில் சமயத்தார் செலுத்தக் கூடிய வரியினின்று விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் — சமய அறக்கட்டளைகள் துறையின் 2-8-1985 ஆம் நாளிட்ட 689 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

101. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 28-5-1985 ஆம் நாளிட்ட 790 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 45 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

102. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக்குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 6-11-1985 ஆம் நாளிட்ட 1075 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

103. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக்குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7-11-1985 ஆம் நாளிட்ட 1077 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

104. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 12-7-1985 ஆம் நாளிட்ட 1713 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



105. மதுரை மாவட்டம், நத்தம் மற்றும் வேடசந்தூர் தாலுகாக்களைச் சேர்ந்த சில கிராமங்களைத் தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 12-9-1985 ஆம் நாளிட்ட 709 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

32. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 130 வரை).

[1986 ஜனவரி 21

## இணைப்பு 1

(41ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 27க்கான விடையை காண்க)

1983–84 ஆம் ஆண்டு 15 புதிய இரகங்களுக்கு 1984–85 ஆம் ஆண்டு பதினாறு புதிய இரகங்களும் விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடைய வெளியிடப்பட்டுள்ளது.

### 1983-84-ல் வெளியிடப்பட்ட ரகங்களின் விவரம்.

**1. எம். டி, யூ. 2 நெல்:**

குளிரைத் தாங்கி நிறைய விளைச்சல் தரக்கூடியது. இது கம்பம் பள்ளத்தாக்கிற்கு உகந்தது. மகசூல் எக்டேருக்கு ஆறு டன் கிடைக்கும்.

**2. கோ. 2 பனிவரகு:**

வளமில்லாத சரளை நிலங்களில் பயிரிட ஏற்றது. மலை வாழ் மக்கள் நல்வாழ்வுத் திட்டப் பகுதிகளில் பயிரிட மிகவும் ஏற்றது. எக்டருக்கு 1,100 கிலோ தானியம் கிடைக்கும்.

**3. பையூர் 1 ராகி:**

மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது. கால்நடைகள் இதன் சுவையான தட்டை விரும்பிச் சாப்பிடும். எக்டருக்கு 1,800—2,500 கிலோ வரை தானியமும், 4,000 கிலோ வரை தட்டையும் கிடைக்கும்.

**4. கோ. 5 துவரை:**

110 நாட்களில் பலன் தரும் குறைந்த வயதுடையது. எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம். எக்டருக்கு இறவையில் 1,440 கிலோவும், மானாவாரியில் 760 கிலோவும் தரவல்லது.

**5. பையூர் 1 தட்டைப்பயிறு:**

வறட்சியைத் தாங்கி அதிக விளைச்சல் தரும் ரகம். அறுவடையின் போதும் பச்சையாக இருப்பதால் நல்ல தீவனப் பயிராகவும் பயன்படுகிறது. எக்டருக்கு 760 கிலோ கிடைக்கும்.

**6. கோ. 2 மொச்சை:**

105 நாட்களில் விளையும் குறுகிய கால மொச்சை, அறுவடை வரை பச்சையாக இருப்பதால் நல்ல தீவனப் பயிர். எக்டருக்கு இறவையில் 1,400 கிலோவும் மானாவாரியில் 900 கிலோவும் கிடைக்கும்.



1986 ஜனவரி 21]

**7. கோ. நிலக்கடலை:**

பருப்புக்கள் பெரிய அளவுடையது. எக்டருக்கு 2,710 கிலோ இறவையிலும், 1,640 கிலோ மானாவாரியிலும் தரக் கூடியது.

**8. கோ. 1 வாழை:**

விருப்பாட்சி மலை வாழை ரகத்தைப் போன்ற மணமும், சுவையும் கொண்ட இரகம். சமவெளியில் பயிரிட ஏற்றது. எக்டருக்கு 22 டன்கள் கிடைக்கும்.

**9. கோ. 2 மரவள்ளி:**

குறைந்த வயதுடையது. குறைந்த அளவே நச்சுத்தன்மை (ஹைடிரோ சயனிக் அமிலம்) உள்ளது. எக்டருக்கு 37.5 டன் மகசூல் தரக்கூடியது.

**10. பி. கே. எம். 1 சுந்தரி:**

வறட்சியைத் தாங்க வல்லது. புழுதிக் கத்திரியை விட 15 நாட்கள் வயது குறைந்தது. எக்டருக்கு 35 டன் மகசூல் தர வல்லது.

**11. கோ. 1 டிசம்பர் கனகாம்பரம்:**

கவர்ச்சியான இளஞ் சிவப்பு நிறம் கொண்ட இந்த ரகம் எக்டருக்கு 9 டன் பூக்கள் தரக்கூடியது.

**12. எம். டி. யூ. 1 பாகல்:**

குறைந்த நாளில் பூக்கக் கூடியது. எக்டருக்கு 32 டன் மகசூல். காய்கள் நீளம் சுமார் 40 செ.மீ.

**13. கோ. 2 பீர்க்கன்:**

விதைத்த 70 ஆம் நாளிலிருந்து எட்டு அறுவடை எடுக்கலாம். எக்டருக்கு 25 டன் காய் தருகிறது.

**14. டி. எம். வி. 5 ஆமணக்கு:**

மானாவாரியில் பயிரிட ஏற்றது. தத்துப் பூச்சியின் தாக்குதலை தாங்கக் கூடியது. எக்டருக்கு 1,100 கிலோ மகசூல் கிடைக்கும்.

**15. கோ. 1 பெருஞ்சவுண்டல்:**

களர் நிலங்களில் வளர்ந்து தீவனப் பயிராகவும், விறகாகவும் குறைந்த நாட்களில் பலன் தரக் கூடியது.

1984-85ல் வெளியிட்ட ரகங்கள்.

1. நெல், திருப்பதிசாரம் 1:

கட்டி சம்பாவைவிட அதிக விளைச்சல் தரும் திறன் பெற்றது. இதன் வயது 110—115 நாட்களே. இதன் அரிசி சிவப்புநிறமாகவும் குறுகிய பருமனாகவும் இருப்பதால் இந்நெல்லை குமரி மாவட்ட மக்கள் விரும்பி ஏற்பர். எக்டருக்கு சராசரி 5,010 கிலோ நெல் மகசூல் தரவல்லது.

2, நெல், பரமக்குடி. 1:

இந்த ரகம் வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை பெற்றுள்ளதால், இராமநாதபுரம் மாவட்ட மானாவாரி நிலங்களில் பயிரிட மிகவும் ஏற்றது. எக்டருக்கு 2,650 கிலோ சராசரி மகசூல் தரவல்லது.

3. சோளம் கோ. 25:

அதிக தானிய மகசூலும், தட்டை மகசூலும் தரும், தட்டை மற்றும் இலைகள் அறுவடை வரையிலும் பசுமையுடன் இருக்கும். மானாவாரியில் எக்டருக்கு 5,170 கிலோவும், இறைவையில் 6,200 கிலோவும் தானிய மகசூல் தரவல்லது. இதன் தானியங்கள் முத்து வெண்மை நிறத்துடன் பருமன் கொண்டது.

4. ராகி கோ.12—:

நடுத்தர வயது (110–120 நாட்கள்) கொண்டது. எக்டருக்கு 3,933 கிலோ கொடுக்கவல்லது. தானியம் பருமனாகவும், மணிகள் அதிக எண்ணிக்கையும் உள்ளது.

5. மக்காச் சோளம் கோ. 1:

பசுக்கதிர் நோய்க்கு எதிர்ப்புச் சக்தி கொண்ட உயர் விளைச்சல் இரகம். ஹெக்டேருக்கு 6796 கிலோ தந்துள்ளது. இதன் தானியம் நல்ல கவர்ச்சியான ஆரஞ்சு நிறத்துடன் அதிக கரோடின் சத்தும் புரதச்சத்தும் கொண்டது.

6. பருத்தி கோ. 10:

கருங்கண்ணிப் பருத்தி ரகம் இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு ஏற்றது. 1,290 கிலோ தந்துள்ளது.

7. பாசிப்பயறு பையூர் 1:

85—90 நாட்களில் அறுவடைக்கு வரும் இந்த ரகம் மானாவாரியில் எக்டருக்கு 740 கிலோ மகசூல் தருகிறது.



8. கரும்பு கோ. க. 85061:

கோ. க. 671 இரகக் கரும்பைக் காட்டிலும் இப்புதிய இரகம் முதல் பயிரில் 10 சதம் அதிக மகசூலும், கட்டைக் கரும்பில் 17 சதம் அதிக மகசூலும் தந்துள்ளது. முன்பட்ட நடவிற்கு மிகவும் ஏற்றது.

9. முந்திரி வி. ஆர். ஐ. 22:

இது நடுத்தர பருமனும் அதிக கிளைகளும் கொண்டது. உடைப்புத் திறனும் அதிகம் (28 சதம்) ஒரு மரத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 8 கிலோ முந்திரிக் கொட்டை கிடைக்கும்.

10. பப்பாளி கோ. 5:

பப்பாயிப்பால் உற்பத்திக்கென்றே தேர்வு செய்யப்பட்டது. எக்டருக்கு 1,500 கிலோ பப்பாயின்பால் கிடைக்கும்.

11. வீரியப்புடலை எம். டி. யு. 1:

எக்டருக்கு 32 டன் காய்கள் தரக்கூடிய இந்த இரகம் அதிகம் பட்ராத தன்மை உடையது.

12. மாதுளை, ஏற்காடு 1:

சேர்வராயன் மலைப்பகுதிகளில் பயிரிட மிகவும் ஏற்றது. நட்ட இரண்டாம் ஆண்டிலிருந்தே மகசூல் தரவல்லது. மிருதுவான விதைகள் உள்ளதால் பழத்தின் தரம் சிறந்து காணப்படுகிறது.

13. ரோஜா, ஏற்காடு 1.

கண்ணைக் கவரும் மஞ்சள் நிறப்பூக்கள் கொண்டவை.

14. சாமந்தி எம். டி. யு. 1:

கந்தக மஞ்சள் நிறம் கொண்ட பெரிய பூக்களைத் தருகிறது. ஒரு ஏக்கர் நடவு மற்றும் மறு தாம்புப் பயிரிலிருந்து மொத்தமாக 30.5 டன் பூக்களைப் பெறலாம்.

15. சாமந்தி, கோ. 1:

மனதைக் கவரும் மஞ்சள் நிறப்பூக்கள் தருபவை. ஒரு எக்டரிலிருந்து 16.7 டன் பூக்கள் கிடைக்கிறது.

16 பெருஞ்சீரகம், கோ. 1:

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இது ஒரு புதிய பயிராகும் நம் மாநிலத்தில் தாழ்ந்த மலைச் சரிவுப் பகுதிகளில் பயிரிட ஏற்ற இரகம். தனிப்பயிராகவோ, கலப்புப் பயிராகவோ பயிர் செய்ய ஏற்றது.

[1986 ஜனவரி 21

## இணைப்பு 11

(51 பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 51-க்கான விடையைக் காண்க)

(அ) தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி திருச்செந்தூர் மற்றும் சிப்பிகுளம் கடற்கரைப் பகுதிகளிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் தேவிப்பட்டினம் கன்னிராசபுரம் கடற்கரைப் பகுதிகளிலும் சங்கு குளிப்பு நடைபெறுகிறது.

(ஆ) ஏறத்தாழ, திருநெல்வேலி மாவட்ட சங்கு குளிப்பில் 500 பேர் வரையிலும், இராமநாதபுரம் மாவட்ட சங்கு குளிப்பில் 340 பேர் வரையிலும் சங்கு குளிப்பில் ஈடுபடுகின்றனர்.

(இ)

| | | ஜாதி வகைச் சங்குகள் ஒவ்வொன்றுக்கும் | | பட்டிவகைச் சங்குகள் ஒவ்வொன்றுக்கும் | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | பை | ரூ. | பை. |
| 1 | முழு அளவு தரம்—1 .. (70 மி.மீ. விட்டம் அதற்கு மேல்) | 3 | 50 | 1 | 30 |
| 2 | முழு அளவு தரம்—2 .. (61 மி.மீ. விட்டம் முதல் 70 மி.மீ.-க்கும் கீழ்) | 2 | 75 | 1 | 10 |
| 3 | குத்தைச் சங்குகள் .. | 6 | 30 | 0 | 10 |

(ஈ) 1. சங்குகுளித் தொழிலாளர்கள் குறித்த நேரத்தில் கடல் நடுவில் உள்ள சங்குபடுகைகளுக்குச் செல்ல உதவியாக, அவர்களது நாட்டுப் படகுகளை இயந்திரப் படகுகள் மூலம் இழுத்துச் செல்லப்பட்டு குறித்த இடத்தில் விடப்படுகின்றன.

2. சங்குகுளித் தொழிலாளர்களுக்கு வசதியாக முகாம்கள் அமைத்து அந்தந்த இடத்தில் தங்கிக் கொள்ள தற்காலிக இடவசதிகள் செய்து தரப்படுகின்றன.

3. மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன.

4. சங்குகுளித் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு சிலேட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்குவதன் மூலம் கல்வி வசதிகள் செய்து தரப்படுகின்றன.



1986 ஜனவரி 21]

5. கொள்முதல் விலைக்கு மேலும், தொழிலாளர்களுக்கு அவர்கள் ஒப்படைக்கும் சங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு ஊக்கத்தொகையும் கொடுக்கப்படுகிறது.

6. சங்குகுளித் தொழிலாளர்கள் விபத்து காப்புறுதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இதன்படி விபத்தில் இறந்தாலோ அல்லது முழுமையாக ஊனமடைந்தாலோ ரூ. 15,000 என்றும், பகுதி ஊனமுற்றால் ரூ. 7,500 என்றும் வழங்கப்படுகிறது.

## இணைப்பு 111.

(75ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

(அ) தொழில் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அரசு நிறுவனங்களுள் 6 நிறுவனங்கள் 1981-84 ஆம் ஆண்டின் இடைப்பட்ட காலத்தில் நட்டத்தில் இயங்கின.

(ஆ) மற்றும் (இ) இந்நிறுவனங்களில் ஏற்பட்ட நட்டமும், அந்நட்டத்தைப் போக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்.—தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகள் 1—10—1980 முதல் 30—9—1981 முடிவுற்ற சர்க்கரை ஆண்டில மட்டுமே முறையே ரூ. 140.84 இலட்சம் மற்றும் ரூ. 100.28 இலட்சம் நட்டத்தில் இயங்கியது.

ஆயின், அடுத்து வந்த 1982, 1983 மற்றும் 1984 ஆம் சர்க்கரை ஆண்டுகளில் இலாபத்திலேயே இயங்கி உள்ளது.

(2) தமிழ்நாடு மொபட் நிறுவனம்—தமிழ்நாடு மொபட் நிறுவனம் 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 30.08 இலட்சம் 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 50.11 இலட்சம், 1982-83 ஆம் ஆண்டில் ரூ, 53.87 இலட்சம், 1983—84 ஆம் ஆண்டில் ரூ. 60.72 இலட்சம் நட்டத்திலும் இயங்கியுள்ளது,

தமிழ்நாடு நுகர் பொருள்கழகம், ஹெவி வெஹிகின்ஸ் தொழிற்சாலை மற்றும் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் ஆகியவைகளுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து தருவதற்கான உத்தரவுகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பயனாக இந்நிறுவனத்தின் நட்ட இயக்கம் குறையும்.

(3) தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்: தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 37.74 இலட்சம், 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 11.54 இலட்சம், 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 20.61 இலட்சம் 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 49.92 இலட்சம் நட்டத்தில் இயங்கியுள்ளது.

இந்த நட்டத்தைச் சரிகட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(4) தமிழ்நாடு உப்புக் கழகம்: தமிழ்நாடு உப்புக் கழகம் 1981 ஆம் ஆண்டில் ரூ. 25.71 இலட்சம், 1982 ஆம் ஆண்டில் ரூ. 24.49 இலட்சம், 1983 ஆம் ஆண்டில் ரூ. 44.59 இலட்சம் மற்றும் 1984 ஆம் ஆண்டில் ரூ. 28.00 இலட்சம் (உத்தேசமாக) நட்டத்தில் இயங்கியுள்ளது.



மாரியூர், வாலிநோக்கம் உப்புத் திட்டத்தின் செயல்திறனை அதிகரிப்பதற்கான வழிமுறைகளைத் தெரிவிப்பதற்காக ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவருடைய பணியும் தொடங்கப்பட்டுள்ளது. வாலிநோக்கம் அருகில் தோன்றிவரும் சிறு துறைமுகம் இங்கு உற்பத்தியாகும் பொருள்களை பல்வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்ய வழி செய்யும். தவிர உப்புத் திட்டம் சிறப்பாகச் செயல்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையில் 1985 ஆம் ஆண்டினின்றும் உப்புத்திட்டம் முன்னேற்ற நிலையை அடைந்து வருகின்றது.

(5) தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்:—தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 253.72 இலட்சம் மற்றும் 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 333.45 இலட்சம் நட்டத்தில் இயங்கியுள்ளது ஆயின் அதன்பின் இலாபத்தில் இயங்கி வருகின்றது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 690.96 இலட்சம் மற்றும் 1983—84 ஆம் ஆண்டில் ரூ. 273.31 இலட்சம் இலாபத்திலும் இயங்கியுள்ளது.

(6) தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி):— தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 94.46 இலட்சம், 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 176.32 இலட்சம் 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 211.29 இலட்சம் மற்றும் 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 245.50 இலட்சம் நட்டத்தில் இயங்கியுள்ளது.

இவ்விழப்பினைக் குறைத்து டான்சியினை ஆதாயத்தில் இயங்கச்செய்ய டான்சி புனரமைப்புத் திட்டம் ஒன்றினை டான்சியின் தலைவர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இதில் பொருளாதார ரீதியில் சாத்தியமற்ற சில பிரிவுகளை தனியாருக்கு விற்று விடுதல் தோல் பொருட்கள் தயாரிக்கும் பிரிவுகளை டால்கோவிற்கு மாற்றுதல், வார்ப்படப் பிரிவுகளை மூடிவிடுதல் சிறு தொழில் பிரிவுகளில் உபரி தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்தல், புதிய கிளை நிறுவனங்கள் தோற்றுவித்தல் டான்சியின் நிதிக் கட்டமைப்பை மாற்றி அமைத்தல் ஆகியவை அடங்கும். இப்பிரேரணை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. [illegible], Old Post Office Road, Coimbatore-1
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286 R B. Gandhi Street, Calcutta-11

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

948/R.
2897

Issued: 25-9-1986

வெளியீடு: 25-9-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜனவரி 22, 1986—தொகுதி XVI எண். 2

**Wednesday the January 22, 1986,—Volume XVI No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly, Secretariat, Fort St. George, Madras-6000 009

விலை ரூ 3.00 காசுகள்]

[Price Rs. 3.00 Paise

2897

## உள்ளடக்கம்

22–1–1986.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்: | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள். | 187 |
| 2. | தகவல் கோரல்: | |
| | (அ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஏற்பட்டுள்ள மின் தடை. | 213 |
| | (ஆ) ஊராட்சிமன்ற, ஒன்றியத் தேர்தல்கள் குறித்து. | 213 |
| 3. | கவன ஈர்ப்பு: | |
| | வெள்ள நிவாரணப் பணிகள். | 215 |
| 4. | அறிக்கைகள் அளித்தல்: | |
| | பொது நிறுவனங்கள் குழு. | 219 |
| 5. | அரசினர் சட்ட முன்வடிவுகள்: | |
| | (அ) அண்ணா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1986. | 219 |
| | (ஆ) தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1986. | 220 |
| | (இ) பாரதியார் பல்கலைக் கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1986. | 220 |
| 6. | ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம் (தொடர்ச்சி) | (220—314) |
| | திரு. ஆ. பிரேம்குமார். | 220—226 |
| | திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். | 227—232 |
| | திரு. கூடலூர் இ. வி. வேலு. | 233—241 |
| | திரு. செ. ஆறுமுகம். | 242—245 |
| | திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன். | 246—259 |
| | திரு. குமரி அனந்தன். | 260—262 |
| | திருமதி பா. வளர்மதி. | 263—268 |
| | திரு. கி. இராமன். | 269—271 |
| | திரு. ஜி. கே. பிரான்சிஸ். | 273—274 |
| | திரு. ஆ. கா. அ. அப்துல் சமத். | 275—282 |

திரு. சைதை சா. துரைசாமி. 283—289
திரு. குழ. தமிழரசன். 290—292
திரு. ச. சங்கரலிங்கம். 293—297
திரு. ச. கோவிந்தசாமி. 298—300
திரு. கே. முத்துவேல். 301—303
திரு. வி. பி. சிந்தன். 304—310
திரு. த. புஷ்பராசு. 311—314

7. அறிவிப்பு.
பேரவை அலுவல் 296

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். 314—317

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

[1986, சனவரி 22, புதன்கிழமை,

தை 9, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை'

ஒருவன் பயனில்லாத பொருள்களைப் பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறம் இல்லாதவன் என்பதை அறிவிக்கும்.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### மேல்நிலைப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் பாடம்.

84—(*வினா எண். 3157) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் பாடம் கற்றுத் தரப்படுவதால் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு குறையுமா?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் பொதுப்பாடத்தில் கம்ப்யூட்டர் பாடம் கற்றுத் தரப்படுவதால் நீக்கப்படும் பொதுப்பாடம் வேறு பாடப்பிரிவில் நடைபெறும் வகையில் அமைக்கப்பெறுவதால் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு குறையும் சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) எழாது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக்குழு சார்பில் கம்ப்யூட்டர் மூலம் பல பாடங்களை இப்பொழுது டெலிவிஷனில் காட்டுகிறார்கள். பல ஆசிரியர்கள் செய்யும் பணியை ஒரே ஒரு காசட் செய்கிறது. இதுபோன்ற நிலை மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஏற்படாதா? ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்து இருக்கும் நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்ப்யூட்டர் பாடத்தை நாம் புகுத்துவதன் மூலம் நம் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. ஆனால், அதே நேரத்தில், மாணவர்களுக்கு எது நல்லது என்று படுகிறதோ அதை, நாம் செய்தாக வேண்டுமே தவிர, ஆசிரியர்களுடைய வேலை வாய்ப்பை வைத்து, அதை முக்கிய பிரச்னையாக வைத்து மாணவர்களுடைய நலனுக்குச் சாதகமான நிலைகளை நாம் உருவாக்கத் தவறக் கூடாது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் ஆரம்பப் பள்ளிகளில் கூட கணிதம், விஞ்ஞானம் போன்றவை வீடியோ டேப்ஸ் மூலம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதனால் குழந்தைகள் ஆர்வத்துடன் படிக்கிறார்கள். அத்தகைய வீடியோ டேப்ஸ் மூலம் இங்கேயும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கா ஒரு வளர்ந்த நாடு. அங்கே எல்லாவிதமான வசதிகளையும் உடனுக்குடனே புகுத்த முடிகிறது. இங்கே நாம் குறைந்த பட்ச வசதியைக் கூட செய்து தர முடியாத அளவுக்கு நிதி வசதிகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நிதி வசதிகளைப் பொறுத்துதான் இங்கே எல்லாவிதமான வாய்ப்புகளை நாம் நம் மாணவர்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டியிருக்கிறது.

திரு. மா. சின்னராசு: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை மேல்நிலைப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் பாடம் சொல்லித்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது? ஒரு கம்ப்யூட்டர் நிறுவப்படுவதற்கு எவ்வளவு செலவாகும்? கம்ப்யூட்டர் பாடம் சொல்லித்தர தகுதியான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, கம்ப்யூட்டர் பாடத்தைச் சொல்லித்தருவதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி தந்து, அதன் பிறகு கம்ப்யூட்டர் வாங்கி பாடத்தை ஆரம்பிக்கிறார்கள். இதுவரையில் 11 மேல் நிலைப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் பாடம் நடைமுறையில் இருக்கிறது. இந்த ஆண்டு மேலும் 10 மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. ஒரு கம்ப்யூட்டர் நிறுவ ஏறத்தாழ 40 ஆயிரம் அல்லது 50 ஆயிரம் ரூபாய் செலவாகும். அதற்கு ஒரு அறை தேவை, அதை ஏர்கண்டிஷன் செய்ய வேண்டும். கம்பியூட்டர் கருவி வாங்கவேண்டும்; ஆசிரியர்களுக்கும் பயிற்சி தர வேண்டும்.

ஆத்தூரில் புதிய மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம்.

85—(*வினா எண். 3966) திருமதி த. இராசாம்பாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஆத்தூரில் புதியதாய் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தை திறக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.
(ஆ) எழாது.

பதிவு செய்யப்பட்ட நில குத்தகைதாரர்கள்

1—(*வினா எண். 3267) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 31-3-1985 முடிய தமிழகம் முழுவதும் பதிவு செய்யப்பட்ட வேளாண்மை நில குத்தகைதாரர் எண்ணிக்கை மாவட்டம் வாரியாக எவ்வளவு?

(ஆ) குத்தகைதாரர்கள் முழுவதும் பதிவு செய்திட அரசு மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (ஆ) ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மா. சின்னராசு: தலைவரவர்களே, வட்டார அளவில் அமைக்கப்பட்டுள்ள ஐந்துபேர் கொண்ட குழு குத்தகைப் பதிவு செய்யாதவர்களின் உரிமையைக் கண்டறிந்து, ஆய்வு செய்து, பதிவு செய்ய ஏற்பாடு செய்வதைப்போலவே பினாமி குத்தகை வேறு பல காரணங்களால் உண்மையற்ற ஆவணங்களைத் தேடி பதிவு செய்துகொள்ளுகின்ற குத்தகைப் பதிவுகளை நீக்குவதற்கும் அந்தக் குழுவிற்கு அதிகாரம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தக் குழு எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிவிக்கும். அதன் பேரில் நியாயம், உண்மை என்று கருதப்படுபவை ஏற்றுக் கொள்ளப்படும்; மற்றவை நீக்கப்படும்.

திரு. எம். செல்லமுத்து: தலைவரவர்களே, ஐந்து பேர் கொண்ட இந்தக் குழு கிராமங்களுக்குச் சென்று குத்தகைப் பதிவு பற்றி விசாரிக்கின்ற போது வட்டாட்சியர் அவர்களுடன் செல்ல வேண்டிய நிலை இல்லை. ஆகவே குழு விசாரித்து, தகவல் சொன்னால் பதிவு செய்ய முடியாது; சட்டப்படிதான் பதிவு செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். அதனால் குத்தகைப் பதிவு தடைபடுகிறது. இந்த நிலையைப் போக்க வேண்டும். குழு சொல்லுகின்ற தகவல்களின் பேரில் விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு தாசில்தார் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளுக்குத் தான் அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரிகள் அலுவலகத்தில்

@ 316—317-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

போதுமான அளவில் இல்லாத காரணத்தால் குத்தகைப் பதிவு வேலை சரியாக நடைபெற முடியவில்லை. இதனால் பல்வேறு குத்தகைப் பதிவுப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டும் பதிவு செய்யப்படாமல் இருக்கிறது. இந்த நிலையைக் களைய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த ஆலோசனைக் குழுவின் அலுவல்கள்—நில உடமையாளர், இடையாளர், அந்நிலத்தை பயிரிடும் குத்தகைதாரர் ஆகியோரது பெயர், முகவரி ஆகியவற்றுடன் வட்டத்தில் அமைந்துள்ள நிலம் தொடர்பான தகவல்களையும் விவரங்களையும் சேகரித்தல்; அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களையும் விவரங்களையும் சம்பந்தப்பட்ட நிலத்திற்கு அதிகார வரம்புள்ள ஆவண அதிகாரிகளுக்கு (வட்டாட்சியர்) குத்தகைப் பதிவு சம்பந்தமாக தனது அலுவல்களை மேற்படி சட்டத்தின் கீழ் செவ்வனே ஆற்றுவதில் அவருக்குப் பரிந்துரை செய்தல்; மூலச் சட்டப் பிரிவு 3, 4 மற்றும் 5-ல் குறிப்பிட்டுள்ளபடி பதிவு ஆவணங்களை தயாரித்தல், குறிப்பிட்ட நிலங்களை ஒப்புதலளிக்கப்பட்ட குத்தகை ஆவணங்களில் சேர்த்தல் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட குத்தகை ஆவணங்களில் உள்ள பதிவுகளில் மாற்றம் செய்தல் ஆகியவற்றில் ஆவண அதிகாரிக்கு உதவி செய்தல்.

இந்தக் குழு விசாரணை செய்து, பரிந்துரை செய்யும். சம்பந்தப்பட்ட ஆவண அதிகாரி (வட்டாட்சியர்) அதன் தன்மைகளைப் பார்த்து, அரசுக்குப் பரிந்துரை செய்வார். அவர்களுடைய வேலைப்பளு அதிகமாக இருக்கிறது என்று தெரிந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அந்தத் தகவல் வந்தால், அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவரவர்களே, சில நேரங்களில் கணவனை இழந்த கைம்பெண்கள், அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அலுவலர்கள், தாங்கள் நேரடியாகப் பயிரிட முடியாத சூழ்நிலையில் குத்தகைக்கு விடுகிறார்கள். அவர்கள் ஓய்வு பெற்று அல்லது அவர்களுடைய குழந்தைகள் வளர்ந்து, வேலை கிடைக்காமல், விவசாயம் செய்ய வருகின்ற அந்த நேரத்தில், அவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற சூழ்நிலையில், குத்தகை எடுத்தவர்கள் வசதியாக இருக்கின்றபோது, அந்த குத்தகை நிலத்தை நிலச்சொந்தக்காரர்களுக்கு மீண்டும் பெற்றுத்தர அரசு சட்டத்திருத்தம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் இந்தக் குழுக்களை அமைப்பது என்றும், அதாவது அவர்கள் ஆராய்ந்து யாருக்கு உண்மையாக நிலம் சொந்தமாக ஆக்கப்பட



வேண்டுமோ, அதன்பேரில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய வகையில் ஆலோசனைகளைச் சொல்வார்கள். அதற்கு மேல் அதிகாரிகளும், அதற்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், அதற்குமேல் வாரியமும், அதறகுப் பிறகு அரசும் இருக்கின்றது. அந்த வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே இதனை முறைப்படுத்த வேண்டும். இதில் இருக்கக்கூடிய பலவிதமான சிக்கல்கள் காரணமாகத்தான் விரைவாகவோ, எளிதாகவோ இதை முடிக்க முடியாமல் சிலபல நிலைமைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து அறிந்து, அதற்கேற்றபடி பல்வேறு ஆலோசனைகளும் அறிவுரைகளும் கூறப்பட்டிருக்கின்றன. இதிலே ஏதாவது திருத்தங்கள் செய்ய வேண்டும் அல்லது சிறப்பாக நடத்துவதற்கும், முறையாக நடத்துவதற்கும் சிலபல பரிந்துரைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களும், இதிலே ஈடுபட்டிருப்பவர்களும் எடுத்துச் சொல்கிற நிலைமையில் உரிய நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது. ஆனால் கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கு அதே கணவனைத் திரும்பப் பெற முடியாது. நிலங்களைப் பொறுத்தவரையில் சிலபல நிலங்கள் நல்ல நிலங்கள் இருக்குமேயானால், அவற்றைத் திரும்பப் பெற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் கீழ் எவ்வளவு கிராமங்கள் பதிவு செய்யப்படும் என்று அரசு எதிர்பார்த்தது? இன்னும் பதிவு செய்யப்படாமல், ஆனால் நீண்ட வருடங்களாக குத்தகை பார்த்துக் கொண்டிருக்கின்ற விவசாய நிலங்கள் எத்தனை என்பதை அரசு அறியுமா? இவ்வளவு அறிவிப்புக்குப் பிறகும் கிராமப்புறங்களில் பல் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பல்வேறு வருடங்களாக தங்களுடைய குத்தகையைப் பதிவு செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே அதிகாரிகள் நேரடியாகவே கிராமப்புறங்களுக்குச் சென்று அவர்களை எல்லாம் பதிவு செய்கின்ற வகையில் உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 31–10–1985 ஆம் ஆண்டு 4 இலட்சத்து 39 ஆயிரத்து 590 பேர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். பதிவு செய்யப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பு 6,36,692 ஏக்கர்கள். இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 1,27,750 பேர்கள்; மலைஜாதியினர் 817 பேர்கள்; பிற்பட்டவர்கள் 1,58,080 பேர்கள்; மற்றவர்கள் 1,53,043 பேர்கள். ஆக மொத்தம் 4,39,590 பேர்கள்பதிவு செய்யப்பட்டு இருக்கின்றனர். இந்த நிலைமையில் மேலும் பலரை பதிவு செய்கின்ற வகையில் உரிய முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் எவ்வளவு பேர்கள் என்ற புள்ளிவிவரம் சேகரிக்கப்படவில்லை. ஆனால் அதை விரைவாக முடிக்க வேண்டும் என்பதும், யாருக்கு உரிமை

உள்ளதோ அந்த உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கமாகும். அந்த அடிப்படையில்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்ததற்குப் பிறகுதான் ஐவர் குழுக்கள் அமைப்பது என்று வந்து. அதிலே மலைஜாதியினர் ஒருவர் இருக்கவேண்டும் என்றும். குத்தகைதாரர்களில் ஒருவர் இருக்கவேண்டும் என்றும் மூன்று சமூகத் தொண்டர்கள் இருக்க வேண்டுமென்றும் வைத்திருக்கிறோம். அவர்கள் கண்டறிந்து சொல்கிறபோது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதாவது இதிலே எந்தவிதமான தவறும் அதிகாரிகள் செய்யக்கூடாது என்பதுதான் இவ்வாறு அமைப்பதினுடைய நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப் பெற்ற பட்டாக்கள்.

2—(*வினா எண். 3898) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இது வரையில் எவ்வளவு பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) இப்பணி எப்போது துவங்கப்பட்டது?

(இ) இப்பணி முடிய எவ்வளவு நாட்களாகும்?

(ஈ) புறம்போக்கு நிலத்தில் பட்டா பெற்றவர்கள் எத்தனை பேர்?

(உ) தனிப்பட்டா பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஊ) சைதாப்பேட்டையில் தனிப் பட்டா வழங்கும் பணி எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 30–11-1985 வரையில் 69,56,016 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 1–6–1979-ல் துவக்கப்பட்டு, 1982-83 முதல் கடு விரைவு திட்டமாக செயல்படுகிறது.

(இ) எடுத்துக்கொள்ளப்பட்ட 99 வட்டங்களில் புலப்பணி (நில அளவை) பணி முடிவடைந்துவிட்டது. புது ஆவணங்கள் தயார் செய்து வருவாய்த் துறையினரிடம் ஒப்படைப்பது 31–3–1986ல் முடிவுறும்.

(ஈ) புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா கொடுக்கப்படுவது வருவாய்த் துறையின் பணியாகும். இது நில உடமை மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.



(உ) நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 30–11–1985 முடிய 50,67,544 நபர்களுக்கு தனிப்பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தினை சைதாப் பேட்டை வட்டம் உட்பட 49 வட்டங்களுக்கு விஸ்தரிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்கும்போது பாஸ் புத்தகம் கொடுக்கப்பட வேண்டும் என்ற குறிப்பினை இரண்டு முறை இந்த மன்றத்திலே அறிவித்தும் இன்னும் பட்டா வழங்கப்படுகிற நபர்களுக்கு பாஸ் புத்தகம் வழங்கப்படாமல் பேப்பராகத்தான் கொடுத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆகவே விரைந்து பாஸ் புத்தகம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ்புத்தகம் வழங்கவேண்டும் என்ற முயற்சி இரண்டு மூன்று ஆண்டுக்காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு அரசு ஆயத்தமாகத்தான் இருக்கின்றது. ஆனால் மத்திய அரசு, பாஸ் புத்தகத்தில் குத்தகைதாரர்களுடைய பெயர்களும், மற்றவைகளும் குறிப்பிடப்படவேண்டும் என்று குறிப்பிட்டு, பிறகு அதன் காரணமாக அதிலே சிலபல சங்கடங்கள் இருப்பதுபற்றி பல தடவை நாம் எடுத்துச் சொன்னோம். மத்திய அரசும் நாமும் உட்கார்ந்து பேசினோம். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து, அந்த அடிப்படையில் இருக்கலாம் என்ற அளவுக்கு இப்போது மத்திய அரசும் கருதுகிறது. அதன் பேரில் மத்திய அரசு முடிவு எடுத்து பட்டா பாஸ் புத்தக முன்வடிவுக்கு ஒப்புதல் அளித்தபிறகு, பாஸ் புத்தகத்தை வழங்கலாம் என்ற சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பிறகு வழங்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் உள்ள நத்தம் புறம்போக்கு நிலங்களை தனித்தனியாக பிரித்து வீட்டு மனைப் பட்டாவாக வழங்குகிற செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா? அத்தோடு இந்த மேம்பாடு திட்டத்தின்கீழ் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே, அவர்கள் தற்காலிகமானவர்களா? அவர்கள் நிரந்தரமாக வருவாய்த் துறையிலோ அல்லது மற்றத் துறைகளில் வேறு பணிகளிலோ எடுத்துக் கொள்ளப்படுவார்களா? அதுகுறித்து அரசு ஏதாவது முடிவு எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் புறம்போக்கு போன்றவைகள் அரசுக்கோ அல்லது அரசினுடைய பல்வேறு பணிகளை நிறை வேற்றும் நடவடிக்கைகளுக்கோ தேவைப்படுமானால், அது அவசியமாகத் தேவைப்படும். அதைப் பிரித்துக் கொடுக்க இய லாது. ஆனால் இவைகளையெல்லாம் தாண்டி, அரசுக்கும்,

அரசின் மற்ற பணிகளுக்கும் பயன்படாத நிலையில் எங்காவது இருந்தால், அவற்றை அறிந்து, ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த் தப்பட்டவர்களுக்கு, பழங்குடி மக்களுக்கு அல்லது வரையறுக்கப் பட்ட பட்டியலின்படியோ தரமுடியும் என்ற நிலை ஏற்படு மானால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆராய்ந்து அறிந்து அவற்றை ஒதுக்குகிறார்கள்.

அடுத்து அந்தப் பணியாளர்கள் தற்காலிகமாகத்தான் நிய மிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வேலை தற்காலிகமான வேலை என்ற காரணத்தால்தான், அவர்களோடு உடன்பாடு செய்து கொள்ளும்போதே தற்காலிக வேலைதான், குறிப்பிட்ட அளவுக்கு வேலை முடிந்ததற்குப் பிறகு, ஒரு திங்கள் முன் நோட்டீஸின் அடிப்படையில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படலாம் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது அந்தப் பணி முடிந்து விட்டது என்றாலும் கூட, மேலும் சிலபல பணிகளை அவர்கள் மேற் கொள்ள முடியும் என்ற வகையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பணிகள் எல்லாம் தற்காலிகமாகத்தான் இப்போது இருக்கிறது. நிரந்தரமாக ஆக்கப்படுவதற்கு என்ன செய்யலாம் என்பதையும் யோசிக்கலாம். நிரந்தரமாக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கையை அவர்களும் வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு.க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த நில உடைமை மேம்பாடு திட்டம் ஏற்கெனவே செட்டில் மெண்ட் நேரத்திலேயே அது சரியாக நடைபெறவில்லை. அதற்குப் பின்னாலே outside the scope of the Act என்று வந்தபோது அதிகாரிகள் சென்று பட்டா வழங்குகிற நிலைமை இருந்தது. இப்போது யு.டி.ஆர். ஸ்கீமிலே அந்த சிக்கல்களை எல்லாம் போக்கி, ஸ்தலத்திலேயே சென்று விசாரித்து, சரியான நில உடைமையாளர்களைக்கண்டுபிடித்து, அவர்களுக்கு பட்டா கொடுக் கின்ற நிலைமையிலே, அந்த பழைய செட்டில்மெண்ட் சிஸ்டத் திலே பல இடங்களில் உண்மை நிலைக்கு மாறாக தவறாகப் பட்டாக்களை வழங்கியதன் காரணமாக பல வழக்குகள் நீதி மன்றத்திற்கு சென்றிருக்கிறதால், அப்படியே தடைபட்டு நிற்பது குறித்து அரசினுடைய கவனத்திற்கு தகவல்கள் வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதை தீர்ப்பதற்கு அல்லது மீண்டும் அதை பரிசீலனை செய்வதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது? இந்தத் திட்டம் நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய முழு விவரக் குறிப்பு என்னிடத் திலே இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை வைத்து, ஆராய்ந்து பார்த்து, அதிலே சிக்கல்கள் இருக்குமானால் தீர்க்கப்படுவதற்கும், எடுக்கக்கூடிய நடவடிக்கை களை எடுப்பதற்கும் அரசு முயற்சி எடுக்கும்.



திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உடைமை மேம்பாடுத் திட்டத்தில் வழங்குகிற பட்டாக்களுக்கு ஏற்படும் செலவுத் தொகை, பட்டாக்களை பெறுபவர்களிடமிருந்து எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது? அதிலே ஏதாவது சலுகை தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. வி. பி. சிந்தன்: அவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்குவது சம்பந்தமாக, நான் குடியிருப்பு மனைகளை மட்டும் குறிப்பிடவில்லை, நகர்ப்புறங்களில் உள்ள குடியிருப்புகளுக்கு பட்டா வழங்குவது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது கொள்கை இருக்கிறதா? 10 ஆண்டுகளாக, 15 ஆண்டுகளாக குடியிருந்தும் இன்னும் பட்டா வழங்கப்படாத காரணத்தாலே, குடிநீர் வசதி, தெரு விளக்குகள் வசதி போன்றவற்றை நகரசபை செய்து கொடுப்பதில்லை. தெருவை சுத்தம் செய்வதற்கும் கூட நடவடிக்கை எடுப்பதில்லை. கேட்டால் பிரைவேட் லேண்ட் என்று சொல்லுகிறார்கள். அதுகுறித்து அமைச்சருக்கு ஏதாவது தெரியுமா? அதைத் தீர்ப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கூடுமானவரையில் சென்னை, மதுரை, திருச்சி போன்ற பெரு நகரங்களில் இருக்கிற புறம்போக்கு நிலங்கள் அரசுக்கும், அரசு சார்பான பொது நிறுவனங்களுக்கும், மற்றவைகளுக்கும் சொந்த மாக இருப்பதன் காரணமாக அதில் அவர்களுக்கு பட்டா வழங்கு கிற முயற்சிகளை மேற்கொள்வதில்லை. சிறு ஊர்களில், கிராமப் புறங்களில் அவைகள் இருக்கும்போதுதான் நாம் அதை அதிகமாக கவனிக்கிறோம். ஆனால் நகர்ப்புறங்களில் சேரிப்பகுதிகள், மற்றவைகள் என்று வருகிறபோது அந்தச் சேரிப் பகுதிகளில் மாநகராட்சிக்கோ, அல்லது அரசுக்கோ அவை சொந்தமாக இருக்கு மானால், வேறுவகைக்கு பயன்படாத சூழ்நிலை ஏற்படுமானால், அதில் வீடுகளைக் கட்டி குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக தரவும், அந்த வீட்டை வாடகைக்குத் தரவும் அல்லது அவர் களுக்கே உடைமையாக்குகிற முறையையோ மேற்கொள்வதற்கு முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். சிலபல இடங் களில் அந்த இடங்கள் தனியார் இடங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் நாம் போக முடியாத அளவிற்கு இருக் கிற காரணத்தால் அவற்றை எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதவர்களாக இருக்கிறோம். ஆகவேதான் நகர்ப் புற நிலக்கட்டுப்பாட்டுச் சட்டங்கள் எல்லாம் இயற்றி அதன் மூலம் என்ன செய்யலாம் என்று பார்த்து, அதை கையகப்படுத்தி வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்றவை களுக்கு தரவேண்டியதாக இருக்கிறது. தனியார் வைத்திருக்கி...

நிலங்களைப் பொறுத்தவரையில், அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

திரு. சு.பாலன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 30–11–85 வரையில் கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு புறம்போக்கு நிலத்தை 50 லட்சம் பேர்களுக்கு கொடுத்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி புறம் போக்கு நிலங்களை ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்கு ஆர்ஜிதம் செய்தபோது இனாமாகக் கொடுத்தார்களா, அல்லது அதற்கான கிரயத்தை அரசு பெற்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சாதாரணமாக கிராமங்களிலும், மற்றவைகளிலும் இருக்கிற ஏழை எளியவர்களுக்கு 3 சென்ட், 2 சென்ட் என்று இலவசமாகத்தான் தருகிறோம். நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையில் பெரும்பாலும் தனிப்பட்டவர்களுக்குத் தராமல், குடிசை மாற்று வாரியம் போன்றவைகளுக்குத் தந்து அதன் மூலம் அவர்களுக்குத் தருகிற முயற்சியைத் தான் மேற்கொண்டிருக்கிறோம். தனிப்பட்டவர்களுக்கு அசைன்மெண்ட் என்று மார்க்கெட் ரேட்டை விட 2 பங்கு, 3 பங்கு 4 பங்கு வைத்து தருகிறோம். ஏழை எளியவர்களைப் பொறுத்தவரையில் இப்படி இல்லை. குடிசை மாற்று வாரியத்திற்குத்தான் மொத்தமாக தருகிறோம்.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அரசுக்குச் சொந்தமான பல்வேறு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கிற பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் பட்டா இல்லாமல் குடியிருக்கிறார்கள். ஆகவே, அரசு இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கிற அனைவருக்கும் மிகக்குறுகிய காலத்தில் பட்டா வழங்க விசேஷ ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்ற முயற்சிகள் தான் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நான் முன்பே சொன்னதைப்போல அரசு பணிகளுக்கோ, பொதுப் பணிகளுக்கோ பயன்படாத நிலங்களை அங்கே இருக்கிற நிலையில் நாம் பிரித்துத் தருகிறோம். அதற்கு பட்டா செய்து தருகிறோம். சிலபல இடங்களில் ஆதிதிராவிட மக்களுக்கும், மற்ற ஏழை மக்களுக்கும் வீடுகள் கட்ட வேண்டுமென்று வருகிறபோது நிலமே கூட இல்லாமல் இருக்கிறது. அந்த இடங்களில் நாம் பிறருடைய நிலத்தை விலை கொடுத்து வாங்கி, கையகப்படுத்தி அதற்கு பிறகு பட்டா போட்டு தருகிற அளவிற்கு இருக்கிறோம். இந்த முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆங்காங்கு



இருக்கிற சூழ்நிலைகளைப் பொறுத்து, சில இடங்களில் காலத் தாழ்வு ஏற்படுகிறது. சிலபேர் வழக்கு மன்றத்திற்கு போய் விடுவதன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கெங்கு சாத்தியமானதாக அமைகிறதோ அங்கெல்லாம் முறைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியின்போது தனியார்களிடமுள்ள கண்மாய்களை அரசுக்கு ஒப்படைக்க வேண்டுமென்ற சட்டத்தை நிறைவேற்றி, அந்தச் சட்டத்தின் அடிப்படையில் பலபேர் மனமுவந்து அந்தக் கண்மாய்களை அரசிடம் ஒப்படைத்தார்கள். அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் வசிக்கக் கூடிய மக்களுக்கு தொந்தரவு கொடுக்கிற அளவிற்கு சில அரசியல் கட்சிகள் புகுந்தன. 1972, 1973, 1974 ஆம் ஆண்டுகளில் அவைகளை தனியார்களுக்கு பட்டா கொடுத்ததன் காரணமாக அந்த மக்களுடைய மாடு, கன்றுகளை விட முடியவில்லை. தண்ணீர் தேக்கி வைக்கவும் முடியவில்லை. அப்படி இருக்கிற பட்டாக்களை தனியாக அதிகாரிகளை வைத்தாவது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து கேன்சல் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அந்த விவரங்கள், என்ன நிலைமையில் இருக்கின்றன, என்ன என்பதுபற்றி எனக்குத் தெரியாது என்றாலும் பொதுவாக அரசாங்கத்தினுடைய கொள்கையும் பொதுவாகச் சொல்லப்படுவதும் அப்படி கண்மாய்கள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றை எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியார் ஆக்கிரமிக்கக்கூடாது என்றும் அப்படி அதை ஆக்கிரமித்துக்கொண்டு பலபேர்கள் தாங்களே அனுபவித்து வருகிற சூழ்நிலை ஊர் மக்களுக்கு கேடாக அமைகிறது என்றும் ஆங்காங்கு புகார்கள் வருகின்றன, மேலும் சிலபல இடங்களில் இவர்களே முயற்சி செய்து ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் ஆகியவற்றைத் திருத்தி மேடாகவும் ஆக்க முயற்சி செய்து ஆக்கிரமிப்பு செய்வதற்கு முயற்சி செய்கிறார்கள். அதற்கெல்லாம் இடம் தரவேண்டாம். அப்படியிருந்தாலும் அவையெல்லாம் பொது மக்களின் சொத்தாக பயன்படுத்தப்பட வேண்டும், பொது மக்களுக்குப் பயன்படும் வகையில்தான் அமையவேண்டும். நீர்ப்பாசனத்திற்குத்தான் அவற்றைப் பயன்படுத்துகிற அளவிற்கு வரவேண்டும். அதில் வருகிற வாய்க்கால்கள் சரியாக இல்லாவிட்டால் வாய்க்கால்களை தூர் வாரி, வெட்டி ஏரி அல்லது கண்மாய்க்கு கொண்டுவந்து அதன்மூலம் நீர்தேக்கம் போன்று செய்தால் பாசனத்திற்கு பயன்படாவிட்டாலும், ஊரிலுள்ள கிணறுகளுக்கு நீர் ஊறும், குடிநீருக்கும் அது தேவைப்படுகிறது என்ற காரணத்தால் இப்போது எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இதைப்பொறுத்து அறிவுரை கூறியிருக்கிறோம்.

திரு. சி. பழனிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் பழைய நிலங்களை அளக்காமல் ஏழை எளிய விவசாயிகளுடைய நிலங்களை அவர்கள் பட்டா செய்து கொடுத்துள்ளார்கள். எனது ஆத்தூர் வட்டம்கூட அதுபோன்ற முறைகேடுகளுக்கு ஆளாகி, ஒருவருடைய நிலத்தை வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளதோடு ஓடைப் புறம்போக்கு நிலங்களை இருபது ஆண்டுகளாக பயிர் செய்து வந்தும், பயிர் செய்ய மின் இணைப்பு பெற்றும், இன்னும் பட்டா பலருக்கு வழங்கப்படவில்லை. ஒரு ஹெக்டேருக்கு இருபது ரூபாய் வசூல் செய்து வருகிறார்கள். நிலங்களை அளக்காமலே, முறையாக செயல்படுத்தப்படாமல் ஹெக்டேருக்கு இருபது ரூபாய் வசூல் செய்வது எவ்வாறு பொருந்தும்? ஆகவே அப்படி இருபது ரூபாய் என வசூல் செய்வது தற்போதைய வறட்சியின் காரணமாக தள்ளிப்போடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அளவைத் துறை என்பது நிலத்தை அளக்க வேண்டும் என்பதுதான் முறை. அளந்து பார்த்துத்தான் எல்லாவற்றையும் செய்யவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று அப்படி அளக்காமல் கொடுக்கிறார்கள் என்றால், அது அடிப்படையிலேயே தவறாகத்தான் அமைகிறது, அப்படிப்பட்ட குறிப்புகள் இருக்குமானால், அதைத் தனியாகத் தருவார்களானால் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

### தண்ணீர் தீர்வை சீர்மைப்பு.

3—(*வினா எண். 3555) திரு செ. செம்மலை: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்ணீர் தீர்வை சீரமைப்பு கமிட்டியினுடைய அறிக்கை அரசுக்கு கிடைத்து விட்டதா?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ): இம்மாநிலத்திலுள்ள தண்ணீர் தீர்வை வீத அமைப்பு முழுவதையும் சீரமைப்பது பற்றி அரசு அமைத்த குழு தனது அறிக்கையை 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அரசிடம் கொடுத்துள்ளது. அவ்வறிக்கை அரசு உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்திலும் பின்னர் அமைச்சரவை உட்குழு கூட்டத்திலும் பரிசீலனை செய்யப்பட்டு அமைச்சரவையின் முடிவிற்காக வைக்கப்பட்டது. குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு அதாவது, கடந்த 6 ஆண்டு காலத்திற்குள் அரசு விவசாயிகளுக்கு அளித்துள்ள பல சலுகைகளையும் அதனால் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கருத்திற்கொண்டு முந்தைய பாசன கட்டணச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை மாற்றியமைத்து தக்க பரிந்துரையுடன் மூன்று மாதங்



களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்கும்படி திரு. ராம்சந்தர், இ.ஆ.ப., அவர்களைத் தலைவராகக் கொண்டு புதிய குழு ஒன்றை அமைத்து அரசாணை (நிலை) எண் 271, வருவாய், நாள் 27-2-85 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அக்குழுவின் இறுதி அறிக்கை பெறப்பட்ட பின்பு குழுவின் பரிந்துரைகள் மீது முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 81, 82, 83 ஆகியவை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

### சானார்பட்டி யூனியன் கல்லுப்பட்டியில் சத்துணவுக்கூடம்.

90—(*வினா எண். 1662) திரு மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன் கல்லுப்பட்டி கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு ஆர். சௌந்திரராஜன்: நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன் கல்லுப்பட்டி கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க, தனது முன் மொழிவினை அனுப்பி வைக்குமாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரின் முன்மொழிவு கிடைக்கப் பெற்றதும், அதனைப் பரிசீலித்து அரசு ஆவன செய்யும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக சத்துணவு மையங்கள் ஆரம்பிக்கப்படுகிற போது அது அரசாங்க அளவிற்கு வந்துதான் ஆரம்பிக்கிறார்கள். இக்கல்வி ஆண்டில் புதிதாக சில பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் சத்துணவுக் கூடங்களைத் திறப்பதில், அரசுக்கு வந்துதான் திறப்பது என்றால் மதிய உணவு கிடைக்காமல் பல குழந்தைகள் சிரமப்படுகிறார்கள். எனவே, புதிதாக பள்ளிக்கூடங்கள் திறக்கும்போது in anticipation of sanction of the Government மதிய உணவுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்க அரசாங்கம் முன்வருமா?

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பள்ளிகள் துவங்கப்படுகின்றபோது ஆங்காங்கே சத்துணவுக் கூடங்களை உடனடியாகத் துவங்குகின்ற அதிகாரங்கள் அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் ஆரம்பித்துவிட்டு, இங்கே அனுப்பினால் அதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**திரு. மு. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் சத்துணவுக் கூடங்கள் இல்லாததால் உண்மையிலேயே பயனடையக்கூடிய மாணவர்கள், குழந்தைகள் பயனடைய முடியாத நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, சத்துணவுக் கூடங்கள் துவக்கப்படாத இடங்களில் உடனடியாக இந்த ஆண்டாவது துவக்குவதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சத்துணவு மையம் ஆரம்பிப்பதற்கு, 2 வயது முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 70 லிருந்து 150 வரை இருக்குமானால் தனியாகவே அவர்களுக்கு ஒரு மையம் ஏற்படுத்தப்படும். 30 முதல் 50 வரை இருக்குமானால், ஒரு உப மையம் ஏற்படுத்தப்படும். அப்போது அருகாமையில் உள்ள மையத்திலிருந்து உணவைச் சமைத்து, அங்கிருந்து ஒரு ஆள் மூலம் கொண்டு வந்து அவர்களுக்குப் பரிமாறப்படுகிறது. ஒரு குழந்தைக்கு சாதாரணமாக 411 கலோரி ஊட்டச் சத்து இருக்க வேண்டும் என்பதுதான் எண்ணம். அப்படி எந்த இடங்களிலாவது 70 முதல் 150 வரை குழந்தைகள் இருந்து, பெற முடியாத நிலை இருக்குமானால், அவர்களுக்குப் புதிய மையம் ஆரம்பிப்பதற்கான வழிவகையை அரசு செய்திருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படி விடுபட்ட இடங்களில் மையங்கள் ஆரம்பித்து அந்தக் குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சத்துணவுக் கூடங்கள் ஏற்படுத்துவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து ஒரு கேள்வி. துவக்குவதற்கான எல்லாத் தகுதியும் இருந்தும்கூட, உதாரணத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதிக்கு வந்து, ஒரு ஊரிலே சத்துணவுக் கூடம் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லிவிட்டு வந்தும்கூட, பல்வேறு காரணங்களால் ஆரம்பிக்கப்படாத நிலை ஏற்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் போதிய அக்கறை காட்டவில்லை என்ற கருத்து அந்தப் பகுதி மக்களிடையே நிலவுகிறது. சத்துணவுக் கூடம் என்பது நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டம். ஆனால், இந்த சத்துணவுத் திட்டத்திலே பல்வேறு தவறுகள் அடிமட்டத்திலே ஏற்படுகின்ற காரணத்தினாலே, எதிர்காலத்திலே அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாத வகையிலே, நல்ல முறையில் கண்காணிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னதுபோல் புதிதாக சத்துணவு மையம் ஆரம்பிப்பதற்கு 70 முதல் 150 வரை அங்கு



குழந்தைகள் இருக்க வேண்டும். அந்தக் குழந்தைகளுடைய எண்ணிக்கை, அந்தக் குழந்தைகளுடைய பெயர்கள், தகுதி ஆகியவற்றை அங்கிருந்து கணக்கெடுத்து அனுப்ப வேண்டிய பணிகளில் சில நேரங்களில் தொய்வு ஏற்படுகின்ற காரணத்தினால், அந்தக் குழந்தைகள் அந்தப் பலனைப் பெற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால், அதே நேரத்தில் உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய இடத்திலிருந்து முழுத் தகவல் வரவில்லை. ஆயினும், அங்குள்ள சத்துணவுக்கூட நேர்முக உதவியாளர் அவர்களிடம் சொல்லி, அதற்குரிய தேவையான தகவல்கள் பெறப்பட்டிருக்கின்றன. விரைவில் அந்த இடத்திலே சத்துணவுக் கூடத்தைத் திறப்பதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்துணவுக் கூடங்களிலே தவறுகள் நடைபெறுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இது ஒரு மிகப் பெரிய திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக 83 இலட்சம் குழந்தைகள் சத்துணவைச் சாப்பிடுகிறார்கள். 83 இலட்சம் குழந்தைகளுக்கு உணவு அளிக்கின்ற இடத்தில் எங்காவது ஒன்றிரண்டு இடங்களில் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே, இதை அரசு மட்டும் கண்காணிக்க வேண்டுமென்று கருதாமல், ஆங்காங்கு இருக்கின்ற பொது மக்களும் அதைக் கவனிப்பதற்கு முன்வருவார்களானால், இந்தத் திட்டத்தைச் செம்மையாக நடத்த வாய்ப்பிருக்கும். மேலும் ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் பெண்களைக் கொண்ட மேற்பார்வை குழுவை அமைப்பதற்கு, இந்த அரசு முயன்று வருகிறது. விரைவில் அந்தப் பணியைச் செயல்படுத்தினால், இந்தத் திட்டம் இன்னும் சிறப்பாக நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

**திரு. மு. இராமநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கட்டப்பட்டிருக்கின்ற சத்துணவுக் கூடங்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன, சிறு குழந்தைகள் சுகாதார நிலையோடு உள்ள கூடங்களில் உணவு உண்டால்தான் அவர்கள் ஆரோக்கியமாக இருக்க முடியும். அதற்கு அந்த இடம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்பது ரொம்ப அவசியம். பல இடங்களில் கட்டப்பட்டுள்ள சத்துணவுக் கூடங்களைச் சுற்றிலும், சுகாதாரத்திற்கு கேடான முறையில் சாக்கடைத் தண்ணீர் தேங்கியிருப்பதாலும், அல்லது கட்டப்பட்டிருக்கின்ற இடம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாலும், இரவு நேரங்களில் அந்த இடங்களைத் தவறான முறையில் சமூக விரோதிகள் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை இருப்பதாலும், பல இடங்களில் அவற்றை கழிப்பிடமாக உபயோகித்து வருவதாலும். பாமர மக்களுடைய குழந்தைகள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசு ஆராய்ந்து, இனிமேல் கட்டக்கூடிய சத்துணவுக் கூடங்களைப் பாதுகாப்பான முறையிலே, பிறர் வந்து அதிலே நுழைந்து அசிங்கமோ அல்லது அசுத்தமோ செய்ய முடியாத அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இருக்கின்ற கூடங்களில் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் தடுப்பதற்கு அதற்கு என்று ஒரு பாதுகாப்பு காவலாளியை நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்.சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திற்கும் ஒவ்வொரு காவலாளி நியமிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. மேலும் சுற்றுப்புறங்கள் சுத்தமாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். சுற்றுப்புறங்களை சுத்த மாக வைத்துக்கொள்ள, அங்கேயிருக்கிற பொதுமக்கள் தான் அதற்கு ஒத்துழைக்க வேண்டுமே தவிர, அதையும் நாமே போய்ப் பார்த்துக் கொண்டிருப்பது என்பது சுலபம் அல்ல. அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்கு கூடிய வரையில் அரசு அறிவுறுத்தி வருகிறது. மேலும் சுற்றுப்புறங்களில் வேலியிட்டு அதைப் பாது காக்கலாமா என்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு இருக்கின்றன. சில இடங்களில் அங்கே இருக்கின்ற கிராம மக்களே உரிய நடவடிக்கை மேற்கொண்டு, அவர்களே, வேலிப் பயிர்களை நட்டுத் தந்து, அதன்மூலம் சுற்றுப்புறங்கள் பரா மரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்ற நிகழ்ச்சி நகர்ப்புறங்களில்தான் அதிகமாக இருக்கின்றன. நகர்ப்புறங்களில் அப்படிப்பட்ட தவறுகளைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமீபத்திலே நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் கூட இது பற்றி பேசப்பட்டு, அதற்குரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

### சத்துணவுத் திட்டத்திற்குத் தனித் துறை,

91—(*வினா எண். 3739) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்கு தனித்துறை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டத்தில் பணி புரியும் எஸ். எஸ்.எல்.சி., பி.ஏ., எம்.ஏ, படித்துள்ள தகுதியுள்ள அமைப் பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கி பணியில் அமர்த்தும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி தக்க சமயத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் சமூகநலத்துறையின் மூல மாகவும், மாநகராட்சியின் மூலமாகவும் இந்தச் சத்துணவு மையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால், ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டால், நாங்கள் இரண்டு சாராரையும் அணுக வேண்டியிருக்கிறது. இது சமூக நலத் துறைக்குச் சொந்தமா அல்லது மாநகராட்சிக்குச் சொந்தமா என்ற விவரம் தெரியாத காரணத்தால், இது சத்துணவு என்ற நேரத்தில், நாங்கள் ஒரு துறையை அணுகிச் செல்வதற்கு வாய்ப்பாக

இருக்கும் என்ற காரணத்தால் மாநகராட்சி மூலமாகவும், சமூக
நலத்துறையின் மூலமாகவும் நடத்துப்படுகிற இந்தச் சத்துணவுக்
கூடங்களை ஒரே துறையின் வாயிலாக கவனித்தால் மேலும் அது
சிறப்பாக இருக்கும் என்ற காரணத்தால், அதற்கு உரிய முடிவை
வெகு விரைவாக எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே'
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையை வழங்கி
யிருக்கிறார்கள். தற்போது குழந்தைகள் நல மையங்கள்
மாநகராட்சியிலே சமூக நலத்துறையினால் நிர்வகிக்கப்பட்டு
வருகின்றன. அதேபோல் பள்ளி மையங்கள் நம்முடைய மாநக
ராட்சியினுடைய கல்வித்துறையினால் நிர்வகிக்கப்பட்டு வரு
கின்றன. இரண்டு பேரும் செவ்வனே அந்தப் பணிகளைச்
செய்தாலும், சில இடங்களில் குறைகள் காணப்படுகின்றன.
அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் தான் செய்ய வேண்டும்
என்கிற போது சில நேரங்களிலே தொய்வு ஏற்பட்டு விடுகிறது.
ஆகவேதான் அதற்கு என்று ஒரு தனித் துறையை ஏற்படுத்த
வேண்டும் என்ற பரிசீலனை தற்போது அரசினுடைய கவனத்
திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே,
ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அதிகபட்சம் இத்தனை சத்துணவு
மையங்கள்தான் இருக்கலாம் என்ற உச்சவரம்பு ஏதேனும்
இருக்கிறதா ? என்னுடைய தொகுதியில் கடியலூர் என்ற
இடத்தில் ஒரு சத்துணவுக் கூடத்தை கட்டி பல மாதங்கள்
ஆகியும் இன்னும் அது திறக்கப்படாமல் இருக்கின்றது. அதைப்
பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால், அவர்கள்,
டி.டி.ஓ. வைப் பாருங்கள் என்றும், டி.டி.ஓ. வைக் கேட்டால்,
அவர்கள், பி.டி.ஓ. வைப் பாருங்கள் என்றும் சொல்கிறார்கள்.
இந்த மூவரையும் சேர்த்துக் கேட்டால், அரசாங்கத்திற்குச்
சென்று இருக்கிறது, அங்கேயிருந்து அனுமதி கிடைக்க வேண்டும்
என்று சொல்கிறார்கள். ஆகவே யாரைப் பார்த்துக் கேட்பது
என்பது தெரியவில்லை. எனவே, இதைப்பற்றி அரசாங்கம்
நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட ஒரு ஊரைப்பற்றிக்
கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால், இதைப்பற்றி விவரம்
கொடுக்கலாம்.

திரு. சைதை சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தச் சத்துணவு மையங்களில் பணியாற்றுகின்ற, தகுதி உள்ளவர்
களுக்கு வேலைவாய்ப்பு நிரந்தரம் ஆக்கப்படுமா என்கிற கேள்வி
யினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழ்ந்து பரிசிலனை
செய்து, அவர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை
எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

128-378—3

[1986 சனவரி 22

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த ஐயப்பாடு வந்திருக்க வேண்டிய தேவையில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தச் சத்துணவுத் திட்டம், இந்தச் சமுதாயத்தில் இருந்துகொண்டேதான் இருக்கும். ஆகவே அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள், தொடர்ந்து பணியாற்றிக் கொண்டுதான் இருப்பார்கள். ஆகவே எந்தவிதமான ஐயப்பாடும் தேவையில்லை.

(முற்பகல் 9–40)

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தற்போது சத்துணவு மையங்களில் உள்ள அமைப்பாளர்கள் சில இடங்களில் தவறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டு, இருப்பதை நாம் பத்திரிகையிலே படித்திருக்கிறோம். இப்படி அவர்கள் தவறு செய்வதற்கு காரணம் அவர்களுக்கு தற்போது கொடுக்கின்ற சம்பளம் குறைவாக இருப்பதால் அவர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் தோன்றுகிறது. ஆகவே இப்போது தரப்படுகிற ஊதியத்தை உயர்த்தி அதிகமாக சம்பளம் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் பகுதி நேரப் பணியாளர்களாக தற்போது பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில்தான், அவர்களுக்கு இன்றைக்கு நாம் ஊதியத்தை தந்து கொண்டு இருக்கிறோம். மேலும் கூடியவரையில் சொந்த ஊரிலேயே இருப்பவர்கள்தான் இதில் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வீட்டிலே இருந்து கொண்டே பணியாற்றுகின்ற நிலையில் இன்றைக்கு பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே தவறு செய்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். சம்பளம் மட்டுமே தவறு செய்வதற்கு காரணம் அல்ல. தவறு செய்யவேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் எந்தச் சம்பளத்தில் எங்கு இருந்தாலும் தவறு செய்து கொண்டு தான் இருப்பார்கள். 'திருடுகிறவனே பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்பதைப்போல் அவர்களே, திருந்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும். அவரே திருந்த வேண்டும். பொதுமக்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிற குழந்தைகளுக்கு ஹெல்த் கார்டு சிஸ்டம் என்ற முறையில் சுகாதார அடிப்படையில் அவர்களுக்கு என்ன என்ன நோய்கள் இருக்கின்றன, நோய் வளர்ச்சியுற்று இருக்கிறதா, குறைந்து இருக்கிறதா, என்பது போன்ற விவரங்கள் அடங்கிய சுகாதார அட்டைகள் வழங்கும் திட்டத்தில் குழந்தைகளின் படத்தையும் அதில் ஒட்ட அரசு நடவடிக்கை எடுத்து வழங்குமா என அறிய விரும்புகிறேன்.



1986 சனவரி 22]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்த் கார்டு அதாவது குழந்தைகளுடைய உடல் நலம் பற்றி தெரிவிக்கின்ற அட்டை இப்போது ஒவ்வொரு மையத்திலும் வைக்கப்பட்டு இருக்கிறது. 2 . வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளை 6 மாதத்திற்கு ஒரு முறை மருத்துவர் பரிசோதனை செய்து அந்த குழந்தையின் எடை உயர்ந்து இருக்கிறதா, அந்த குழந்தையின் நோய்க்கு எந்த மருந்துகொடுக்கப்பட்டது, நோய் குறைந்து இருக்கிறதா, என்பன போன்ற விவரங்கள் அடங்கிய அட்டை வைக்கப்பட்டு இருக்கிறது. அதில் படம் ஒட்டுவது என்பது அவ்வளவு சுலபமாக செய்யக் கூடிய காரியம் அல்ல. அந்த அந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு படம் ஒட்டுவதற்கு முன்வருவார்களானால் இந்தத் துறை அதை வரவேற்கத் தயாராக இருக்கிறது.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுடைய எண்ணிக்கையை வைத்து சத்துணவு மையம் ஆரம்பிக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு சில கிராமங்களில் இயற்கையினுடைய ஆறு, ஏரி இது மாதிரி இயற்கையால் சூழப்பட்டு அங்கே குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அந்த குழந்தைகள் அடுத்த சத்துணவு மையத்திற்குச் சென்று உணவு அருந்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நல்ல திட்டத்தினுடைய பலனைப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதை இந்த அரசு கருத்தில் கொண்டு அந்த மாதிரியான இயற்கையினுடைய சூழலால் அமையப்பட்ட குழந்தைகள் குறைந்த அளவு எண்ணிக்கையில் இருந்தாலும் அந்த குழந்தைகளுக்கு சத்துணவு கிடைக்கும் வகையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் குழந்தைகளும் நல்ல உணவு ஒரு வேளை பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இறைவனால் மறுக்கப்பட்ட உணவை ஆளுகின்றவர்கள் தரவேண்டும் என்ற அந்த உணர்வில் தான் இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியது போல் இயற்கைச் சூழலால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பற்றி தகவலைத் தருவார்களானால் அவர்களுக்கு உணவு கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மூலம் நடைபெறுகின்ற பள்ளிகளில் சத்துணவு ஆசிரியர்களைப் போடும் உரிமை தனியாருக்கு

கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி தனியாருக்கு கொடுத்து இருப்பதன் மூலம் அந்த ஆசிரியர்களை அவர்கள் உடனடியாக நீக்குவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. எனவே அரசு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அந்தப் பள்ளிகளில் சத்துணவு ஆசிரியர்களை பணிபுரிய ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தனியார் பள்ளிகளில் பணியாற்றுவதற்கு அவர்கள் யாராவது 5 பேர் பட்டியலை தருகிறார்கள். அந்த பட்டியலிலிருந்து ஒருவரை நாம் தான் தெரிந்தெடுத்து நியமிக்கிறோம். அப்படி நியமிப்பவர்களில் யாராவது தவறு செய்வார்களானால் அவர்களை நீக்கிவிட்டு மற்றவர்களைப் போடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோவை நகரில் குடிசை மாற்று வாரிய வீடுகள்.

92—(*வினா எண். 2090) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரைச் சுற்றியுள்ள குடிசைப் பகுதிகளை அகற்றி வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள கெம்பட்டி காலனி குடிசைப்பகுதியில் 756 குடியிருப்புகள் ரூ. 128.43 இலட்சங்கள் செலவில் அட்கோ உடன் உதவியுடன் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலம் மருதமலை கோயில் தேவஸ்தானத்திற்கு சொந்தமானது. இந்நிலத்தை குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு இந்துமத அறநிலையத்துறை நிலக்கிரயமாக சந்தை மதிப்பைக் கோரி உள்ளது. ஆகையால் குடிசைப்பகுதி மாற்று வாரியம் சந்தை விலையில் மேற்குறிப்பிட்ட நிலத்தைப் பெற்றுக் கொள்ள ஒப்புதல் அளித்து அந்நிலத்தை குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கக் கோரியுள்ளது. இத்திட்டத்திற்கான முழுசெயற்குறிப்பும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து அரசுக்கு வரப்பெறவில்லை. அச்செயற்குறிப்பு பெறப்பட்ட பின்னர் இது பற்றி அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கெம்பட்டி பகுதியிலே இருக்கின்ற குடிசைகளை மட்டும் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை





எடுக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பைத் தெரிவித்தார்கள். நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் என்னுடைய மேற்குத் தொகுதி முழுமையாக குடிசைகள் சூழ்ந்த பகுதியாக இருக்கின்றது. கெம்பட்டி காலனி பகுதியினுடைய இன்னொரு பகுதி பாலையன் தோட்டம் உப்புமண்டி, இன்னொரு பகுதி லிங்கே கவுடர் தோட்டம், இது அன்னியில் வின்சென்ட் ரோடு மஜீத் காலனி பகுதி, செல்வ சிந்தாமணிக் குளம் ஏரிமேடு பகுதி, கண்டக்காமுத்தூர் ரோடு பகுதி, குமாரசாமிக் குளம் என்ற முத்தண்ணங்குளம் ஏரிமேடு, பெரிய குளம் ஏரிக்கரை, சி.எம்.சி. காலனி என முழுமையாக என்னுடைய தொகுதியே குடிசைகள் சூழ்ந்த பகுதியாக இருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மு. இராமநாதன் : தங்கள் மூலம் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, எல்லோருக்கும் வீடு கட்டுகின்ற ஒரு திட்டத்தை நம்முடைய அரசு அறிவித்து இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை தந்து, ஏழை மக்கள் நரகத்தில் வாழ்வது போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அந்தக் குடிசைப் பகுதிகளிலே, அமைச்சர் அவர்கள் அதைப் போக்க நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தைப் பொறுத்தவரையில் 1981 கணக்கின் அடிப்படையில் 80 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 7,00,175 மக்கள் தொகையில் 10 சதவிகிதம் இன்றைக்கு குடிசைவாசிகள் கோவை நகரத்திலே இருக்கிறார்கள். அதிலே ஆரம்பக் கட்டமாக, நான் பதிலிலேயே சொன்ன பகுதியில், வீடு கட்டும் திட்டம் இப்போது ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. படிப்படியாக மற்ற இடங்களுடைய முக்கியத்துவத்தைப் பார்த்து, நிதிநிலையை மனதிலே கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மருதமலை கோயிலுக்குச் சொந்தமான இடம், குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் எடுப்பதற்கு முயற்சி எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லா வகையிலும், விவசாயத்திற்கும் பயன்படாமல் இருக்கிற செல்வ சிந்தாமணிக் குளம் ஏரிமேடு பகுதியை, இந்தத் திட்டத்தோடு இணைத்து எடுத்துக்கொண்டால், மேலும் வாய்ப்பாக இருக்கும். அரசு அதைப் பரிசீலிக்குமா, அதற்கு அமைச்சரவர்கள் முன்னுரிமை தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலம் தனியாருக்குச் சொந்தமானதா அல்லது அரசுக்குச் சொந்தமானதா என்ற விவரம் இல்லை,

(குறுக்கீடு) அரசு நிலமாக இருக்கின்றது என்று சொல்கின்ற காரணத்தினால், அதனுடைய தேவையை மனதிலே கொண்டு, அதை எடுத்துக் கொள்கிற முயற்சியில் அரசு முன்னுரிமை அளிக்கும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுவது தவிர, அவ்வாரியத்தின் மூலம் வேறு என்ன என்ன பணிகள் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே சொன்னது போல், 80 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. 80—இல், 21 குடிசைப் பகுகுகளிலே, அந்தப் பகுதியினுடைய முன்னேற்றத்தை மனதிலே கொண்டு, 49 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய், 1985-86-ல் நிதி ஒதுக்சப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே 6 இடங்களிலே இப்போது சாலை, மழை நீர் வடிகால் வசதி, குடிநீர், நடைபாதை அமைப்பதற்கு கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு செலவிடுவதற்கு அரசு முடிவு செய்து, வேலைகளும் துவங்கப்பட்டிருக்கின்றன.

### சென்னை குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகளில் திருமண மண்டபம்.

93—(* வினா எண். 3743) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் அனைத்து குடிசை பகுதி மாற்று வாரியக் குடியிருப்பு பகுதிகளில் காலியாக இருக்கும் இடங்களில் திருமண மண்டபங்களை கட்டி பொது மக்களுக்கு குறைந்த வாடகையில் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : 300 குடியிருப்புகளுக்கு/குடும்பங்களுக்கு மேலுள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் திட்டப் பகுதிகளில் அரசின் அனுமதியுடன் வாரியம் சமூகக் கூடங்கள் கட்டலாம் என்று ஏற்கனவே அரசு ஆணையிட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை முடிவிற்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் கோட்டூர்புரத்தில் 2500 குடியிருப்புகள் இருக்கின்றன. அங்கே திருமணக்கூடங்கள் இல்லை. அதுபோல் ராணி அண்ணா நகரில் திருமணக் கூடங்கள்



இல்லை. எனவே 300-க்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதிகளில், இந்த நிதியாண்டில் திருமணக்கூடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துதான் கேட்டாரோ என்று தெரியவில்லை. ராணி அண்ணா நகரில் கட்டுவதற்கு ஏற்கனவே திட்டம் இருக்கிறது. அவர் சொன்னபடி 300 குடும்பங்களுக்கு மேற்பட்ட பகுதிகளில், அதாவது எஸ்.எஸ்.எல்.சி. படித்து மேற்படிப்பான பி.ஏ. தொடர்வதைப் போல 300-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள இடங்களில், முன்னுரிமையளிக்கும் அடிப்படையில் கல்யாணக் கூடங்களை கட்டிக் கொண்டு வருகிறோம். மற்ற இடங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும், ஒரு இடத்திலே ஆரம்பத்திலே கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் இருக்கின்ற பகுதிகளில் காலியாக உள்ள இடங்களில் கடை வைப்பதற்கான அனுமதியை தனியாருக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த முறையை ரத்து செய்து வாரியமே அந்த இடங்களில், மக்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு, கடைகளை கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா? அப்படி இல்லையென்றால், அமைச்சர் அவர்கள் கடைகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய இந்த நல்ல யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. செ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் குறிப்பிடும்போது, ஒவ்வொரு தொகுதியிலும் குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களைக் கட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய மதுராந்தகம் தாலுக்காவில் இரண்டு தொகுதிகள் இருக்கின்றன. அந்த இரண்டு தொகுதிகளிலேயும் ஒரு வீடு கூட கட்டப்படவில்லை. அவ்வாறு கட்டுவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், சமூக நலக் கூடங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு சமூக நலக் கூடம் கட்டுவதாகச் சொன்னேன். குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களைப் பொறுத்தவரையில், சென்னையைச் சுற்றியுள்ள 40, 43 நகரங்களில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம்

வீடுகளைக் கட்ட விஸ்தரிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் படிப்படியாக மற்ற இடங்களுக்கும் விஸ்தரிப்பு செய்யப்படும்.

திருமதி பா. வளர்மதி : தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தால் அமைக்கப்படும் காலனிகளுக்கு, பள்ளிக்கூடங்கள், திருமணக்கூடங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை திட்டமிட்டு அமைப்பது போல, குடிசைமாற்று வாரியத்தினால் கட்டப்படும் வீடுகள் உள்ள பகுதிகளிலும் அதுமாதிரி, பள்ளிக்கூடங்கள், திருமணக் கூடங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றைக் கட்டுவதற்காக ஏதேனும் புதிய திட்டங்களை வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, சில இடங்களில் இப்போதும் அந்த அடிப்படையிலேதான் திட்டங்கள் போட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இதுவரை கட்டப்பட்ட குடியிருப்புகள் எவ்வளவு? இதற்காக அரசு செலவழித்த தொகை எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : 1970 ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரியம் துவக்கப்பட்டு, இப்போது 1985 ஆம் ஆண்டு வரை 45,980 வீடுகளைக் கட்டியிருக்கிறோம். செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 41,69,00,000 ஆகும்.

### தனியார் தொழிற்பயிற்சிப் பள்ளிகள்.

94— (*வினா எண். 3785) திரு. க. சோலைராசு : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் (I.T.I.) தொழிற்பயிற்சிப் பள்ளிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அரசு இவைகளுக்கு செய்யும் உதவிகள் என்ன?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: (அ) (1) நிரந்தர இருக்கைகள் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் .. .. .. 43—2,776

(2) தற்காலிக அங்கீகாரம் அளிக்கப் பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் .. 16—596



(ஆ) தனியார் தொழிற் பள்ளிகள் விதிகள்படி, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் அங்கீகாரத்தை முதலில் பெற்று பின்பு தேசிய வாழ்க்கைத் தொழில் பயிற்சிக் குழுமம் (என்.சி.வி.டி.) அங்கீகாரம் பெறும் தொழிற் பள்ளிகளுக்கு சில நெறிமுறைகளுக்கேற்ப கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப் படுகின்றன :—

(1) பராமரிப்பு மானியம்;

(2) கட்டிட மானியம்;

(3) தளவாடங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கான மானியம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொழிற்பயிற்சி பள்ளிகளை ஆரம்பிக்க எந்த விதிமுறை பின்பற்றப்படுகிறது? தனியார் தொழிற்பயிற்சி பள்ளிகளை ஏற்படுத்த முன்வராத பகுதிகளிலே, பிற்படுத்தப் பட்ட பகுதிகளிலே அரசின் சார்பாக தொழிற்பயிற்சி நிறுவனங் களை நிறுவ ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் தொழிற்பயிற்சிப் பள்ளிகளை உருவாக்குகின்றபோது முன் அனுமதி பெற்று ஆரம்பிப்பது இல்லை. அதிகாரிகளோடு பேசி வாய்மொழியாகக் கேட்டுவிட்டு துவங்கிவிடுகிறார்கள், அதற்குப் பின்னர், அங்கீகரிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். 3 ஆண்டுகளுக்குள்ளாக துறையின் விதிகளுக்கு உட்பட்டு அந்தத் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் இருக்குமானால் அவைகளுக்கு அங்கீகாரம் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அவை சரியாக இருக்கின்றனவா என்று பார்ப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே உள்ள ஐந்து பேர்களிலே தொழிற்பயிற்சி மையத்தினுடைய பிரின்சிபால் அல்லது துணை அலுவலர் ஒருவராக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தனியார் ஏற்படுத்தும் ஐ.டி.ஐ. பள்ளிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் கொடுக்கப் படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா? அந்தத் தனியார் பள்ளிகளிலே 18 சதவீதம் ஒதுக்கம் செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளினுடைய அடிப்படையிலே அந்தப் பள்ளிகள் இருந்தால் அரசு அங்கீகாரம் அளிக்கத் தயாராக இருக்கிறது. தவறாக துவக்கப்படுகிற நிலை இருந்தால் அரசாங்கம் அங்கீகாரம் அளிப்பதில்லை. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபற்றி அவர்களுக்கு அறிவுறுத்தப்படும்.

இலங்கை அகதிகளுக்கு தனிக் குழு.

95—(*வினா எண். 3938) திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

இலங்கை அகதிகளுக்கு செய்யப்படுகின்ற பொருளாதார உதவிகள் சரியான முறையில் அவர்களைச் சென்றடையவும் தொடர்ந்து அவர்களின் பொருளாதார நிலையினை கண்காணித்திடவும் அமைப்பு அல்லது குழு ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : இல்லை.

மீன்வள வளர்ச்சிக் கழகத்திற்கு புதிய மீன்பிடிக் கப்பல்.

96— (*வினா எண். 2970) திரு. எஸ். இராசாராமன் ; திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மீன்வள வளர்ச்சிக் கழகத்திற்கென புதிதாக மீன்பிடி கப்பல்கள் மற்றும் ட்ராலர்கள் வாங்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : ஆம். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கென புதிய நாவாய்கள் (Trawlers) வாங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன்வள வளர்ச்சிக் கழகத்தின் பயன்படுத்தப்படாத டிராலர்ஸ் எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி மீன் வளர்ச்சிக் கழகத்திற்காக புதிய நாவாய்கள் வாங்கும் செயற்குறிப்பு இருக்கிறதா, இல்லையா என்பதுதான். அதற்குத்தான் நான் விடையளித்து இருக்கிறேன்.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை நாவாய்கள் வாங்குவதற்கு செயற்குறிப்பு உள்ளது? மார்க்கட்டிங் யூனிட்டிலே வஞ்சிரமீனில் ஈல்பாறை மீனைக் கலப்படம் செய்கிறார்கள் என்ற புகார் பொதுமக்களிடமிருந்துவந்து கொண்டிருக்கிறது. அந்தக் கலப்படத்தைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் அரசுக்கு வருமானால் அரசு நடவடிக்கை எடுக்கும். சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிந்தால் அதுபற்றி எனக்கு அனுப்பினால்



நடவடிக்கை எடுக்க முடியும். நாவாயகள் வாங்குவதுபற்றிக் கேட்டார்கள். இரண்டு அவுட்ரிசர் இழுவைப் படகுகளும் மற்றும் கப்பலில் பின்பக்கமுள்ள இரண்டு நாவாய்களை வாங்குவதற்கு மைய அரசினை அணுகலாம். நாவாய்கள் வாங்குவதற்காக நிதியினை மைய அரசின் கப்பல் போக்குவரத்து துறையிடமிருந்து 90 விழுக்காடும், மீதமுள்ள 10 விழுக்காட்டை மீன் வளர்ச்சிக் கழகமும் ஏற்கலாம் என்று அரசு பரிசீலித்து வருகிறது.

திருச்சி மாவட்டத்தில் கதர் விற்பனைக் கூடம்.

97— (*வினா எண். 4493) டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் எத்தனை இடங்களில் கதர் விற்பனைக் கூடங்கள் உள்ளன?

(ஆ) தனியாருக்கும் கதர் விற்பனைக்கு அரசு அனுமதி வழங்கி உள்ளதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் 12 காதி கிராப்டுகள் உள்ளன.

(ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 86 முதல் 89 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஏற்பட்டுள்ள மின் தடை.

திரு. செ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே காலையிலே நாங்கள் எழுந்து 9 மணிக்கு சட்டப் பேரவைக்கு வந்தாக வேண்டும். நாங்கள் இருக்கும் விடுதியில் காலை 5 மணியிலிருந்து இந்த நேரம் வரைக்கும் மின்சாரம் வரவில்லை. அதுகுறித்து மாண்புமிகு தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அதிகாரத்திற்குள் வருகிற பிரச்சினை இது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய அறைக்கு வந்தால் அதுபற்றிப் பேசிக் கொள்ளலாம்-

(முற்பகல் 10–00)

(ஆ) ஊராட்சி மன்ற, ஒன்றியத் தேர்தல்கள் குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, முக்கியமான ஒரு பிரச்னையைக் குறித்து தங்கள் அனுமதியோடு அரசிட மிருந்து ஒரு தகவலை அறிய விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தேர்தலில் இட ஒதுக்கிடு செய்து அரசு அறிவித்ததை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கு இருக்கிறது. அது சுப்ரீம் கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கிறது. இன்னும் முடிவடை யாமல் இருக்கிறது என்ற விவரங்களைத்தான் நாம் எல்லோரும் இதுவரையிலே அறிந்து வைத்திருக்கிறாம். ஆனால், எனக்குத் கிடைத்த தகவலின்படி, அந்த வழக்கு கடந்த ஆண்டே, வழக்கு போடப்பட்டவரால் திரும்பப் பெறப்பட்டு விட்டது என்று சொல்கிறார்கள். அந்தத் தகவல் உண்மையானதுதானா என்று அரசிடமிருந்து தெரிய விரும்புகிறேன். காரணம், இப்பொழுது இருக்கின்ற இந்தத் தேர்தலை எதிர்த்துப் போயிருப்பவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே அந்த வழக்கு பெண்டிங்காக இருக்கிறது,' எனவே, இப்பொழுது தேர்தல் நடத்துவது சட்டப்படி செல்லாது என்ற கருத்தை மெயின் பெட்டிஷனிலே சொல்லி யிருப்பதாகத் தெரிகிறது. எனவே, ஏற்கனவே பஞ்சாயத்துக் களில் இட ஒதுக்கீடு சம்பந்தமாக எதிர்த்து வழக்கை சுப்ரீம் கோர்ட்டிலே கொண்டு போனவர்கள், அந்த வழக்கைக் கடந்த ஆண்டு திரும்பப் பெற்று விட்டதாகச் சொல்லப்படும் தகவல் உண்மையா, சரிதானா என்பதை உங்கள் மூலமாக மக்களின் நலன் கருதி அரசிடமிருந்து தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப் பற்றிய முழு விவரக் குறிப்புகள் தெளிவாக என்னிடத்தில் தற்போது இல்லை. அப்படிப்பட்ட வதந்தி மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடு வதைப் போன்று சொல்லப்படுகிறது. நான் சொல்வது என்றால் தெளிவாக இருக்க வேண்டும். அதை அறிந்துதான் சொல்ல? வேண்டும். ஆனால் நாளை ஒத்திப் போட்டிருக்கிறார்கள், இங்கே உயர்நீதிமன்றத்திலே கொடுத்த தீர்ப்பு—அதைப் பொறுத்தும் என்ன முடிவு வருகிறது என்பதைப் பொறுத்தும், இதுவும் அங்கே வாதாடப்பட்டிருக்கக் கூடும், அங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கவும் கூடும், உண்மை நிலைமைகள் அங்கே விளக்கப்பட்டிருக்கவும் கூடும். தேவையானால் இதை விளக்கி நாளைக்குச் சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அம்மாதிரி நீதிமன்றத்தில் அந்த வழக்கினைத் தள்ளுபடி செய்தோ அல்லது அங்கிருந்து திரும்பப் பெற்றுக்



கொண்டோ விட்டால் ஏற்கனவே நாம் அமைத்திருக்கின்ற நிபந்தனைகளின்படி 15 சதவீதம், 18 சதவீதம் ஒதுக்கீட்டு முறைதான் அமலுக்கு வரும். அப்படியானால் இந்தப் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டிய அவசியமே கிடையாது, அந்தப்படியே வந்திருக்கலாம் அப்படி கொண்டுவராத நிலையிலே அந்தப் பழைய நிலைதானே இருக்கிறது என்று அர்த்தம் திரும்பப் பெற்றிருந்தால் இந்நேரம் வந்திருக்க வேண்டுமே, அரசுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே முறையாக அறிவிப்பு வந்திருக்க வேண்டுமே. அதைப்பற்றி உங்கள் மூலமாக அவை முன்னவரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழைய முறை இருந்தது. அதற்குப் பிறகு ஒரு சட்டம் கொண்டு வந்து புதிய முறையில் 18 சதவீதம், 15 சதவீதம் என்று அறிவித்திருக்கிறோம். மறுபடியும் சட்ட மன்றத்திலே, அதை எடுத்து விட்டு பழைய முறையிலே கொண்டு வருவது என்று சட்டத்தை நாம் நிறைவேற்றி விட்டோம். ஆகவே, பழைய முறையிலே இருக்க வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் சில பேர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இங்கே அந்த நிலை வந்ததற்குப் பிறகு அவர்கள் தங்களுடைய கோரிக்கை நிறைவேறி விட்டதன் காரணமாகத் திரும்பப் பெற்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் அதனுடைய நிலை என்ன என்றுதான் கேட்கிறார்கள். அதைத் தெளிவாக நாளைக்குக் காலையிலே நான் சொல்கிறேன். அந்த நிலையைட் பொறுத்தும் சொல்கிறேன். மற்றவைகள் உயர்நீதிமன்ற தினுடைய தீர்ப்பைப் பொறுத்து இருக்கிறது.

3. கவன ஈர்ப்பு
வெள்ள நிவாரணப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மா. மணி மாறன், வி. பி. சிந்தன், கோ. வீரய்யன், ஜே. ஹேமச் சந்திரன். மா. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த வெள்ளத்தால் ஏற்பட்ட இழப்பிற்கு உதவி யாக அரசு அறிவித்த உதவிகள் விவசாயிகளுக்கும், பாதிக்கப் பட்ட குடிசைவாசிகளுக்கும் இன்னும் கிடைக்காத நிலை குறித்துஅவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் சென்னை, செங்கல்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர் மற்றும் வட ஆற்காடு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப் படையில் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசுக்கு நிதியுதவி கோரி விவர அறிக்கை அனுப்பப்பட்டது. மத்திய அரசு நிதியுதவி வருவதற்கு முன்பே விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க ரூ.1.10 கோடிக்கு அரசு ஆணை பிறப்பித்தது. ரூ. 9 கோடி குடிசை வாழ்மக்களுக்கு நிவாரணம் அளிக்க ஆணை பிறப்பித்தது. மத்திய அரசு நிதியுதவி கிடைத்தபின்பு தற்பொழுது மேலும் ரூ. 99.94 லட்சம் விவசாயிகளுக்கும், ரூ. 8.85 கோடி குடிசை வாசிகளுக்கும் நிவாரணம் அளிக்க அரசு ஆணைகள் பிறப் பித்துள்ளன.

மேலும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரும், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணை யரும் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணை யரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாக பார்வையிட்டு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர்.

இதுவரை கீழ்க்கண்டவாறு குடிசைவாசிகளுக்கு நிவாரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| குடிசை மானியமாக | ரூ. | 8,54,47,500. |
| உணவுப் பொட்டலங்கள் மூலம் | ரூ. | 39,62,489. |
| அரிசி விநியோகத்தின் மூலம் | ரூ. | 64,62,980. |
| மண்ணெண்ணெய் விநியோகம் மூலம் | ரூ. | 4,28,379. |
| வேட்டி, சேலைகள் வகையில் | ரூ. | 2,82,72,143. |

இதுவரை கீழ்க்கண்டவாறு விவசாயிகளுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன:—

| | | | |
|---|---|---|---|
| விதைகள் வகையில் | ரூ. | 7,89,300 | மதிப்பீடு உள்ளவை. |
| உரங்கள் வகையில் | ரூ. | 60,43,300 | மதிப்பீடு உள்ளவை. |

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1983-ல் வெள்ளம், 1984-ல் மஞ்சள் நோய், 1985-ல் மீண்டும் வெள்ளம், இப்படி தொடர்ச்சியாக பாதிக்கப்படுகிற விவசாயி களுக்கு நிவாரணமாக வழங்கப்படுவது மிகவும் குறைவாக உள்ளது. 1985-ல் ஏற்பட்ட வெள்ளத்தின் பொழுதுகூட குறை வாகத்தான் உதவி கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக, 2½ ஏக்கர் வைத்துள்ள விவசாயியை சிறு விவசாயி என்று சொல்





கிறார்கள். 12,000 ஏக்கர் இருக்கிற இடத்தில் 2,000 ஏக்கர் களுக்கு மட்டும் தான் விவசாயிகளுக்கு உதவியாக மானியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த மானியங்கள் கூட ஒரு ஏக்கருக்கு ரூ. 27 மதிப்புக்கு மட்டும் தான் உரம் என்ற அளவிலே கொடுக் கப்படுகிறது. உரம் செக்கண்ட் டோஸ் என்ற வகையில் இட வேண்டுமென்றால், 25 கிலோ செலவு செய்ய வேண்டியிருக்கிறது. 25 கிலோ உரம் ஏறத்தாழ ரூ. 57/-க்கு மேலாகும். ஒரு டோஸ் உரம் இடக்கூட அரசாங்கத்தால் உதவி செய்யமுடியவில்லை. அந்த ரூ. 27 உரம் எந்த அளவுக்குப் பயன்படும். (மணியடிக்கப் பெற்றது) பாதி அளவு கூட கொடுக்காத உதவி, உதவியா? பூச்சி மருந்து, விதைகள் எல்லாம் மானிய விலையில் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, இன்று வரை விவசாயக் கிடங்குகளில் பூச்சி மருந்துகள் கூட வரவழைத்து வைக்காமல், தஞ்சை மாவட்டத் தில் நிலைமை இருக்கிறது. எனவே, பூச்சி மருந்துகளை, உரங் களைப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய விவசாயிகளுக்கு, பாது காப்பு அளிக்கக் கூடிய முறையில் வழங்க வேண்டும். (மணியடிக்க பெற்றது) அவற்றை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதோடு (மணியடிக்கப்பெற்றது) விளம்பரத்திற்காகச் சொல்லிவிட்டுப் போகிறார்களே தவிர மெட்டீரியலாக ஒன்றும் கிடைக்கவில்லை (மணியடிக்கப்பெற்றது)

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுகள் உடைப்பு, ஏரிகள் உடைப்பு, வாய்க்கால் உடைப்பு, பாலம், சிறு கல்வெட்டுகள், சாலைகள் உடைப்பு, இத்தனையும் என்னுடைய தொகுதியிலும் மற்றும் பல பகுதிகளிலும் பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்ட காரணத்தாலே, இதற்கெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு திட்டம் ஏதேனும் தீட்டியிருக்கிறதா? தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா? எவ்வளவு காலத்திற்குள் அது செய்யப்படும் என்பதை அறிய விரும்பு கிறேன். பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடிய வசதிகள், உதவிகள் எவ்வளவு என்பதைத் திட்டவட்டமாக அறிய விரும்புகிறேன். பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அதிலும் குறிப்பாக, சிறுநில விவசாயிகளுக்கு எவ்வளவு கொடுக் கப்படுகிறது. என்னுடைய தொகுதியிலே ஒரு பகுதியில், இந்த வெள்ளத்தால் 3 பேர்கள் இறந்து விட்டார்கள். இறந்தவர்கள் குடும்பத்திற்கு அரசு ஏதேனும் நஷ்டஈடு கொடுக்குமா? குடிசைகள் பாதிக்கப்பட்டதற்காக வழங்கப்பட்ட உதவித் தொகை பல இடங் களில் வழங்கப்படவே இல்லை. பாதிக்கப்பட்ட ஒரு குடிசைக்கு ரூ. 300 கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு கொடுக்கப்படா மல் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறைகளை எல்லாம் தீர்த்து வைக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே கடந்த வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கும் என்னென்ன

செய்யப்பட்டது என்பது பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டேன் குடிசைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கிற இழப்புகளை முழுமையாக சமாளிப்பது அல்லது சீர்படுத்துவது என்பது எந்தவகையிலும் இயலாது. ஆனால் அதற்கென்று சிலபல குறியீடுகளை, முறைகளை வைத்திருக்கிறோம். அந்தமுறைப்படி உதவிகள் வழங்கப்படுகின்றன. எங்காவது அந்த முறைப்படி நியாயம் கிடைக்காத சூழ்நிலை இருந்தால் அதை அரசின் கவனத்திற்கு அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதுபற்றி தனியாகக் கவனிக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் குறிப்பிட்ட ஏரிகள் உடைப்பு, பாலங்கள் உடைப்பு போன்ற பணிகளுக்கு எல்லாம் சேர்த்து மொத்தமாக மத்திய அரசிடத்தில் 187 கோடி ரூபாய் தரவேண்டுமென்ற அளவுக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்தோம். இந்தப் பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக வந்த குழு இரண்டாகப் பிரிந்து, ஆராய்ந்து பார்த்து 66 கோடி சில்லரை அளவுக்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அவர்கள் தருவதில் முக்கால் பாகத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும்; கால் பாகத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் உடைப்புகள், பாலங்கள் போன்றவற்றை சீர்செய்ய வேண்டுமென்றால், அதற்கான திட்டத்தைக் கொடுத்திருக்கிறோம் என்றால், உடனடியாக பழுது பார்த்து நிறைவேற்ற வேண்டிய பணிகளைக் கணக்கிட்டு, அதற்கு தேவையானவற்றைத் தந்திருக்கிறார்கள். அதற்கு முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதுபற்றி விரிவான தகவல்களை பின்னால் வாய்ப்பு வரும்போது தெரிவிக்கிறேன்.

பாதிக்கப்பட்ட குடிசைகள் என்ற வகையில் கணக்கெடுத்து, அந்தக் கணக்கெடுப்பின் விவரம் வருவாய்த்துறை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதன்படி யாருக்காவது நிர்ணயிக்கப்பட்ட உதவிகள் போய்ச் சேரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால் உடனடியாக அது கவனிக்கப்படும். இரண்டு இலட்சம் பேர்களுக்குமேல் சென்னை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, மெல்ல மெல்ல உதவிகளை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். உதவிகளாக அரிசி, துணி மற்றவைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. நியாயமாகக் கிடைக்க வேண்டியவர்களுக்கு, யாருக்காவது கிடைக்கவில்லை என்றால், அதை என்னுடைய கவனத்திற்கு அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவின்படி 300 ரூபாய் மற்றவைகள் கொடுக்கப்பட ஏற்பாடு செய்யலாம்.



### 4. அறிக்கைகள் அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பில் நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை அவைக்கு அளிக்கிறேன்:—

1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மீதான பதினொன்றாம் அறிக்கையில் (1979–80) உள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதினேழாவது அறிக்கை.

2. 1971–72 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1980–82) அளித்த பன்னிரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதினெட்டாவது அறிக்கை.

3. 1976–77 மற்றும் 1977–78 ஆகிய ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980-81) ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை.

### 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

#### (அ) அண்ணா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) பாரதியார் பல்கலைக் கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் பொற்காலம் என சரித்திரம் கூறும் அளவுக்கு நல்லாட்சி புரிந்துவரும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியினையும் வணக்கத்தையும் கூறி மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள் முன்மொழிந்த கவர்னர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைப் பேச விழைகிறேன்.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தாங்கள் ஆட்சியிலே இருந்தபோது அண்ணாவை மறந்துவிட்டு திடீரென மாவட்டம் அறிவிப்பவர்கள் முன், திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட அண்ணா மாவட்டம் ஏற்படுத்தி, திண்டுக்கல்லுக்குப் புதியதொரு பெருமையைச் சேர்ந்த தாய்க்குலத்தின் தளபதி, ஏழைகளின் தோழன், எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவருக்கும், அதற்குத் தோள் கொடுத்து நின்று உறுதுணையாய் இருந்த தமிழன்னைக்குத் தொண்டு புரியும் நற்றமிழ்க் காவலர், நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பில் நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.

அதுபோல் குடிதண்ணீர் இல்லாமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த திண்டுக்கல் மக்களின் துயர் துடைக்கும் வண்ணம் 9 கோடி ரூபாயில் பேரணைத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தும் புரட்சித் தலைவர் அவர்களுக்கு மேலும், மேலும் நன்றியினை எனது தொகுதி மக்களின் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் பேரணையிலிருந்து திண்டுக்கல்லுக்கு வரும் தண்ணீருக்குத் தனி பீடர் அமைத்து. கிராமங்களிலிருந்து வருகின்ற அந்தக் குடிதண்ணீருக்கென்று தனி பீடரை அமைத்து உரிய ஏற்பாட்டைச் செய்து தரும்படி இந்த நல்லநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பசிப்பிணி நீக்கிய பாரிவள்ளல் தற்போது மூன்று ஆண்டுகளில் 30 இலட்சம் மக்கள் குடியிருப்புக்களை நலிந்த பிரிவினருக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும் கட்டப் போவதாக அறிவித்து இருக்கிறார்கள் ஆளுக்கு ஒரு வீடு கட்டுவோம் என்ற பாடலை அனைவரும் கேட்டிருக்கிறோம். இதை நடைமுறையில் செயல்படுத்தப் போகிற புரட்சித்தலைவர், பொன்மனச்செம்மல் அவர்கள் அருமையான முறையில் அவருக்கே உரிய பாணியில் செய்து காட்டப் போகிறார் என்பதை நாடறியும். ஆனால் சிலர் இதையும் ஏளனம் பேசக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் கூட சொன்னார்கள். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவருக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, வாய்ப்பாட்டுக் கணக்கு என்றும் மாறாது என்றும் அதுபோல புரட்சித் தலைவர் அவர்களுடைய கணக்கு பொய்யாகாது என்றும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு முன்பு சத்துணவுத் திட்டத்தை அறிவித்தபோது அந்தத் திட்டம் சினிமா படம்போல் ஓடும்; ஒரு மாதம் ஓடும் என்றெல்லாம் பேசியவர்கள் முன்னாலே; இன்றைக்கு அவர்கள் எல்லாம்

கூட சிறப்பாகச் சொல்லுகின்ற அளவுக்கு அந்தத் திட்டம் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இவர்கள் போட்ட கணக்கைப் பொய் யாக்கிய ஏழை பங்காளன் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை அவர் நிரூபிக்கப் போகிறார் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் தொழிற்சாலை கள் பெருக வேண்டுமென்றால் உற்பத்தித் திறன் கூட வேண்டு மென்றால் அதற்கு மின்சக்தி மிகவும் அவசியமானது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். பாத்திரம் இல்லாமல் பருப்பு வேகாது: மின்சக்தி இல்லாமல் உற்பத்தியும் கூடாது என்பதை மனதில் கொண்டுதான் அதற்குத் தக்கவாறு ஐந்தாண்டுத் திட்டச் செலவில் 2,000 கோடி ரூபாய் அளவுக்கு திட்டமிட்டு இருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தியாவிலே முதன்மை யாக தொழிற்சாலைகள் அதிகமாகத் தமிழகத்தில் வரவேண்டும் என்ற நல்லெண்ணத்திலே இந்த அளவுக்கு தொழிற்சாலைகள் பெருகவேண்டும் என்பதையும், அதனை மின்சக்தி மூலமாகக் கொண்டு வர முடியும் என்பதையும் கூறியிருக்கிறார்கள். ஆனால் தற்சமயம் தொழிற்சாலைகள் வருவதற்கும், அதற்கான ஆதாரத் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும் உரிய அனுமதி வர வேண்டும் என்றால் நாம் மத்திய அரசை நாட வேண்டிய நிலைமை இருக்கின்றது. சேலம் உருக்காலை முழுவதும் முற்றுப் பெற்றுவிட்டதா? எலக்ட்ரானிக் தொழிற்சாலைகள் தமிழகத்தில் எழுந்து வந்துவிட்டதா? எக்ஸ்-ரே தொழிற்சாலை இன்னும் எட்டாத நிலையில் தான் இருக்கின்றது. ஊட்டியில் வண்ண திரைப்படச்சுருள் தொழில் முழுவடிவம் இல்லாமல்தான் இருக் கின்றது. ஆகவே தோழமைக் கட்சி நண்பர்கள் இன்றைக்குத் தோள் கொடுத்து உதவ வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

அதுபோலவே தொலைபேசியும். இரயில்வே இலாகாவும் மத்திய அரசாங்கத்தின் கண்டிரோலிலே இருக்கின்றன. ஆனால் அவைகளில் எவ்வளவோ நிர்வாக சீர்கேடுகள் இருக்கின்றன. பிராக்டிகல் டிபிகல்டீஸ் எனப்படும் குறைகளும் இருக்கின்றன. அந்த பிராக்டிகல் டிபிகல்டீஸ்களை அகற்றுவதற்காக, மாநில அளவிலே ஆங்காங்கே ஒரு போர்டு அமைத்து அந்த போர்டு களிலே சட்டமன்ற உறுப்பினர்களையும் மெம்பர்களாக ஆக்கி, அந்தக் குறைகளை களைய ஆவன செய்ய வேண்டும். அதற்கு இந்தமாமன்றத்தின் மூலமாக பரிந்துரை செய்யவேண்டும் என்றும் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

அதேபோல வி.ஐ.பி.க்களுக்கு இ.கியூ. என்ற முறை ரயில்வே துறையில் வைத்திருக்கிறார்கள். ஆனால் அதைப் பயன்படுத்தி சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கே டிக்கட்டுகள் வாங்க





முடிவதில்லை. அந்த அளவுக்குத்தான் அது இருக்கிறது. இப் படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்க்க ஒவ்வொரு மாநில வாரியாக (தமிழகத்திற்கும் சேர்த்து) தனித் தனியாக கமிட்டிகள் அமைத்து, ஆய்வு செய்து சிபாரிசுகள் பெறும் வகை யில் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு தோழமைக் கட்சியின் நண்பர்கள் தோள் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் 9-ஆம் பக்கம் 11-வது பாராவில் கிராமப்புறங்களில் நிலையான பொதுச் சொத்துக்களைஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து மிக மிக நல்ல கருத்து வரவேற்கத்தக்க கருத்து. ஆனால் அதே நேரத்தில் கிராமப்புறங்களிலும், நகர் புறங்களிலும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை, அரசாங்கத்திற்கு மட்டுமல்ல நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் சொந்த மான நிலங்களைக் கூட, நெடுநாளைய குத்தகை (Long term lease) என்றபெயரில் பலர் வைத்துக் கொண்டு, அவர்கள் அதனை நல்ல முறையில் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இதை உடனே தடுக்க வேண்டும். அவர்களிடம் உள்ள இந்த நெடுநாளைய குத்தகைகளை ரத்து செய்து, அரசாங்கமே அந்த நிலங்களையும் இடங்களையும் எடுத்துக் கொண்டு, பயனுள்ள பல வேலை களுக்கு அவற்றை பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நீரை சிக்கனமாக செலவு செய்வது குறித்து 3-பி என்ற புதிய திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் அதே நேரத்தில் ஒரு மாநிலத்தில் தண்ணீர் போதுமான அளவு கிடைக்க வில்லை என்றால், அடுத்த மாநிலங்களிலே கெஞ்சி கூத்தாடி தண்ணீர் பெற வேண்டி இருக்கிறது. அதில் கூட 'தந்தால்தான் போச்சு தரவில்லை என்றால் என்ன ஆச்சு' என்று சொல்லக் கூடிய நிலைமை தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப் பங்களில் மத்திய அரசு தலையிட்டு, கட்டாயமாக தரவேண்டும் என்று வற்புறுத்தி, தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லி, அதற்கும் இந்த மன்றம் சிபாரிசு செய்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கி பாய்கின்ற நீரை வீணாகக் கடலில் கலக்கவிடாமல் தமிழகத்திற்கு திருப்பி அதை முறையாக பயன்படுத்த வேண்டும் என்ற திட்டம் முன்பே போடப்பட்டது. அதை செயலுக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே என்னுடைய அன்பு கட்டளையாக விடுக்கிறேன்.

நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு சிறந்த நிர்வாக வசதிக்காகவும், செயல்முறையில் தாமதத்தை தவிர்ப்பதற்காகவும், விவசாயத்துறை, மருத்துவத்துறை ஆகிய துறைகளை பல சிறு சிறு தனித் தனித் துறைகளாக மாற்றி அமைத்துள்ளது. ஆனால் ஒவ்வொன்றிற்கும சம்பந்தமில்லாத வகையில், தொழிற்சாலை ஆய்வாளர் பிரிவு (டெக்னிக்கல் விங்), தொழிலாளர் ஆய்வாளர் பிரிவு (லேபர் விங்) என்று இரு பிரிவுகள் தொழிலாளர் நலத்துறையின் கீழ் உள்ளன.

நான்காவது ஊதியக் குழு தொழிற்சாலை ஆய்வாளர் பிரிவை தொழிலாளர் துறையில் இருந்து பிரித்து தனித் துறையாக செயல்படுத்த வேண்டும் என்றும் அவர்களுக்கு தனி ஊதிய விகிதம் அமைக்கப்பட வேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளது. அந்த சிபாரிசை முழுமையாக அரசு ஏற்று, அங்கே பணிகள் விரைவாகவும், நல்ல முறையிலும் நடைபெற உதவி செய்யும் வகையில் இந்த இரு பிரிவுகளையும் நல்ல முறையில் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒரு கருத்தை அவர்கள் குற்றச்சாட்டாக சொன்னார்கள். என்ஜினீயரிங் கல்லூரிகளையெல்லாம் மருத்துவக் கல்லூரிகளையெல்லாம் சட்டக் கல்லூரிகளையெல்லாம் தனியார்களுக்கு கொடுக்கப்படுகிறதே, ஏலமே விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறதே என்றெல்லாம் சொன்னார்கள். அந்தக் கல்லூரிகள் எல்லாம் எந்த இடத்திலும் ஏலம் விடப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அவருக்கு எப்படித் தெரிந்ததோ, அதிலும் அவர் நாணயத்தின் ஒரு பக்கத்தை தான் பார்க்கிறார் என்று சொல்ல வேண்டும். ஒரு பக்கம் என்றுகூட சொல்ல முடியாது. ஒரு பக்கத்திலேயும் ஏதேனும் ஒரு சிறிய பாகத்தை மட்டும் பார்த்து விட்டு பேசுவது கூடாது.

அப்படித் தனியார் துறையின்கீழ் விடப்பட்டிருந்தாலும் கூட, 50 சதவீதம் கவர்ன்மெண்ட் கோட்டா என்று வைத்திருக்கிறார்கள். அந்த கவர்ன்மெண்ட் கோட்டாக்களைப் பயன்படுத்தி, அதன் மூலமாக மெரிட் அடிப்படையில் ஏழை எளிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதில் சேர்ந்து பயில வாய்ப்பு இருக்கிறது. மற்ற 50 சதவீதத்தைக் கூட கொடுப்பதற்கு அவர்கள் குறிப்பிட்ட மார்க்குகளை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். என்ஜினீயரிங் கல்லூரி என்றால் 80 மார்க்குகள் இருந்தால்தான் கொடுக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே யாரும் பயப்பட வேண்டியது இல்லை. இந்த தனியார் நிறுவனங்கள் இல்லாவிட்டால் பணம் கொடுத்து சேர வேண்டிய நிலைமையில் கூட, இவைகள் எல்லாம் அண்டை மாநிலத்திற்குத்தான் போகும். இப்போது அந்தப் பணமும் நம்முடைய மாநிலத்திற்கே சேருகிறது. அதிலேயும் இந்த அரசு நல்ல முறையில் செயல்படுத்தி வருகிறது.





அடுத்து, என்னுடைய தொகுதி பிரச்னையாக ஒன்றிரெண்டைச் சொல்ல விரும்புகிறேன். காற்றின் மூலம் சக்தி உற்பத்தி செய்யும் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மலைக்கோட்டையைப் பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்யலாம். அப்படி உற்பத்தி செய்கிற சக்தியை முழுவதுமாக அண்ணா மாவட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஏற்பாட்டைச் செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலை அண்ணா மாவட்டத்தில் அமையவிருப்பதாகத் தெரிவித்தார்கள், அப்படி அமையவிருக்கிற நூற்பாலையை திண்டுக்கல் நகரிலேயே அமைக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான திண்டுக்கல் நகரத்தில் பாதாள சாக்கடையை அமைக்க வேண்டும். அதனை விரைவிலே அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதனை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் பகுதியில் சிறுமலையில் பிரைமரி ஹெல்த் சென்டர் இல்லாமல் இருக்கிறது. அங்கே நோய்வாய்படும் மக்கள் திண்டுக்கல் வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்டு கேட்டுக்கொள்கிறேன்.

நல்லமநாயக்கன் பட்டியில் அரசினர் அறிஞர் அண்ணா பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் பகுதியில் அதிகமான அளவில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் பல்வேறு சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன ஆகவே அந்தச் சுகாதாரக் கேடுகளை போக்கும் வகையில் கழிவு நீரை நவீன விஞ்ஞான முறையில் சுத்தம் செய்து வெளியேற்றுகிற ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய இரண்டொரு கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் 20 அம்ச திட்டத்தை சிறப்பாக அரசு அமல்படுத்தியதற்கு

நம்முடைய மாநிலமும், மகாராஷ்டிரா மாநிலமும் சிறப்பான பெயரை எடுத்திருப்பதை அறிந்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆங்காங்கு இருக்கிற ஒரு சில குறைபாடுகளை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி நிவர்த்தி செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்குமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வெள்ள நிவாரணத்திற்கு நாம் நிறைய பணம் ஒதுக்குகிறோம். நானும் பலமுறை இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். வெள்ளம் வருகிறபோது கிராமப்புறங்களில் அதிகமான சேதத்தை ஏறபடுத்துகிறது. ஆகவே இதனைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர்களைக் கட்ட வேண்டும். அண்ணா மாவட்டத்தில் வைகை ஆறு வருகிற நிலக்கோட்டை, சோழவந்தான் பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்டும் பணியை மேற்கொண்டு அந்த மக்களை வெள்ளப் பாதிப்புகளிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார உற்பத்திக்காக 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 2,000 கோடி ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது. எங்கள் பகுதியில் மின்சார உற்பத்திக்கு உதவியாக இருந்த சமயநல்லூர் மின்நிலையத்தை முன்பிருந்த அரசு எடுத்து விட்டது. அந்த நிலையம் 14 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து மதுரை மாநகருக்கு போதுமானதாக இருந்தது. அந்த நிலையத்தை எடுத்துவிட்டதால் இப்போது மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே மின் உற்பத்தியை பெருக்கும் வகையில் சமயநல்லூர் மின்நிலையத்தை புதுப்பித்துத் தர வேண்டுமென்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான வழிவகைகளை செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்தில். கேட்டுக்கொள்கிறேன்.

சிறு விவசாயிகள் முன்னேற்றம் குறித்து நடைமுறையில் எடுத்துக் கொண்டால், ஏழை எளிய விவசாயிகள் பாங்குகளில் கடன் வாங்கி பம்ப் செட்டுகள் வாங்கி நான்கைந்து ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கேள்வி நேரத்தின் போது அமைச்சர் அவர்கள் ஒரு விவரத்தைத் தெரிவித்தார்கள். 1976 ஆம் ஆண்டிற்கு முன்னாலே வாங்கியவர்களுக்கு மின் இணைப்புக் கொடுத்து வருகிறோம் என்று சொன்னார்கள் எங்கெல்லாம் வோல்டேஜ் பவர் இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கெல்லாம் மின்னிணைப்புக் கொடுத்தால் அந்தப் பம்ப் செட்டுகளை பயன்படுத்தி விவசாயம் செய்து அந்த விவசாயிகள் வாழ்வதற்கு வழிவகை செய்தவர்கள் நாம் ஆவோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

(முற்பகல் 10–30)

அடுத்து, இனாமாக மின்சாரம் வழங்குகிறோம் என்று நீங்கள் செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால், இதனால், பல இடங்களில் பல விவசாயிகள் பாதிக்கக்கூடிய நிலைமைகள் இன்றைக்கு நாட்டிலே இருந்து கொண்டு இருக்கின்றன. கிணற்றிலே தண்ணீர் இல்லை. பம்ப்செட் வைத்திருக்கிறார்கள். பம்ப்செட் இருந்தும், தண்ணீர் இல்லாததால் பம்ப் செட்டைக் கழட்டிக் கொண்டுபோய் வீட்டிலே வைத்திருக்கிறார்கள். அப்படி வீட்டிலே கொண்டுபோய் வைத்து இருப்பவர்களுக்குக் கூட 1 ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று கட்டணம் விதித்து இருப்பது, கிணற்றிலே தண்ணீர் இல்லை அதனால் மின்சாரத்தை ஓட்டவில்லை, அவர்களும் பணம் கட்டக்கூடிய நிலைமைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. சிறு சிறு விவசாயிகளுக்கு பரவாயில்லை. அவர்கள் தண்ணீர் இல்லாமல், மின்சாரத்தை ஓட்ட முடியாது. ஓட்டினாலும் பணம் கட்ட வேண்டியதில்லை. ஆனால் கொஞ்சம் நடுத்தர விவசாயிகள், அதற்கு மேற்பட்ட விவசாயிகள் பம்ப் செட்டை வீட்டிலே கழட்டிக் கொண்டுபோய் வைத்திருந்தும்கூட பணம் கட்டக் கூடிய நிலைமை இருப்பது என்பதை ஆராய்ந்து அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

அதற்குப் பிறகு, இன்றைக்கு நம்முடைவ பாரதப் பிரதமர் அவர்கள் தண்ணீர்ப் பிரச்சனையைப் பொறுத்தவரையில், அதை தேசியமயமாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை நாங்கள் வரவேற்கிறோம். பாராட்டுகிறோம். இங்கே உள்ள நிலங்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கொண்டிருக்கின்ற போது, தண்ணீர் வீணாகச் சென்று கடலிலே கலப்பதைத் தடுத்து இதைத் திருப்பி பாசனத்திற்கு உபயோகிக்கக்கூடிய வகையிலே தண்ணீரை தேசியமயமாக்க வேண்டும் என்று நடவடிக்கைகள் எடுத்து இருப்பதை நாம் பாராட்ட வேண்டும்.

உண்மையிலே நம்முடைய அமைச்சரவை மத்திய அரசாங்கத்தோடு முழு மனதோடு ஒத்துழைத்து, அவர்களுடைய திட்டத்திற்கு ஒத்துழைப்பு கொடுத்த காரணத்தாலேதான் இன்றைக்கு 1985 மார்ச் மாதத்திலே நமக்கு முதலிலே 25 ஆயிரம் டன் அரிசி கிடைத்திருக்கிறது. பிறகு 40 ஆயிரம் டன் அரிசி கிடைத்திருக்கிறது, பிறகு 50 ஆயிரம் டன் அரிசி கிடைத்திருக்கிறது, இன்றைக்கு 1 லட்சம் டன் அரிசி கிடைக்கிற நிலைமை உருவாகியிருக்கிறது என்றால், நாம் அத்தனைபேரும் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். எதையாவது ஒன்றைப் பேசிவிட்டு, அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அரசாங்கம் செய்யக்கூடிய நல்ல காரியங்களை வரவேற்க

வேண்டுமே தவிர, அதைக் குறைச் சொல்லிக்கொண்டேயிருந்தால், நிச்சயமாக நமக்கு வரக்கூடிய நன்மைகள் பாதித்துவிடும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சனை. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நல்ல காரியங்களைச் செய்து வருகிறோம். இருந்தாலும் இந்தப் பிரச்சனையில் இன்னும் பல இடங்களில் தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருப்பதை நாம் பார்த்துக்கொண்டு வருகிறோம். நான் பல தடவை இந்தச் சட்டசபையில் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு ஊருக்கும் 2 போர்வெல், 3 போர் வெல் என்று போடுகிறார்கள். ஒவ்வொரு போருக்கும், 20 ஆயிரம், 25 ஆயிரம் என்று செலவழிக்கிறோம். அப்படி செலவழித்தும் கூட கடைசியில் தண்ணீர் இல்லாத ஒரு நிலைமை வந்துவிடுகிறது, எனவே, எங்கேயெல்லாம் தண்ணீர் இருக்கிறதோ, அதை ஆராய்ந்து பார்த்து, ஒரு காம்பரஹென்சிவ் ஸ்கீம் என்று ஒரு இணைப்புத் திட்டத்தைப் போட்டு, 15 கிராமங்கள், 20 கிராமங்கள் என்று இணைத்து, 40 லட்சம், 50 லட்சம் என்று செலவழித்து, அதிலேயிருந்து நாம் தண்ணீரைக் கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்கினால் நிச்சயமாக நாம் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் என்னுடைய பைழய தொகுதியான நிலக்கோட்டையைப் பற்றிச் சொல்லி அது அலுத்துப்போய் விட்டது. இப்போது எனது தொகுதியான பழனி தொகுதியிலே குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் 1972 ஆம் ஆண்டே, ஆயக்குடி பஞ்சாயத்திலே 12 ஆயிரம் ரூபாய் இன்வெஸ்டிகேசனுக்காக கட்டப்பட்டது, பாப்பம்பட்டி பஞ்சாயத்திலே இன்வெஸ்டிகேசனுக்காக 12 ஆயிரம் ரூபாய் கட்டப்பட்டது. அப்படிக் கட்டப்பட்டு, ஆயக்குடி பேருராட்சிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, இன்றைக்கு 1985 ஆம் ஆண்டிலிருந்து அதை நடைமுறைப்படுத்தி, அந்த வேலையை ஆரம்பித்த பிறகு, அங்கேயிருக்கிற ஒரு கட்சிக்காரர்—அவர்தான் கான்ட்ராக்டர்—எல்லா வேலைகளையும் முடித்துக் கொடுத்த பிறகும் கூட, அவர் வேறு ஒரு கட்சிக்காரர் என்ற முறையில், தண்ணீர் கொடுக்கக்கூடாது, இந்த அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வர வேண்டும் இந்தத். தொகுதி எம்.எல்.ஏ.வுக்கு கெட்ட பெயர் வர வேண்டும், என்ற அடிப்படையில், இன்றைக்கு தண்ணீர் கொடுக்க முடியாத அளவிற்கு அந்த வேலையை முடித்துக் கொடுக்காமல், காலதாமதப் படுத்துகிறார்கள் என்றால், இதைவிட கொடூரமான செய்கை இருக்கிறதா? அப்படிப்பட்ட கான்ட்ராக்டர் மீது தக்க நடவடிக்கை எடுத்து, அவர்களை ஜெயிலிலேயே போட்டால்கூட நன்றாக இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே அதைச் செய்து கொடுக்க வேண்டும்.



அடுத்து, குழந்தைகளுக்கு சீருடை வழங்குகிறோம், பாராட்டுகிறேன். அதை குழந்தைகளுடைய அளவிற்கு சீருடையைத் தைத்துக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் போய் விட்டால், அது நன்றாக இருக்காது. பிறகு அவர்களுக்கு பாடப் புத்தகங்கள் கொடுக்கிறோம். அப்படி கொடுக்கக்கூடிய அந்த புத்தகங்களை ஜூன் மாதத்திற்குள்ளாக அவர்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

அடுத்து, இன்றைக்கு என்ஜினியரிங் கல்லூரி, மெடிக்கல் கல்லூரி என்று எல்லாம் தனியாருக்கு நாம் கொடுத்திருக்கிறோம் அதிலே ஓரளவுக்கு எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும்கூட அதிலுள்ள குறைபாடுகளை நாம் கண்டிப்பாக ஆராய வேண்டும். இந்த மாதிரி நான் முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கும் போது, யார் பதில் சொல்ல வேண்டுமோ, அந்த அமைச்சர் இப்போது பேசிக்கொண்டு இருந்தால் என்னுடைய குறைகளை எப்படிக் கேட்க முடியும். இதை அவர்கள் கேட்க வேண்டுமா, இல்லையா? ஆகையினாலே, இன்றைக்கு ஒரு என்ஜினியரிங் கல்லூரியிலே ஒரு ஹரிஜன மாணவனுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய கோட்டாவிலே அப்படி கொடுக்கப்பட்ட இடத்திலே, ஒரு கல்லூரியிலே தகுதியானவனைச் சேர்த்தும், அவனிடம் முதவிலே பர்ஸ்ட் செமஸ்டருக்கு 4,800 ரூபாய் கேட்டு இருக்கிறார்கள். இந்த 4,800 ரூபாய் கட்டியதற்குப் பிறகும்கூட பர்ஸ்ட் செமஸ்டருக்கு 1,800 ரூபாய் இன்னும் கட்ட வேண்டும். இல்லாவிட்டால் கல்லூரியை விட்டு வெளியேற்றுவோம் என்று சொல்கிற காரணத்தால் நாம் மெரிட் அடிப்படையிலே அந்த மாணவனுக்குக் கொடுக்கிறோம், அப்படிப்பட்ட மாணவனிடமிருந்து இவ்வளவு பணம் வசூலிக்கத் தேவையில்லை. இதைச் சற்று சிந்தித்து ஒரு நல்ல நிலைமையை உருவாக்கினால், நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு இந்த மொழிக் கொள்கை பற்றிச் சொல்கிறார்கள். நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து யார் இந்தியை படிக்கிறார்களோ அவர்களுக்கு ஏன் நீங்கள் வழி வகுத்துக் கொடுக்கக் கூடாது? அவர்களுக்கு நீங்கள் ஏன் உதவி செய்யக் கூடாது. 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்று முன்னோர்கள் சொல்லி வைத்து இருக்கிறார்கள். அப்படி எல்லா மொழிகளும் படித்து இருந்தால் அவர்கள் எங்கேயாவது வேலைக்குப் போவார்கள். அதை விட்டுவிட்டு 'குண்டு சட்டியில் குதிரை ஓட்டு" என்பது போல் 2 மொழிகள் தான் என்று சொல்லி தமிழ்நாட்டு மக்களை, மாணவர்களை ஏமாற்றுகிறார்கள். கெடுக்கக்கூடாது என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் யாரையும் குறை சொல்லவில்லை. பிறகு வீடு கட்டிக் கொடுப்பது உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தி விரும்பி படிப்பவர்களுக்கு இந்த அரசு ஏன் அவர்களுக்கு உதவி அளிக்கக்கூடாது, சலுகை அளித்து அதற்கான புரவிஷன செய்யக்கூடாது என்ற கேள்வியை நம்முடைய 'அம்மா' அவர்கள் வைத்து இருக்கிறார்கள். இதே கேள்வியை நான் திருப்பி வைக்கலாம் என்று ஆசைப்படுகிறேன். டெல்லியிலே தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கே தமிழர்கள் படிப்பதற்கு அரசே தமிழ்ப் பள்ளிகளை நடத்தலாமே, அதைப் போல பம்பாயில் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தமிழில் படிப்பதற்கு தமிழ் பள்ளிகளை நடத்தலாமே, இந்திய துணைக் கண்டம் முழுவதும் தமிழர்கள் வாழ்கிறார்கள், ஆகவே தமிழை தேசிய மொழியாக அங்கீகரிப்பதற்கு ஆலோசனையை மத்திய அரசுக்கு தாங்கள் வழங்கலாமே?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் ஏற்கனவே 14 மொழிகளும் தேசிய மொழிகளாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. அதில் தமிழ் மொழியும் ஒன்றாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அங்கே படித்தால் அதற்கு தடை இல்லை.

திரு. செ. ஆறுமுகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, 14 மொழிகளும் தேசிய மொழிகளாக இருந்தாலும் தமிழுக்கு அங்கே தேசிய அந்தஸ்து உண்டா? மாண்புமிகு அம்மையார் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தமிழுக்கு தேசிய அந்தஸ்து உண்டு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கின்ற ஒவ்வொரு கட்சியும் என்ன கொள்கையை வைத்துக் கொண்டு இருக்கின்றது என்பது திட்டவட்டமாக தெளிவாக எல்லோருக்கும் தெரியும். ஆக அவரவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள். ஆகவே ஒரு மாறுபட்ட அல்லது ஒரு கட்சியைப் பற்றி தவறாக விமர்சனம் செய்தால் அல்லது தவறான கருத்தைச் சொன்னால் குறுக்கிட்டுப் பேசலாம். அவர்கள் தங்கள் கருத்து என்று சொல்கிறபோது அதைப் பற்றி குறுக்கிட வேண்டிய அவசியம் இல்லை. அதைப் பற்றி அந்த அம்மா அவர்களிடம் கேட்டு எந்த முடிவும் வரப்போவதும் இல்லை. மத்திய அரசுமுடிவு எடுக்கவேண்டும். அவர்களுடைய உணர்வை, அவர்கள் கருத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதாவது யூ.பி., பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற இடங்களில் தமிழ்ப்பாடம் கற்பிக்கப்படுகிறது. தமிழ் மொழியில் அங்கே படிக்கிறார்கள் என்பதை நான் மிகவும் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



திரு. செ. ஆறுமுகம்: தனியார் நடத்துகிறார்கள். அரசாங்கம் நடத்துகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்து வீடு கட்டிக் கொடுப்பது பற்றி பல சூழ்நிலைகளில் நான் பாராட்டி, வரவேற்று பல முறை இந்தச் சட்ட மன்றத்தில் பேசியிருக்கிறேன். இன்றைக்கு அரிசனங்களுக்கு 5 இலட்சம் வீடுகள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கிற இதர ஜாதி மக்களுக்கு 5 லட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்போவதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதை இந்த ஆண்டிலேயே அதாவதுபட்டா இருப்பவர்களுக்கு அப்படிப்பட்ட வீடுகளை 10 ஆயிரம், 20 ஆயிரம் வ்டுகளையாவது 3 மாதத்தில் கட்டிக் கொடுப்பதற்கு வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வழி செய்யும் போது இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் என்னுடைய பழனித் தொகுதியில் ஆயக்குடியில் இந்த வீடுகள் இருக்கிறதே கிராம சேவக் குடியிருப்புகள், பஞ்சாயத்து மனமகிழ் மன்றங்கள், டாக்டர்கள் குடியிருப்புகள் இதுபோன்ற வீடுகளில் சில கட்சிக்காரர்கள் 5, 6 ஆண்டுகளாக குடியிருந்து கொண்டு அவர்கள் வெளியேறாமல் அங்கே கலகம் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஏற்கனவே அங்கே பிரசவ விடுதியில் 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் வெடி குண்டு வெடித்து அதற்குப் பின்னர் கலெக்டர் சென்று பார்வையிட்டு அவர்களை வெளியேற்றியிருக்கிறார்கள். தயவு செய்து இப்படிப்பட்ட அரசு கட்டிடங்களிலே குடியிருப்பவர்களை வெளியேற்ற வேண்டும். இப்போது பஞ்சாயத்து போர்டு ஒரு கட்டிடம் ஆயக்குடியில் கட்டியிருக்கிறார்கள். அதிலும் அவர்கள் குடியிருக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பட்ஜெட் கூட்டம் முடிவதற்குள்ளாகவே அவர்களை வெளியேற்றாவிட்டால் அரசுக்கும் நல்லது அல்ல, அங்கே இருக்கக்கூடிய மற்ற மக்களுக்கும் நல்லது அல்ல. இதனால் மிகப் பெரிய போராட்டம் நடத்தக்கூடிய ஒரு நிலைமையை அங்கே குடியிருப்பவர்கள் ஏற்படுத்துவார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10·40)

அங்கே கோயில் நிலம் இருக்கிறது. அந்த விக்னேஸ்வரர் கோயிலுக்கு கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் சொத்து இருக்கிறது. அதைப்பற்றி ஏற்கனவே சட்டமன்றத்திலே பேசி இருக்கிறார்கள், அதைப் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும் என்று. அந்தச் சொத்துக்களை முக்கியமான கட்சிக்காரர்கள் அனுபவித்துக் கொண்டு,.. 50 ஏக்கர் நஞ்சை, இருபோக சாகுபடி, 50 ஏக்கர்

புஞ்சை.... அதை அவர்களே அனுபவித்துக் கொண்டு, ஒரு காலணா கூட கோயிலுக்கு வரும்படி கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், இது வலுத்தவன் கையில் தடி இருந்தால் யாரை வேண்டுமானாலும் அடிக்கலாம் என்ற சூழ்நிலை உருவாகுமானால், அது உண்மையிலேயே அரசாங்கத்தைப் பாதிக்கும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனவே, அவர்களை, உடனடியாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாக கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, தொழில் துறை. தொழில் துறையில் ஏற்கனவே, 1980 ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் 1000 ஏக்கர் நிலப் பரப்புள்ள இடத்தை எடுத்து 'இண்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ்' ஆரம்பிக்க வேண்டும் என்று சட்டசபையிலே கொண்டு வந்து வைத்து, பாஸும் ஆகி இருக்கிறது. இது வரைக்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு வழிமுறைகள் செய்யப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே சற்று தனிக் கவனம் செலுத்தி, எங்கே தண்ணீர் இருக்கிறதோ, 1,000 ஏக்கர் நிலப் பரப்பை எடுத்து, அதிலே தொழில் கூடம் ஆரம்பிக்க வழிவகை செய்தால், பல நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும்.

இன்றைக்கு தொழில் துறையை எடுத்துக் கொண்டால், உண்மையிலேயே, வேலை இல்லாமல் படித்தவர்கள், இளைஞர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் சத்துணவுக்கு நிறைய பணம் ஒதுக்குகிறோம். சீருடைக்கு நிறைய பணம் ஒதுக்குகிறோம். அந்த மாதிரி, அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கும், ஒரு யூனியனுக்கு ஒரு கோடி ரூபாயில் ஒரு திட்டத்தைப் போட்டால் அங்காங்கு இருக்கிற மூலப் பொருள்களை வைத்து என்ன தொழில் செய்யலாம், அதிலே எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கலாம் என்கிற மாதிரி சிந்தித்தால், அது ஒரு நல்ல முறையாக, நல்ல வாய்ப்பாக இருக்கும், வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒரே ஒரு வார்த்தை. அதாவது எங்களுடைய மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அண்ணா மாவட்டம் என்று உருவாக்கப்பட்டிருக்கிறது அண்ணா மாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட அந்த நாளில், அமைச்சர் அவர்களை வைத்துக் கொண்டு சொன்னேன். அண்ணா மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இங்கே எந்தவிதம ... யும் இல்லாமல், அதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்யவேண்டும். தாராளமாகக் கையைக் கொஞ்சம் நீட்டி, கையெழுத்துப் போட்டு, பணம் சாங்ஷன் செய்யவேண்டும் என்று திண்டுக்கல் விழாவில் சொன்னேன். அதை மீண்டும்



வலியுறுத்திட விரும்புகிறேன். மிகவும் பின் தங்கிய மாவட்டம் அது. குடிதண்ணீர், ரோடு வசதி, லைட் வசதி, இர்ரிகேஷன் வசதி எந்த வசதியும் இல்லை. தொழிற்சாலைகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் பிரேம்குமார் சொன்னதைப் போன்று ஒரு தொழிற்சாலை கூட இல்லாத மாவட்டம் அந்த மாவட்டம். நிறைய பருத்தி உற்பத்தி ஆகின்றது. தொழில் கூடங்களை ஏற்படுத்தி, குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எல்லா வழிவகைகளும் செய்யவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்,

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த கவர்னர் உரையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்து, இந்த நிலைக்கு என்னை அறிமுகப்படுத்திய என்னுடைய தங்கத் தலைவன், தானைத் தலைவன் புரட்சித் தலைவருக்கு முதலிலே நன்றியைச் சொல்லி, கவர்னர் உரை மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களை நான் எடுத்து வைக்க விழைகிறேன்.

இந்த கவர்னர் உரையிலே, நான் சார்ந்திருக்கிற வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, மாவட்டத்திலே இருக்கிற மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்ற அடிப்படையில், அவர்களுடைய வசதிகளைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில், ஒரு அதிகாரியை வைத்து, ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்து, ஒரு மாவட்டத்தை சீர்படுத்த முடியாது என்ற நோக்கத்திலே, அந்த வசதிகள் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் அன்றாட வாழ்க்கையிலே மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற உணர்வோடு வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதாக குறிப்பிட்டு இருப்பதை நான் வரவேற்கிறேன். அதைப் பாராட்டுகிறேன். அதற்காக, நான் என்னுடைய மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே நிதியமைச்சர் அண்ணன் மாண்புமிகு நாவலர் அவர்கள் இருக்கிறார்கள். அவரும் உரிய நேரத்தில், புரட்சித் தலைவரிடம் சொல்லி, பிரிக்கிற மாவட்டத்திலே ஒரு பகுதிக்கு திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு, அந்த மாவட்டத்தை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில், இருக்கிற மாநிலங்களிலேயே முதன்மையாக இருப்பதால், தமிழகத்திற்கு சிறப்பு விருதாக 2·5 கோடி ரூபாயை இன்றைக்கு மத்திய அரசு கொடுத்திருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதை வரவேற்கிறேன். ஆனால் இந்த அளவுக்கு இந்த அரசாங்கம் அதிகாரிகளை வைத்துக் கொண்டு, திட்டங்களைத் தீட்டி, இன்றைக்கு குடும்பக்கட்டுப் பாட்டுத் திட்டத்தை உருவாக்கி, அதை சீர்படுத்தி, முன்னணியிலே

கொண்டு வந்ததற்காக, இந்த தேசிய விருதாக ரூ. 2.5 கோடியை கொடுத்தால் மட்டும் போதுமா என்று சொன்னால், அது போதாது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இங்கே பல சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுக்கு தொழிற்சாலை வேண்டும் என்று இரண்டு தினங்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், குடும்பக்கட்டுப்பாட்டிலே முன்னணியிலே இல்லாத மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் தொழிற்சாலைகளைக் கொடுக்கிறது, ஆனால் அதே நேரத்தில், தமிழகத்திற்குத் தொழிற்சாலைகளை கொடுப்பதில்லை. மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்துகின்ற தமிழகத்திற்கு ரூ. 2·5 கோடி கொடுப்பதற்குப் பதிலாக இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முன்னணியில் இருக்கிறார்களே என்று சொல்லி, ஏன், ஒரு தொழிற்சாலையை கொடுத்திருக்கக் கூடாதா? அப்படிக் கொடுத்திருந்தால், நாம் மனம் திறந்து பாராட்டியிருக்கலாம். ஏதோ ரூ. 2.5 கோடி கொடுத்ததற்காகப் பாராட்டலாமே தவிர, ஆனால் மனம் திறந்து பாராட்ட முடியவில்லை. காரணம் ஏதோ மாற்றான் தாய் மனப்பான்மை காட்டுவது போல உணர்வு ஏற்பட்டு இருக்கிறது. அது இருக்கக் கூடாது என்று சொன்னால், நாங்கள் மனம் திறந்து பாராட்ட வேண்டும் என்று சொன்னால், எங்களுக்கு ஒரு பெரும் தொழிற்சாலையைக் கொடுப்பதற்கு இங்கே இருக்கிறவர்கள் சிபாரிசு செய்யவேண்டும். எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்னைர் சித்தன் அவர்களும், உ. சுப்பிரமணியன் அவர்களும் அதற்கு சிபாரிசு செய்யவேண்டும். இன்று அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் சிபாரிசு செய்கின்ற அளவிற்கு தன்மைகளைப் படைத்திருக்கிறார்கள். அவர்கள் இங்கே பேசுகிற நேரத்தில் கூட, இந்த அரசு என்னென்ன நல்ல காரியங்களை செய்திருக்கிறார்களோ, அவைகளைப் பாராட்டியும் பேசியிருக்கிறார்கள்.

நேற்று பேசிய உறுப்பினர் ஒரு குற்றத்தைச் சொல்லியிருக்கிறார்கள். என்ன சொன்னார்கள்? 30 இலட்சம் வீடுகளைக் கட்டுவதாக இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறது, அது எப்படி கட்ட முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு நினைவு இருக்கிறது. நம்முடைய புரட்சித் தலைவர், புரட்சி நடிகராக இருந்த காலத்தில் மலைக்கள்ளன் படத்தில் ஒரு பாடலைப் பாடினார்கள். ''ஆளுக்கொரு வீடு கட்டுவோம், அதில் ஆய கலைகளைச் சீராகச் செய்வோம்'' என்று புரட்சித் தலைவர், புரட்சி நடிகராக இருந்தபோது பாடினார். அதைச் சட்டமாகக் கொண்டு வந்து, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு, சமுதாயத்திலே உயர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், அவர்களையும் சேர்த்து, இந்தத் திட்டத்தை தமிழகத்திலே உருவாக்கவேண்டுமென்ற உணர்வோடு, அதைச் சட்டமாக கொண்டுவர இருக்கிறார்கள். அதைப் பாராட்ட அவர்களால் முடியவில்லை. மாண்புமிகு



உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் 30 இலட்சம் வீடுகளைக் கட்டுவதாகச் சொன்னீர்களே, அதற்கு மதிப்பீடு இருக்கிறதா என்று கேட்டார்கள். கவர்னர் உரை என்பது வேறு. நிதிநிலை அறிக்கை என்பது வேறு. கவர்னர் உரையிலே ஒரு ஆட்சியினுடைய கொள்கையைத் தான் சொல்ல முடியும். மதிப்பீடு என்பது நிதிநிலை அறிக்கையிலே தான் தெரிவிக்கப்படும். அதை விட்டு விட்டு அவர்கள் குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அவர்கள் பேசுகிறபோது நாங்கள் வெளியே இருந்தாலும்கூட, உள்ளே வந்து உட்காருவோம். ஏனென்றால், அவர் அழகுத் தமிழிலே பேசுகிறார்கள். தொழிலாளர் தலைவராக இருந்தவர். அவர் பேசுகிறபோது மிகவும் தெளிவாக, நல்ல தமிழ் வார்த்தைகள் போட்டு பேசுவார்கள் என்று நாங்கள் உட்காருகிறோம். நேற்று ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். கவர்னர் உரையிலே மதிப்பீடு இல்லை என்று சொல்லியிருக்கிறார். மதிப்பீடு என்பது நிதிநிலை அறிக்கையில்தான் வரும். கவர்னர் உரையிலே அரசினுடைய கொள்கைதான் வரும். எனவே அந்த வகையில் குற்றம் சாட்டவேண்டுமென்ற உணர்வு நல்லதல்ல என்பதை இந்த நேரத்தில் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. எஸ். ரவீந்திரன் அவர்கள் கூட ஒன்றைச் சொன்னார்கள். முதல் நாள் உரையிலே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஏதோ செய்யாற்றில் இடைத்தேர்தல் நடந்தால் அங்கே பலவிதமான பணிகள் நடைபெற்றதாகவும், ஆகவே எங்களுக்கும் ஒரு இடைத் தேர்தல் தாருங்கள், தாருங்கள் என்று கேட்டார்கள், அவர் மீது எனக்கு பற்று உண்டு, ஏனென்றால், இங்கே சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்பாகவே எனது குடும்ப வக்கீல் ரவீந்திரன் தான், அவர்கள் இடைத் தேர்தல் வேண்டும் என்று கேட்கிறார்கள். இடைத் தேர்தலை இங்கே இருக்கிற மாண்புமிகு தற்காலிகத் தலைவர் கொடுத்து விட முடியாது, மாண்புமிகு நாவலர் அவர்கள் கொடுத்துவிட முடியாது. அல்லது இங்கே இருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்துவிடமுடியாது, ஆக இடைத் தேர்தல் வரவேண்டுமென்றால்**

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகின்றன.

(முற்பகல் 10-50)

திரு. ரா. பெரியசாமி: இடைத் தேர்தல் வந்தால் அங்கே நல்ல முறையிலே வேலை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். யாரும் செத்துப் போக வேண்டுமென்று அவர் சொல்லவில்லை.

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. கூடலூர் இ. வி. வேலு: அப்படி அவர் இடைத்தேர்தல் வேண்டுமென்று சொல்லாமல் இருந்தால் நான் இந்தக் கருத்தை சொல்லி இருக்கமுடியாது. ஒரு இடைத் தேர்தல் வேண்டுமென்று அவர் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். இந்த அரசாங்கம் ஏழை எளிய மக்களுக்காக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக எத்தனையோ வகைகளிலே சலுகைகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இடைத் தேர்தல் வேண்டுமென்று கேட்கவேண்டிய தேவையில்லை. எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் தாயுள்ளம் கொண்டவர்கள். நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன், தெளிவாகச் சொல்கிறேன். நல்லதாக இருந்தால் உரியதாக இருந்தால் அவர் கொடுப்பார். இடைத் தேர்தல் வேண்டுமென்று சொன்னதால்தான் நான் பதில் சொல்லயேண்டியதாயிற்று. இடைத் தேர்தல் பற்றி ஒரு சட்டமன்றத்திலே பேசவேண்டிய அவசியம் என்ன? செய்யாறு இடைத் தேர்தல் நடந்தது, நாங்கள் எல்லாம் புரட்சித் தலைவர் தாரக மந்திரத்தைச் சொன்னோம். திரு. குப்புசாமி அவர்கள் வெற்றிபெற்றார்கள். அதைப் போலவே திருப்பத்தூரிலே இடைத் தேர்தல் வந்தது. நாங்கள் எல்லாம் வேலை செய்தோம். என்னுடைய நண்பர் திரு. மணவாளன் அவர்கள் வெற்றிபெற்றார்கள். புரட்சித் தலைவர் பெயரைச் சொன்னோம். இடைத்தேர்தல் வேண்டும் என்று சொல்லி மக்களிடத்திலே போய் இடைத் தேர்தல் நான் தான் கேட்டேன் என்று நாடகமாடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் இடைத் தேர்தலைப்பற்றிப் பேசுவது முழுக்கமுழுக்கத் தவறானது.

திரு. ரா. பெரியசாமி: நாடகம் ஆடுகிறார் என்று சொல்கிறார், எங்கள் கட்சிக்காரர் நாடகமாடவில்லை....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): இடைத் தேர்தலைப்பற்றி பேசாமல் வேறு பேசுங்கள்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஏதோ திருவண்ணாமலை கோயில் பூசாரி பெயரை போடவில்லை, சுவரொட்டியிலே சட்டமன்ற உறுப்பினர் பெயரைப் போட்டார்கள், கலசப்பாக்கம் தொகுதி உறுப்பினர் பெயரைப் போட்டார்கள். என்னுடைய பெயரைப் போடவில்லை என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் மீது எனக்கு அன்பு உண்டு, பக்தி உண்டு. அதைப்போன்றே திரு. சித்தன் அவர்களிடமும் உண்டு, அவர்கள் எல்லாம் இந்த அரசாங்கம் செய்ததைப் பாராட்டுகிறார்கள். ஆனால் பின்னாலே இருக்கிறவர்கள், அதை உணர வேண்டும். திருவண்ணாமலை கோயில் பூசாரி பெயரைப் போடவில்லை என்பதைச் சொல்கிறார்கள். என்னுடைய பகுதியிலே பார்ம் கொடுத்தார்கள். லோன் கொடுக்கிறார்களாம், லோன்



கொடுக்கட்டும் பரவாயில்லை, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே இருந்து லோன் கொடுக்கிறார்களாம். உறுப்பினர் சேர்த்துக் கொள்ளலாம், லோன் கொடுக்கலாம், எங்களுக்கு வருத்தம் இல்லை. ஆனால் அப்படி லோன் கொடுப்பதற்கு ஒரு விழா எடுக்கிறார்கள். அதிலே மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த நம்முடைய மாண்புமிகு பூஜாரி அவர்கள் வருகிறார்கள். லோன் கொடுப்பதோ சிறு விவசாயிக்கு. யார் சிறு விவசாயி, பெரிய விவசாயி என்று பார்த்துச் சொல்கிற தண்டல்நாயகம், தாசில்தார் ஆகியவர்கள் இருக்கின்ற அந்த இயந்திரத்தை இயக்குகின்ற நிர்வாகத்தை நடத்துகின்றவர் எங்கள் தங்கத் தலைவன், தானைத் தலைவன் புரட்சித் தலைவர் கையிலே தானே இருக்கிறது. சிறிய விவசாயியா, பெரிய விவசாயியா என்று சொல்கிற இயந்திரம் இந்த மாநில அரசின் கையிலேதான் இருக்கிறது. சிறு விவசாயி யார் என்று சொல்வதற்கு எங்களை அழைக்கவில்லை, அமைச்சர்களை அழைக்கவில்லை, டெல்லியிலிருந்து வருகின்றவர்கள் வந்து கொடுப்பது எப்படிப் பொருத்தம்? ஒரு சுவரொட்டியிலே திருவண்ணாமலை கோயில் பூசாரி பெயர் போடவில்லை என்று சொல்கிற இயக்கத்தைச் சார்ந்த நண்பர்கள் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சரிடம் இந்த விழாவிற்கு சிறிய விவசாயி என்று சொல்கின்ற இயந்திரம் மாநில சர்க்காருடைய கையிலே இருப்பதால் அவர்களையும் அழைக்க வேண்டும் என்று சொல்ல வேண்டாமா? அப்படிச் சொல்லாததால் நாங்கள் எந்தவிதத்திலும் கோபித்துக் கொள்ளவில்லை. என்றைக்கும் மக்கள் புரட்சித் தலைவரின் பக்கம்தான் இருப்பார்கள் என்று எங்களுக்குத் தெரியும். இப்படிக் குறைகளைச் சொல்வது என்றால் நாங்கள் எத்தனையோ சொல்லிக்கொண்டு போகலாம். அதைச் சொல்வதற்கு நாங்கள் விருப்பப்படவில்லை. அடுத்து தொழிற் சங்கத் தலைவராக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். பொறியியல் கல்லூரியிலேயும், மருத்துவக் கல்லூரியிலேயும் ஏலம் விடுகிறார்கள்என்ற பெரியகுற்றச்சாட்டை இங்கே சொன்னார்கள். நான் கேட்க விரும்புகிறேன். இரண்டாண்டுகளுக்கு முன்னால், சென்னையிலே இருப்பவர்கள், தமிழகத்திலே இருப்பவர்கள், வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். வசதி அற்றவர்கள் அரசாங்கத்திலே மனுப் போடுகிறார்கள், அவர்களில் தகுதி உள்ளவர்கள் புரட்சித் தலைவர் ஆட்சியிலே டாக்டர் பட்டம் பெறுகிறார்கள். இப்படி ஏழைகள் தேர்வு எழுதி கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெறுகிறார்கள். ஆனால் வசதியுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகள் சரியான மார்க்குகளை எடுக்கவில்லை என்ற காரணத்தினால் கர்நாடகத்திற்கும், மணிப்பாலுக்கும் போகிறார்கள். என்னுடை நண்பர் ஒருவர் அங்கே சென்று இரண்டு இலட்சம் ரூபாய்களைக் கொடுத்து எம்.பி.பி.எஸ்., சீட் வாங்கி இருக்கிறார். பெங்களூருக்குச் சென்று 50,000 ரூபாய் கொடுத்து பொறியியல் கல்லூரியில் இடம் வாங்குகிறார்கள். தமிழகத்திலே உள்ள பண வசதி படைத்தவர்கள், இங்கே தனியார் கல்லூரிகள் இல்லாதகாரணத்தினால் பெங்களூருக்குச்சென்று, மணிப்பாலுக்குச் சென்று சீட்டுகளை வாங்கக்கூடிய நிலைமை இருந்தது.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாற்றுத் தலைவரவர்களே, கர்நாடக அரசைப்பற்றி இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினரவர்கள் குற்றம் சாட்டிப் பேசுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இங்கே உள்ள கல்லூரிகளில் இரண்டரை இலட்சம் ரூபாய் என்று போர்டே போடப்படுகிறது. பேப்பரில் அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோமே தவிர, கர்நாடகத்தைப்பற்றி அவர்கள் இங்கே சொல்ல வேண்டிய தேவையில்லை என்பதை இந்தச் சபையில் கூறிக்கொண்டு, இதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): உறுப்பினருடைய நண்பர் வாங்கியதாகத்தான் சொல்கிறார், எனவே, இதிலே நீக்குவதற்கு ஒன்றுமில்லை.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாற்றுத் தலைவரவர்களே, நான் கர்நாடக அரசைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மணிப்பாலில் உள்ள தனியார் கல்லூரியில் இப்படி இடம் பெற்றதைப்பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். கர்நாடக மாநிலத்தில் உள்ள தனியார் கல்லூரிகளில் இப்படிப் பணம் வாங்குகிறார்கள் என்று சொன்னேனே தவிர, கர்நாடக மாநில அரசு வாங்குகிறது என்று நான் சொல்லவில்லை. இப்படி அங்கே உள்ள தனியார் கல்லூரிகளில், மணிப்பாலில் எம்.பி.பி.எஸ்., சீட்டிற்கு இரண்டு இலட்சம் ரூபாயும், பெங்களூரில் உள்ள தனியார் கல்லூரியில் பொறியியல் கல்லூரிக்கு 50,000 ரூபாயும் வாங்குகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது என்பதால், இங்கேயுள்ள பணக்காரர்களின் பிள்ளைகள் குறைந்த மார்க்குகளை எடுத்திருந்தால் அங்கே சென்று கொடுக்கின்ற அந்தப் பணமும் இந்த மாநிலத்திலேயே இருக்கட்டும், அதற்காக இங்கே கல்லூரிகள் இருக்க வேண்டுமென்ற உணர்வோடு இந்த அரசாங்கம் அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. அதைப் பாராட்டாமல், மாண்புமிகு அருமை நண்பர் சட்டமன்ற உறுப்பினரவர்கள் இதைக் குறையாகச் சொல்வது முறையாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருந்தொழில்களைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் நல்லமுறையில் உயர வேண்டுமென்று கருதி, கரும்புத் தொழிற்சாலைகளைப் பற்றிப் பரிந்துரை செய்து, அது டெல்லி மாநகரத்திற்குச் சென்று, இன்னும் அங்கிருந்து அதற்கான பதில் வரவில்லை.

இங்கே பேசிய காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள், நம்முடைய தோழமைக்கட்சியாக விளங்குகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைச்



சேர்ந்தவர்கள் இந்தத் தொழிற்சாலைகளைக் கேட்கிறார்கள், எனவே நீங்கள் அதற்கு அனுமதி தாருங்கள் என்று டெல்லியிடம் சொல்லியிருந்தால் அதை நான் உள்ளபடியே பாராட்டியிருப்பேன்.

திரு. ஓமலூர் அன்பழகன் அவர்கள் குற்றச்சாட்டாக ஒன்றைக் கூறினார்கள். சாராயக் கடைகளை அனைவருக்கும் கொடுக்கவில்லை. காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): மாண்புமிகு உறுப்பினருக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. சப்ஜெக்டை விட்டு அவர்கள் பேசுகிறார்கள். ஆளுநர் உரை பற்றி அவர்கள் பேசவில்லை. இதோடு முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. பெரியசாமி: 72 அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்த மாதிரி பேச வேண்டாம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்று திரு. ஓமலூர் அன்பழகன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அப்படிச் சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஆகவே, கட்சி சார்பாக இங்கே கொடுக்கப்பட்டதாகச் சொல்வது தவறு. நான் தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர்.

** ** **

இதை நான் குறையாகச் சொல்லவில்லை. தகுதி என்ற அடிப்படையிலே பார்த்துத்தான் கொடுத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11—00)

திரு. என். எஸ். வி. சித்தன்: ** 'ஸ்வீப்பிங் ரிமார்க்' ** காக ஒன்று சொல்கிறார்.
என்று சொல்லியிருக்கிறார். அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமாதிரி ஸ்வீப்பிங் அலிகேஷன்ஸ் அவைக் குறிப்பில் இருப்பது சரியாக இருக்காது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): ** ** என்பதை வேண்டுமானால் நீக்கிவிடலாம்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில், உச்சநீதிமன்றத்தில் இருக்கின்றன. மது சம்பந்தமான மசோதாவைக் கொண்டு வரப் போகிறோம். அப்பொழுது பேசலாம்; தயவுசெய்து இங்கே கட்டுப்பாடோடு பேசுவது நல்லது என்று தலைவர் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** ஒரு கிளாரிபிகேஷன். நான் சம்பந்தப் பட்ட விஷயம் பற்றிச் சொல்லியிருப்பதால், பதில் அளிக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு):** உங்கள் சம்பந்தப்பட்டதைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கு. சுப்பராயன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு அவர்கள் பேசுகிற பொழுதும் சரி, ஆளுகிற தரப்பிலும், எதிர்க் கட்சித் தரப்பிலும் பேசுகிற பொழுதும் சரி, பரவலாக சொல்லப்படுகிற விஷயம் இடைத் தேர்தலைப் பற்றிய விஷயமாகும். அந்த இடைத் தேர்தல் பற்றிய விஷயத்தில், தங்கள் மூலமாக நான் மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் பெற விரும்புவது, இத்தகைய பிரச்னைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கின்ற முறையிலேயும், கண்ணியத்தைப் பற்றிய அண்ணாவின் உணர்வுகளை மதிக்கின்ற முறையிலேயும், இனிமேல் வருகிற இடைத் தேர்தல்களில் அமைச்சர்கள் யாரும் பங்கு பெறுவதில்லை என்ற ஒரு நிலையை அரசு மேற்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இடைத்தேர்தலைப் பற்றி பேச வேண்டிய அவசியமே இல்லை; இடைத் தேர்தலே வர வேண்டாம் என்பதுதான் நம்முடைய எண்ணம். இந்த அவையிலே இருக்கிற 234 உறுப்பினர்களும் வளம் பல பெற்று, நலம் பல எய்தி, நீண்ட காலம், பல்லாண்டு, பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென்பதுதான், எந்த ஒரு குறையும் அவர்களுக்கு வரக் கூடாது, அந்தத் தொகுதிக்கும் ஒரு குறையும் வரக்கூடாது என்பதுதான் நம்முடைய எண்ணம். அப்படியே இடைத்தேர்தல் வந்தாலும் நிதி அமைச்சர் என்ற முறையில் எனக்குத்தான் அதிகச் செலவு ஏற்படுகிறது; அதற்குத் தனியாக ஒதுக்க வேண்டி வரும். அந்தப் பிரச்னையைத் தனியாக விட்டுவிடலாம்.

அமைச்சர்கள் கலந்து கொள்ளலாமா வேண்டாமா என்பது நீண்ட பெருங்காலமாக அரசியல் உலகிலே இருக்கிறது. அகில இந்தியாவிலே இருக்கிற 22 மாநிலங்களிலும் சட்டதிட்டமாகக் கொண்டு வந்து, மத்திய அரசும் கொண்டு வந்து, தேர்தல் வருவதற்கு முன்னாலே, அந்த அந்த அரசுகளே தாங்களே



ராஜிநாமா செய்துவிட்டு, தனியாகத் தான் நிற்க வேண்டுமென்ற ஒரு கருத்து உண்டு. அப்படி வருகிறபொழுது, மத்திய அரசிலே இருப்பவர்களே, ராஜிநாமா செய்துவிட்டுத்தான் நிற்க வேண்டு மென்றெல்லாம் வந்தது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருகின்ற பொழுது, 22 மாநிலங்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற ஒரு கருத்து திட்டவட்டமாக, தெளிவாக, சட்டதிட்டமாக வருமேயானால் நாமும் பின்பற்றலாம். நாம் மட்டும் பின்பற்றுவது பொருந்தாது.

கூடுமான வரையில், அமைச்சர்கள், ஏற்கனவே இருக்கிற சட்டதிட்டப்படி, மத்திய அரசு கொடுத்திருக்கிற வழிமுறைப்படி, நாமும் கொடுத்திருக்கிறபடி, தேர்தல் காலத்திலே கட்சி உறுப்பினர் என்ற முறையிலே தான் அமைச்சர்கள் போகலாம் என்று இருக்கிறதே தவிர, அரசாங்கச் செலவிலேயும் அரசாங்கத் தினுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தியும் போகக்கூடாது என்று இருக்கிறது. அந்த முறை ஒழுங்காகக் கடைபிடிக்கப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய எண்ணம்.

**திரு. செ. ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஆளுநர் ஆற்றிய உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இரண்டொரு கருத்துக் களை, வெள்ளத்தால் அடித்துப்போகாத மீதம் இருக்கிற காரணத்தால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுட்டிக் காட்டாமல் ஏதோ இரண்டொரு மாவட்டங்கள் பாதிக்கப் பட்டனவாக தெரிவித்திருப்பது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் எந்த அளவுக்கு மன வேதனை அடைகிறார்கள் என்பதை மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசுக்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக மதுராந்தகம் தொகுதி முற்றிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தொகுதி என்பதை தமிழ்நாட்டிலிருந்து அந்த சாலை முழுவதும் நடந்து சென்றார்களே மக்கள், அந்த இலட்சக்கணக்கான மக்கள்தான் நாங்கள் பாதிக்கப்பட்டதற்கு சாட்சி என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மற்றொன்று. பாதிக்கப்பட்ட நாங்கள் சுமூகமான சூழ் நிலைக்கு வர இன்னும் எத்தனை ஆண்டு காலம் ஆகும் என்பதை எங்களாலே யோசித்துச் சொல்ல முடியவில்லை என்பதை மிகுந்த மன வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், எத்தனையோ ஆண்டு காலமாக வசதியாக வாழ்ந்து வந்த நாங்கள் இன்றைக்கு குடிப்பதற்கு தண்ணீர்கூட இல்லாத அளவுக்கு தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை, மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மதுராந்தகம் ஏரி திடீரென்றுஉடைந்துவிட்டதா அல்லது ஆளும் கட்சிக்காரர்கள் சொல்வதைப்போல உடைக்கப்பட்டுவிட்டதா என்பது கேள்விக்குரிய ஒன்றாகும். நான் யார்மீதும் குற்றங்கூற விரும்பவில்லை; என்னுடைய அரசியல் வாழ்க்கையில் அந்தப் பழக்கமும் கிடையாது. அதேநேரத்தில் ஆண்டவனாக இருந்தாலும் நெஞ்சில் தோன்றியதைச் சொல்லாமல் இருந்ததும் இல்லை. சொல்ல வேண்டியதைச் சொல்வதுதான் வாடிக்கை. அதனால் சொல்கிறேன். இந்த அரசுக்கு நிர்வாகத் திறமை இல்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். நான் இவ்வாறு கூறுவதற்கு மன்னிக்க வேண்டும்.

இந்த அரசிடம் ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். வரும் முன்பு காப்பதுதான் அரசாங்கத்தின் கடமை. ஆனால் இன்றைக்கு வந்த பின்னால்கூட நாங்கள் காப்பாற்றப்படவில்லை. வெள்ளம் வந்த பின்னால்கூட ஏதாவது உதவி பண்ணினீர்களா என்றால் இல்லை. இன்னும் அந்த உடைந்த ஏரியையாவது அடைத்திருக்கிறீர்களா என்றால் அதுவும் இல்லை. முற்றிலுமாகப் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியை பஞ்சப்பகுதி என்று அறிவித்திருக்கிறீர்களா என்றால் அதுவும் இல்லை. அதற்குரிய அமைச்சர்களும் இங்கே இல்லை என்று நான் நினைக்கிறேன். அது ஒரு பற்றாக்குறை பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. வாங்கிய கடனை எல்லாம் தள்ளுபடி செய்கிறோம் என்று யாராவது சொன்னீர்களா, இல்லை. இந்த ஆளுநர் உரையிலேயாவது எவ்வளவு ஆடு, எவ்வளவு மாடு, எவ்வளவு வெற்றிலைக் கொடிக்கால், கரும்பு நிலம் போச்சு என்று ஒரு வார்த்தை சொல்லப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அந்த மதுராந்தகம் தொகுதி மக்களைக் காப்பாற்ற ஏதாவது செய்திருக்கிறீர்களா, இல்லை. மதுராந்தகம் ஏரியை எப்போது கட்டப்போகிறோம்; உடைந்து போன ஏரியை எப்போது கட்டுவதாகத் திட்டம் என்று ஏதாவது சொல்லியிருக்கிறீர்களா? அதைச் சொல்லவும் இங்கே அமைச்சர் இல்லை. ஆயத்தீர்வை அமைச்சர் ஒருவர்தான் இருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் இங்கே இருந்தார்கள்; இப்போதுதான் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்குச் சென்றார்கள்.

திரு. செ. ஆறுமுகம்: அமைச்சர்கள் இங்கே இருந்தார்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இப்போது ஆயத்தீர்வை அமைச்சர் ஒருவர் மட்டும்தான் இருக்கிறார். ஆக, நான் ஆரம்பத்திலேயே சொன்னமாதிரி யார்மீதும் நான் குறை சொல்லவில்லை.

நாங்கள் முழுக்க, முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கிற மக்கள். ஆனால் இன்னும் உடைந்த ஏரி அடைக்கப்படவில்லை. எப்படி, எப்போது அடைக்கப்படும்? அது வேறு விவகாரம். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று ஆளுநர் சொல்லியிருக்கிறார். வெள்ளத்தில் சிக்கிக்கொண்டு, நானும் அங்கே தான் இருந்தேன், வெளியே எங்கும் போகவில்லை. என்ன போர்க்கால நடவடிக்கை என்று தெரியவில்லை. என்ன 'டெஃபனிஷனில்' போர்க்கால நடவடிக்கை என்று சொல்கிறார்கள் என்பது புரியவில்லை. அரசியல் வாழ்க்கையில் நானும் 40 ஆண்டு காலமாக இருக்கிறேன். போர்க்கால நடவடிக்கை என்று சொல்வதற்கு விளக்கமே வேறு; இப்போது நடைபெறுகின்ற நிலைமை அல்ல. அப்படி என்ன போர்கால நடவடிக்கையை அங்கே எடுத்துவிட்டீர்கள்? போர்க்கால நடவடிக்கை என்று சொல்லி விடலாம் அதன்படி செய்ய வேண்டாமா? ஏதோ சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து அந்த வழியாக நடந்துசென்ற மக்கள்தான் அதற்கு தீர்ப்பு அளிக்க வேண்டும், நிர்வாகம் சரியில்லை என்பதற்கு.

(முற்பகல் 11-10).

இதற்கிடையில் மதுராந்தகம் ஏரி உடைப்பெடுத்தது. 13 ஆம் தேதி காலை 6½ மணிக்கு ஏரி உடைப்பெடுத்து கலங்கல் வருகிறது. ஆனால் அக்டோபர் மாதத்தில் ஏரி நிரம்பி வழிந்துகொண்டிருக்கிறது. ஏரி என்பது பல இடங்களில் பேசப்படுவது போன்றதல்ல எங்களுடைய மதுராந்தகம் ஏரி. மதுராந்தகம் ஏரிக்கு 160 மைலுக்கு அந்தப் பக்கத்தில் மழை பெய்தால்கூட எங்களுக்கு கலங்கல் போய்விடும். அதாவது கலங்கல் என்று எங்கள் பக்கத்திலே சொல்வார்கள். ஓவர் ஃப்ளோ என்று அதற்கு அர்த்தம். அவ்வாறு உபரியாக நீர் போகும். இப்படி அவ்வளவு தூரத்தில் வேலூருக்கு அந்தப் பக்கத்திலே மழை பெய்தால்கூட எங்கள் மதுராந்தகம் ஏரி நிரம்பிவிடும். இப்படி அக்டோபர் மாதத்திலே ஏரி நிரம்பி கலங்கல் போகிறது.

நவம்பர் மாதம் 2 ஆம் தேதி தொடர் மழை தொடர்ந்து விட்டது. 9 ஆம் தேதி புயல் காற்று தொடங்கிவிட்டது. 12 ஆம் தேதி காற்று அடங்கிவிட்டது. மழை பெய்ததில் 13 ஆம் தேதி காலையில் 6½ மணிக்கு ஏரி உடைகிறது. இதிலே விசித்திரம் என்ன என்றால் அன்று மாலை அகில இந்திய வானொலிச் செய்தி மூலம் ஒரு செய்தி சொல்லப்பட்டது. அந்தச் செய்தியை யார் சொல்வது? நம்முடைய தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் அறிவிக்கிறார், அவர் என்ன செய்தி அறிவிக்கிறார் என்றால் 56,000 மண் மூட்டைகளைக் கொண்டு வந்து ஏரி உடைப்பைச் சரி செய்துவிட்டோம் என்று. இப்படி 6½ மணிக்கு செய்தி வரும்போது அந்த ஏரியிலே காக்காய் மீன் பிடிக்கிறது. இதுதான் விவகாரம். இதை நான் சொல்வதால் யார்மீதும் குறை சொல்வதாகக் கருதக்கூடாது. இந்த அரசுக்கு இது

[திரு. செ. ஆறுமுகம்] [1986 சனவரி 22

எவ்வளவு கெட்ட பெயரை உண்டுபண்ணும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழகத்திலே இருக்கின்ற நிலவரம், நிர்வாகம் பற்றித் தெரியாமல் ஒரு தலைமைச் செயலாளர் காலையில் ஏரி உடைகிறது மாலையில் அடைத்துவிட்டோம் என்று சொல்கிறார். 56,000 கோணி மண் மூட்டையை எந்த ஊரிலே இருந்து வாங்கினார்கள்? அவையெல்லாம் எந்த லாரியிலே மதுராந்தகத் திற்கு வந்தது. அந்த 56,000 மூட்டைக்கு செக் கொடுக்கப் பட்டதா? அல்லது டிராஃப்ட் கொடுக்கப்பட்டதா? அல்லது கேஷாகக் கொடுத்து வாங்கிக் கொண்டு வந்தார்களா? அந்த 56,000 கோணி மூட்டைக்கு மண்ணை எங்கே இருந்து எடுத் தீர்கள்? எல்லா இடத்திலும் தண்ணீர் தானே இருக்கின்றது. ஊரெல்லாம் வெள்ளம். என்னுடைய செட் நல்ல வேளையாக மூழ்காமல் இருந்தது. என்னுடைய வீடு பங்களா இல்லை; குடிசைதான். அது வேறு விவகாரம். ஆனால் இப்படி ஒரு செய்தியை நம்முடைய தலைமைச் செயலாளர் நாட்டுக்கு அறிவிக் கிறார் என்பதுதான் விவகாரம். ஏரி உடைந்து எல்லாம் போய் விட்டது. கரும்பு போய்விட்டது; நாமும் போய்விட்டோம்; காரைக்குடிக்காரன் வந்திருந்தான்; அவனும் போய்விட்டான்; இப்படி எல்லாம் போயாச்சு. அதற்கப்புறம் அமைச்சர் அவர்கள் வருகிறார்கள்.

வரிசை, வரிசையாக அமைச்சர்கள் வருகிறார்கள். நான் முன்பே எங்களுடைய தலைவருக்கு ரகசியமாகச் செய்தி அனுப்பினேன். சர்க்காரைப் பற்றித் தெரியும். எனக்கு நீண்ட நாட்களாக அரசியல் தெரியும். 15 ஆம் தேதி செய்தி அனுப்பி என்னுடைய தலைவரை வரவழைத்துவிட்டேன், 16 ஆம் தேதி தலைவர் வந்து பார்க்கிறார். நான்கு கிலோ மீட்டர் தூரம் நடந்தே வந்து வழியை எல்லாம் பார்க்கிறார். அவர் வந்து பார்த்துவிட்டுப் போகிறார். அது அவருடைய கடமை. வந்து பார்த்தார். அமைச்சர் அதற்குப் பிறகு வருகிறார். அமைச்சரைத் தனிப்பட்ட முறையில் நான் குறை சொல்ல வில்லை. எங்கள் ஊர் அமைச்சர் வந்தார். நல்லவேளையாக எங்கள் ஊர் அமைச்சராக இருந்த காரணத்தால் நல்லவேளையாக தாலுக்கா ஆஃபீஸில்தான் உட்கார்ந்து இருந்தார். அதனால் அவரைப் பார்க்க முடிந்தது. பிறகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் வருகிறார். எங்களைப் பார்க்கிற அளவுக்கு அவர் வரவில்லை. அங்கே வந்து எங்கோ பார்த்துவிட்டு போய் விட்டார். பாதிக்கப்பட்ட ஊரிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்துப் பேசி இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் நான் எல்லா அமைச்சர்களிடத்திலும் பேசி இருக்கிறேன். அதிலே எனக்கு எந்தவிதமான குறைபாடும் கிடையாது. இன்னும் சொல்லவேண்டும் என்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உங்களுக்கெல்லாம் முன்பு எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நீங்கள்தான் ஏதேதோ பேசு கிறீர்கள். இப்படி வருகின்ற அமைச்சர்கள் எல்லாம் நம்மைத் தாண்டிப் போகிறார்களே என்றெல்லாம் தோன்றாதா? கொள்கை வேறு. அதிலே நீங்கள் தனியாக இருக்கிறீர்கள்; நாங்கள் தனியாக இருக்கிறோம். அது வேறு விவகாரம்.



1986 சனவரி 22]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): நேரத்தை அனுசரித்துப் பேசுங்கள்.

திரு. செ. ஆறுமுகம்: எனக்குக் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும். நாளைக்கு எங்கள் கட்சியினர் பேசவேண்டிய நேரத்தில் வேண்டுமானால் குறைத்துவிடுங்கள். எனக்கு இன்னும் கொஞ்சம் நேரம் வேண்டும். ஒரு 5 நிமிஷம் அதிகமாக கொடுததால் என்ன ஆகிவிடும், ஒன்றும் ஆகாது சார். கொடுங்கள்.

பார்த்துவிட்டு வந்த அமைச்சர் பத்திரிகையிலே அறிக்கை விடுகிறார்கள். கருணாநிதி பல்லக்கிலே போனார் என்று. எல்லோரும் ஒரு நாள் பல்லக்கிலேதான் போகப்போகிறோம். யாருமே போகாமல் இருக்கப்போவதில்லை. பல்லக்கிலே போக வில்லை என்றால் நகராட்சிக்காரனாவது தூக்கிக்கொண்டு போவான். அது வேறு விவகாரம். ஆனால் இப்படி பேசலாமா? ஒரு எதிர்க்கட்சித் தலைவர். முன்னாள் முதலமைச்சர். இன்னும் கேட்டால் உங்களுக்கெல்லாம் சேர்த்து ஒரு காலத்தில் தலைவராக இருந்தவர். அவரைப் போய் பல்லக்கிலே போனார் என்று சொல்லுகிறீர்களே நியாயமா? அது மட்டும் அல்ல ஆறுமுகம் வீட்டிலே கருணாநிதி விருந்து சாப்பிட்டார். அந்த நிலைமையிலே, விருந்து கொடுக்கக்கூடிய நிலைமையிலா அப்போது நான் இருந்தேன்? நானே எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்து கொட்டகையிலே போய் உட்கார்ந்திருந்தேன். அங்கே ஒரு டீ கொடுத்தேன் அவ்வளவுதான். ஆனால் முன்பு விருந்து கொடுத்தது என்னவோ உண்மைதான். மறைந்த தந்தை பெரியாரிலிருந்து, பேரறிஞர் அண்ணாவிலிருந்து, என்னிடத்திலே விருந்து சாப்பிடாத வர்கள் இல்லை. இங்கே உள்ள அமைச்சரவையிலே உள்ளவர் களிலேயே பலபேர் சாப்பிட்டிருக்கிறார்கள். என்னிடத்திலே, மதுராந்தகம் ஆறுமுகத்திடத்திலே விருந்து சாப்பிடாமல் யாரும் இருந்திருக்க முடியாது. அது காலம் வேறு. ஆனால் அந்த நேரத்தில் டீ தான் கொடுத்தேன். வெள்ளம் வந்து என்னுடைய தொகுதி மக்கள் பாதிக்கப்பட்டபோது, அவர்களைப் பார்த்து விட்டு வரும்போது விருந்து கொடுக்க முடியுமா? அப்படிச் சொல்லலாமா? அமைச்சர்கள் வந்து பார்வையிட்டு விட்டுப் போனார்கள். இல்லையென்று சொல்லவில்லை. பார்க்கட்டும். (மணியடிக்கப் பெற்றது.)

ஒரு முக்கியமான விவகாரம் சொல்லிவிடுகிறேன். எல்லாம் ஓய்ந்த பிற்பாடு, புயல்மழை முடிந்த பிற்பாடு, நிதி கொடுக்க சர்க்கார் பண ஒதுக்கீடு செய்தது. நிதி கொடுப்பதற்கான வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. அப்போது திடீர் என்று ஒரு நாள் இரவு பாலாத்தங்கரையிலே 78,700 ரூபாய் கிடந்தது. எப்படிக் கிடந்தது? அங்கே தான் விவகாரம். ஒரு கிராம அதிகாரியிடத்திலே 78,700 ரூபாய் போக வேண்டிய அவசியம் என்ன? அவர் இருக்கும் இடத்திற்கும் பணம் கிடந்த இடத்திற்கும் 20 மைல் வித்தியாசம்.

அதுவும் இரவு பத்து மணிக்கு இரிசானூர் என்ற கிராமத்தில் ஏழைகளுக்கு சாப்பாடு போட்டு விட்டு, அவர் புறப்பட்டபோது பணம் வைத்திருக்கிறாய், இங்கேயே இரவு தங்கி படுத்துத் தூங்கு

என்று சொல்லியும், அவர் பிண்ணாலூர் கிளம்பிருக்கிறார். அவருடைய சொந்த ஊர் செங்கல்பட்டு அருகிலே இருக்கிற பில்லாவரம். ** ** **
அவருடன் 78,700 ரூபாய் மோட்டார் சைக்கிளில் வருகிறது. வந்தபோது, ஆத்தங்கரையில் அந்த 78,700 ரூபாய் அடங்கிய பணம் பெட்டியோடு கீழே விழுகிறது. பின்னாடி எக்ஸ்பிரஸ் பஸ் ஒன்று போகிறது. பி.டி.சி. பஸ் நெம்பர் 507. தெளிவாகத்தான் சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். அவர்கள் எடுத்துக் கொண்டு வந்து, அரசாங்க அதிகாரிகளிடத்தில் தருகிறார்கள். அதிலே இன்னொரு விஷயம். அந்த அதிகாரியை சஸ்பென்ட் செய்து அதிலே ஒரு வாக்கியம். எப்படி அக்யூடென்ஸ் இல்லாமல் அக்கவுன்ட்ஸ் இல்லாமல்......(குறுக்கீடு) நான் ஒன்றும் தப்புச் சொல்லவில்லை. நடந்ததைத் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு மாறுற்த் தலைவர் (திரு. மா. சின்னராசு) : அந்தப் பணம் அரசாங்கத்தைச் சேர்ந்துவிட்டது எனப் பத்திரிக்கையிலும் வந்து உள்ளது. பத்திரிக்கையில் வந்த செய்திகளை இங்கே சொல்வது சரியல்ல. (குறுக்கீடு).

திரு. செ. ஆறுமுகம் : நான் யாரைப் பற்றியும் குற்றமாகப் பேசவில்லை. என் தொகுதியைப் பற்றிப் பேசுகிறேன். தயவு செய்து நடுவில் யாரும் குறுக்கிட வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர்களே, நண்பர்களே, உங்களுக்கே அதிகமாகத் தெரியும். நான் பேசி முடித்துவிடுகிறேன். அதன் பிறகு பேசுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்தப் பணம் 78 ஆயிரத்திலே 16 ஆயிரம் ரூபாய் ஏதோ எக்சஸ் வைத்திருந்தார்கள் என்று அந்த அதிகாரி சஸ்பென்ட் ஆகியிருக்கிறார்.

இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் வெள்ளம் வந்து பாதிக்கப் பட்டிருந்த பகுதியைச் சேர்ந்த நாங்கள், சர்க்கார் கொடுத்த 300 ரூபாய், 150 ரூபாய் பணம் போதவில்லை, மக்களுக்குப் போய்ச் சரியாகச் சேரவில்லை என்று, ** **
திறமையில்லாத அரசாங்கம் இது என்று கூறி முடித்துக் கொள் கிறேன், வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு) : ஆதாரம் இல்லாமல் சொல்லப்பட்ட ** ** ** :, என்ற பகுதிகளை நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

(முற்பகல் 11-20)

*திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் முன்மொழிந்திருக்கும் ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு வேண்டிய அடிப்படை தேவை களான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் அளிக்கும் சித்தாந்தத்தை மனதிலே வைத்து எந்தெந்த வகையில் மக்களின் தேவைகளைப்பூர்த்தி செய்ய முடியும் என்று பார்த்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதனை உலகமே கண்டு வியக்கிறது. அந்த நல்ல உள்ளத்திற்கு என்னுடைய அன்பு கலந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளும் வகையில் இருக்கிற நல்லதொரு சீரிய திட்டம் ஆண்டுதோறும் 10லட்சம் இல்லங்கள் என்ற முறையில் மூன்றாண்டு களில் 30 லட்சம் வீடுகள் கட்டும் திட்டமாகும். ஒரு சிலரை தவிர எல்லோரும் இந்த நல்ல திட்டத்தை வரவேற்கிறோம். ஒரு சிலருக்கு கூட என்ன ஐயப்பாடு என்றால் இந்தத் திட்டம் செயல் படுமா என்பதுதான். ஏற்கனவே இதுபோன்ற நல்லபல திட்டங்கள் நிறைவேற்றப்படுமா என்ற ஐயப்பாட்டினைக் கொண்டவர்கள் மத்தியில் தான் இந்த சந்தேகம் வந்ததே தவிர, புரட்சித் தலைவர் அவர்களை நம்பியவர்களுக்கு என்றைக்கும் இந்த எண்ணம் ஏற்பட்டதில்லை. இந்தத் திட்டத்தை அரசு செய்ய விருப்பதை நாட்டுமக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள்.

அடுத்து மின்சாரத்தைப்பற்றி ஒரு சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகத்திலே தொழிற் துறைக்கும், விவசாயிகளுக்கும், மக்களுக்கும் அதிக மின்சாரம் தேவை யென்பதை மனதிலே கொண்டு, எவ்வளவு பொருளாதார சிக்கல்கள் இருந்தாலும் அதிக மின் உற்பத்தி செய்வதற்காக தகுந்த திட்டங்களை அரசு இந்த உரையில் சுட்டிக்காட்டி யிருப்பதை வரவேற்கிறேன்.

அதேபோல குடும்ப நலத்திட்டத்தை நல்லமுறையில் செயல் படுத்தியதற்காக தமிழக அரசை மத்திய அரசு பாராட்டி இருக் கிறார்கள். அந்தப் பாராட்டுதல்களுக்காக மத்திய அரசுக்கும் குறிப்பாக பாரத பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கல்வியைப்பற்றி உறுப்பினர்கள் பலரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். எங்களைப் போன்றோர் மக்கள் மத்தியில் அதிகமாக பழகி வருகிறோம். மற்ற உறுப்பினர் களை விட நாங்கள் அதிகமாக மக்களோடு பழகி வருகிறோம். என்றே சொல்லலாம். இன்றைக்கு இருக்கிற நாட்டு நிலைமை என்னவென்றால், டாக்டர் படிப்பு, பொறியியல் படிப்பு, பாலிடெக்னிக் படிப்பு என்பது எல்லோருக்கும் கிடைக்கிற நிலை இருக்கிறது. முன்பு இந்த நிலை இல்லாமல் இருந்தது. இன்றைக்கு சாதாரண குடிமகன் கூட எந்த ஊரிலே இருந்தாலும் முக்கியமான துறைகளில் சேர்ந்து படித்து பட்டம் பெறுகிற சூழ்நிலை இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏற்படுத்தி

[திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்] [1986 சனவரி 22

இருப்பதைக் கண்டு எல்லோரும் பாராட்டுகிறோம். இவ்வாறு உலகத்திற்கே கல்வித் துறையில் முன்னோடியாக இருந்து செயல்பட்டு இதிலே மிகப் பெரிய சாதனையை அரசு கண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

அடுத்தபடியாக, விளையாட்டுத் துறையை எடுத்துக் கொண்டால், இந்திய துணைக்கண்டத்தில் தமிழகம் மிகச் சிறப்பான நிலையை எட்டியிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு கோவையில் அனைவரும் பாராட்டும் வண்ணம் பெண்கள் விளையாட்டு நிகழ்ச்சியை சிறப்பான முறையில் மாநில விளையாட்டு வளர்ச்சித் துறைத் தலைவர் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் மூலமாகவும், அந்தத் துறை அதிகாரிகள் மூலமாகவும் நடத்தி அதில் பெருமளவுக்கு வெற்றியும் கண்டிருக்கிறார்கள். எனவே விளையாட்டுத் துறையிலே இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டுத் துறை என்று சொல்லும் போது, அது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்கிற காரணத்தால், அதற்கு சற்று கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, தமிழகத்தில், விளையாட்டுத் துறையில், உலகத்திலேயே மற்ற நாட்டுக்காரர்களைவிட சிறந்த நல்ல விளையாட்டு வீரர்களை உருவாக்கி, அதற்கு நாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டத்தை ஆளுநர் உரையிலே மிகக் கடைசியாகக் குறிப்பிட்டு இருந்தாலும் மிக மகிழ்ச்சிகரமான ஒரு அறிவிப்பாக எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. எனவே தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்டு, செக்கிழுத்த செம்மல் விடுதலைப் போராட்ட வீரர் வ. உ. சி. அவர்களுடைய பெயரை அந்த மாவட்டத்திற்கு வைக்கவேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாக இந்த அரசை நான் அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள சில வேண்டுதல்களை இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்த மன்றத்திலே நான் வைக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே கடம்பாகுளம் என்ற குளம் இருக்கிறது. அந்தக் கடம்பா குளத்திலே தனிக்கால்வாய் வெட்டும் திட்டம் நீண்டகாலமாக இந்த அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஒருசில மாதங்களுக்கு முன்பாக அங்கே வருகை தந்த உலக வங்கியினுடைய குழுவினர் இந்தத் திட்டத்தை, கடம்பாகுளத்திலேயிருந்து ஒரு தனிக்கால்வாய் வெட்டும் திட்டத்தை பரிசீலனை செய்திருப்பதாக நான் அறிகிறேன். எனவே அந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.



1986 சனவரி 22] [திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்]

அடுத்து ஆத்தூரிலே வெற்றிலைக் கொடிக்காலை விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். எனவே அந்த விவசாயிகளுக்கு எல்லாம் நிரந்தரமான அளவிலே பாசன நீர் வருடம் முழுவதும் தேவையாக இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், அவர்கள் விவசாயம் நிரந்தரமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே நிரந்தரமாக வருடம் முழுவதும் தண்ணீர் வழங்க அரசு உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே தாங்கேயன்குளம் என்ற குளத்திற்கு நீர்ப்பாசன வசதி கேட்டு, அந்தக் குளத்திற்கு தண்ணீர் விடுவதற்கு அந்தப் பகுதியில் சுமார் 5 மைல் சுற்றளவில் உள்ள பகுதிகளுக்குத் தேவையான தண்ணீரைக் கொடுப்பதற்கு அங்கே ஒரு அணைக்கட்டு கட்டும் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆத்தூரிலே ஒரு காவல் நிலையம் தேவையாக இருக்கிறது. எனவே அங்கே காவல் நிலையத்தை அமைக்க அனுமதி கொடுத்து, அதற்கான உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் குடிநீர்த் திட்டம், புன்னக்காயல் குடிநீர்த் திட்டம், மற்றும் குலசேகரப்பட்டினம் குடிநீர் திட்டம் ஆகிய திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. எனவே அந்த பரிசீலனையை விரைந்து முடித்து, அந்தப் பகுதி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய நமது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நாசரேத்தில் ஒரு ஸ்பின்னிங் மில் இருக்கிறது. அந்த மில்லை விரிவாக்கம் செய்வதற்கான ஒரு திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருந்தது. எனவே அந்தத் திட்டத்தை மீண்டும் அரசு பரிசீலனை செய்து, குலசேகரப்பட்டணத்திலே அந்த மில்லை அமைத்துக்கொடுத்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம், எனவே அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மீனவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த மீனவர்கள் நாட்டுப் படகில் மாட்டக்கூடிய இயந்திரம் வாங்கியிருக்கிறார்கள். அந்த இயந்திரத்திற்கு வேண்டிய மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. எனவே தேவையான மண்ணெண்ணெய் அரசு வினியோகம் மூலம், வினியோகிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த மீனவர்களுக்கும், ஆதி

திராவிட மக்களுக்கும், பனைத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற மக்களுக்கும், ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில், பக்கம் ஒன்றிலே, தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கிய மான தேவையாக இருப்பது மின்சாரம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். தொழில் வளர்ச்சிக்குமட்டுமல்லாது, விஞ்ஞானம் வளர்ந்திருக்கிற இந்த நாளிலே, விவசாயத்திற்கும், வீடுகளுக்கும், வீதிகளுக்கும் கூட அது முக்கியமானதுதான். கல்பாக்கம் நமக்கு ஒரு பெரிய வாய்ப்பாக வந்திருந்தாலும் ஏற்கனவே இருந்த சில நிலையங்கள் நம்மிடம் இல்லாத ஒரு நிலை இப்போது ஏற்பட்டு இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தியபோது, சமயநல்லூர் விற்கப்பட்டுவிட்டது. ஆனால் அது அன்றைக்கு உதவாது என்று விற்கப்பட்டாலும் கூட, எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி, அஸ்ஸாம் மாநிலத்தில் அது இப்போது உற்பத்தியை செய்வதற்கு உரிய நிலையில் சில பகுதிகள் கொண்டு சேர்க்கப்பட்டு இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். எனவே இங்கே கூட அதனை செம்மைப்படுத்தி இருக்கலாமோ என்ற ஐயப்பாடு கூட எனக்கு இருக்கிறது. ஏன் இதை சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால் பேசின் பிரிட்ஜில் அமைந்து இருக்கின்ற மின் நிலையம் இப்போது மூடப்படுகிறது. அதிலே பல கட்டங்களில் விரிவாக்கம் வந்தது. 1970–71 ஆம் ஆண்டுகளில் 3-வது விரிவாக்கத்தின் மூலம் ஏறத்தாழ 40 கோடி ரூபாய் செலவில் 4 இயந்திரங்கள் வாங்கப் பட்டன. பழமையாக இருந்தது இன்றைக்கு பயன் அற்று போனாலும் கூட 1970–71-ல் வாங்கியது, 1972–73-ல் வாங்கிய இந்த 4இயந்திரங்கள், அதில் இருக்கின்ற பாயிலர்கள், டர்பைன்கள் போன்றவைகள் பயன் அற்றவை என்ற முடிவுக்கு அரசு வந்து விடக்கூடாது என்பதிற்காக இதனை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11–30).

இப்போது மின் பற்றாக்குறை இருக்கிற காரணத்தாலே 3 வருடம் வரவேண்டிய குழல் விளக்குகள் 3 மாதத்திற்கு கூட வர வில்லை என்று மக்கள் குறைபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். சென்னையில் பல பகுதிகளில் வீதிகளில் விளக்குகள் எரிவது இல்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அந்த நிறுவனத்தில் இருப்பவர்களின் பலர் வீடு களில் எரிகின்ற மின் விளக்குகளில் அந்த பல்புகளில் செ.மா. என்ற எழுத்து இருப்பதாக பலர் சொல்கிறார்கள், எனவே, அரசாங்கத்திற்கு சொந்தமான சிலபொருட்கள், பல பொருட்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று அடைந்து இருப்பதை அரசி னுடைய கவனத்திற்கு நல்ல எண்ணத்தோடு நான் இங்கே கொண்டு வர விரும்புகிறேன்.



நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது மின்சார பம்புசெட்டுகளில் 3125-ஐ பரிட்சார்த்தமாக எடுத்து அவைகளை மேம்பாடு அடையச் செய்து நவீனப்படுத்தி அதன் மூலம் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபாய் செலவு ஆனாலும் பரவாயில்லை என்று சொல்லி மின்சாரத்தை சேமிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே இதே மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தபோது தமிழகத்தில் இருக்கின்ற 10 லட்சம் மின்சாரபம்பு செட்டுகள் ஒவ்வொன்றுக்கும் 500 ரூபாய் செலவு செய்து மேம்படுத்தினால் அதிலே மிச்சம் ஆகின்ற மின்சாரத்தை வைத்து மட்டும் 5 லட்சம் பம்பு செட்டு களுக்கு இணைப்புக் கொடுக்க முடியும் என்று ஏற்கனவே நான் இங்கே குறிப்பிட்டு இருக்கிறேன். இங்கே அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டதை நான் மனமார வரவேற்கிறேன்.

ஆனால் பல்வேறு இடங்களில் 1975 ஆம் ஆண்டிலேயே மனு போடப்பட்டு மின்இணைப்புகள் கொடுக்கப்படவில்லை. இடையில் நமது மாநிலத்தில் உள்ள உயர்நீதிமன்றம் இணைப்புக் கொடுப் பதற்கு ஒரு தடை உத்திரவைப் போட்டு நிறுத்தி வைத்து இருந்தது. அது கூட இப்போது ரத்து செய்யப்பட்டு விட்ட நிலையில் வள்ளியூர்சரகம் போன்ற பகுதிகளில் நூற்றுக் கணக்கான பம்புசெட்டுகள் வாங்கி காத்து இருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுத்தல் வேண்டும். ஏன் என்றால் மின் இணைப்பு வரும் என்ற நம்பிக்கையின் அடிப் படையில் தென்னங்கன்றுகளை நட்டு வைத்து இருக்கிறார்கள் விவசாயிகள். அவைகள் பட்டுக்கொண்டு இருக்கின்றன. வடலூர் வள்ளலார் பிறந்த இடத்திலிருந்து வந்தவர்தான் நம் அமைச்சர் பெருமகனார் அவர்கள். 'வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று சொல்லுகிற வள்ளலார் பிறந்த ஊரிலிருந்து வந்த அமைச்சர் அவர்கள் பல ஊர்களில் தென்னங்கன்றுகள் வாடுவதைப் பார்த்தால் அது வாடலூர்களாக மாறிக்கொண்டு இருப்பதைக் கண்டு அப்படி வாடாத நிலைக்கு இணைப்புகளை உடனடியாக கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்துறைக்கு 30 விழுக்காட்டுக்கு மேல் இந்த அரசு 7-வது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு ஒதுக்கீட்டை ஒதுக்கி வைத்து இருப்பது பாராட்டுக்கு உரியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் அவர்களுக்கு துணையாக இருந்து கொண்டு இருக்கின்ற அமைச்சர்களையும், அதிகாரி களையும் நான் பாராட்டுகிறேன். மேலும் மேலும் அதை ஊக்குவிப்பதற்கு மின்சார உற்பத்தியை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

[திரு.குமரி அனந்தன்] [1986 சனவரி 22

ஆளுநர் உரையின் பக்கம் 2-ல் குடும்ப நலத்துறையை செம்மையுற செயல்படுத்தியதற்கு தமிழ்நாடு அரசாங்கம் தேசிய விருதாக 2½ கோடி ரூபாய் பெற்று இருப்பாக இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நானும் பெருமைப்படுகிறேன். உலகத்திற்கு இப்போது தேவையான ஒன்று குடும்ப நலம், குடும்பக் கட்டுப்பாடு, வெளி உலகத்திற்குச் சென்று இருந்த நம்முடைய பாரதப் பிரதமர் கூட அமெரிக்காவில் இந்தியாவை எதிர் நோக்கியுள்ள மிகப்பெரிய பிரச்சினை எது என்று கேட்டபோது, அதற்கு அவர் 3 முறை சொன்னார்கள், பாப்புலேஷன், பாப்புலேஷன், பாப்புலேஷன் என்று. எனவே அந்த அளவுக்கு மக்கள் தொகை பெருகி இருப்பதை கட்டுப்படுத்துவதிலே முன்னணியில் இருக்கிறது என்று சொன்னால் பாரத அரசாங்கத்திற்கே வழி காட்டுகிறது என்றால் பாராட்டப்பட வேண்டியது தான், மகிழ்ச்சிதான். ஆனால் நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களின எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறதே இதை எப்படி சரிக் கட்டுவது என்பதற்கு அவர்கள் வழி வகைகளைக் காண வேண்டும். நம்முடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையக் குறைய நம்முடைய பிரதிநிதித்துவம் குறைந்து கொண்டு இருக்கிறது என்பதை உணர்ந்து அதற்கு ஏற்ப ஏதாவது ஒரு வழிமுறையை கடைப்பிடிக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆட்களை அழைத்துக் கொண்டுவருவதற்கு யாரையும் கட்டுப்படுத்தவே கூடாது.

நல்ல கவர்ச்சிகரமான திட்டத்தைக் கொடுத்து, அந்தக் குடும்பத்தினரே வந்து, தாமாகவே அந்த நலத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமே தவிர, இன்னார் இத்தனை ஆட்களை அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்ற முறையினை உடனடியாக எடுத்துவிடவேண்டும் என்று நான் தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை பக்கம்-3—இலே, வெள்ள நிவாரணத்திற்கு மத்திய அரசாங்கம் 66 கோடியே 81 இலட்சம் கொடுத்ததைப் பாராட்டி இருக்கிறார்கள். மகிழ்ச்சிதான். ஆனால் உண்மையிலேயே நாம் கேட்டது எவ்வளவு என்று சொன்னால், 600 கோடி ரூபாய்க்கு மேல், அப்படி 600 கோடி ரூபாய்க்கு மேல் கேட்டதிலே. 66 கோடியே 81 இலட்சம் தான் வந்து இருக்கிறது. ஒருவேளை இனிமேல் அதிகம் வரக்கூடுமோ, என்னமோ, வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே நான்காம் பக்கத்திலே இலங்கைத் தமிழர் உரிமை வாழ்வு பற்றி பேசப்பட்டு இருக்கிறது. ஆனால், ஏற்கவே இலங்கையிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறவர்கள் எல்லா உரிமையினையும் பெற்று வாழ வேண்டும். 'எல்லா' என்று சொல்வதிலே, அனைத்தையும் அடக்கி ஒரு தீர்மானத்தை



1986 சனவரி 22] [திரு.குமரி அனந்தன்]

நிறைவேற்றி இருக்கிறோமே, அந்தத் தீர்மானத்தை இன்னும் மத்திய அரசு நிறைவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று ஒரு வலியுறுத்தலோடு சொல்லி இருக்கலாமோ என்று நான் கருதுகிறேன்.

ஆளுநர் உரை பக்கம் 6 இலே, கல்வியை மக்களிடம் பரப்பவும் மக்களின் தேவைகளுக்கு உகந்ததாக கல்வித் திட்டத்தை மாற்றவும் அரசு முயன்று வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நான் ஆளுநர் உரையிலே இருந்து எடுத்து ஆளுகின்ற பகுதி, என்னுடைய சொற்கள் அன்று. கல்வியை மக்களிடம் பரப்புதல் என்பதற்கு பலவிதமாகப் பொருள் கொள்ளலாம், பள்ளிக்கூடத்திலே இருக்கிற மக்கள் மட்டும் அல்லாமல், பள்ளிக்கூடங்களுக்கு வெளியே இருக்கிற மக்களுக்கும் முதியோர் உள்பட, விவசாயிகள் உட்பட, சின்னச் சின்ன கிராமங்களிலே இருந்து கொண்டிருப்பவர்கள் உட்பட, அத்தனை பேருக்கும் அறிவுச் செல்வத்தை பரப்புவது என்று சொன்னால், அதற்கு, வானொலி போன்றவைகளை எல்லாம் முன்னாலே இருந்த அரசாங்கங்கள், காங்கிரஸ் அரசாங்க காலத்திலேயிருந்து ஏற்படுத்திக் கொடுத்து வந்தன.

ஆனால், இன்று கிராமங்களைச் சுற்றிப் பார்க்கும்போது, பல இடங்களிலே கதவுகள் அற்று வாய் பிளந்த நிலையிலே வானொலிக் கூடங்கள் நின்று கொண்டிருக்கின்றன. அதற்கு உள்ளே இருந்த வானொலிப் பெட்டிகள் சில தனியார் வீடுகளிலே இருந்து வாயசைத்துப் பாடிக் கொண்டிருக்கின்றன. இவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஏன் என்று சொன்னால், மேலும், மேலும் டி.வி. போன்றவற்றைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஆனால் ஏற்கனவே கொடுத்ததும், இப்போது கொடுக்கப்படுவதும் செம்மையாகச் செயல்படுகிறதா என்று பார்க்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை ஆகும்.

அதைப் போலவே இப்போது வந்திருக்கிற வீடியோ போன்றவைகளைப் பயன்படுத்தி, உழவர்களுக்கு பயிர் பாதுகாப்பு போன்றவைகளையும், எப்படி, எப்படி புது விஞ்ஞான முறைகளிலே அவைகளை வளர்த்து வர வேண்டும் என்பதையும், பூச்சிக் கொல்லி போன்றவைகளை எப்படி பயன்படுத்த வேண்டும் என்றும் சொல்லிக் கொடுக்க வேண்டுமே தவிர, அதற்காக விஞ்ஞானம் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர, இன்று வேறு வகையிலே அது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை போன்ற நகரங்களிலே எல்லாம், இப்போது வீடியோ கேம்ஸ் என்ற ஒன்று வந்து, இளைஞர்களுடைய வாழ்வை சீர்குலைத்துக் கொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். எனவே, விஞ்ஞானம், வீடியோ மூலம் நம் நாட்டிலுள்ள மக்களை வளர்க்க வேண்டுமே தவிர, பாழ்படுத்தி விடக்கூடாது; அரசாங்கம் இதில் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் மிகச் சிறப்பாக சொல்லப்பட்டிருப்பது, கல்வியினைப் பற்றி. கல்வியைப் பரப்ப வேண்டும் என்று மற்றவர்களுக்கு சொல்வதோடு, கல்வியினை மாணவர்களுக்குப் புகட்ட வேண்டும் என்று சொல்லி, 1541 மேல்நிலைப்பள்ளிகளில்; 969 மேல்நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் பாடம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

பல பள்ளிகளுக்கு, தமிழ்த் தாயினுடைய நல் அருளால் சொற்பொழிவு செய்வதற்கு செல்கின்ற வாய்ப்புக் கிடைத்தவன் நான். அங்கே செல்லும் போது அவர்களைக் கேட்கிறேன். அவைகள் காகிதத்தில் இருக்கிறதே தவிர, காரியத்தில் நடைபெறவில்லை என்பதை தயவுசெய்து உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்,

அதனாலே இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரம் சரியானது தான் என்ற அடிப்படையிலே மேலும், மேலும் அரசாங்கம் பணத்தை வாரியிறைத்துக் கொண்டு இருந்தால், நாம் எதிர்பார்க்கிற பலனும் கிடைக்காமல் போய்விடக்கூடாது என்ற அக்கறையோடு சொல்கிறேன். ஏனென்றால், தற்சார்புடைய இன்டிபென்டன்ட் ஏஜென்சி ஒன்றின் மூலமாக இந்தப் புள்ளி விவரம் எல்லாம் சரிதானா என்று தயவு செய்து மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். ஏனென்றால் நிச்சயமாக இல்லை.

1,541 மேல்நிலைப் பள்ளிகளிலே 969 மேல்நிலைப் பள்ளிகள் இருப்பதாக சொல்லப்படுகிறதே தவிர, எழுதப்படுகிறதே தவிர, அங்கே நடைபெறவில்லை என்பதை நான் நிச்சயமாக அறிவேன். இதைப் போல, இப்போது அரசு பலவற்றுக்கு உதவி செய்து வருகிறது. ஐ.டி.ஐ. என்று சொல்கிற தொழில் பயிற்சிக் கூடங்களுக்கு எல்லாம் உதவி செய்கிறார்கள். அரசாங்கமே நடத்துகிறது. சில இடங்களிலே தனியார் அந்தத் தொழில்கல்வியை நடத்துகிறார்கள்.

அவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் கொடுப்பதற்குப் பதிலாக, 100 விழுக்காடு மானியம் கொடுத்துவிட்டால் அவர்கள் இன்னும் செம்மையாக மனநிறைவோடு தங்களுடைய அந்தக் கல்வியை மற்றவர்களுக்கு புகட்டுவார்கள். அதற்கு பல முறை மனுக்கள் அமைச்சர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நான் சொல்லப்போவது மிகுந்த மனவருத்தத்தை தருகின்ற ஒன்றாகும். எல்லோருமாகச் சேர்ந்து வேதனைப்படுகிற ஒன்று. ஏனென்றால், டெல்லியிலே எல்லாம் இப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், நம்மவர்கள் என்று சொல்கிற தென்னவர்கள் அதிலும் குறிப்பாக தமிழர்கள் அதிகம் இல்லாமல் போய்விட்டார்கள். ஏறத்தாழ 20 பேர் மட்டும் ஐ.ஏ.எஸ். போன்றவர்கள் பெரிய, பெரிய இடத்திலே பதவி வகிப்பவர்களாக இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். 20 பேரிலே, 13 பேர் வருகின்ற ஜூன்





மாதத்திற்குள்ளே ஓய்வு பெற இருக்கிறார்கள். மிச்சம் இருப்பது 7 பேர்தான் இருக்கக்கூடும். இருப்பது 20, போகப் போவது 13, மிச்சம் இருப்பது 7. ஆனால், டெல்லிப் பல்கலைக்கழகத்தைத் மையமாகக் கொண்டு இருக்கிற மாணவர்கள் ஆண்டுக்கு 2,000 பேர் ஐ.ஏ.எஸ். பரீட்சை, ஐ.பி.எஸ். பரீட்சை, ஐ.எஃப்.எஸ். பரீட்சை எழுதுகிறார்கள்.

(முற்பகல் 11-40)

ஆனால் தமிழகத்திலிருந்து 400, 500 பேர்கள் அந்தப் பரீட்சையை எழுதுகிறார்கள். டெல்லியை மையமாக வைத்துக் கொண்டு எழுதுகிறவர்களில் வெற்றி பெறுகிறவர்கள் 400 பேர்களுக்கு மேல வெற்றி பெறுகிறார்கள். அதிலேயிருந்து நேர்முகத் தேர்விற்குச் செல்கிறபோது அதிலே பலர் வெற்றிபெறுகிறார்கள். வெற்றிபெற்று ஐ.ஏ.எஸ். பெற்று பெரிய பெரிய பதவிகளிலே இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலிருந்து செல்கின்ற மாணவர்களிலே 30,40 பேர்கள்தான்வெற்றிபெறுகிறார்கள், பின்னாலே அவர்கள் நேர்முகத் தேர்விற்கு செல்கிறபோது 2,3 பேர்கள்தான் வெற்றிபெறுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இதற்கு அரசாங்கம் நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருப்பதை பாராட்ட வேண்டும். இதற்காக பின்தங்கியோர் நல இயக்கத்திலிருந்தும் ஆதிதிராவிட நல இயக்கத்திலிருந்தும் 10, 10 பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை டெல்லிக்கு அனுப்பி ராவ்ஸ் ஐ.ஏ.எஸ். டிரெயினிங் இன்ஸ்டிட்யூட் பிரைவேட் லிமிடெட்டில் சேர்க்கிறார்கள். அது மிகச் சிறந்த நிறுவனம் ஆகும். அதிலே சேர்ந்து படிக்கிறவர்களிலே 100 பேர்கள் படிக்கிறார்கள் என்றால் அதிலே 60, 70 பேர்கள் வெற்றிபெறுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிறுவனத்திற்கு பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 20 பேர்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு அனுப்புகிறது அவர்கள் அங்கே எப்படி பயிற்சி கொடுக்கிறார்கள் என்றால் முதல் 4 மாதங்களுக்கு முக்கியமான பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். பிறகு 2 மாதம் இடைவெளி. மீண்டும் 4 மாதங்களுக்குப் பாடங்களைக் கற்றுத்தருகிறார்கள். தொடர்ந்து 2 மாதத்திற்கு நேர்முகத் தேர்வை எப்படிச் சமாளிப்பது என்று சொல்லிக்கொடுக்கிறார்கள். ஆக 12 மாதங்களுக்கு 10 மாதங்களில் இப்படிப் பயிற்சி அளிக்கிறார்கள். நம்முடைய மாணவர்களும் அந்த 10 மாதங்களுக்கும் அங்கே இருந்து அதிலே இருந்து பயிற்சி பெறுவார்களானால் வெற்றி பெறுவார்கள். என்ன காரணத்தினாலோ முதல் நான்கு மாதங்களுக்குப் பிறகு அந்த மாணவர்களை நாம் திருப்பி அழைத்துக் கொள்கிறோம். அது அரைகுறைப்படிப்பாக இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றவேண்டும். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அங்கே முழு நேரமும் இருந்து படிக்கும் சூழ்நிலையை நம்முடைய அரசு உருவாக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்கித் தாருங்கள் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் படிக்காத நிலையில் இருந்தாலும்கூட அவர்கள் படிக்கின்ற நிலையில் வருவதற்கு கிராமப்புற சுய வேலைவாய்ப்புத்திட்டம் வகை செய்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து இந்தத் திட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறோம். கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பகுதியிலே அந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அண்மையிலே நான் அங்கே சென்று பார்த்தேன். அங்கே இருக்கின்ற மாணவர்கள் சில மனக்குறைகளைத் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவித்த மனக்குறைகள் என்னவென்றால், ரேடியோ, டெலிபோன், மோட்டார் பம்புசெட் போன்றவற்றை எப்படி ரிப்பேர் செய்வது என்ற கல்வியை அங்கே கற்றுத் தருகிறார்கள். ஆனால் அந்த உபகரணங்களை அவர்களுக்கு அப்போதே தரவேண்டும். அவர்கள் படித்து முடித்துவிட்டு வெளியே போனால் அவர்களுக்கு இலவசமாகத் இன்ஸ்ட்ருமென்ட்.ஸ் கொடுக்க இருக்கிறோம். அந்தக் கருவிகளையெல்லாம் அவர்களுக்கு அப்போதே கொடுத்துவிட்டால் நாங்கள் அதை கை வந்த கலையாக பழகிப்போன ஒன்றாக கற்றுக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். எனவே அந்த உபகரணங்களை இப்போதே அவர்களுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் படித்து முடித்துவிட்டு வெளியே போனால் வங்கிகளிலிருந்து கடன் பெறலாம். ஆனால் அவர்கள் படித்துமுடித்து வெளியே போனதற்குப் பிறகு வங்கிகளிலிருந்து கடன் பெறுவது மிகக் கடினமாக இருக்கிறது. எனவே அவர்கள் வெற்றிபெற்று வெளியே போகிற நேரத்திலே விண்ணப்பப் படிவங்களை அந்த ஆசிரியர்கள் பூர்த்தி செய்து கொடுத்து அவர்கள் படிப்பைமுடித்து செல்கிறபோது அவர்களுக்கு அந்த உபகரணங்கள் எல்லாம் கிடைக்கும் என்ற உறுதிமொழியை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊரக வளர்ச்சித் திட்டம் பற்றி ஆளுநர் உரையிலே பக்கம் 6,7இல் சொல்லியிருக்கிறார்கள். அந்த கிராமப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டமும் அந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களிலே ஒரு திட்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் என்னவோ தெரியவில்லை, அதிலே பெண்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. அதிலே பெண்களை சேர்த்துக் கொள்ளவில்லையென்றாலும்கூட பெண்களுக்கு என்று தனிப் பயிற்சி நிலையங்களை நடத்தலாம். அவர்களுக்கு எத்தனையோ தொழில்களைச் சொல்லிக் கொடுக்க முடியும். அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேளாண்மை பற்றி,எப்படி வேளாண்மை தமிழகத்திலே சிறப்புமிக்க வகையிலே எந்த எந்த வகைகளிலே முன்னேறியிருக்கிறதுஎன்பதை ஆளுநர் உரையின் 7–வது பக்கத்திலேசொல்லியிருக்கிறார்கள். விஞ்ஞான ரீதியிலே வீரிய வித்துக்கள் கண்டுபிடித்துள்ளோம். அதைப்போலவே நல்ல நாற்றுக்களையெல்லாம்



கண்டுபிடித்திருக்கிறோம். ஆனால் 'லேப் டு லேண்ட்' என்று சொல்வார்களே அதைப்போன்று சோதனை நிலையங்களிலே கண்டுபிடிக்கபட்டவை அவை நிலத்திற்குக் கொண்டுபோகின்ற சூழ்நிலை முற்றிலும் உருவாகவில்லை. அந்த நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு விலை கூட்டப்படும் என்ற கனிவான செய்தியை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இனிக்கும் செய்தியை தரப்போகிறேன் என்று சொன்னார்கள். மகிழ்ச்சி, கரும்புக்கு டன்னுக்கு 155 ரூபாய் போதுமானதல்ல. 8.5 சாறு எடுக்கின்ற கரும்புக்கு டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்று சொன்னால் சாறு எடுத்ததோடு கரும்பின் பயன் தீர்ந்துவிடுவதில்லை. சாறு எடுத்ததற்குப் பிறகு பாகு வருகிறது. அதிலிருந்து எரிசாராயம் எடுக்கப்படுகிறது. அதிலிருந்து இனிப்பு கோது எடுக்கப்பட்டு அது கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுகிறது.அதிலிருந்து வருகின்ற சக்கை எரி சக்தியாகப் பயன்படுத்தப்படுகிறது; அதிலிருந்து வருகின்ற வண்டல் உரமாகப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே. விவசாயிகள் ஐந்து பலன்கள் அடங்கிய ஒரு கரும்பைக் கொடுத்தால்,அவனுக்கு ஒரேயொரு பலனுக்கு மட்டுமே பணம் கொடுக்கப்படுகிறது என்பதனை உணர்ந்துதான் நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவிலே இனிக்கும் செய்தியினைத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன்,

அடுத்த செய்தியாக ஆளுநர் உரையினுடைய 23 ஆம் பக்கத்திலே, ஊராட்சி ஒன்றியங்களினுடைய தேர்தல்கள் வரும் என்று அறிவித்திருக்கிறார்கள். மகிழ்ச்சி. அதற்காகத்தான் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வரவேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த ஊராட்சி மன்றங்களிலே வேலை செய்கின்ற பலருடைய பணியினைப்பற்றி ஒரு சிறிது நான் சொல்ல வேண்டும். 1,500 மக்கள் தொகை கொண்ட சில ஊராட்சிகளிலே பகுதி நேர எழுத்தர்கள் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? முப்பத்தேழரை ரூபாய். தயவுசெய்து இதைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக மீண்டும் சொல்கிறேன்.

மாற்றுத் தலைவரவர்கள் எனக்குக் கொஞ்சம் அதிகநேரமும் தரவேண்டும். இப்பொழுது நான் எட்டாவது பக்கத்திலேதான் நின்றுகொண்டு இருக்கிறேன். பல பக்கங்களை நீங்கள் அச்சிட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். அவைகளிலேயெல்லாம் என்னுடைய கருத்தை நான் சொல்ல வேண்டும்.

1,500 மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளுக்கு முப்பத்தேழரை ரூபாய் சம்பளம்; 2,000 மக்கள்தொகை கொண்டதிலே 45ரூபாய்; 3,000 மக்கள் தொகை கொண்டதிலே 52; 4,000–க்கு 60; 5,000- மக்கள் தொகை கொண்டதில் 75; 5,000–க்கு

மேலே 90 என்று போட்டிருப்பது இந்தக் காலத்திலே போதுமானதுதானா என்று தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு ஊராட்சி மன்றத்தில் இருக்கின்ற பகுதி நேர எழுத்தர்களுக்கு முப்பத்தேழரை ரூபாய் போதுமா என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்லப்போனால், பலருக்குக் கொடுத்திருக்கின்ற அளவாவது — பலருக்குக் கொடுத்ததே இன்னும் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, பலருக்குக் கொடுத்த அளவாவது—கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், அரசு இளநிலை உதவியாளர்களுக்கு 1961 இலே சம்பளம் 90 என்றால் 1986 இலே 800; இதுவே அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்கின்ற நேரத்திலே நீங்கள் அவர்களுக்கும் அதிகமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில், வறட்சி, வெள்ளப்பெருக்கு இவைகளால் ஏற்படும் சேதத்தைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசாங்கம் அதை எப்படிச் சரிக்கட்டியது என்று கூறியிருக்கிறார்கள். நான் பணிவோடு ஒரு செய்தியினைச் சொல்வேன். தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கின்ற எத்தனையோ நதிகளை நாம் பயன்படுத்திவிட்டோம். ஆனாலும்கூட, நீர்ப்பாசனத் திட்டங்கள் எங்கெங்கே தொடங்கப்பட்டு இடையிலே நிற்கின்றனவோ அவைகளையெல்லாம் கணக்கெடுத்து உடனடியாக நிறைவேற்ற வேண்டும். என்னுடைய தொகுதியிலேயேகூட நம்பியாற்று அணைத் திட்டம், கொடுமுடியாற்று அணைத் திட்டம் போன்றவைகளெல்லாம் தொடப்பட்டு அல்லது ஆரம்பிக்கப்பட்டு இடையிலே நின்று போயிருக்கின்றன. இவைகளுக்கு மத்திய அரசாங்கத்திடத்திலேயிருந்து அதிக உதவி பெறலாம். ஏற்கனவே மாண்புமிகு பிரதமராக இந்திராகாந்தி அம்மையார் இருந்தபொழுது இப்படியொரு திட்டத்தை அறிவித்திருந்தார். எனவே, தமிழகத்திலே எங்கெங்கே நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடங்கப்பட்டு, திட்டம் தீட்டப்பட்டு இடையிலே பணமில்லாமல் நின்றுகொண்டிருக்கின்றனவோ அதற்குரிய பணத்தை மாநில அரசு மட்டுமல்லாது மத்திய அரசும் சேர்ந்தே செய்து நமக்கு நல்ல முறையிலே செய்யலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக இங்கே ஆளுங்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதைப்போலே, மரியாதைக்குரிய பிரதமர் அவர்கள் இந்த நாட்டிலேயிருக்கின்ற நதிகளையெல்லாம் இணைப்போம் என்று சொல்வது இருக்கிறதே அது அருமையான திட்டம். கங்கை இங்கே வரவேண்டும்; குமரிக் கடலைத் தொடவேண்டும் என்பது, என்னைப் போன்றவர்களுடைய நெடுநாளைய கனவாக இருப்பது நனவாக ஆக வேண்டும். ஏனென்று சொன்னால், இடையிலே இருக்கின்ற விந்தியமோ மற்ற எதுவுமோ மனித முயற்சிக்கு முன்னாலே குறுக்கே நின்று விடவே முடியாது. இன்று வானொலியிலே காலையிலே செய்தியைக் கேட்கிறோம். இங்கிலீஷ்சேனல் என்று சொல்லுகின்ற ஆங்கிலக் கால்வாயை இந்தப் புறத்திலே இருக்

இன்ற பிரெஞ்சு தேசத்தோடும், அந்தப் பக்கத்திலே இருக்கின்ற ஆங்கில தேசத்தை இணைப்பதற்கு கடலுக்குக் கீழே முப்பது கிலோ மீட்டர் தூரம் அவர்கள் பாதை அமைக்கிறார்கள் என்கின்ற செய்திகளெல்லாம் வருகின்றபொழுது கங்கை கன்னியா குமரிக்கு வரும், வந்து நமக்கு நன்மையினைத் தரும் என்ற நம்பிக்கையை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பக்கம் 14 இலே, தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் பேசியிருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியது. ஆனால், ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கின்ற டான்சி என்று சொல்லுகின்ற ஈரோடு, கிண்டி உட்பட எட்டு இடங்களில் மூடப்போவதாக அறிவித்திருப்பது வருத்தத்திற்குரியது. அதில் இருக்கின்ற தொழிலாளர்கள் அத்தனை பேருமாகச் சேர்ந்து என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள் உற்பத்தியை அதிகப்படுத்தித் தருகிறோம் என்று சொன்ன நேரத்தில், அங்கிருக்கின்ற மேலாளர் அவர்கள் சொன்னார்கள், 55 டன் உற்பத்தி செய்து தருவதாக இருந்தால் நாங்கள் அவைகளை மூட மாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் தொழிலாளர்கள் 58 டன் உற்பத்தி செய்த பிறகும் கூட மூடுவதற்குத் திட்டம் இருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வெளிநாட்டில் இருக்கின்ற தமிழர்கள் இந்த ஊரிலே தங்களுடைய பணத்தைப் போட்டு தொழிலைத் தொடங்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். மகிழ்ச்சி. நான் அங்கே சென்றிருந்த பொழுதுகூட அவர்களிடம் நான் வேண்டினேன். நமது மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் வேண்டினார்கள். இப்பொழுது திசையன் விளையிலே கூட மூன்றரை கோடி ரூபாய் போட்டு அவர்கள் ஒரு சிமெண்ட் ஆலையை கொண்டு வருகிறார்கள். அதைப்போல பலயிடங்களிலே திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அவர்கள் முயல்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது 97 மாவட்டங்களை இந்திய அரசாங்கம் எடுத்து பின் தங்கிய மாவட்டங்களாக அறிவித்திருக்கிறது. அதிலே ஒன்றுகூட தமிழ்நாட்டிலே இல்லாத காரணத்தாலே, மாவட்டங்களைப் பின்தங்கிய பகுதி என்று அறிவிப்பதற்குப் பதிலாக, இங்கே மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, வட்டாரங்களை, பிளாக்குகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்திலே அதிகமான தொழில் வளர்ச்சி வேண்டுமென்று சொல்கிறோம். அதற்காக உதகமண்டலத்தில் ரூ. 200 கோடி செலவில் வண்ணத் திரைப்படச் சுருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும், ரூ. 170 கோடி செலவில் எக்ஸ்-கதிர் படச் சுருள் தயாரிக்கும் தொழிற்சாலையையும் அமைக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது என்ற செய்தி இருக்கிறது.

(முற்பகல் 11–50)

இருக்கிறது. ஆக, ரூ. 200 கோடி செலவில் வண்ணத் திரைப்படச் சுருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும், ரூ. 170 கோடி செலவில் எக்ஸ்—கதிர் படச் சுருள் தயாரிக்கும் தொழிற்சாலையையும் அமைக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது என்று ஆளுநர் உரையிலே இருக்கிறது. ஆனால், கோவை மாவட்டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் பார்த்தால், சுவர்களில் எல்லாம் எண்ணத்தை வெளியிடும் வண்ணச் சுவரொட்டிகள் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பெயரைக் குறிப்பிட்டு, அவர் அத்தனையையும் கொண்டு வந்து விட்டதாகவே இருக்கிறது. ஆக. அது, வந்து விட்டதா, வரவில்லையா, வந்து விட்டது என்றால், தமிழக அரசாங்கத்திற்குத் தெரியாமலேயே வந்ததா? அது விளம்பரத்திற்காகச் செய்யப்படுகிறதா என்பதை அரசாங்கம் உற்று நோக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தத்தமது தொகுதிகளில் என்ன, என்ன இருக்கிறது என்பதை அறிந்து வைத்திருப்பதைப் போல், நாமும்-சட்டமன்ற உறுப்பினர்களும்-அறிந்து வைத்திருக்கிறோம்.

ஆதி திராவிடர், பழங்குடி நரிக்குறவர் போன்றவர்களுக்கெல்லாம் 5 இலட்சம் வீடுகளும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு 5 இலட்சம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப் போவதாக அரசாங்கம் வெளியிட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதைப் போலவே. இங்கே சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், அதை செம்மைபடுத்துவது மிகவும் முக்கியமான ஒன்றாகும். சீரணியிலிருந்து செம்மைப்படுத்தப்பட வேண்டும். அழகுபடுத்துவது என்பது ஒட்டு மொத்தமாக ஒருங்கிணைத்த திட்டமாக இருக்க வேண்டும். மெரினா கடற்கரையை அழகுபடுத்துவது கூட காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயிருந்து தொடங்கப்பட்ட திட்டம்தான். காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்த பொழுது ரூ. 76,46,400 அதற்குத் தேவை என்றும் வருடந்தோறும் அதற்கு ரூ. 5 இலட்சம் செலவிட வேண்டும் என்றும் ஒரு திட்டம் தீட்டப்பட்டது. காங்கிரஸ் அரசாங்கம் போன பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்தது. அதற்குப் பணம் இல்லையென்று சொல்லிவிடப் போகிறார்கள் என்று கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக வருவதற்கு முன்னாலே, முதல் அமைச்சராக பேரறிஞர் அண்ணா ஆண்டு கொண்டிருந்த காலத்திலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று திரு. என். ஆர். தியாகராஜன், காங்கிரஸ் தலைவர், திரு. கே. ராமதாஸ், காங்கிரஸ் தலைவர், லட்சுமி காங்கிரஸ் தலைவர், திரு. கே. ராஜாராம், காங்கிரஸ் கட்சியின் சார்பிலே தலைவராக இருந்தவர், அன்பிற்குரிய மஞ்சுபாஷினி காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அவர்கள் எல்லாம் வலியுறுத்திக் கேட்டார்கள். மெரினாவை அழகுபடுத்த வேண்டுமென்று கேட்டார்கள். அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் உடன்பட்டார்கள். அதற்குப் பிறகு கலைஞர்





கருணாநிதி அவர்கள் முதல் அமைச்சராக வந்தார்கள். அந்த நேரத்தில் அதே போல் கேள்வி கேட்கப்பட்டது. அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், மெரினாவிலே இருக்கிற புகாரி ஓட்டலுக்குப் பின்னாலே இருக்கிற படகு கட்டுகிற துறையும் அகற்றப்படும், படகுகளும் அகற்றப்படும் என்று கலைஞர் கருணாநிதி காலத்திலே அறிவிக்கப்பட்டது. அங்கே அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் கட்டுமரங்களையும் படகுகளையும் ஒதுக்கி வைக்கிறார்கள், மீனவர்கள் பன்னெடுங்காலமாக இருந்து வருகிறார்கள். எனவே, அங்கே மீனளத் துறையும், வீட்டு வசதி வாரியத் துறையும், பொதுப்பணித் துறையுமாக சேர்ந்து, அவைகளை அப்புறப்படுத்துகிற முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனாலும் மீனவர்கள் வாழ வழி வேண்டுமென்பதற்காக, 100 அடி, 150 அடி என்று இடையே முனைகளை அளந்து அவைகளை வேறுபடுத்திக் காட்டி, அப்பகுதிகளை அவர்களுக்கு உரியதாக ஆக்கி, மற்ற இடங்களிலே பொது மக்களுக்கு வசதி செய்து தருவோம் என்று டாக்டர் கலைஞர் கருணாநிதி அரசு சார்பிலே இங்கே அறிவிக்கப்பட்டது.

ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன், மீனவ நண்பராக, முதல்வராக வருவதற்கு முன்பே இருந்தவர், திகழ்ந்தவர் படகோட்டி நண்பராக, முதலவராக வருவதற்கு முன்பே இருந்தவர், திகழ்ந்தவர், நமது முதல் அமைச்சர். அவர்களிடமிருந்து அத்தனை நன்மைகளை, நிச்சயமாகப் பெற முடியும். என்ன, என்ன நன்மைகளைச் செய்து இருக்கிறார், கடுங்காற்று புயலாக வீசி, கோரக் கொடுமைகளை விளைவிக்கின்ற நேரத்தில் பாதுகாப்பு மையங்களைக் கட்டிக்கொடுத்து—புயல் பாதுகாப்பு மையங்களை அவர் தான் கட்டிக் கொடுத்து—இருக்கிறார்.

9 மாதங்கள் மட்டும்தான் மீன் பிடிக்க முடியுமா? மாதம் ரூ 10 நீங்கள் கொடுங்கள், நாங்கள் மாதம் ரூ. 10 கொடுக்கிறோம். உங்களால் மீன்பிடிக்க முடியாத அந்தப் பருவத்திலே அந்த 3 மாதத்திலே மாதம் ரூ. 60 தருகிறோம் என்று அறிவித்ததும் அவர்கள்தான்.

மீனவர்களாகிய உங்களிலே யாருக்காவது வேதனை காரணமாக, துன்பம் வந்து முழுகி விட்டீர்கள் என்று சொன்னால், உங்களுடைய குடும்பத்தினரும் முழுகாமல் நான் பார்த்துக் கொள்கிறேன், இதோ ரூ. 5,000 என்று சொன்னதும் அவர்கள் தான்.

பாதுகாப்பு உறுதி திட்டம் என்று சொல்கிற இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு, அவர்களுக்கு உயிரிழப்பு வந்தது என்று சொன்னால், ரூ. 15,000 தருகிறே என்று சொன்னதும் அவர்கள் தான். என்னைப் போன்ற எளியவர்கள் சொன்ன நேரத்தில் கேட்டு, இறாலுக்கு வரி விதிக்காததும் அவர்தான் அப்படிப்பட்ட வரிடமிருந்து நன்மையைப் பெற முடியும் என்ற நம்பிக்கை நிச்சயமாக மீனவர்களுக்கு இருக்கிறது. அப்படி இருக்கிற நேரத்திலே யார் குறுக்கே வந்தது? எந்தச்சக்தி இங்கே

குறுக்கே வந்தது? எந்தச் சக்தி? வெளிநாட்டு சக்தியா, உள்நாட்டு சக்தியா? எத்தனை பண பலத்தோடு உள்ளே வந்து முதல்வருக்கும் மீனவர்களுக்கும் இருக்கிற நட்பைப் பாதிக்கிறது சென்னைக்கு வர வேண்டிய பெருமையைத் தடுக்கிறது என்பதை அரசாங்கம் நன்றாக ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

மெரினா பாதுகாப்புப் படை என்ற ஒன்றை வைத்து, பாதுகாப்பு அணி என்ற ஒன்றை வைத்து, அதிலே மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களையே அதற்குப் பொறுப்பாக்குவது கூட நல்லது என்று நம்புகிறேன். மீனவ நண்பராக இருக்கிற முதல் அமைச்சரே, மீனவ சமுதாயத்தோடு பேசிவிட்டால் எல்லா நன்மையும் வந்து விடும். குறுக்கே யாரும் வராமல் இருந்து விட்டாலே போதும் எல்லா பெருமைகளும் மீனவர்களுக்குக் கிடைக்கும், சென்னை நகருக்கும் கிடைக்கும், தமிழகத்திற்கும் கிடைக்கும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்து அமைகிறேன், வணக்கம்.

***திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் மீது நானும் வழிமொழிந்து என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்கலாம் என்று கருதுகிறேன்.

இதுவரை இந்த அவையிலே பல்வேறு ஆளுநர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு மேதகு ஆளுநர் எந்தச்சூழ்நிலையில் உரையாற்றினார் என்பதை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அவர்களுடைய உரைக்கு சிறிதுநேரம் திரையிடப்பட்டிருந்தாலும் கூட அவர் பொறுமையின் சின்னமாக இருந்து சபையின் மரபு கெடாமல் உரையைப் படித்து முடித்தார்.

இங்கே இதற்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளுநர் உரையிலே எந்தவிதமான திட்டங்களும் இல்லை, உப்பும் இல்லை, சப்பும் இல்லை: பல்வேறு திட்டங்கள் இதில் சேர்க்கப்படவில்லை என்று குறைகூறித்தான் பேசியிருக்கிறார்கள். ஆனால் ஆளுநர் உரையிலே எல்லாவற்றையும் சொல்வது இயலாத காரியம்; தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பிரச்சனைகளையும் பற்றி ஆளுநர் உரையில் சொல்வது என்றால் குறைந்தது ஐந்து நாளாவது ஆகும். எனவே ஆளுநர் சொன்னதற்கு விவாதம் தேவையில்லை; சொல்லாததற்குத்தான் விவாதம் தேவை என்று 1967—க்கு முன்னாலே முன்னாள் முதலமைச்சர் ஒருவர் எடுத்துச் சொன்ன கருத்தை இந்த சந்தர்ப்பத்தில் நான் அவர்களுக்கு விடையாக வைக்க விரும்புகிறேன்.

இந்த ஆண்டு இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்ற கொள்கை விளக்கக் குறிப்புதான் ஆளுநர் உரை என்பது இந்த மன்றத்தில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்த ஒன்று





தான். ஆளுநர் உரைக்கு வடிவத்தைக் கொடுக்க அரசு இருக்கிறது. இந்த அரசில் அடிமட்டம் முதல் மேல் மட்டம் வரை வஞ்சம் லாவணியம் பெருக்கெடுத்து ஓடுகிறது என்ற கருத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் இதை வலியுறுத்திச் சொல்லியிருப்பது தான் உண்மையிலேயே வேடிக்கையாக இருக்கிறது. சர்க்காரியா கமிஷனை சந்தித்த அரசு எங்களைப் பார்த்து லஞ்ச லாவணியம் மிகுந்திருக்கிறது என்று சொல்வது வேடிக்கை மட்டுமல்ல; வியப்பாகவும் இருக்கிறது.

இன்றைக்கு லஞ்ச லாவணியத்தை ஒழித்து, ஊழலைக் களைவதற்கு அதில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு கடுமையான தண்டனை வாங்கிக்கொடுத்துக் கொண்டிருக்கிற செம்மையான தூய்மையான ஆட்சி நடக்கிறது என்றால் அது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சி என்பதை நாட்டு மக்கள் அறிந்திருக்கிற காரணத்தால்தான் மூன்றாவது தடவையாக இன்றைக்கு முதலமைச்சர் பொறுப்பிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வீற்றிருக்கிறார்கள். அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்வதானால் செய்யாறில் நடைபெற்ற தேர்தல் என்பது நாட்டுமக்கள் அறிந்த ஒன்று.

இந்த அரசு கிராம மக்களைப்பற்றி சிந்திக்கின்ற அரசு, சொன்னதைச் செய்து, செய்ததை மட்டும் மக்களுக்கு எடுத்து சொல்கிற அரசாக இந்த அரசு அமைந்திருக்கிறது. அதனால் ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிற காரியங்களில், மூன்று காரியங்களில் வரும் ஆண்டிலே இந்த அரசு கவனம் செலுத்தும் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டிருக்கிறது: தொழில் முன்னேற்றம், மின்சக்தியை உற்பத்தி செய்தல், ஆதிதிராவிட மக்களுக்கும் கீழ் மட்டத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கும் வீட்டுவசதி போன்றவை ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ள விஷயங்களில் முக்கிய அம்சங்களாக குறிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முன்னேற வேண்டும், மற்ற மாநிலங்களை விட இந்த மாநிலத்தில் தொழில் முனைவர்களை ஊக்குவிக்கின்ற முயற்சியிலே, தமிழக அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்ட வேண்டும்.

1985 ஆம் ஆண்டு இந்த பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு மத்திய அரசுக்கு 45 இசைவுக் கடிதங்களை அனுப்பியிருக்கிறது. சென்ற ஆண்டிலே கூட 108 கோடி ரூபாயில் 50,000 டன் உற்பத்தி செய்யும் 'ஆவ்ரோ என்ஜின்' தயாரிக்கும் திட்டத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிநிறுவனம் மேற்கொண்டதன் காரணத்தால் 500—க்கு மேற்பட்ட சாதாரண மக்கள் பயன்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சியில் இந்த அரசு மிகுந்த அக்கறைகாட்டி வந்திருக்கிறது என்பதற்கு மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பியிருக்கிற பல கடிதங்கள் சாட்சியாகும். இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருந்து பேசிக்கொண்டிருக்கிற பல உறுப்பினர்கள் திட்டம் இல்லை, திட்டம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த அரசு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் மத்திய அரசிலேயிருந்து நிதி உதவிகளைப் பெற்று பல பெரிய தொழிற்சாலைகளை தொடங்க வேண்டுமென்று அக்கறை காட்ட வேண்டுமென்பதற்காகத்தான் இன்றைக்கு பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. என்பதை அறிந்தே இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள 48 வங்கிகள் மூலம் பல்வேறு தொழில்களைத் தொடங்க வேண்டுமென்பதற்காக, விவசாயத் தொழில்களை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக 162 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12-00)

இதை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் நன்றாகவே அறிவார்கள். இதன் மூலம் இன்றைக்கு 6 இலட்சம் பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். நடப்பாண்டிலே 8 இலட்சம் பேர் பயன் பெறக்கூடிய அளவுக்கு 250 கோடி ரூபாய் கடன்களை வழங்க தமிழக அரசு எற்பாடு செய்து வங்கிகளும் அதற்கான ஒப்புதலை இன்றைக்கு அளித்துக் கொண்டிருக்கின்றது. இதன் மூலம் குடிசைப்புறத்திலே இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் இன்றைக்கு வங்கிகளின் மூலமாகக் கடன் பெற்று அவர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி இருக்கிறார்கள் என்கிறபோது சென்னை மாநகரத்தில் இருக்கின்ற மக்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் தெளிவாக இந்த அரசைப் புரிந்து வைத்திருக்கிறார்கள். சிப்காட், டிட்கோ, சிட்கோ, எல்காட் போன்ற தொழில் மேம்பாட்டுக் கழகங்கள் மூலமாக தமிழகத்தில் பல்வேறு தொழில் மையங்கள் துவங்கப்பட்டு, சிறு தொழில்கள் பல தொடங்குவதற்கு பலவிதமான ஒத்துழைப்பையும், கடன்களையும் புரட்சித் தலைவர் அரசு வழங்கி வருவதை இந்தத் துறையின் மூலமாக இன்றைக்கு நாம் அறிந்திருக்கிறோம்.

எல்லா மாவட்டங்களிலும் மக்களுக்குப் பயன்படுகிற வகையில் பலதரப்பட்ட தொழில்களைத் துவங்க இந்த அரசு கடன் உதவியை வழங்கி இருக்கின்றது. ஆனால் பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையிலே தமிழ்நாட்டில் மைய அரசு செய்கின்ற முதலீடு மிகக் குறைவாக இருக்கிறது என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் குற்றம் சாட்டிப் பேசுவதை விட்டுவிட்டு மைய அரசோடு போராடி, பேசி, பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு, மைய அரசு இங்கே முதலீடு செய்வதற்குப் போராடி





அதிலே வெற்றி கண்டு அதன் மூலம் பல பேர் பயன் பெறக் கூடிய விதத்தில் ஈடுபடுவது உண்மையிலேயே நல்ல காரியம் என்று என்னைப் பொறுத்தவரையில் நான் ஆலோசனையாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். போர்க்கால நடவடிக்கை, போர்க்கால நடவடிக்கை என்றால் என்ன என்று கேட்டார்கள். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்த ஒன்று தான். இருந்தாலும் கேலி பேச வேண்டும் என்பதற்காகத் தான் அவர் பேசினார் என்று நான் கருதுகிறேன். 40 வருட காலமாக அவர்கள் அரசியலிலே இருந்து வருவதாகவும் குறிப்பிட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்கள்மீது பற்று வைத்திருப்பதாகவும் சொன்னார். நானும் சொல்கிறேன். எதிர்க்கட்சியினுடைய தலைவர் எழுதுகிற எழுத்தின்மீது உண்மையிலேயே எனக்கு மோகம் அதிகம்தான். அந்த எழுத்தை ரசித்து படிக்கக்கூடிய வாய்ப்பை நானும் பெற்றிருக்கிறேன். ஆனால் அவர் பேசுகிறபோது சொன்னார்கள். போர்க்கால நடவடிக்கை என்றால் என்ன என்று கேட்டார்கள். போர்க்கால நடவடிக்கைள் என்பது செய்து பழக்கப் பட்டவர்களுக்குத்தான் தெரியும். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு எப்போதுமே வெள்ளத்தையும், புயலையும் எதிர்த்துப் போராடி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகின்ற வகையில் சாதனைகளைக் கண்டுகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அரசு தான் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக உட்கார்ந்த நேரம் என்னவோ எங்கே பார்த்தாலும் மழையும், வெள்ளமும் புயலும் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிரும், இலட்சக் கணக்கான பொருட்சேதமும் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, போர்க்கால நடவடிக்கையை, துரிதமான நடவடிக்கையை மேற்கொண்டு அந்த வகையில் அதிகமான நடவடிக்கைகளை இந்த அரசு செய்து வந்திருக்கின்றது என்பது நாட்டிலே இருக்கின்ற மக்கள் அறிந்த ஒன்று தான். ஆகவே செப்பனிடுகிற பணிகள் செவ்வனே நடைபெறுகின்றன என்பதற்கு அடையாளமாகத்தான் பல பகுதிகளில் இன்றைக்கு அந்தச் செப்பனிடுகிற பணிகளைத் தூய்மைப்படுத்துகிற பணிகளாக புரட்சித் தலைவர் அரசு செய்து வருகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது இன்னொன்றையும் குறிப்பிட்டார். அவருடைய தொகுதியிலே இருக்கின்ற மதுராந்தகம் ஏரியை மட்டும் வைத்துக் கொண்டு அவர் பேசினார். ஆனால் தமிழ்நாடு முழுவதும் அப்போது பாதிக்கப்பட்டு இருந்தது. கை இல்லாதவர்களிடத்தில் வீணையை மீட்டி நாதம் எப்படி இருக்கிறது என்று கேட்டால் அது நிச்சயமாகத் தெரியாத ஒன்றுதான். அதைப்போல போர்க்கால நடவடிக்கை மூலமாக இந்த அரசு செய்து இருக்கின்ற சாதனைகளை நாட்டு மக்கள் அறிந்திருக்கிறபோது நாதத்தைப் பற்றித் தெரியாதவர்கள் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆளுநர்

உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற கருத்துக்களை விட்டுவிட்டு அரசாங்கத்தைக் குற்றம் சொல்லிப் பேச வேண்டும் குறை சொல்லி பேச வேண்டும் என்பதையே திட்டமாக வைத்துக் கொண்டு பேசுகிறபோது, அதுவும் 40 ஆண்டு காலம் அரசியலில் ஊறிப் போனவர் பேசுகிறார் என்கிற போதுதான் உண்மையிலேயே நான் வருத்தப்படுகிறேன்.

ஆளுநர் உரையிலே மின் உற்பத்தித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். 7 வது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக் காலதிற்குள்ளாக தமிழ்நாட்டில் மின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்று ஆளுநர் கூறி இருப்பது உண்மையிலேயே நமக்கெல்லாம் மனநிறைவுத் தரக்கூடிய ஒரு விஷயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சார வசதி என்பது வசதி படைத்தவர்களுக்குத் தான் என்ற நிலையை மாற்றி எல்லா மக்களுக்கும் கிடைக்கும்; அதுவும் குடிசை வாழ் ஏழை மக்களுக்கெல்லாம் கூட கிடைக்கக்கூடிய அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வழி வகுத்து ஏற்பாடு செய்திருப்பது பாராட்ட வேண்டிய ஒன்று. ஏழைகளின் குடிசைகளுக்கு ஒளிவிளக்கு ஏற்ற வேண்டும் என்பதற்காக திட்டத்தை தீட்டி அதனால் 7 லட்சம் குடிசைகள் பயன் பெறுகின்றன என்றால் அது ஒரு பெரிய சாதனை இல்லையா என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன். மாநில அரசின் திட்டங்களில் முக்கிய இடம் பெற்றிருப்பது மின் உற்பத்தி. 1985-86 ஆம் ஆண்டிலே அதற்காக 326 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பல மின் உற்பத்தி திட்டங்களை இந்த அரசு ஏற்று, அவற்றை செய்ய வேண்டும் என்று திட்டங்களை தீட்டியிருக்கிறது. இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்திலே சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு முக்கிய கருத்தை உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்தின் பல பகுதிகளிலே விளக்குகளே சரியாக எரிவதில்லை. அந்த விளக்குகளை பாரமரிப்பதற்கு தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தும் கூட விளக்குகள் எரியாமல் இருளடைந்திருக்கிறது. சரியான முறையிலே கவனித்தால், அவைகளை எரிய வைக்க முடியும். ஆகவே இந்த விளக்குகளை எரிய வைப்பதில் அதிகாரிகளை கவனம் செலுத்தச் செய்ய வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில, இந்த விளக்குகளை சரியான முறையில் பராமரிப்புச் செய்து எரிய விடுவதற்கு கண்காணிக்கின்ற வகையிலே புலன் ஆய்வுப் படை என்று சொல்லக்கூடிய வகையில் சில ஆய்வுப் படைகளை ஏற்படுத்தியும் கூட அதை கவனிக்கச் செய்ய வேண்டும். இந்த நேரத்திலே அதை என் ஆலோசனையாகச் சொல்லுகிறேன்.





இறுதியாக என்னுடைய மயிலாப்பூர் தொகுதியிலே அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயம் ஒன்று இருக்கிறது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு தமிழகத்தில் பல்வேறு கோவில்களில், பல்வேறு பகுதிகளில் அந்தத் துறையின் மூலமாக பல பணிகள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு மறுமலர்ச்சியே தோன்றியிருக்கிறது. அதைப் போலவே என்னுடைய தொகுதியான மயிலாப்பூரிலே இருக்கிற காரணீஸ்வரர் ஆலயம் என்பது, புகழ் பெற்ற பாடல்களின் மூலமாக பூஜிக்கப்பட்ட ஒரு ஆலயம். ஆனால் அந்த ஆலயத்தில் இன்றைக்கு சரியான வருமானம் இல்லாத காரணத்தினால் பராமரிப்பும் குறைந்திருக்கிறது. அந்த ஆலயத்தைப் பற்றி சரியாக தெரிய முடியாத காரணத்தினால் பக்தர்களின் கூட்டமும் குறைவாக இருக்கிறது. அதனால் சரித்திரப் புகழ் வாய்ந்த அந்த கோவிலுனுடைய நடைமுறைகள், பூஜை வழிபாடுகள் கூட நடத்துவது மிகவும் சிரமமாக இருக்கிறது. அந்த ஆலயத்திற்கு சொந்தமாக இருக்கக்கூடிய அசையாச் சொத்துக்கள் பல இடங்களில் உள்ளன. அந்த அசையாச் சொத்துக்களின் மூலம், ஆலயத்தை நன்கு பராமரிக்கச் செய்யவும் முடியும். அத்தோடு திருமண மண்டபங்கள் கட்டுவது போன்ற மக்களுக்கு பயன் தரும் காரியங்களுக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆகவே அந்தச் சொத்துக்களைப் பயன்படுத்தி, அந்த ஆலயத்தை சீரமைப்பதோடு, அந்த ஆலயம் இன்னும் விளம்பரம் அடையக்கூடிய அளவுக்கு சிறப்பாக செய்ய வேண்டும் என்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். (மணி யடிக்கப்பெற்றது.) மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெண்கள் இந்த அவையில் பேசுகின்ற வாய்ப்பு குறைவாக இருக்கிறது, எனவே எனக்கு இன்னும் 2 நிமிடங்கள் பேச அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே வீற்று இருக்கிற காரணத்தினால் இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நிர்வாக வசதி கருதி, மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து நிர்வாகம் செய்ய வேண்டும் என்ற நிலை பரவலாக பேசப்படும் வகையில் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பல மாவட்டங்களை பிரித்து செய்து வருகிறது. அதைப் போலவே சென்னை மாநகரத்தை இரண்டாகப் பிரித்து வடசென்னை மாவட்டம் என்றும், தென் சென்னை மாவட்டம் என்றும் பிரித்து, தென் சென்னை மாவட்டத்தில் திருவள்ளுவர் பிறந்து வளர்ந்த ஊரான மயிலையை உள்ளடக்கிய தென் சென்னைக்கு, திருவள்ளுவர் மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டும்.

அது போல வட சென்னை மாவட்டத்திற்கு, பெரும் தலைவர் காமராசர் அவர்களின் குருவாக இருந்த சத்தியமூர்த்தி அவர்கள் பிறந்து வளர்ந்த மாவட்டமாக அது இருப்பதால்

அதற்கு சத்தியமூர்த்தி மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டும். சென்னை மாநகரத்தை இவ்வாறு இரண்டாகப் பிரித்து நிர்வாகத்தை நடத்தினால் இன்னும் செம்மையாக சீரர்க செயல்படுவதற்கு அது உதவியாக இருக்கும். எனவே இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.) வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-10)

*திரு. இ. ராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் நடக்கும் விவாதத்தில் என்னை பேச அழைத்து வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய சில கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன். ஆளுநர் உரையிலே ஒரு புதிய, மாபெரும் திட்டமாக அறிவித்திருப்பது ஆதித்திராவிடர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும், நரிக்குறவர்களுக்கும் மற்றும் சமுதாயத்தில் ஏனைய நலிந்தோருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமாகும். மூன்றாண்டுகளில் 30 லட்சம் வீடுகள் கட்டுவதாக ஒரு மாபெரும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாபெரும் திட்டத்தை செயல்படுத்த முடியுமா, முடியாதா, நடைமுறையில் சாத்தியமானதா, சாத்தியமாகாததா என்ற சர்ச்சைக்கு நான் போக விரும்பவில்லை. இப்போது என். ஆர். இ. பி., ஆர். எல். இ.ஜி. பி., தாட்கோ ஆகிய மூன்று திட்டங்களின்கீழ் வீடுகளைக் கட்டும் நிலைமையைப் பற்றி நான் விளக்க ஆசைப்படுகிறேன். இந்த மூன்று திட்டங்களின்கீழ் ரூ. 6,000 வீடு கட்டுவதற்கு கடனுதவியும், மானியமுமாக சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. 1984-85 வரையில் இந்த 6,000 ரூபாய் வீடு கட்டுவதற்கு மட்டும் தான் என்ற நிலை இருந்தது. ஆனால் நடப்பாண்டில் (1985-1986) 6,000 ரூபாய்க்குள் ஒரு கழிவறையும் கட்ட வேண்டுமென்று விதியை மாற்றியமைத்து இருப்பதாக அறிகிறேன். 6,000 ரூபாய்க்குள் வீடு கட்டுவதே மிகப் பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது. ஆகவே சுமார் 1,000 ரூபாய் செலவில் கழிவறையும் கட்டுவது என்பது மிகப் பெரிய பிரச்னையாக இருக்குமென்பதை தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

இதைத் தவிர 6,000 ரூபாயில் கட்டப்படுகிற வீட்டில் உபயோகப்படுத்த வேண்டியது, மண் செங்கல், மண் சாந்து போட்ட சுவர்கள், சாணிபோட்டு மெழுக வேண்டிய தரை ஓடு போட்ட கூரை. ஆகிய இது போன்ற நிபந்தனைகள் போடப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்படுகிற 6,000 ரூபாயில் வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ரூபாய் ஆயிரமோ, இரண்டாயிரமோ அதிகமாகக் கொடுத்தால் மக்களுக்கு நிரந்தரமாக பயனளிக்கக் கூடிய வகையில் வீடுகள்



கட்ட முடியுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், ரூபாய் ஆறாயிரம் மதிப்பில் மண் செங்கல், மண் சாந்து, சாணி போட்டு மெழுகக் கூடியதரை என்ற நிபந்தனைக்குட்பட்டு கட்டக்கூடிய வீடு எவ்வளவு நாட்களுக்கு நிலைத்திருக்கும் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே வீடு கட்டுவதற்காக அளிக்கப்படும் கடனுதவியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தில் குரூப் ஹவுசிங் என்ற முறையில் 30, 35 வீடுகள் கட்டுகிறார்கள். 1984-85 ஆம் ஆண்டு வரையில் இந்தத் திட்டத்தில் கட்டப்படுகிற வீடுகள் ஓரே இடத்தில் இல்லாமல் சிறிது சிதறி இருந்தாலும் அனுமதித்தார்கள். ஆனால் நடப்பாண்டில் இந்த குரூப் ஹவுசிங் திட்டத்தில் கட்டப்படுகிற வீடுகள் எல்லாம் ஓரே இடத்தில் இருக்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த குரூப் ஹவுசிங் திட்டத்தில் 6,000 ரூபாய் போக கூடுதலாக 3,000 ரூபாய் கொடுப்பதாகத் தெரிகிறது. இந்த 3,000 ரூபாய் எதற்கென்றால் 'அதர் இன்ப்ராஸ்ட்ரக்ச்சுரல் பெசிலிட்டிஸ்' என்ற முறையில் உள்ரோடுகள், இணைப்பு ரோடுகள் (approach roads) மற்றும் குடி தண்ணீர் வசதிகள் ஆகியவைகளை செய்து கொள்வதற்காக ஆகும். இப்படி கொடுக்கப்படுகிற 3,000 ரூபாய் நல்ல முறையில் பலனளிக்க வேண்டுமென்றால் குடி தண்ணீர் வசதி செய்வதை மட்டும் தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று ஆலோசனையாக கூற விரும்புகிறேன். ஏனென்றால், 3,000 ரூபாயை மற்ற காரியங்களுக்கு முழுமையாக உபயோகப்படுத்த முடியும்.

இது தவிர, குடிசைகளுக்கு ஒரு மின் விளக்கு என்ற திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட மக்களின் குடிசைகளுக்கு ஒரு விளக்கு ஏற்கனவே இலவசமாக அரசு அளித்து வருகிறது. இந்த இலவச மின் இணைப்பு ஆதிதிராவிட மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கு மட்டும் தான் என்று நினைக்கிறேன். இது சம்பந்தமாக என்னுடைய ஆலோசனையாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மின் விளக்கு இணைப்பை, அரசு மானியத்திலே கட்டுகிற வீடுகளுக்கு கொடுத்தால் நல்லது. அதன் மூலம் மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

அதோடு நிதி வசதி உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு உத்தரவு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது அரசு மானியத்தோடு நிதி வசதி உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வசதி செய்து கொடுக்கலாம். நான் கேட்டுக் கொள்வதென்னவென்றால், பல நகராட்சிகளில் நிதி வசதி இல்லாததாலும், ஓரே ஊராட்சியில் பல கிராமங்கள் இருப்பதாலும், பல ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி

கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை. ஆகையினால் ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள ஆதிதிராவிட மக்கள் இருக்கக்கூடிய குடியிருப்புகளுக்கு அரசே தொலைக் காட்சிப் பெட்டிகளை வாங்கிக் கொடுக்க நடவடிக்கை மேற் கொள்ளுமாறு நான் ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வீட்டு வசதி இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு சர்க்கார் மூலமாக இலவச வீட்டு மனைப் பட்டா வழங் கப்படுகிறது. இந்த இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் பல பிரச்சனைகள் இருக்கின்றன. கிராம மக்கள் பல பேர்கள் வீட்டு மனைப் பட்டா வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக் கிறது என்று என்னிடம் முறையிட்டுள்ளார்கள், ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்ட், சம்பந்தப்பட்ட ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகிய வர்கள் சரியாக ஒத்துழைப்பது இல்லை என்பது அவர்களுடைய குறையாகும். பணம் கொடுப்பவர்களுக்கு, மட்டும் மிகவும் துரித மாக புரப்போசலை அனுப்புகிறார்கள், மற்றவர்களுக்கு தேவை யில்லாமல், ஏதாவது காரணம் காட்டி தாமதம் செய்கிறார்கள் என்ற புகார்கள் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கின்றன. நான் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் உள்ள அதிகாரிகளுக்கு நீங்கள் ஒரு பிரத்தியேகமான உத்தரவைப் பிறப்பித்து, எங்கெல்லாம் ஆதி திராவிட மக்களுக்கு, அல்லது பழங்குடி மக்களுக்கு அரசு மூலமாக இலவசப் பட்டா கொடுக்க முடியுமோ, அங்கெல்லாம் சீக்கிரமாக புரப்போசலை அனுப்பி வைக்கும்படி, செய்ய வேண்டும். அதோடு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் போதே வீடு கட்டுவதற்குத் தேவையான கடன் அல்லது மானியம் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்தால் நல்லது. ஐ.ஆர். டி. பி. என்ற திட்டத்தைப் பற்றி ஒரு சிறிய விளக்கம் சொல்ல விழைகிறேன். இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் 31-3-85 வரை, சுமார் 404 கோடி ரூபாய் கடனாகவும், மானியமாகவும் கொடுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. இது பற்றி 1-10-85 ஆம் தேதி "இந்து" நாளிதழில்; ஐ.ஆர்.டி.பி.—பிளாக் ஸ்பாட்' (Block Spots) என்ற தலைப்பின் கீழ் ஒரு முக்கியமான ஆர்ட்டிகிள் வந்திருக்கிறது. இதை எத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் படித்து இருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆகையால் தலைவர் அவர்களுடைய அனுமதியின் பேரில், நான் இதை இங்கே வாசிக்கிறேன்; 'Till March 1985, an investment of nearly Rs. 404 crores has gone into this programme by way of loans and subsidies. Statistically, 13.19 lakh families against a target of 11.3 lakh families have been helped to take up economic activity for employment and income augmentation.' இவ்வளவு பெரிய தொகை செலவழிக்கப்பட்டு இருந்தாலும் கூட, உண்மையாகவே மக்கள் பயன்பட்டு இருக்கிறார்களா, இல்லையா, என்பது மிகவும் சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கிறது. அதாவது ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் குறிப்பாக, கறவை மாடுகள், ஆடுகள், வண்டி மாடுகள் கொடுக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தை அமுல்





படுத்தும் போது, பல விதமான கஷ்டங்கள், குறைபாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. குறைபாடுகளை ஓரளவுக்குத் தவிர்க்க வேண்டுமென்றால் தனி முயற்சி தேவைப் படுகிறது மறுபடியும் உங்கள் அனுமதியோடு 'இந்து' நாளிதழிலிருந்து வாசிக்கிறேன்: 'What is urgently needed according to them, is a comprehensive machinery for rural development administration which can co-ordinate the activities of the various development departments as well as banks and other agencies involved in the programme.' ஆகவே நான் உங்களைக் கேட்டுக் கொள்வதென்ன வென்றால் இந்த என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களை மக்களுக்கு நல்ல முறையில் செயல்படுத்து வதற்கு ஒரு தனி அதிகாரியை நியமித்து, அதை நல்லமுறையில் நீங்கள் செயல்படுத்த வேண்டும் என்று நான் மக்கள் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

மேலும் ஐ. ஆர். டி. பி. திட்டத்தின் செயல்முறை பற்றி சுருக்கமாக 'இந்து' நாளிதழ் சொல்வது:

'Political influrences, corruption, irregularities in assistance and collution among bankmen, officials and sometimes even the bene ficiaries themselves are obsuacles to the goal of lifting the families above the poverty line. The answer lies perhaps in making orien- tation economic and the aid substantially through a comparhensive machinery enlisting the co-operation of voluntary agencies.

இதைப் போலவே (நவம்பர் 18-டிசம்பர் 1, 1985) 'பிசினஸ் இந்தியா, என்ற பத்திரிகையில் ஐ. ஆர். டி. பி. திட்டத்தைப் பற்றி ஒரு ஸ்பெசல் ரிப்போர்ட் வந்து இருக்கிறது. அதனுடைய தலைப்பு பின்வருமாறு.

'The Integ ated Rural Development Programme in which ationalised banks have invested Rs. 3,000 crores over the lass decade, his not really been a runway success. The realisation in dawning that much better control and monitoring is needed. What have been the ills so far, and how can they be overcome'.

ஆகவே நான் உங்களை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் இந்த 3 திட்டங்களையும் நல்ல முறையில் நடத்துவதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டும். (மணியடிக்கப்பட்டது)

கடைசியாக என்னுடைய வேண்டுகோள்:

Millions of people innocent and ignorant, particularly in the villages who wallow in poverty are endlessly waiting to be lifted above the poverty line please. implement the anti poverty schemes with firmness and fortitude. If there is a political will, it is not an impossible task.

Thank you.

THIRU G. K. FRANCIS: Hon'ble Mr Chairman, Sir, while expresing thanks to the Governor for his address, one cannot but be impressed by the multi-dimensional, growth oriented and social welfare meassure annonced by the Governor in his address to the Joint Session of the Legislatare.

At the very outset as the Seventh Five Year Plan unfolds itself, it is remarkable to find that Tamil Nadu finds itself in an advantageous position having been alloted over 5,000 crores of rupees. This speaks of the good relation between the Centre and State, which is vitual for national integration and development. For this, we should commend the excellent rapport between our Prime Minister Shri Rajiv Gandhi and our Chief Minister Dr. M.G.R. We should also thank the Planning Commission for allotting this substantial outlay to Tamil Nadu. With this allotment and the long term fiscal policy announced by the Union Finance Minister there is an excellent opportunity for the State to achieve faster economic growth and wider soical justice.

It is also noteworthy to find that 30 per cent of the outlay of the Seventh Plan is being earmarked for power development. Power is the bed rock of Industrialitaiion and essential for better returns fram Agriculture. As the Governor pointed out power is the sine que non for Industrial Development. We are fartunate that Government is giving all emphasis to this vital sector. May I suggest that in the development of power generation, the Government go in for Nuclear Power Stations and collaborate with the Centre who have established Nuclear Power Stations. At the same time a vital need is to ensure that existing Power Stations do not continue to pollute the atmosphere. Measures to reduce pollution is very necessary to give man a free atmosphere to breathe and live in.

Floods have become a regular problem for Tamil Nadu. For the last decade they have unleashed their fury with increased power bringing in its wake widespread damage and loss of lives. The Government has provided relief and rehabilitation and has been supported by many Private Social Organisations. The need to co-ordinate the work of the private sector is very important. In this regard one has to commend the relief work done by the Church of South Inda and the relief they provided to people who were affected in Maduranthakam area. I beleive that the time has come for the Govenment to establish a department of Flood Releif Managment. This could be on a permanent basis to take necessary steps to prepare for the floods and do all that is necessary to warn, protect and rehabilitate people from the floods. Till now, we have just been waiting for the floods to hit us and then take necessary action but it is time to be ready and prepared. Further, this Department of Flood Relief Management would look into the whole operation of flood relief that is becoming bigger to be managed. I think there is no point in burdening



other departments who are already having their own work to perform. We are also thankful for our Hon.'ble Prime Minister Shri Rajiv Gandhi's personal visit to this State and the provision of on the spot relief and support.

The Government of Tamil Nadu has to be commended for the relief they are giving to the Sri Lanka Refugees. Having been forced to leave their native land, they have lost all their possessions and properties and just hope that they would get a chance to go back with honour and dignity. Unfortunately, despite the good offices of India and the active support given by the Government of India to bring about an amicable settlement, the solution seems elusive. We hope that the Sri Lankan Government, will accommodate our Tamil brethern in Sri Lanka and allow them to return with dignity and honour.

The various achievements speet out by the Governor in his address are (i) the increased productivity in thermal stations in the form of increased plant load factor ; (ii) the increased vocationalisation of Education in schools in TamilNadu ; (iii) the increased importance given to Rural development and poverty eradication ; (iv) the measures to increase food production ; (v) the measures taken to meet the increased offtake in the Public distribution System ; and (vi) the measures taken by the Government to augment drinkring water. These and various other steps pointed out in the Governor's Address clearly prove the fact that Tamil Nadu is moving towards a Social Welfare State.

One cannot also help noting that the Government is giving all priority and importance to Child Welfare programmes. The most remarkable step in this direction, which has earned International reputation and goodwill is the Chief Minister's Nutritious Meal programme through which 86.88 lakh children are benefitted. This has ushered in a new emphasis to a child's attitude to learning, especially to children who are coming from the Weaker Sections of the Society. It is good to find that Uniforms are also to be distributed to these students.

The most important feature of the Governor's Address is the programme of the Government to provide 10 lakh houses (5 lakh for the Adi Dravidas, Scheduled Tribes, and Nari Kuraves and and 5 lakh fori people belonging to 'below the poverty line'). This is an outstading step taken by the Government.

We are also delighted that a nodal agency in the Directorate of Industries and Commerce is to be set up. This will act as a catalyst to boost Industrial Development.

Despite the fact that Industrial growth is fairly good, it is noteworthy to find that the Government is going to accelerate Industrial growth. Industrialisation must be speeded up and the various incentives provided by the Government, like infrastructural support and high priority to power supply are good. The need to dynamise the Public Sector Units in Tamilnadu is also not to be forgotten. They must be made more productive oriented and modernised.

To conclude, we are thankful to the Governor's Address and for the wide ranging measures that he has made to pivot Tamilnadu to greater heights and growth, development and prosperity.

திரு. ஆ. கா. அ. அப்துல்சமத் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானம் முன் மொழியப்பட்டு இருக்கக் கூடிய நிலையில், அதையொட்டி, சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி.

(பிற்பகல் 12-30)

பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்து இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், ஒரு அடிப்படைக் கருத்தை நான் மாண்புமிகு முன்னவர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். சென்ற முறை பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்த பிறகு, இன்னொரு பட்ஜெட் கூட்டத் தொடரைத் எதிர்பார்த்து நாம் இங்கே வந்து இருக்கிறோம். பாராளுமன்ற, சட்டமன்ற மரபுகளிலே, பட்ஜெட் கூட்டத் தொடரோடு இன்னும் பல கூட்டத் தொடர்களும் நடப்பதைத் தான் நம்முடைய நாட்டினுடைய வழக்காக, மரபாக நாம் கண்டு வந்திருக்கிறோம், கடந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு, இந்த அவை கூட்டப்பட்டிருக்கக் கூடிய நோக்கமே, ஆறு மாதங்களுக்குப் மேலாக அவை கூட்டப்படாமல் இருந்தால், அது அரசியல் சாசனப்படி செல்லாது என்று இருக்கக் கூடிய அந்த நிலைமையின் காரணமாகத்தான் இந்த அவை கூட்டப்பட்டிருக்கிறதோ என்று நாம் கருதவேண்டியிருக்கிறது. ஏனென்றால் கடந்த ஆண்டு 57 நாட்கள் தான் சட்டமன்றம் நடந்திருக்கிறது. சட்டமன்றத்தில் நாம் விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் இல்லையா என்றால், நிறைய இருக்கிறது.

'எழுத்தறிவித்தவனை இறைவனாகக்' கருதக் கூடிய தமிழகத்தில் தான், அவர்களில் 64,000 பேர்களை சிறைக் கூடத்தில் அடைத்து வைத்திருக்கக்கூடிய நிகழ்ச்சி கடந்த காலத்தில் நடந்தது. இடையிலே எப்போதோ 6 ஆண்டு, 7 ஆண்டுகளுக்குப் பிறகு தான் தமிழகத்தில் புயல் வரும் என்ற நிலைமை மாறி, தமிழகத்தின் தட்பவெப்ப நிலை மாறி, இப்போது அடுத்தடுத்து, வாரத்திற்கு ஒரு முறை புயல் வந்து

சீரழிந்த கொடுமையைக் கண்டோம். வறட்சி தான் வந்தது என்று நாம் வாடிக் கொண்டிருக்கக் கூடிய நிலைபோய், பெய்த மழையினாலே மூழ்கி, திக்குமுக்காடி இருக்கிற நிலையைத் தமிழகம் கண்டிருக்கிறது. இந்த ஆறு மாத காலத்தில் 17 அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டங்களை எல்லாம் அப்படி பிறப்பிக்காமலே, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காவது இடைக்காலத்திலே சட்ட மன்றம் கூட்டப் பட்டிருக்குமானால், அது ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காக்கக்கூடிய ஒரு வாய்ப்பாக இருந்திருக்கமுடியும். இதே நிலை தொடருமானால், இந்த அரசே, ஆர்டினன்ஸ் அரசோ, என்று எதிர்க்கட்சிகள் குறை கூறுகிற அளவுக்கு நிலை வரும். எதிர்காலத்திலே இந்த நிலை இல்லாமல் இவ்வளவு நாட்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசினுடைய கருத்தை நேருக்கு நேராக அறிந்துகொள்ளும் வண்ணம், அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லி, நாட்டிலே நன்மைகளை எல்லாம் பெருக்குகிற வழிவகைகளையும் இந்த அளவிற்கு சட்ட மன்றம் கடைபிடிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயகத்தினுடைய மற்றொரு சீரிய முறை எவ்வளவுக் கெவ்வளவு ஆள வந்தவர்கள் எதிர்க்கட்சிகளை எல்லாம் அழைத்துக் கொண்டு, அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் அறிந்து அரசினுடைய கருத்துக்களை உருவாக்குகிறார்களோ, அதில்தான் அதனுடைய பெருமை இருக்கிறது என்பதை நாமெல்லாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அண்மையில் அந்த நல்ல போக்கு இல்லை என்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. அரசினுடைய அருங்குணமாக, பொது மக்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில், எந்த அளவிற்கு எதிர்க்கட்சிகளோடு கலந்துகொள்ள வேண்டுமோ, அந்த அளவிற்கு கலந்து கொள்ள அரசு கடமைப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் மத்திய மாநில உறவு குறித்து அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷனுக்கு நம்முடைய தமிழகத்தினுடைய ஒட்டு மொத்தமான கருத்தை தெரிவிக்கக் கூடிய முறையிலே அரசு தகுந்த முறையை மேற்கொண்டிருக்க வேண்டும், அப்படிச் செய்யாதது எங்களுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. அரசு சார்பாக கொடுக்கப்பட்ட சாட்சியம் கூட, அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறதே தவிர, ஆளுங்கட்சித் தரப்பிலே அதுபற்றி ஒரு கருத்தரங்கோ, அல்லது ஒரு விவாதமோ நடைபெற்று, பின்னர் அறிவிக்கப்பட்ட கருத்தாக என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. இதுபற்றி நம்முடைய தமிழகத்தினுடைய எல்லா அரசியல் கட்சிகளின் கருத்துக்களை ஒருமுனைப்படுத்த, அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் இது மத்தியிலும், மாநிலத்திலும் ஆள வந்தவர்களுக்கு மாத்திரம் உள்ள பிரச்சினை அல்ல. மத்தியிலே அரசோச்சும் அரசு மாநிலங்களை எப்படி நடத்தவேண்டுமென்று வரையறுக்கவேண்டிய முக்கியமான பிரச்சினை. மத்தியிலே ஆள வந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டும் பதவி நீக்கம் செய்யவில்லை, அண்ணா திராவிட முன்னேற்றக்கழக

அரசையும் பதவி நீக்கம் செய்திருக்கிறார்கள். இப்படி பதவி நீக்கம் செய்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் மாத்திரம் அல்ல. ஜனதாக் கட்சியின் பொறுப்பில் வந்தவர்கள் கூட செய்திருக்கிறார்கள். ஆகவே இது ஒரு கட்சியினுடைய பிரச்சினை அல்ல, நம்முடைய நாடு ஒன்றுபட்டு இருக்கவேண்டும், இந்த உறவு செம்மையாக இருக்கவேண்டும், இந்த உறவு இந்த நாட்டை ஒருமைப்படுத்தி வைக்கக் கூடிய தன்மை படைத்ததாக இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட சிறப்பான கருத்தாக இருக்கக் கூடிய காரணத்தால், பொதுமையான கருத்தை தமிழகத்தில் உருவாக்க வேண்டுமென்ற ஆதங்கம் எனக்கிருக்கிறது.

இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அந்த அறிக்கையிலே அரசு என்ன சொல்லியிருக்கிறது, இந்த அவை கூடி இத்தனை நாட்களுக்குப் பிறகும் இந்த அவைக்குமுன் அதை வைக்கவேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்ட பிறகும்கூட வைக்கப்படாதது ஏன் என்பது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. கேட்டால் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், கமிஷன் சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறது, அந்த விளக்கங்களை கொடுத்துவிட்டால் தேவையானால் அதை இந்த அவைக்குத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். அதன் பொருள் என்ன? எனக்குப் புரியவில்லை. அப்படிப் பொருள் இல்லாத அறிக்கையைத்தான் இத்தனை நாட்கள் தயாரிக்க வேண்டுமா? அப்படி என்ன விளக்கம் இல்லாத சாட்சியம் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். தேவையானால் அவைக்குத் தருகிறோம் என்று சொல்லக்கூடிய அமைச்சர் அவர்கள் அதை இந்த அவைக்குத் தருவது அரசாங்கக் கடமையல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே வெகு விரைவிலே அந்தச் சாட்சியத்தினுடைய பிரதியை இந்த அவைக்குத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே ஒரு புதுமை காணப்பட்டது. அது என்ன புதுமை என்றால், இவ்வளவு நாட்களாக ஒரே விதமான எழுத்திலே அந்த உரையை அச்சிட்டு இருப்பார்கள், ஆனால் இந்த ஆண்டு ஒரு சில பத்திகளை அழுத்தமான பெரிய எழுத்துக்களிலே அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள், என்ன காரணம்? என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஒரு சமயம் அந்தக் கருத்தை ஆழமாகவும் தெளிவாகவும் பார்க்கவேண்டுமென்று அப்படி அச்சிட்டு இருப்பார்களோ என்னவோ தெரியவில்லை. அப்படி இருந்தாலும்கூட அது சரியான கருத்துதான் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது இந்த ஆளுநர் உரையில் எனக்குப் பெரிய ஏமாற்றம் தான் காத்திருந்தது. மதுவிலக்கு பற்றி ஒரு வரி கூட இதில் குறிப்பிடபடவில்லை. இந்த அரசு மதுவிலக்கு கொண்டுவரப் போவதில்லை அதிலே எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்தால் நாங்கள் அதன்பிறகு அதை வற்புறுத்திப்பேசுவதைத் தவிர்க்கலாமா என்று கூட யோசிக்கலாம். இந்த அரசு சார்பாக மதுவிலக்கிலே நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பரிபூரண மதுவிலக்கு கொண்டு வந்தே தீருவோம் என்று





மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சிறப்பான காரியத்தைச் செய்வதற்கு ஒரு நாளிலே செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அண்ணா பிறந்த நாளிலே அது செய்யபபடும் என்று சொன்னார்கள், அந்தஅரும் பணி அண்ணா பிறந்த நாளிலே தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அண்ணா பிறந்த நாள் வந்தது. சென்றது. மதுவிலக்கு வரவில்லை. வராதது மட்டுமல்ல; வீதிக்கு வீதி மதுக்கடைகள் வந்து ஒரு வீட்டினுடைய கதவையும் தட்டிக் கொண்டிருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. கோவில்கள், மசூதிகள், சர்ச்சுகள் ஆகிய வணக்க ஸ்தலங்களுக்கு அருகிலேயும் பள்ளிக்கூடங்களுக்கு எதிரேயும் அவை திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடித்தவர்கள் தாங்கள் செய்தது பாவம் என்ற குற்ற உணர்வோடு தலையிலே முக்காடு போட்டுக்கொண்டு நடமாடிக் கொண்டிருந்தார்கள் ஒரு காலத்தில். ஆனால் இன்றைக்கு குடிக்காதவர்கள் தலையிலே முக்காடு போட்டுக் கொண்டு மூலையிலே முடங்கிக் கிடக்கிறார்கள், இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டாமா? உண்மையிலேயே மதுவிலக்கிலே அழுத்தமான நம்பிக்கை முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கான வலிமையும் அதற்கான பெரும்பான்மையும் இந்த அரசு பெற்றிருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் ஏன் திரும்பத் திரும்பச் சொல்கிறேன் என்றால் மதுவிலக்கு தமிழ் நாட்டில் பூரணமாக இந்த அரசின் காலத்திலே வரமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிற காரணத்தினால்தான் நான் இதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். மது என்ற தலைப்பிலே வருமானத்தைக் குறிப்பிட்டுக் காட்டாத ஒரு வரவு-செலவுத் திட்டத்தை தமிழகச் சட்டமன்றத்திற்கு வைத்து பெருமதிப்பிற்குரிய சரித்திரத்தை படைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். போதுமான நிதி வசதிகளைப் பெருக்க ஆவன செய்துவிட்டு மதுவிலக்கைக் கொண்டுவருவோம் என்று ஏற்கெனவே அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அரசின் சார்பாக ஒரு முறை சொன்னார்கள். அந்த வகையில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன? அதற்காக ஏதாவது பொருளாதார நிபுணர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டு எப்படி அந்த வருமானத்தை சரிக்கட்டுவதற்கு வேறு என்ன வகையிலே பெருக்கலாம் என்று ஏதாவது ஆய்வு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு அடிப்படை முயற்சியையாவது இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

இன்னொன்றையும் நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். மதுவிலக்கை அமல் நடத்துவதற்காகத்தான் தமிழகத்திலே முதன் முதலாக விற்பனை வரியே அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த

விற்பனை வரியினாலே ஆயிரம் கோடி ரூபாயை அரசு பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு காலகட்டத்தில், மதுவிலக்கை மீண்டும் கொண்டு வருவதற்கு இன்னொரு வழியைக் கண்டுபிடிக்கிறோம் அல்லது வருமானத்தை பெருக்குவதற்கு வழியைக் கண்டுபிடிக்கிறோம் என்று வழிவகை செய்யும் அந்தக் காலம் வரையிலே நாங்கள் காத்திருக்க வேண்டுமென்று சொன்னால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழ்நாட்டிலே விற்பனை வரி உண்டாக்கப்பட்டதல் வரலாறே மதுவிலக்கை அமல் நடத்த வேண்டுமென்ற ஆரம்பத்தினுடைய அடிப்படையிலே அமைந்திருக்கும்பொழுது ஆயிரம் கோடி ரூபாய் என்று அந்த இனத்திலே பெருக்கிக்கொண்டு, இன்னும் கொண்டுவராமல் இருப்பது எந்தத் தார்மீகத்தின் அடிப்படையிலே இதற்கு நியாயம் கற்பிக்க முடியும் என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆளுநர் உரையில் அரசு அழுத்தமான எழுத்துக்களிலே அச்சிட்டிருக்கக்கூடிய அந்தக் கருத்து உண்மையிலேயே மிகவும் பாராட்டத்தக்கது; வரவேற்கத்தக்கது; அதை நான் மனமார வரவேற்கிறேன். ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர் ஆகியோருக்காக ஐந்து இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்ற அறிவிப்பு பாராட்டத்தக்க அறிவிப்பாகும். அதேபோன்று, வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் மக்களுக்காக ஐந்து இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்ற அறிவிப்பையும் நான் மனமார வரவேற்கிறேன். நலிந்த பிரிவினருக்குள்ளும் மிகவும் மெலிந்த பிரிவினராக முஸ்லீம்களில் பெரும்பாலானவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கும் சில வழிகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன் அரிசனங்களுக்காகவும், போலீசாருக்காகவும், மேலும் வாழ்க்கையில் பல்வேறு பிரிவினருக்காகவும் வீட்டு வசதி வாரியங்களை அமைத்துள்ள அரசு, சிறுபான்மை மக்களுக்காகவும், தனியே வீட்டு வசதி வாரியம் அமைப்பது பற்றி ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரை, பொதுவாக வாரியங்கள் மூலமாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையையும், சமுதாய வாரியாக யார் யாருக்கு அவைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரங்களையும் அரசு ஒப்பிட்டுப் பார்க்குமானால் நான் கூறியுள்ள இந்தக் கருத்தினுடைய நியாயத்தை அவர்கள் உணர்ந்துகொள்ள முடியும்.

நிர்வாக வசதிக்காக பெரிய மாவட்டங்களைப் பிரிப்பது என்ற கொள்கையை நான் வரவேற்கிறேன். கோவையிலிருந்து பெரியார் மாவட்டத்தைப் பிரித்த பிறகு, திருச்சியிலிருந்து புதுவை மாவட்டத்தைப் பிரித்த பிறகு, முகவை மாவட்டத்திலிருந்து காமராஜர், முத்துராமலிங்க மாவட்டங்களைப் பிரித்த பிறகு, மதுரையிலிருந்து அண்ணா மாவட்டத்தைப் பிரித்த பிறகு, இப்பொழுது நெல்லை, வட ஆர்க்காடு மாவட்டங்களைப் பிரிக்க அரசு யோசித்திருப்பதை நான் வரவேற்கிறேன்



அதேநேரத்திலே, ஏற்கனவே அறிவித்தபடி தஞ்சை மாவட்டத்தைப் பிரித்து, காயிதே மிலலத் மாவட்டம் அமைக்கப்பட இந்த ஆண்டே முன்னுரிமை அளித்து செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டிலே இன்றைக்கு ஒரு பதட்ட நிலை பரவி வருகிறது. அது ஒரு நல்ல அம்சம் அல்ல. இதே அவையிலே நேற்றும், முந்தாநாளும்கூட. நகரிலே நடந்துவிட்ட துப்பாக்கிப் பிரயோகங்களைப் பற்றி இந்த அவையினுடைய உணர்வு, மக்களினுடைய ஒட்டுமொத்தமான உணர்வு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. எனக்கு ஒன்று புரியவில்லை. அன்னியர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்திலேகூட, துப்பாக்கியைப் போலீசார் பிரயோகிக்க வேண்டிய நிலை ஏற்படுமேயானால், 'ஷூட் டு ஸ்கேர்' என்று, பயத்தைக் காட்டுவதற்காக, கூடியிருக்கக்கூடிய கூட்டத்தைக் கலைக்க வேண்டுமென்பதற்காக சுட வேண்டும் என்பதைத்தான் நோக்கமாகக் கொண்டு இருக்க வேண்டும் என்று சொன்னார்களே தவிர, கொல்லுவதற்காக. பொதுமக்களைக் கொல்லுவதற்காக ''ஷூட் டு கில்'' என்ற அடிப்படை பின்பற்றப்படவில்லை. அப்படியிருக்க மக்களுடைய ஆட்சி நடக்கக்கூடிய இந்தக் காலத்தில், ஏன் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்றால், சுட்டுக் கொல்லப்பட்டவர்களினுடைய எண்ணிக்கையையும் கொடுக்கப்படக்கூடிய அளவிற்கு, அதிலும், காயம் பெற்றவர்களைவிட கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகுந்திருக்கக்கூடிய நிலைக்கு வருகிறதே, இது நல்லதுதானா என்பதை அரசு நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ''சென்னை நகர மேம்பாட்டுக் குழு'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையிலே ஒரு ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. ஆரம்பக் கூட்டம்தான் நடந்தது. அதையொட்டி சில சம்பவங்கள் முனைப்போடு இந்த நகரிலே எடுக்கப்பட்டன. இந்த நகரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு நம்பிக்கையே பிறந்தது, பல காரியங்கள் உடனடியாகச் சீர்திருத்தப்படும் என்று. ஆனால், என்ன நடந்தது என்று தெரியவில்லை. பாதையோரங்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று தீர்மானம் செய்ததுபோக, பாதைக்கு மேலேயிருந்த கூரைகூட இடிக்கப்பட்டது. இடித்துவிட்ட அந்த அதிகாரி மறுநாள் காணாமல் போனார் என்ற செய்தி வந்ததே தவிர, அதற்குப் பின்னாலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, ஏன் இடிக்கப்பட்டது, அதற்கு உத்தரவிட்டவர்கள் யார், அதற்குப் பரிகாரம் என்ன என்ற ஒரு வரிகூட அரசினுடைய கருத்திலே இதுவரையிலே சொல்லிக்காட்டப்படவில்லை. ஏன் அந்த நகர மேம்பாட்டுக் குழுவை இந்த மாநகராட்சித் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் உருவாகிடும் காலம் வரையிலும் கூட்டக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை அவசியம் மாதம் ஒரு முறையாவது கூட்ட வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று என்னுடைய அருமை நண்பர் ஆளுங்கட்சியைச் சேர்ந்த திரு. பாண்டுரங்கன் அவர்கள் ஒரு கருத்தை இந்த அவையிலே சொன்னார் என்று பத்திரிகையிலே பார்த்தேன். குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி அவர் தன்னுடைய விழுமிய கருத்தைச் சொல்லும்போது, தேவையில்லாமல் ஒன்று சொல்லியிருக்கிறார். முஸ்லீம்கள் 4 மனைவிகள் வரையிலும் கட்டிக் கொள்ளலாம் என்று அனுமதி இருக்கக்கூடிய காரணத்தால், கணக்கு வழக்கு இல்லாமல் அவாகள பிள்ளைக் குட்டிகளைப் பெற்றுக் கொண்டே போகிறார்கள். இந்த எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகுமானால் 500 ஆண்டுக் காலத்திலே இந்த நாடு இஸ்லாமிய நாடாக மாறிவிடும் என்ற ஒரு பய உணர்ச்சியை அவர் வைத்திருக்கிறார். அதற்கு என்ன அடிப்படை என்றே எனக்குப் புரியவில்லை. முதலாவதாக, 4 மனைவிகள் கட்டுப் அனுமதி இருக்கிறதே தவிர, கட்டாயம் இல்லை என்பதை அவர்களுக்கு நான் மரியாதையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏன், இந்த அவையிலே எல்லா கட்சியும் சேர்ந்து நாங்கள் 6 உறுப்பினர்கள் இருக்கிறோம். 6 பேர்களும், ஏகபத்தினி விரதர்களாகத்தான் இருந்து கொண்டிருக்கிறோம். ஆனால், மற்ற உறுப்பினர்களைப் பற்றி நான் அறியவில்லை. ஏனென்றால், சின்ன வீடு கலாச்சாரம் எங்களிடத்திலே பரவவும் இல்லை, அதை நாங்கள் ஊக்குவிக்கக்கூடியர்களும் அல்ல.

இன்னும் சொல்லப் போனால், அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களோ, எனக்குத் தெரியவில்லை. இராமச்சந்திரனைத் தவிர, கடவுள்கள்கூட ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் தான் வைத்திருந்தார்கள் என்று அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பார்வதி பி.ஏ. என்று நவ்னத்திலே எழுதியிருக்கிறார்; அதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினராக இருப்பதால், அவர் தெரிந்திருப்பார் என்று நினைக்கிறேன். ஏதோ இந்தச் சமுதாயம் மாத்திரம் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை வைத்திருப்பதையே தன்னுடைய சீரிய இலட்சியமாக, வேறு எந்த வேலையும் இல்லாமல், அதிலே ஈடுபட்டிருப்பதைப்போல் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்களே, அந்த எண்ணம் மாற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்ன கணக்கு என்று தெரியவில்லை. 500 ஆண்டுக் காலத்திலே, இஸ்லாம் பரவுமானால், 800 ஆண்டுக்காலம் இதே சமுதாயம் மணிமுடியை வைத்துக் கொண்டு இந்த நாட்டிலே எல்லா அதிகாரத்தையும் வைத்துக் கொண்டு, ஆண்டுகொண்டிருந்தார்களே, அப்போதெல்லாம் அந்த வேலையைச் செய்து கொண்டா இருந்தார்கள். அது ஒரு தவறான கண்ணோட்டம். இந்தத் தேவையில்லாத பிரச்னைகளை எல்லாம் இந்த அவையில் பேசுவதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



இன்னும் ஒன்று, போப் ஆண்டவர் அவர்கள் தமிழகத்திற்கு வருவதற்கு இந்த அரசு தக்க ஏற்பாடுகள் செய்ய இருக்கக்கூடிய அந்தத் தன்மையை நான் மனமாரப் பாராட்டுகிறேன். நம்முடைய முன்னவர் அவர்கள் கூட, அவர் ஒரு நாட்டினுடைய அதிபதி என்ற முறையில்தான் நாங்கள் வரவேற்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அவர் ஒரு நாட்டின் அதிபதி மாத்திரம் அல்ல. நாட்டின் அதிபதி என்பதிலே அவருக்குப் பெருமை இல்லை. 70கோடி மக்கள் கொண்ட ஒரு மதத்தின் தலைவர் என்ற முறையிலேதான் அவர்களுக்குப் பெருமை இருக்கிறது. அந்தப் பெருமைக்குரியவராக இருப்பதால், இந்த நாடு வரவேற்கிறது என்று நான் கருதுகிறேன்.

ஒன்றே ஒன்று, என்னுடைய உள்ளத்திலே இருக்கிறது. இந்த ஆளுநர் உரையில், தொழில் தொடங்குவதற்கு தேவைப்பட்ட எல்லாவிதமான வசதிகளும் வாய்ப்புகளும் நிதிப் பெருக்கமும் செய்து தரப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதை இந்த அரசு செய்து வருகிறது என்பது நமக்குத் தெரியும், அதோடு ஒன்றை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதோடு இந்தத் தொழில் அதிபர்களுக்குப் பாதுசாப்பும் இந்த அரசு ஏற்பாடு செய்து தர வேண்டும். ஏனென்றால், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தொழில் அதிபர் மேலூரிலே ஒரு சிமென்ட் பாக்டரி போடுவதற்கு எல்லாவிதமான உபகரணங்களும் ஏற்படுத்தி விட்ட பிறகுகூட, அந்தக் கிராமத்திலே அதைப் போட விடாமல் அவர் தடைப்படுத்தப்படடார். பிறகு எந்தத் தொழிலும் தொடங்காமல், அவர்கள் அந்த எண்ணங்களைத் தவிர்த்து விட்டிருந்த காலத்தில், தமிழக அரசைச் சேர்ந்த அதிகாரிகளே, அவர்களை அணுகி, நீங்கள் மானாமதுரை தொழில் பேட்டையில் தொடங்குங்கள், நாங்கள் எல்லாவிதமான பாதுகாப்பும் தருகிறோம் என்று வற்புறுத்தி அவரைத் தொடங்கச் செய்து, அவர் தன்னுடைய முதலீட்டை எல்லாம் போட்டு, அரசு தந்த கடனையும் சேர்த்து அதிலே முதலீடு செய்து விட்டு, அந்தக் கட்டிடத்தைத் தீபாவளி திருநாளன்று தம்முடைய மனைவியோடு சென்று பார்க்கத் தலைப்பட்ட நேரத்தில், அந்தத் தொழில் வளாகத்திலேயே அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆகையினாலேதான் நாம் பொருள் கொடுப்பதோடு, மற்ற உதவிகள் செய்வதோடு, தொழில் தொடங்குவதற்குரிய பாதுகாப்பும் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படி கொலைக்கு காரணமாக இருந்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? பாதிக்கப்பட்ட அந்தத் தொழில் அதிபர்களுக்கு என்ன பரிதாப உணர்ச்சி காட்டி, என்ன உதவி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒன்று நான் இறுதியாக சொல்லவிரும்புகிறேன். நீங்கள் ஆயிரம் நல்ல காரியம் செய்கிறீர்கள். ஆனால், அதோடு இந்த ஆயிரம் நல்ல காரியங்களை அழிக்கக்கூடிய மதுவிலக்கு அமுல்படுத்தாமல் இருக்கக்கூடிய தீய காரியம் செய்கிறீர்கள். குடிப்பதற்கு ஒரு குவளை தண்ணீர் கொடுத்தால் போதும் என்று நாடு கேட்கிறது.

ஆனால், நீங்கள் குடம், குடமாகப் பால் தருகிறேன் என்கிறீர்கள். ஆனால், அதிலே ஒரு துளி விஷம் கலப்பது போல், மது விலக்குத் திட்டத்தை அமுல்படுத்தாமல் இருக்கிறீர்கள். அதையுங் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 12–50)

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னராசு அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை வழிமொழிந்து ஒருசில உணர்வுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையின்மீது பல்வேறு உணர்வுகளை ஆளும் கட்சித் தரப்பிலும் எதிர்க்கட்சித் தரப்பிலும் எடுத்து வைத்து அமர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வழக்கம்போல் இந்த ஆளுநர் உரையைப்பற்றி பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆறுதலாக அவர்கள் 1972-லிருந்து போராடி வந்திருக்கிற அந்தப் போராட்ட வழியில் 1972-லிருந்தே கலைஞர் கருணாநிதி அவர்கள் சொல்வதை இந்த நாட்டு மக்கள் கேட்கவில்லையே என்று அங்கலாய்ப்பு இருந்து வந்தது. ஆனால் இந்த செய்யாறு தேர்தலில் அந்த அங்கலாய்ப்புக்கு ஆறுதல் படுகின்ற அளவிலே ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் செய்யாறு செல்வதற்கு முன் பாக பொள்ளாச்சியிலே பேசும்போது நடைபெறவிருக்கிற தேர்தலில் செய்யாறு மக்கள் செய்யாறுக்கும் செய்வாருக்கும் வாக்களிப்பார்கள் என்று ஆணித்தரமாகச் சொன்னார்கள். ஆகவே, இதுவரையில் செவிமடுக்காத அந்தச் செய்யாறு மக்கள் தெளிவாக கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுகின்ற வகையில் செய்யாருக்கு வாக்களிக்காமல் நல்ல காரியங்களைச் செய்வார் புரட்சித் தலைவர் என்று வாக்களித்து மீண்டும் இந்த நாட்டை ஆளுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக்கு வலிமை சேர்த்திருக்கிறார்கள் என்பதற்காகவும் கலைஞர் கருணாநிதி சொல்லியதற்கு செய்யாறு மக்கள் செவிசாய்த்திருக்கிறார்கள் என்பதற்காகவும் செய்யாறு மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சொல்லும் போது எல்லாம் இந்த ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது, இது எதற்குப் பயன்படும் என்ற கருத்தை அழுத்தந்திருத்தமாக எல்லாருமே சொன்னார்கள். இது விளம்பர சர்க்கார் என்றார்கள். எப்படி முடியும் என்றார்கள். ஆகவே எந்த ஒரு காரியத்தையும் எந்த ஒரு திட்டத்தையும் செயலாற்றுகின்ற ஆட்சி இல்லாததைப் போல அவர்கள் பேசினார்கள். நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வதெல்லாம் இந்த புரட்சித் தலைவர் அரசு இந்த நாட்டினுடைய வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்காக நடந்துகொண்டிருக்



கிற அரசே தவிர மேட்டுக்குடி மக்களுக்காகவோ அல்லது வசதி படைத்தவர்களுக்காகவோ நடைபெறுவது அல்ல என்பதை 1977ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிரூபித்து வருகிறார்கள். இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஒவ்வொரு பட்ஜெட்டிலேயும் சொல்வதைப்போல, ஒவ்வொரு ஆளுநர் உரையிலேயும் சொல்வதைப் போல குறைகூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கொஞ்சம் ஆழ்ந்து பார்த்தால் உண்மையைப் புரிந்துகொண்டு நிச்சயமாகப் பாராட்டுவார்கள்.

பாராட்ட வேண்டுமென்று நினைத்தாலும் அவர்களுக்கு பாராட்டவேண்டுமென்ற பண்பாடு உள்ளம் இல்லாத காரணத்தால்-தூங்குபவனை எழுப்பலாம், ஆனால் துங்குவது போல நடிப்பவனை எழுப்ப முடியாது என்பதைப்போல- திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நல்லதைப் பாராட்டுகின்ற மனப் பக்குவம் அல்லது நல்லதைப்பாராட்ட வேண்டுமென்ற உணர்வு இல்லாத காரணத்தால் குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது இந்த நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை சிந்தித்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவர்.

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் இந்த நாட்டு ஏழை எளிய மக்களுக்காக அமைந்திருக்கிறது, அவர்களுக்காகவே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த அடிப்படையில் தான் சாதாரண மக்களுடைய, கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும், வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று எண்ணி செயல்படுகிறார்கள். சாதாரண மக்கள் எல்லாவற்றையும் பெறவேண்டுமென்பதற்காக தன்னிறவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு அடுத்து, இன்றைக்கு எல்லா குழந்தைகளுக்கும் இலவச சீருடை இலவச பாடப்புத்தகம் என்று கிராமப்புறங்களில் இருக்கிற மக்களின் தேவைகளைபுரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.

அந்த அடிப்படையில்தான் இந்த ஆளுநர் உரையில் 2,000 கோடி ரூபாய் மின்சக்தி உற்பத்திக்காகச் செலவிடுவதுபற்றி கூறப்பட்டிருக்கிறது. ஆக, 2,000 கோடி ரூபாய் மின்சக்திக்காக என்று சொல்லுகிறபோது அதுபற்றி நினைத்துப்பார்க்க வேண்டும்.

விவசாயப் பெருங்குடி மக்கள், சிறு தொழில் அதிபர்கள், இப்படி அனைவருக்கும் பயன்படுவது மின்சாரம் தான். இந்த மின்சாரம் இருந்தால்தான் இந்த நாடு இயங்கும். இந்த நாடு இயங்குவதற்கு, மக்கள் உழைப்பதற்கு, விவசாயம் நடப்பதற்கு, அனைத்திற்கும் மின்சாரம் தேவை. எனவே மின்சாரத்தை கொண்டு வருவதன் மூலமாக இந்த நாட்டினுடைய தொழில் வளத்தையும், விவசாயத்தையும் பெருக்குவதோடு வேலை

யில்லாத் திண்டாட்டத்தை முறியடிக்கின்ற வகையில் மிக முக்கிய மான திட்டங்கள் பற்றி இந்த ஆளுநர் உரையில் சொல்லப் பட்டிருக்கின்றது. அதைப்பற்றி மாற்றுக் கட்சி நண்பர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொல்கிற மனப்பக்குவம் இல்லாமல் இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல.

வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அரிசன மக்கள், நரிக்குறவர்கள் சமுதாயத்தில் நலிந்த பிரிவினைச் சேர்ந்தவர்கள் ஆகிய அனைத்து பேர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நாட்டிலே இருக் கின்ற மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப் பிடம் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தத்துவத்தின் அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் இந்த ஆளுநர் உரையில் விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். 2,000 கோடி ரூபாய் மின்சாரத்திற்காக ஒதுக்குவதன் மூலமாக, மின்சாரத்திற்கு அதிலே இருந்து செலவு செய்வதன் மூலமாக நாட்டை வளப்படுத்த முடியும். இலவச மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோமே அதற்காக கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்கள் எல்லாம், சிறு விவசாயிகள் எல்லாம் இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் வளம் பெற 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. சிறு தொழில்கள் எல்லாம் மின்சார துண்டிப்பு இல்லாமல், கோடை காலங்களில் கூட மின் சார துண்டிப்பு இல்லாமல் நடைபெறக்கூடிய வகையில் உரிய நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் 2,000 கோடி ரூபாய்.

ஆகவே இன்றைக்கு அந்த 2,000 கோடி ரூபாயை ஒதுக்கியதின் விளைவாகத்தான் நாள் முழுவதும் மின்சாரத் துண்டிப்பை, தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதன் வாயிலாக விவசாயப் பெருங்குடி மக்கள், சிறு தொழில் அதிபர்கள் இப்படி அனைத்து தரப்பினரும் வசதி பெறுகிறார்கள். கிராமப்புறங்களில் இருக் கின்ற மக்களைப் பொறுத்தவரையில் அரிசனக் குடியிருப்புகள் கட்டுவதன் மூலம் அதிகப்படியான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.

அதுமட்டுமல்ல. இப்படி கிராமப்புற மக்களைப் பற்றியும், ஏழை எளிய மக்களைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவரின் அரசு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக் கின்ற மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக அவர்களுடைய வாழ்க்கையின் கலங்கரை விளக்காக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் இன்றைக்கு பல திட்டங்களைத் தீட்டி இந்த அரசு செயலாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே கொள்கைகளைப் பற்றி, மற்ற குறைபாடுகளைப் பற்றி எதிர்க்கட்சியினர் பேசுங்கள். ஏன் என்றால் குறைபாடே இல்லாமல் அரசு செயல்பட முடியாது. ஆங்காங்கு ஏதேனும் சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் பல்வேறு நல்ல நிலைமைகளை எல்லாம் மறைத்துவிட்டு சிறிய குறைபாடுகளை மட்டும் பெரிதுபடுத்திச் சொல்லி ஊனப் படுத்துவது என்பது நாகரீகமான அரசியலுக்கு ஒத்துவராது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.





பல்வேறு நல்ல திட்டங்களை எல்லாம் செயலாக்கம் செய்து
கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களின் அரசுக்கு
நீங்கள் எல்லாம் உறுதுணையாக இருங்கள். இங்கே சொன்
னார்கள். ஆசிரியர்கள் போராட்டம், மீனவர்கள் போராட்டம்
என்றெல்லாம் சொன்னார்கள். இது புரட்சித் தலைவருடைய
அரசு. எனவே கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்.
உடைத்துவிட்டால் எதுவும் நடக்காது. எனவே கோரிக்கைகள்
எது வந்தாலும் நியாயமான கோரிக்கைகளுக்கு நல்ல தீர்ப்பு
நிச்சயம் கிடைக்கும் என்பதுதான் தான் கடந்த காலத்திலிருந்தே
புரட்சித் தலைவர் அவர்களின் அணுகு முறையாக இருக்கின்றது.

மக்களுக்கு எது தேவை என்பதை உணர்ந்து நல்லபல பணி
களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர்
ஆட்சியில் பல நல்ல முடிவுகளை அறிவித்திருக்கிறார்கள். அந்த
முடிவுகளின் அடிப்படையில் மேலும் பல நல்ல காரியங்களைச்
செய்யவேண்டும் என்று சொல்லி ஒரு சில ஆலோசனைகளை
நான் இந்த மன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குக் காவல் துறையிலே இருப்பவர்கள் எல்லாம்
மிக மிக்கியமான, தேவையான நல்ல பணிகளைச் செய்து
கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த காவல் துறையினர்
[illegible] காலங்களில் வெளியே செல்ல முடியாத ஒரு நிலைமை
இருக்கிறது. ஆகவே அனைத்து காவல் துறையினருக்கும் மழைக்
கோட் வழங்கவேண்டும் என்ற வகையில் முயற்சியை மேற்
கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1—00)

அடுத்து, காவல் துறைக்கு தேர்ந்தெடுக்கப் படுபவர்களைப்
பற்றி சொல்ல விரும்புகிறேன். 55, 58 என்று வயை
அவர்கள் எட்டுகின்ற நிலைமையில் ஓடிச்சென்று திருடர்களைப்
பிடிக்க முடியாது. இராணுவத்தில் பணிபுரிகின்றவர்களைப்
பொறுத்தவரையில் 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக்காலம், 20
ஆண்டுக் காலம் என்று ஒப்பந்தப்படுத்திக் கொள்கிறார்கள்.
அப்படி ஒப்பந்தம் செய்து இராணுவத்திற்கு ஆட்களை எடுத்து
விட்டு, அவர்களின் ஒப்பந்தக் காலம் முடிவு அடைந்தவுடன்
அவர்களுக்கு அரசு பல்வேறு சலுகைகளை அளிக்கிறது. அப்படிப்
பட்ட சலுகைகளை நம்முடைய காவல் துறையினருக்கும் அளிக்க
ஏற்பாடு செய்யவேண்டும். நிறைய இளைஞர்களை காவல்
துறைப் பணிகளில் ஈடுபடச் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.
வயது முதிர்ந்த காவலர்களை பாதுகாப்பான வகையில் அரசு
அலுவலகங்களில் பணிபுரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து
அவர்களை ஓய்வு பெறச் செய்யலாம். அத்தோடு காவல்
துறைக்கு பணியாளர்களை எடுக்கும்போது ராணுவத்திற்கு
எப்படி ஒப்பந்தம் செய்து எடுக்கிறோமோ, அப்படி எடுக்க
வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அதைப்போல மிக மிக்கியமான ஒன்று, புரட்சித் தலைவர்
அவர்கள் எதைச் செய்தாலும் அதற்கேற்ற முறையில், நபர்
களை நல்ல முறையில் தேர்வு செய்துதான் செய்வார்கள்.

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

என்ற திருவள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப தமிழ்நாடு
விளையாட்டு வளர்ச்சிக் கழகம் என்கிற அமைப்பை உருவாக்கி
அதிலே நம்முடைய அருமை சகோதரர் சிவந்தி ஆதித்தன்
அவர்களை தலைவராக போட்டதனால் எந்த அளவுக்கு அது
நல்ல முறையில் செயல்படுகிறது என்பதை எண்ணிப்பார்த்தால்
மகிழ்ச்சியாக இருக்கிறது.

நம்முடைய மாநிலத்தில் உள்ள சாதாரண ஏழை எளிய
மக்கள் ஏஷியாட்டைப் பார்த்தது இல்லை. டெல்லியில் நடை
பெற்ற அகில உலக விளையாட்டையும் பார்த்தது இல்லை,
மற்ற விளையாட்டு போட்டிகளையும் சென்று கண்டதில்லை.
ஆனால் கோவை மாநகரத்திலே நம்முடைய மாண்புமிகு
முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட தேசிய விளை
யாட்டுப் போட்டிகளை கண்டு களித்தார்கள். நம்முடைய
மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த விளையாட்டு போட்டி
களை துவக்கி வைத்து ஆங்கிலத்திலே பேசியபோது அங்கே
வருகை தந்த அத்தனை லட்சம் மக்களும் மகிழ்ச்சி ஆரவாரம்
செய்தார்கள். அதுவும் அந்த விளையாட்டுப் போட்டிகளில்
நம்முடைய தமிழகத்தினர் தான் அதிகமான பரிசைப் பெற்
றார்கள் என்ற செய்தியையும் கேட்கும்போது நம் எல்லோரு
டைய மனமும் மகிழ்ச்சிக் கொண்டு ஆர்ப்பரிக்கிறது.

இப்படி இந்த விளையாட்டுத் துறையை மிக முக்கியப்
பிரச்சினையாக எடுத்து ஊக்குவித்துக் கொண்டிருக்கிற புரட்சித்
தலைவர் அவர்களுக்கு பெருமை சேர்க்கிற வகையில்தான் அந்த
விளையாட்டு வளர்ச்சித் துறையும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தத் துறைக்கு ஒரு வேண்டுகோள். சென்னை மாநகரத்
திலே பல விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. நம்
முடைய மாநகராட்சியின் பல விளையாட்டு மைதானங்கள்,
விளையாட ஆள் இல்லாமல் கவனிப்பாரற்று இருக்கின்றன.
அந்த விளையாட்டு மைதானங்களை சீரமைத்து, ஆர்வம் உள்ள
இளைஞர்களை அழைத்து ஊக்குவித்து, அந்த மைதானங்களில்
பயிற்சிகளை செய்வதற்கு உபயோகிக்க வேண்டும், பலவிதமான
விளையாட்டுகளையும் ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னை மாநகரத்தில் நில உடைமை
மேம்பாடு திட்டத்தின் கீழ் பல பணிகளைச் செய்ய வேண்டும்.
நம்முடைய அருமைத் தலைவர் இதயதெய்வம் புரட்சித்
தலைவர் முதல்வர் அவர்கள்கூட அறிவித்தார்கள்.





சென்னையிலே இருக்கிற தனியார் சாலைகளுக்கு நான்
நிச்சயமாக பல பணிகளைச் செய்யும் வகையில் உதவி செய்வேன்.
15 ஆண்டுக் காலங்களில் அவர்களிடமிருந்து பணத்தை தவணை
முறையில் கொஞ்சம் கொஞ்சமாக வசூலித்துக் கொண்டு, அந்த
தனியார் சாலைகளை மாநகராட்சி எடுத்து, அந்த சாலைகளுக்கு
குடிதண்ணீர் வசதி, விளக்கு வசதி போன்ற அனைத்து பணி
களையும் செய்துக் கொடுப்பதோடு, அவற்றை பராமரிக்கும்
பொறுப்பையும் மாநகராட்சி ஏற்கும் என்று சொல்லியிருக்
கிறார்கள். அந்த திட்டத்தை இந்த ஆண்டிலிருந்தே விரைவு
படுத்தி செயல்படுத்த வேணடும் என்று கோரிக்கையாக கேட்டுக்
கொள்கிறேன்.

அதே போல் இன்றைக்கு சென்னை மாநகரத்தில் இன்டோர்
ஆடிட்டோரியம் என்பதே கிடையாது. எத்தனையோ விளை
யாட்டுகளை சீரமைத்து நடத்தியும் இருக்கிறோம். ஆனால்
ஒரு இன்டோர் ஆடிட்டோரியம் இதுவரையில் இல்லை.
ஆகவே விளையாட்டு துறையை இன்னும் ஊக்கப்படுத்தும்
வகையில் ஒரு இன்டோர் ஆடிட்டோரியத்தை சென்னையில் ஏற்
படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகரத்தில் இருக்கும் நேரு ஸ்டேடி
யத்தில் எல்லா விளையாட்டுகளுக்கும் அங்கே நடத்த அனுமதிக்
கிறார்கள். அப்படி அனுமதி கொடுக்கும்போது, மாநகராட்சி
அதற்காக 10 சதவீதம்தான் கட்டணமாக வசூலிக்கிறார்கள்.
ஆனால், தமிழகத்தின் மிகச்சிறந்த விளையாட்டாக இருந்து
வருகிற குத்துச் சண்டைக்கு 3 ஆயிரம் ரூபாய் வரையில் வசூல்
செய்கிறார்கள். எந்த அடிப்படையில் அப்படிச் செய்கிறார்கள்
என்று தெரியவில்லை. ஆகவே, மற்றைய விளையாட்டுகளுக்
கெல்லாம் என்ன அடிப்படையில் கட்டணம் வசூலிக்கிறார்களோ
அதே அடிப்படையில் குத்துச் சண்டைக்கும் விதிக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் சமீப காலத்தில் புயல் வெள்ளம்
காரணமாக மிகப் பெரிய சோதனை ஏற்பட்டிருக்கிறது. ஆண்டு
தோறும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு
நிரந்தரத் தீர்வு காணவேண்டும். கரையோரப் பகுதிகள் எல்லாம்
பாதுகாக்கப்பட வேண்டும். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்படு
கின்ற மக்களுக்கு நிவாரணம் வழங்குகிறோம். குடிசை வாழ்
மக்களுக்கு மட்டும் தான் இந்த நிவாரண உதவிகளைக் கொடுக்
கிறோம். கோட்டூர்புரம் பகுதி அல்லது அடையாறு கரையோரப்
பகுதியிலிருக்கிற மற்ற கல்வீட்டுக்காரர்களுக்கு எல்லாம் அவர்
களுக்கு உதவித் தொகை வழங்கவில்லை என்ற மிகப் பெரிய
குறை அந்தப் பகுதிவாழ் மக்களிடையே இருந்துக் கொண்டி
ருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
தங்கள் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றத்தால்

[திரு. சைதை சா. துரைசாமி] [1986 சனவரி 22

மக்கள் பாதிக்கப்படுகிற போது தற்போதுகுடிசைவாழ் மக்களுக்கு எப்படி நிவாரணம் கொடுக்கப்படுகிறதோ, அதைப்போல பாதிக்கப்படுகிற பகுதிகளில் குடிசை வீடாக இருந்தாலும், கல் வீடாக இருந்தாலும் எல்லோருக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆற்றோரப் பகுதிகளில் குடியிருப்பவர்களில் குறிப்பாக தண்டாயுதபாணி நகர் பகுதியில் குடியிருப்பவர்கள் கடந்த வெள்ளத்தின்போது மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அதைப்போல வேளச்சேரியில் வாழும் மக்களும் பாதிக்கப் பட்டார்கள். அந்தப் பகுதிகளில் இருப்பவர்கள் தங்கள் வருமானத்திலிருந்து சிறுக சிறுக சேமித்து வைத்து, வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த வெள்ளத்தின்போது அந்த மக்கள் தங்கள் உடைமைகளை இழந்து மிகவும் பாதிக்கப் பட்டார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கு, எப்படி ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் தீ விபத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கும், மரணமடைபவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படுகிறதோ, அதைப்போன்று வெள்ள அபாயம் ஏற்பட்டாலும் பாதிக்கப்படுபவர்களுக்கும் நிவாரணம் கிடைக்கிற வகையில் செய்ய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு மாநில அரசு பரிந்துரை செய்து அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த வருடம் சைதாப்பேட்டையில் மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு உடனடியாக அந்தப் பகுதியில் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ள அந்தப் பகுதியில் ஓராயிரத்திற்கு மேற்பட்ட குடியிருப்புகளை இந்த ஆண்டிலேயே கட்டுவதற்கு அதிகமான நிதியை வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இயங்குகிற குடிசை மாற்று வாரியத்திற்கு ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் 200 லட்சம் ரூபாய் என்று ஒதுக்கிவிட்டால் அதில் 100 லட்சம் ரூபாய் ஹட்கோவிற்கு கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கே போய் விடுகிறது. 75 லட்சம் ரூபாய் கடந்த ஆண்டின் பணிகளை முழுமையாகச் செய்வதற்கும், பணியாளர்களின் சம்பளத்திற்கும் போய் விடுகிறது. புதிய திட்டங்களை நிறைவேற்ற போதுமான நிதி இருக்காது. ஆகவே, நடப்பாண்டில் குடிசை மாற்று வாரியத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்ன, குடிசை வாழ் மக்களுக்கு வாழ்வளிப்பதாகச் சொன்ன அந்தப் பணியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 சனவரி 22] [திரு. சைதை சா. துரைசாமி]

பட்டதாரிகள் இன்றைக்கு
அதேபோல பார்வையிழந்த
இந்தச் சமுதாயத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டு, நாட்டில் நாதி
யற்று இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுவதற்காக நிறை
வேற்றப்படும் திட்டங்களைச் சரியாக நிறைவேற்ற முடியாமல்
சில அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள். ஆகவே, பார்வை
யற்ற படித்து பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில்
முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அதைப்போல் அவர்களுக்கு படிப்பிலும் முன்னுரிமை கொடுக்கப்
பட வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு சமையல் எண்ணெய் மீதான பலமுனை
வரியை ஒருமுனை வரியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து கோல்டன் ஸ்டார் வெல்பேர் அசோசியேஷனிலிருந்து
அந்தப் பகுதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயர் வர
வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக்
கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கு. தமிழரசன் : தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர்
அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நான்
சார்ந்திருக்கிற இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே சில
கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அரசின் பல்வேறு கொள்கை
களையும், திட்டங்களையும் இந்த உரையில் தெரியப் படுத்தி
யிருக்கிறார்கள். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்
காக 10 லட்சம் வீடுகள் ஆண்டுதோறும் கட்டித்தரப்படும்
என்கிற மிகப்பெரிய திட்டத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.
இதற்காக இந்த அரசிற்கு எங்களுடைய 1½ கோடி தாழ்த்தப்
பட்ட மக்களின் சார்பாக எங்களுடைய இதயப்பூர்வமான
நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடை
கிறேன்.

பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் ஒரு நல்ல அரசு ஒரு
சாதாரணக் குடிமகனுக்கும், அடித்தளத்திலிருக்கிற ஏழைத்
தொழிலாளிக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க
இடமும் தந்தாக வேண்டுமென்று சொன்னார்கள்.

(பிற்பகல் 1—10)

அப்படி பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் சொன்ன அந்த
லட்சியத்தை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், உண்ண
உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்கிற அடிப்படை வசதி
களைச் செய்து தருகின்ற முகத்தான் இன்றைக்கு இந்த நல்ல
திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். எனவே, எங்களு
டைய பேரியக்கத்தின் சார்பாக மனப்பூர்வமான நன்றியை
மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு கொள்கைகளைப் பற்றி ஆளுநர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். கல்வியைப் பற்றிச் சொல்கிறபோது, மக்களின் தேவைகளுக்கு உகந்ததாக கல்வித் திட்டம் இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்குப் பள்ளிகளிலே பாடம் சொல்லித் தருகின்ற ஆசிரியர்களைப் பார்த்தால், மதக் கருத்துக்களை, மூட நம்பிக்கைகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பாரதியார் சொல்கிறபோது சொன்னார். குழந்தைகளுக்குச் சொல்கிறபோது, 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று சொன்னார்.

குழந்தைப் பருவத்திலே, சமூக சீர்திருத்தக் கருத்துக்களை சமத்துவக் கருத்துக்களை, சாதி ஒழிப்புக் கருத்துக்களைச் சொல்லித் தருவதற்கு இந்த அரசு பாடமுறைத் திட்டத்தை மாற்றியமைத்தாக வேண்டும். சின்னக் குழந்தைகளுக்கு, பிஞ்சு உள்ளங்களுக்கு, மதக் கருத்துக்களைச் சொல்லுகின்ற மடமைகளை நம்முடைய அரசு பாடத் திட்டத்திலேயிருந்து தூக்கி எறிந்தாக வேண்டும் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சின்னக் குழந்தைகளுக்கு சமத்துவ உணர்வுகளைச் சொல்லித் தந்தால்தான், சமத்துவ சமுதாயத்தை நாம் அமைக்க முடியும். எனவே, கல்விக் கொள்கையிலே, பகுத்தறிவுக் கருத்துக்களை, சின்னக் குழந்தைகளுக்குச் சொல்லித் தருகின்ற நல்ல திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்தாக வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே வற்புறுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு கல்லூரியிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒரு மிகப் பெரிய கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. 90 விழுக்காடு வருகைப் பதிவு இருந்தால்தான் அவர்களுக்கு உதவித் தொகை தருவோம் என்கிற நிலைமையிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு நல்ல முறையில் உதவித் தொகை தருவது மத்திய அரசு. ஆனால், மாநில அரசோ இந்தச் சட்டத்தை இன்றைக்கு அமுல் நடத்திக் கொண்டு இருக்கிறது. 90 விழுக்காடு வருகைப் பதிவு இருந்தால்தான் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை தரப்படும் என்ற நிலைமை இருக்கிறது. மத்திய அரசு தருகின்ற உதவித் தொகையை மாநில அரசு இப்படிக் கட்டுப்படுத்தினால் என்ன சொல்வது? மாநில அரசு இப்படி ஒரு சட்டம் போட்டு இருப்பதன் மூலம் ஏராளமான தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உதவித் தொகை பெறுவது நிறுத்தப்பட்டு இருக்கிறது. 90 சதவீதம் விழுக்காடு வருகைப் பதிவு இருக்க வேண்டும் என்று சொன்னால், எங்கே பார்த்தாலும், கல்வி நிலையங்களில் வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 90 சதவீதம் வருகைப் பதிவு இருக்கவேண்டும் என்று சொல்வதை மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் மேம்பாட்டைப் பற்றி, தொழில் வளர்ச்சியைப் பற்றி பல கொள்கைளை ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நானும் பல்முறை வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கிறேன். தொழில் வளர்ச்சியிலே சாதாரண அடித்தளத்து மக்களாக இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், முன்னேறுவதற்குப் பல திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று நாம் பல்வேறு காலமாக வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். எனவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று ஒரு தனித்தொழில் முதலீட்டுக் கழகம், ஆதி திராவிடர் தொழில் முதலீட்டுக் கழகம், என்கிற ஒரு கழகத்தை ஏற்படுத்த வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களை தொழில் அதிபர்களாக, தொழிற்சாலை அதிபர்களாக மாற்றுவதன் மூலமாகத்தான் அவர்களுக்கு சமூக அந்தஸ்தை கிடைக்கச்செய்ய முடியும். எனவே. இந்த அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு தனித் தொழில் முதலீட்டுக் கழகத்தைத் தொடங்கியாக வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

ஒவ்வொரு முறையும் ஆதி திராவிடர்களுக்கு என்று பல்வேறு கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதாகச் சொல்கிறோம். கடந்த ஆண்டு கூட 125 கோடி ரூபாயை ஒதுக்கினோம். ஆனால், அதிலே பாதிக்கு மேலே ஆதி திராவிடர்களுடைய கல்விக்காக செலவழிக்கப்படுவதாக கணக்கு வருகிறது. ஏற்கனவே நாம் கல்விக்காக நிதிநிலை அறிக்கையிலே தனித் தொகையை ஒதுக்குகிறோம். ஆனாலும் ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற தொகையிலே பாதிப் பணத்திற்கு மேலே கல்விக்காக ஒதுக்கப்பட்டு விடுகிறது. எனவே, கல்வித் துறையிலேயிருந்து ஆதி திராவிடத் துறைக்கு தனியாக அந்த பணத்தை ஒதுக்க வேண்டும். ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற பணத்திலேயிருந்து செலவழிக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அரசு பணிகளில் 18 விழுக்காடு, 40 ஆண்டுக்கால சுதந்திரத்திற்குப் பிறகும் நிரப்பப்படவில்லை. பல்வேறு துறைகளிலே இன்னமும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய 18 விழுக்காடு நிரப்பப்படவில்லை. எனவே ஒரு சட்டமன்ற ஆய்வுக் குழுவை இந்த மன்றம் ஏற்படுத்தி, எல்லாத் துறைகளிலும் 18 விழுக்காடு நிரப்பப்பட்டு இருக்கிறதா? என்பதை ஆராய்ந்து அறிய அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கனவே நீண்ட காலமாக ஒரு நல்ல திட்டத்தைச் சொல்லி வந்திருக்கிறார்கள். அதைச் செயல்படுத்தியாக வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையிலே அதைப்பற்றிக் குறிப்பிட்டு இருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்படிப்பட்ட ஒரு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தை தமிழக அரசு கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

(திரு. கு. தமிழரசன்) [1986 சனவரி 22

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு நாடே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டு இருக்கிறது, $1\frac{1}{2}$ கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். உள்ளாட்சித் தேர்தல் குறித்த நேரத்தில் நடத்தப்படும் என்று ஆளுநர் அவர்கள் இங்கே அறிவித்து இருக்கிறார்கள். நாங்கள் தேர்தலை நடத்தக் கூடாது என்றோ தேர்தல் வரக்கூடாது என்றோ விரும்புகிறவர்கள் அல்ல. ஆனாலும் தேர்தலில் இட ஒதுக்கீடு முறை இருந்து ஆகவேண்டும். இட ஒதுக்கீடு இல்லாமல் இந்தத் தேர்தலை நடத்தக் கூடாது என்று நாங்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். ஏன் என்று சொன்னால் இன்றைக்கு $1\frac{1}{2}$ கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 லே தமிழக முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற உடன் அன்றைக்கு எப்ரல் மாதம் 16 ஆம் நாள் டாக்டர் அம்பேத்கார் விழாவில் முதல்வராகப் பங்கு கொண்டார்கள். அப்போது சொன்னார் இந்த அரசு ஊராட்சி ஒன்றிய, நகராட்சி தலைவர்கள் பதவிகளில் இட ஒதுக்கீடு முறையைக் கொண்டு வருவேன் என்று 1967லே அம்பேத்கார் பிறந்த தின விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொன்னார்கள். அதைத் தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். என்ன காரணத்தாலோ ஜாதி வெறியர்களுடைய சூழ்ச்சியினால் இந்த முறை இன்றைக்கு நிறுத்தப்பட்டு இருக்கிறது. பல்வேறு தலைவர்கள் வழக்கு மன்றத்திற்கு சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள் மிகவும் மனக்கொதிப்புடன் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த மன்றம் மறுபரிசீலனைச் செய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய இட ஒதுக்கீட்டைத் தந்து ஆக வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டு இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது தாழ்த்தப்பட்ட மக்களின் நீண்ட நெடுநாளைய கோரிக்கையாக இன்னும் இருந்து கொண்டு இருக்கிற அண்ணல் அம்பேத்கர் மாவட்டம் என்ற பெயரை வேலூரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு வைக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு நல்ல அரசு மக்கள் அரசாக மக்கள் வளர்ச்சிக்கு பாடுபடுகின்ற அரசாக இருக்க வேண்டும் என்று சொன்னால் அது அடித்தளத்தில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களை, ஒடுக்கப்பட்ட மக்களை வளப்படுத்துகின்ற முறையில் காரியங்களைச் செய்கின்ற அரசாக இருக்க வேண்டும். அப்போது தான் நாட்டில் வளர்ச்சி இருக்கும். அந்த வகையில் இந்த அரசு பல்வேறு திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.



1986 சனவரி 22]

திரு. ச. சங்கரலிங்கம் : மன்றத்தினுடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னராசு அவர்கள் கொண்டு வந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் இந்த சமயத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன்,

ஆளுநர் உரையில் அரசின் முற்போக்கான திட்டங்களும், நாட்டு மக்களுக்குத் தேவையான திட்டங்களை மிகவும் அழகாக கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். வருங்கால சந்ததியினரை வாழ வைப்பதற்கும் இன்றைய சமுதாயத்தை முன்னேற்றுவதற்கும் ஆன ஆக்கப் பூர்வமான திட்டங்களை எல்லாம் இந்த அரசு திட்டமிட்டு தீட்டி இருக்கிறது என்பதை தெளிவாகக் காட்டியிருக்கிறது இந்த ஆளுநர் உரை. அப்படிப்பட்ட திட்டங்கள் நாட்டில் இருக்கின்ற மக்கள் வளம் பெற வேண்டும், வாழ்க்கையில் முன்னேற்றம் பெற வேண்டும், எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்பதற்காக இந்த ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டப்பட்டு இருக்கின்றன. நாட்டுக்கு, வளமான தொழிலுக்கு தேவையானது மின்சாரம். அந்த மின்சாரத் துறைக்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த ஆளுநர் உரையில் தெளிவாக கூறப்பட்டு இருக்கிறது.

விவசாயமும், தொழில் வளமும் பெற வேண்டுமானால் மின்சாரம் அத்தியாவசிய தேவையாக இன்றைக்கு இருக்கிறது, என்பதற்காக மின்சாரத் துறைக்கு அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்ததாக, நாட்டில் வாழ்கின்ற, வறுமைக் கோட்டில் இருக்கின்ற ஏழை எளியவர்கள் சமுதாயத்தில் நலிந்த பிரிவில் உள்ளவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகத் தான் அடிப்படையாக தேவையான வசதிகளை பூர்த்திச் செய்வதற்காக பல முற்போக்கான திட்டங்கள் இதில் தெளிவுபட காட்டப்பட்டு இருக்கின்றன. நான் திருநெல்வேலி சீமையான சங்கரன்கோவிலிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டாலும் கூட சென்னையில் இருந்து அரசு தீட்டுகின்ற திட்டங்கள் தென் பகுதியில் இருக்கின்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அது பூர்த்திச் செய்கின்றது.

(பிற்பகல் 1-20)

கிராமப்புறங்கள் எல்லாம் நகர்ப்புறங்களாக மாறுவதற்கு ஆக்கப் பணிகள் எல்லாம் சீரும், சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் பல்வேறு கிராமப்புறங்கள் நகர்ப்புறங்களாக தன்னிறைவு பெற்று, சாலை வசதியே பெறாத கிராமங்கள் எல்லாம் சாலை வசதிகள் பெற்று, பேருந்து செல்லாத கிராம்ங்கள் எல்லாம் இன்றைக்கு பேருந்து வசதிகளைப் பெற்று, கிராம மக்கள் பூரிப்பு அடைகிறார்கள்.

86 இலட்சம் குழந்தைகளின் இள நெஞ்சங்களில் கொஞ்சி விளையாடும் பிள்ளைத் தமிழாக, தமிழ் மன்னனாக, தரணி ஆளும் முதல்வராக, ஏழைகளுடைய இதய சிம்மாசனத்திலே வீற்றிருக்கிற புரட்சி தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்திலே மாற்றுக் கட்சியிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இத்திட்டம் நிறைவேறுமா, இது உருப்படுமா. இது ஓடிவிடும் என்று கூடச் சொன்னார்கள்.

ஆனால், இன்றைக்கு அந்தத் திட்டம் மாபெரும் திட்டமாக உருப்பெற்று, 86 இலட்சம் குழந்தைகள் தன்னிறைவு பெறுகின்ற அளவுக்கு சத்துணவு வழங்கப் பெறுவது மட்டும் அல்ல. இன்றைக்கு சீருடை வழங்கும் திட்டத்தையும் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த ஆளுநர் உரையிலே ஆதி திராவிட மக்களுக்கு 5 இலட்சம் வீடுகள், ஆண்டுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்ன நேரத்திலே, நலிந்த பிரிவினருக்கும் 5 இலட்சம் வீடுகள்; ஆக, ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்ற நேரத்துலே, மாற்று இயக்கத்திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள், இது சந்தேகம் என்று. சந்தேகம் என்பது உங்களுக்கு வந்துவிடவே கூடாது. சத்துணவிலே வந்க சந்தேகம் இன்று தீர்ந்து இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்றைக்கு சத்துணவு போடப்பட்ட பின்பு, இந்த வீடுகள் கட்டப்படுமா என்பதைப் பற்றி நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். புரட்சித் தலைவரை நம்புங்கள். அவர் சந்தேகத்திற்குரியவர் அல்ல. சந்துணவைத் தந்த இந்த சரித்திர நாயகன் தான் 10 இலட்சம் வீடுகளையும், நீங்கள் பாராட்டுகின்ற அளவுக்கு. பெருமைப்படுகின்ற அளவுக்கு, பூரிப்பு அடைகின்ற அளவுக்கு அடுத்த ஆண்டுக்குள் கட்டித் தருவார் என்பதை மிகத் தெளிவாக நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சார்ந்திருக்கிற சங்கரன் கோயில் தொகுதியில் பல பிரச்சினைகள். முற்போக்கான பல திட்டங்களையும் தந்து என் தொகுதி வளம் பெற்று இருந்தாலும், ஒன்று, இரண்டு பணிகள் முடுக்கி விடப்படாமல் இருக்கின்றன என்பதையும் நான் இந்த மன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

சங்கரன் கோயில் தொகுதி, 1967-லிருந்து ஒருத் தனித் தொகுதியாகச் செயல்பட்டு, பல்வேறு பிரச்சினைகள் இருந்து, அதெல்லாம் அப்போதைக்கப்போது தீர்க்கப்பட்டு இருந்தாலும், இன்னும் சில பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.



சங்கரன் கோயில் நகராட்சிப் பகுதிக்கென்று, 1960—இலே ஒரு மாபெரும் தண்ணீர் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து கொண்டு வரப்பட்டது. அந்தத் திட்டம் சங்கரன் கோயிலுக்கு கொண்டு வரப்பட்டபோது, சங்கரன்கோயில் நகரத்திலே வாழ்கிற மக்கள், ஜனத்தொகை 18 ஆயிரமாக இருந்தது. இன்றைக்கு ஏறத்தாழ 48 ஆயிரமாக ஜனத்தொகை உயர்ந்து இருக்கிறது.

சங்கரன் கோயிலுக்கென்று கொண்டு வரப்பட்ட திட்டம் புளியங்குடி நகராட்சிப் பகுதிக்கும் விரிவாக்கப்பட்டு வருகிற வழியிலே இருகிற 7 கிராமங்களுக்கும் அது விரிவாக்கப்பட்டு, இன்றைக்கு ஏறத்தாழ 2 இலட்சம் மக்களுக்கு அந்தத் தண்ணீரை பகிர்ந்து அளிக்கின்ற நிலைமையில் தான் இருந்து வருகிறது. ஆகவே, அதற்கு ஒரு மாற்று குடிநீர் திட்டம் ஒன்றை உருவாக்கித் தரவேண்டும் என்றும், அருகிலே இருக்கக்கூடிய தாமிரபரணி ஆற்றிலிருந்து ஒரு மாபெரும் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி, சங்கரன் கோயில் நகர மக்கள் குடிதண்ணீரே இல்லாமல் கஷ்டப்படுகிற நிலைமையை மாற்றவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன்கோயில் வானம் பார்த்த பூமி, வறண்ட பூமி இங்கு சென்னையிலே இருக்கிற மக்கள் தங்களுக்கு வெள்ள நிவாரணப் பணி வேண்டும் என்று கேட்கிறார்கள். நாங்கள் திருநெல்வேலிச் சீமையிலே இருக்கிறவர்கள், 'எங்களுக்கு வறட்சி நிவாரணப் பணி வேண்டும் என்று கேட்கிறோம்.

தென்பகுதியிலே இருக்கிற திருநெல்வேலிச் சீமையிலே வறட்சி. மழை பெய்யாமல் 2 ஆண்டுகளாகக் கடும் வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு வறட்சிப் பணி இல்லாத காரணத்தால் அங்கிருக்கிற மக்கள் வேலை இல்லாமல் மற்ற ஊர்களுக்கு வேலை தேடி செல்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக திருநெல்வேலிப் பகுதியில் இருக்கக்கூடிய சங்கரன்கோயில் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, வறட்சி நிவாரணப் பணிகளை அரம்பிக்க வேண்டும் என்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி, வானம் பார்த்த பூமி. இறவைப் புஞ்சை நிலங்களை நம்பி வாழ்கிற பூமி. அங்கு ஆண்டுக்கு அதைச் சுற்றி இருக்கிற நிலங்களிலிருந்து—செழிப்பாக இருந்தால் 25 கோடியிலிருந்து 30 கோடி வரை பருத்தி கொள்முதல் ஆகிறது. அந்தப் பருத்தியை மூலதனமாகக் கொண்டு, சங்கரன் கோயில் தொகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலையை உருவாக்கித் தர வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அருகிலே இருக்கக்கூடிய மேற்குத் தொடர்ச்சி மலையிலே இருந்து வருகிற தண்ணீர் எல்லாம் அரபிக் கடலிலே சென்று வீணாகக் கலக்கிறது. (மணியடிக்கப் பெற்றது) தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிப் பேச்சு.

(திரு. ச. சங்கரலிங்கம்) [1986 சனவரி 22

ஆகவே மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வருகின்ற தண்ணீர் எல்லாம் வீணாக அரபிக் கடலிலே கலக்கிறது. ஆகவே மத்திய அரசை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வலியுறுத்தி நதி நீர் அனைத்தும் தேசிய மயமாக்கப்பட்டு, அதன் மூலம் 1952–லிருந்து என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக வருகின்ற சட்டப் பேரவை உறுப்பினர்கள் குரல் கொடுத்தது போன்று, கிரியாறு திட்டத்தை உருவாக்க வேண்டும். இத்திட்டம் உருவாக்கபபடுமே யானால், இடையிலே வருகின்ற ஊர்களான, வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி, விளாத்திக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு அது பாசன வசதி அளிக்கும் திட்டமாக இருக்கும். ஆகவே இந்த அரசு மத்திய அரசோடு போராடி அந்தக் கிரியாறுத் திட்டத்தைப் பெறவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

## 7. அறிவிப்பு

### பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

இன்று (22–1–1986) கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் தீர்மானித்தபடி பேரவையின் அலுவல்கள் குறித்து திருத்திய நிகழ்ச்சி நிரலை பேரவைக்கு அறிவிக்கிறேன்.

| | |
|---|---|
| 23-1-1986 (வியாழக்கிழமை) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதமும் பதிலுரையும். |
| 24-1-1986 (வெள்ளிக்கிழமை) | அரசினர் அலுவல்கள்—அரசினர் சட்டமுன்வடிவுகள் மற்றும் பிற அலுவல்கள். |
| 25–1-1986 (சனிக்கிழமை) | பேரவைக் கூட்டம் இல்லை—விடுமுறை. |
| 26-1-1986 (ஞாயிற்றுக்கிழமை) | குடியரசு நாள்—விடுமுறை. |
| 27-1-1986 (திங்கட்கிழமை) | |
| 28-1-1986 (செவ்வாய்க்கிழமை) | அரசினர் அலுவல்கள் — அரசினர் சட்டமுன் வடிவுகள் மற்றும் பிற அலுவல்கள். |
| 29-1-1986 (புதன்கிழமை) | |

30-1-1986 அன்று தேவையிருப்பின் பேரவை கூடும்.



1986 சனவரி 22]

## 6 ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம் —(தொடர்ச்சி).

*திரு. சு. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எனது கருந்துக்களைக் கூற விழைகிறேன்.

ஆளுநர் உரையானது தமிழக மக்களுடைய எண்ணங்களையும், தமிழக மக்களுடைய எதிர்பார்ப்புகளையும் பிரதிபலிக்கவில்லை. ஆளுநர் உரையானது ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. தமிழகத்திலே தற்போது நிலவி வருகின்ற நிலவரங்களைப் பிரதி பலிப்பதாக ஆளுநர் உரை அமையவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே பல மாவட்டங்களிலே கடுமையான வறட்சி நிலவுகிறது. குறிப்பாக சேலம் மாவட்டத்திலே வறட்சி நிலவுகிறது. அங்கெல்லாம் வேளாண்மை பாதிக்கப்பட்டிருக்கிறது. பாசனக் கிணறுகளிலும் தண்ணீர் இல்லை. வேளாண்மை பெரிதும் பாதிக்கப்பட்டு, விவசாயிக்கள் தங்களுடைய விவசாயத் தொழில்களைச் செய்வதற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடி தண்ணீருக்காக மிகவும் கஷ்டப்படுகின்ற ஒரு நிலையிருக்கிறது. எனவே இவையெல்லாம் ஆளுநர் உரையிலே குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கது என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, அங்கே துயர் துடைப்புப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே நலிவடைந்த மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும், பழங்குடி மற்றும் நரிக் குறவர் மக்களுக்களுக்கும் 10 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த வீடுகளைக் கட்டும்போது 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் சரிசமமாகப் பங்கிட்டு, எல்லா வகையிலேயும், தாழ்த்தப்பட்ட, நலிவடைந்த மக்களுக்கும் பயன்படுகின்ற முறையிலே அந்தத் திட்டங்களை பகிர்ந்தளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த ஆளுநர் உரையிலே ரூ. 2,000 கோடிக்கு மின் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மின் திட்டம் எப்படிப்பட்ட திட்டம், என்னென்ன திட்டங்கள் அந்த ரூ. 2,000 கோடியிலே சொல்லப்பட்டிருக்கிறது என்பதை ஆளுநர் உரையிலே தெளிவாக வரையறுத்துக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அதே நேரத்திலே இலவச மின்சாரம் வழங்கும்போது, பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், சின்னஞ்சிறு கிராமங்களுக்கும், குடிசைகளுக்கும் மின் திட்டம் வழங்கப்படவில்லை. பேரூராட்சிகளிலுள்ள குடிசைகளுக்கும், நகராட்சிகளிலுள்ள எல்லா குடிசைகளுக்கும், இலவச மின்சாரம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. ச. கோவிந்தசாமி:** ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. ஆகிய திட்டங்கள் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கு எல்லாம் மின்சாரம் இலவசமாக வழங்குவதற்கு இந்த அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு 1976 ஆம் ஆண்டு வரை பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்குத்தான் உத்திரவிடப்பட்டிருக்கிறது. அதனால் இன்னும் பல லட்சக்கணக்கான விவசாயிகள் மின் இணைப்பு நீண்ட நெடுநாட்களாக பெறாமல் அதை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே கடுமையான வறட்சி ஏற்பட்டிருப்பதன் காரணமாக பல பகுதிகளிலே உள்ள மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதில் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் 1983 ஆம் ஆண்டிற்குப் பின்பு புதிதாக ஏற்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் கிடைக்கக்கூடிய வகையிலே ஆழ்துளைக் கிணறுகள் போடப்படவில்லை,அதனால் அந்த மக்களும் குடிநீர்க்குக் கஷ்டப்படுகிறார்கள், தற்போது சேலம் மாவட்டத்திலே கடுமையான வறட்சி ஏற்பட்டு இருப்பதன் காரணமாக 1400 ஆழ்துளைக் கிணறுகள் வேண்டுமென்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலித்து அந்த 1400 ஆழ்துளைக் கிணறுகளை போடுவதற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நடப்பு ஆண்டிலே 85 உயர்நிலைப் பள்ளிக்கூடக் கட்டடங்களுக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. அவை போதுமானதல்ல. பல பள்ளிகளிலே இன்றைக்கு மரங்களின் நிழலிலே வகுப்புகள் நடைபெறுகிற சூழ்நிலை இருக்கிறது. அதனால் வெயில் அடிக்கும்போதும் மழை வரும்போதும் குழந்தைகளின் படிப்பு பாதிக்கப்படுகிறது. ஆகவே அதிகப்படியான பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து அதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்து அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்காததன் காரணமாக பல பள்ளிகளிலே போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பெரும்பாலும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் பழு தடைந்த நிலைமையிலே இருக்கின்றன. அவைகளைப் பராமரிப் பதற்கு ஊராட்சி ஒன்றியங்களிடத்திலே போதிய நிதி வசதி இல்லாமல் இருக்கிறது. பள்ளிகளிலே கதவு இல்லாமலும், கூரை இல்லாமலும் இல்லாத நிலைமை இருக்கிறது. ஊராட்சி ஒன்றி யங்களுக்கு அரசு நிதிவசதி செய்யவில்லை என்று அவர்கள் சொல் கிறார்கள். எனவே அரசு அந்தப் பள்ளிகளைச் செப்பனிடுவதற் காக உரிய நடவடிககைகளை எடுக்க வேண்டும். இதுகுறித்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே தீர்மானங்கள் நிறை வேற்றி அரசுக்கு அனுப்பியும்கூட அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடி நகராட்சியாக இருக்கிறது. அங்கே மக்கள் குடிநீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதுகுறித்து நாங்கள் கடந்த ஒரு ஆண்டாகவே அரசிடம் முறையிட்டு வற்புறுத்தி வருகிறோம். அரசும் ஆவன செய்வதாக சொன்னாலும்கூட அந்தக் கோரிக்கை ஆமை வேகத்திலே நகர்கிறது, அந்த மக்களுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய முறையிலே துறை செயல்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்தப் பிரச்சினையை உடனடியாகப் பரிசீலித்து அந்த நகராட்சி மக்க ளுக்குக் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எடப்பாடி, கொங்கனாபுரம், மகுடஞ்சாவடி, வெண்ணாந்தூர் ஆட்டையாம்பட்டி, வேம்படிதாளம், எலம்பள்ளி ஆகிய பகுதி களுக்கு குடிநீர் கொடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் வாக்குறுதி அளித்து 6 மாதம் ஆகியும்கூட அந்தத் திட்டங்கள் இன்னும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. தற்போது அந்தப் பகுதிகளிலே கடும் வறட்சி நிலவுகிறது. எனவே அந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேட்டூர் இடதுகரை கால்வாய்ப் பகுதியிலே 50 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனத்திற்காக இந்த ஆண்டு தண்ணீர் திறந்துவிடப் படாததால் அவை தரிசாக எந்தவிதப் பாசனமும் செய்யமுடியாத நிலையில் இருக்கின்றன. அதனால் அந்தப் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்குநிவாரணம் அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளைக்காரர்களால் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட நாட்களாக நல்ல முறையிலே நடந்து வந்த மேட்டூர் மில் கடந்த 6 மாதங் களுக்கு முன் மூடப்பட்டு அந்தத் தொழிலாளர்கள் மிகவும் வேதனைப்படுகின்ற நிலையிலே இருக்கிறார்கள். பல கோரிக்கை களை வைத்து போராட்டங்களை நடத்தியும்கூட அரசு இன்னும்

நல்ல நடவடிக்கைகளை எடுத்து அந்த மில்லை திறந்து அந்தத் தொழிலாளர்களின் குறைகளைப் போக்காதது மெத்த வருத்தத்படக்கூடிய ஒன்று. எனவே, அதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் எட்டாம் நாள் மேதகு ஆளுநர் அவர்களால் பேரவை, மேலவை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை முன் வைக்கும் முன்பு, இந்த அவையிலே உள்ள எங்களுடைய இதய தெய்வம், தெய்வீகத் திருமகன், தேசீயத் தலைவர் பசும்பொன் திரு. உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய திருவுருவப்படத்தை வணங்கி என்னுடைய கருத்தை முன் வைக்கிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் வீடற்ற ஏழை, எளிய நலிந்த பிரிவினருக்கு ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் வீடுகளும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர். நரிக்குறவர்கள் ஆகியோருக்கு ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் வீடுகளும் ஆக ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் வீடுகள் வீதம் மூன்று ஆண்டுகளில் முப்பது இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை அறிவித்திருக்கின்ற இந்தத் தமிழக அரசையும் மாண்புமிகு புரட்சித் தலைவரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின் சீற்றத்தால் சென்னை மாநகரமும், செங்கல்பட்டு, தஞ்சாவூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டதை எல்லோரும் அறிவோம். அதை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து அங்குள்ள மக்களைக் காப்பாற்றியதோடு மட்டுமல்லாமல், நிவாரணப் பணிகளையும் செம்மையாகச் செய்த தமிழக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் தென் மாவட்டங்களாகிய மதுரை, அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், பெருந்தலைவர் காமராஜ், திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை ஆகிய தென் மாவட்டங்களில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஏற்பட்ட வறட்சியைப் போன்று தொடர்ந்து இந்த ஆண்டும் தென் மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு உள்ளன. அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, முதுகுளத்தூர் தாலுக்காக்கள் மிகவும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு உள்ளன. ஆனால் இதுவரை எந்தவித வறட்சி நிவாரண நடவடிக்கையும் அரசினால் எடுக்கப்படவில்லை, இந்த ஆளுநர் உரையிலேயும் சேர்க்கப்படவில்லை என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



எனது முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள மக்கள் தற்சமயம் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக பஞ்சம் பிழைப்பதற்காக மற்ற மாவட்டங்களுக்கு பிள்ளை குட்டிகளோடும், குடும்பத்தோடும் புறப்பட்டுக் கொண்டிருக்கிற அவல நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. எனவே, ஏழை எளிய மக்களின்பால் பாச உணர்வு கொண்டுள்ள தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு போர்க்கால அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுத்து, வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடங்கி, எனது தொகுதி மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதைத் தடுக்க அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டுமாய் மெத்த பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், நில வரிகளை ரத்து செய்வதோடு கூட்டுறவுக் கடன் வசூல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது இராமநாதபுரம் மாவட்டத்தில், தொடர்ந்து ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக குளிர்காலமாகிய இந்தக்காலத்தில்கூட குடிப்பதற்கு தண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதால், கோடை காலத்தில் இன்னும் குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருக்கிறது. எனவே, இப்போதே அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்து குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பெரும்பாலான குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளும், அடிகுழாய் பம்புகளும் அதிகம் இருந்தும் ஊராட்சி ஒன்றியங்களில் அவைகள் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அந்த ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலைமை இல்லாத காரணத்தால் பெரும்பாலானவை நல்லமுறையில் செயல்படாமல பராமரிப்பு செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே, அந்தக் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளையும், அடிகுழாய் பம்பு செட்டுகளையும் பராமரிக்கின்ற பொறுப்பை குடிநீர் வடிகால் வாரியமே ஏற்றுக்கொண்டால் சாலச் சிறந்ததாக இருக்கும் என மெத்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–40)

மேலும் அனுமதியாகி இருக்கிற இராஜகம்பீரத்திலிருந்து முதுகுளத்தூர் பகுதி கடலாடி பகுதி, கூட்டுக் குடிநீர் திட்டத்தையும் உலக வங்கி மூலம் அனுமதியாகியிருக்கிற அபிராமம், கமுதி பேரூராட்சிகளின் குடிநீர் திட்டத்தையும் துரிதப்படுத்தி வேலைகளை ஆரம்பிக்க வேண்டிய முயற்சிகளைத் துரிதமாய் செய்ய வேண்டுமென மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்

எனது பகுதியாகிய டி. புனவாசல், ஏ. தரைக்குடி, அச்சங்குளம், பெருங்கருணை போன்ற ஊராட்சிகளில் ஆழ்குழாய் திட்டத்தின் மூலம் விவசாயத்திற்குக் குழாய்க் கிணறுகள்

அமைக்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. எனவே மேற்படி திட்டத்தை வறட்சிப் பகுதியாகிய கமுதி, முதுகுளத்தூர் தாலூகா முழுவதும ஆய்வு செய்து அதிகமான குழாய்க் கிணறுகள் அமைத்து, எங்கள் பகுதியில் நிரந்தரமாக ஏற்படுகின்ற வறட்சியைப் போக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்வதோடு, தற்சமயம் அமைக்கப்பட்டுள்ள ஆழ் குழாய் பம்பு செட்டுகளுக்கு முன்னுரிமை கொடுத்து மின் இணைப்பு கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி கமுதி, முதுகுளத்தூர் ஆகிய இரண்டு தாலூக்காக்களைக் கொண்டதாகும். இரண்டு இடங்களிலும் இரண்டு அரசு மருத்துவ மனைகள் உள்ளன. அங்கு எந்தவித மருந்துகளும் கிடையாது. அங்கு வைத்தியம் செய்யப் போகின்ற நோயாளிகள் வெளியிலேயே மருந்துகளை வாங்கிக் கொண்டு போய்தான் வைத்தியம் செய்து கொள்ள வேண்டியநிலைஉள்ளது. ஆகவே, அங்கு மருந்துகள் சப்ளை செய்ய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

குறிப்பாக, கமுதி, மகப்பேறு மருத்துவ மனையில் கடந்த 3 ஆண்டுக்காலமாக பெண் மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதிக்குப் போதுமான மருத்துவர்கள் நியமிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கமுதியில் புதிய மருத்துவ மனை கட்டடம் கட்ட சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டிடம் மட்டும் கட்டப்பட்டு உள்ளது. மற்ற வேலைகள் செய்யப்படவில்லை. ஆகவே, மற்ற வேலைகளையும் முடித்து புதிய மருத்துவ மனைக் கட்டிடத்தில் செயல்பட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது பகுதியில் உள்ள பேரையூர் ஆரம்பச் சுகாதார மையக் கட்டிடங்கள் மோசமான நிலைமையில் இருக்கின்றன. அங்கே இருக்கிற பணியாளர்கள் வீடுகளில்தான் மருத்துவ மனை நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கிற மருத்துவ மனைக் கட்டிடத்தை இடித்துவிட்டு, புதிய மருத்துவ மனை கட்டிடம் கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கடந்த ஓராண்டுக் காலமாக எனது தொகுதியிலே அபிராமம் பேரூராட்சியில் நிதிநிலை இல்லாத காரணத்தால் மின் வாரியத்திற்கு மின் கட்டணம் கட்ட முடியாத சூழ்நிலையால பணம் கட்டவில்லை. அதனால் மின் விளக்குகள் எரியவில்லை. ஆகவே, அங்குள்ள மக்கள் இருளில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஒளிமயமான ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பேரூராட்சிக்குக் கடனாகவோ, மானியமாகவோ, அரசு மூலம் நிதி உதவி வழங்கி, அங்கு மின் விளக்குகள்



எரிய ஆவன செய்து, ஒளிமயமான அபிராமம் பேரூராட்சியாக மாற்ற ஆவன செய்ய வேண்டுமாய் மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் உள்ள நெடுஞ்சாலைகளும், கிராமச் சாலைகளும் பாராமரிப்பு இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அந்த மோசமான சாலையில் செல்லுகின்ற பேருந்துகள் ரிப்பேர் ஆகாமல் நல்ல நிலையில், குறித்த நேரத்தில் திரும்பி வருமா என்ற ஐயப்பாட்டோடு ஓடிக்கொண்டு இருக்கின்றன. எனவே எனது பகுதியில் உள்ள மோசமான சாலைகளைச் சீர்திருத்தம் செய்ய அதிகமான பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் சாலையே இல்லாத கிராமங்கள் அதிகம் உள்ளன. அதிலும் குறிப்பாக, மாவிலங்கை, ராணி சேதுபுரம், மூலக்கரைப்பட்டி, வேடங்கூட்டம், சாத்த நாயக்கன் பட்டி போன்ற 1,500 ஜனத் தொகைக்கும் மேல் உள்ள கிராமங்களுக்குச் சாலை வசதி இல்லை என்ற நிலையை மாற்றி சாலை வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், வெளி மாவட்டங்களிலிருந்து இராமேஸ்வரத்திற்கு தரை மார்க்கமாகத் தொடர்பு கொள்ளக் கூடிய பாம்பன் பால திட்டத்தை மிகவும் துரிதப்படுத்தி, விரைவில் முடித்துத்தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, 17-7-1984-ல் இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, அதில் ஒன்றாகிய சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் ஆரம்ப விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பசும்பொன் கிராமத்தில் உள்ள தேவர் சமாதியில் மலர் வளையம் வைத்துவிட்டு அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இந்தப் பசும் பொன் தேவர் பெருமானுடைய சமாதியைக் கூடிய விரைவில் சுற்றுலா மையமாக அறிவிக்க இருக்கிறேன் என்று கூறினார்கள். அதற்காக, பசும்பொன் தேவர் அவர்களின் மீது பற்றும் பாசமும் உள்ள மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் தங்கள் மூலமாக, மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, பசும்பொன் தேவர் சமாதியைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து, அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் உணர்விலிருந்து என்னை வேறுபடுத்திக்கொண்டு நான் பேசுகிறேன்.

நன்றி கூறுவதற்கு ஆளுநர் உரையில் ஏதுவுமே இல்லை என்று முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். பொய்யான வாக்குறுதிகளும், நடைமுறைக்கு ஒவ்வாத தத்துவங்களும் உள்ளதாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அது மட்டுமல்ல. இந்தியாவினுடைய அரசியல் பொருளாதார நிலைமை அல்லது தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற பொருளாதார சிக்கலை மேலெழுந்த வாரியாக ஆளுநரோ அல்லது இந்த அறிக்கை எந்த அரசின் சார்பில் சமர்ப்பிக்கப்படுகிறதோ; அந்த அரசே கவனிக்கவில்லை என்று நான் கருதுகிறேன்.

நான் சுருக்கமாகப் பேசவேண்டுமென்ற காரணத்தால் குறிப்பாகக் கூற விரும்புகிறேன். பெருமளவு தொழிற்சாலைகளில் முதலீடு செய்கின்ற ஒரு சூழ்நிலையை இன்றையதினம் மத்திய சர்க்கார் உருவாக்கியிருக்கிறது. அதைப் பயன்படுத்தி தொழில் வளர்ச்சிக்கு உத்தரவாதம் செய்கிறோம் என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலே 7–வது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏற்பட்டிருக்கிற கசப்பான அனுபவத்தை தமிழ்நாடு மட்டுமல்ல; மேற்கு வங்கத்திற்கும் சேர்த்து சொல்கிறேன். இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் அனுபவமும் முதலீடு என்பது கண்ணுக்கே தெரியாத அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. முதலீடு அதிகமாகக் கிடைக்கிற ஒரு அரசியல் பொருளாதாரக் கொள்கையை நம்முடைய பிரதமர் பயன்படுத்தி இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு இந்த உரை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது எங்கே செல்கிறது என்பதை போகப்போக நாம் பார்க்கவிருக்கிறோம்.

வளர்ச்சியின பயன்கள் எல்லாம் ஏற்றத்தாழ்வற்ற சாதாரண மக்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள் ஆளுநர் உரையில். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவம் என்னவென்றால், கிராமப்புற மக்களானாலும் சரி, நகரப்புற மக்களானாலும் சரி அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பயன் முழுவதும் ஒரு சில நபர்களுடைய பாக்கெட்டிற்குச் செல்கிறதே தவிர கோடிக்கணக்கான சாதாரண மக்களுக்குச் செல்லவில்லை.

அது மட்டுமல்ல. பெரிய பிரச்சனை என்று தமிழக சர்க்கார் கருதுவதாகக் கூறப்பட்டிருப்பது வேலையின்மை. அந்து வேலையின்மையினுடைய நிலைமையைப் பார்ந்தால் 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்' ஆக பெருகிக்கொண்டே வருகிறதே தவிர குறையவில்லை. ஆகவே, அது பரிசீலனை இல்லாத ஒரு அறிக்கை, எந்தப் பிரச்சனையையும் தீர்த்துவைக்க உதவி அளிக்கக்கூடிய ஒரு கொள்கையாக இதை நாங்கள் கருத முடியாத வகையில் அமைந்திருக்கிற அறிக்கையாக இருப்பதால் நன்றி தெரிவிக்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கிருந்து முதலீடு கிடைக்கப்போகிறது என்றால், தமிழக சர்க்கார் இதை சற்று ஆழ்ந்து பரிசீலனை செய்வது நல்லது என்று குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டு தொழில்





நிலைமைப்பற்றி பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனையோ ஆலைகள் மூடிக்கிடக்கின்றன. மூடிக்கிடக்கின்ற ஆலைகளைத் திறக்க இதிலே ஏதாவது பரிகாரம் இருக்கிறதா? இல்லை. நான் பஞ்சாலைகளை மட்டும் கூறவில்லை. சென்னை நகரில் இருக்கிற பின்னி எஞ்சினீயரிங் தொழிற்சாலை பிப்ரவரி 28 ஆம் தேதி மூடுவேன் என்று நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். தொழில் தகராறு என்றால் 25(o) பிரிவின்கீழ் அரசின் முன் அனுமதி பெற்று மூட வேண்டும். ஆனால் ஆலை முதலாளிகளுக்கு என்றைக்கும் இல்லாத துணிச்சல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. 1938 ஆம் ஆண்டிலிருந்தே இந்தக் கட்டிடத்திற்குள் நான் வந்து போய்க் கொண்டிருக்கிறேன். இந்தக் கட்டிடம் என்றால் இந்தக் கோட்டைக்குள் வந்துபோகிற வண்ணம் இருக்கிறேன். தொழிலாளர் பிரச்சனைகள் சம்பந்தமாக வந்திருக்கிறேன். என்றைக்குமே ஆலை அதிபர்களுக்கு இவ்வளவு துணிச்சல் ஏற்படவில்லை. சட்டத்தை மீறி ஆலையை மூடுகிறேன் என்றால் அரசு இருக்கிறது, அமைச்சர் இருக்கிறார், அதற்கான அதிகாரிகள் இருக்கிறார்கள், எல்லோரும் மவுனமாக இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான, ஏன் ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள் தொடங்க வங்கிகளிலிருந்து கடன் பெற்றவர்கள் அந்த ஆலைகளை எல்லாம் மூடவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். காரணம் நிலக்கரி கிடைக்கவில்லை, ஸ்டீல் கிடைக்கவில்லை, கோக் கிடைக்கவில்லை, கோல் கிடைக்கவில்லை. மின்சாரத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். ஐ.நா. புகழ் பெற்ற அமைச்சர் பொறுப்பேற்றிருக்கிற மின்சாரத் துறையில், மின்சாரப் பஞ்சம் பற்றிப் பேசுவதாக இருந்தால் மணிக்கணக்கில் பேசலாம், ஆகவே. தொழில் வளர்ச்சி குன்றி, கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி குன்றியிருக்கிறது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கடந்த பத்து ஆண்டுகளாக பெரும் தொழில்கள், சிறு தொழில்கள், வியாபாரம் அனைத்தும் சரிந்து, சரிந்து போகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நான் இந்த அரசை குற்றம் சொல்வதாக தயவுசெய்து நினைக்க வேண்டாம். அந்தப் பக்கத்தில் இருக்கிறவர்கள் கூச்சல் போட வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். இன்றைக்கு மத்திய அரசு கடைபிடிக்கிற கொள்கைதான் இதற்கெல்லாம் காரணம். அந்தக் கொள்கைதான் இந்த நாசத்திற்கும் இந்த இழப்புக்கும் காரணம். புள்ளிவிவரங்களை வைத்து விளக்குவதற்கு நேரம் இல்லாத காரணத்தால் இதை நான் வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த பஞ்சாலைகளை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். வெள்ளைக்காரன் ஆட்சியிலே ஆண்டுக்கு தலா 16 மீட்டர் துணி வீதம் பயன்படுத்தினார்கள். இன்றையதினம் தலா 10 மீட்டர் துணி வீதம்தான் பயன்படுத்துகிறார்கள். இன்றைக்கு 'பர் காபிட்டா கன்சம்ஷன்' இந்த அளவுக்கு குறைந்திருக்கிறது. ஆக, மக்களுக்கு வாங்கும் சக்தி முன்னைவிட குறைந்திருக்கிறது; இந்த நிலைமையிலே தொழில் வளர்ச்சி பற்றி சொல்கிறார்கள்.

மேதகு ஆளுநர் அவர்கள் கைத்தறித் துறையில் மட்டும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று தன்னுடைய உரையிலே கூறியிருக்கிறார்கள். கைத்தறி மட்டுமல்ல. நிச்சயமாக இந்த பஞ்சாலைத் தொழிலும் பாதிக்கக்கூடிய ஒரு ஆண்டாகத்தான் இந்த ஆண்டு அமையும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல; இந்த துணி அல்லது எஞ்சினீயரிங் பொருள் ஏதுவாக இருந்தாலும் உற்பத்தி செய்கின்ற பொருள்களை எல்லாம் வாங்கக் கூடிய நிலைமையில் மக்கள் இல்லை. கோடிக்கணக்கான கிராமப்புற மக்கள் வாங்கும் சக்தி குறைந்து கொண்டே போகிறது. அதுபற்றிய புள்ளி விவரங்களுக்குள் நான் போகவில்லை.

(பிற்பகல் 1-50)

நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள் என்பது தெரியும். கோடிக்கணக்கான மக்களினுடைய வாங்கும் சக்தி குறைந்து, குறைந்து செல்கிற நேரத்தில் தமிழகத்தில் தொழிற்சாலை உற்பத்தி செய்கின்ற பொருளை யார் வாங்கப் போகிறார்கள் என்று கேட்டால் நம்முடைய பிரதமர் அவர்களிடத்திலே இந்தக் கேள்விக்கு பதில் உண்டு. அவர்கள் பாராளுமன்றத்தில் புதிய பொருளாதாரக் கொள்கையினை விளக்கிச் சொல்லியிருக்கிறபோது இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். உற்பத்திப் பொருட்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் என்ன நடக்கின்றது? 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை உள்ள காலத்தினைக் கணக்கெடுத்துப் பார்த்தால் 30 சதவீதம் இறக்குமதி அதிகமாகி இருக்கின்றது.

ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் அரசு நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் மட்டும்தான் உயர்ந்திருக்கின்றது. மத்திய அரசு, மாநில அரசு கொடுக்கின்ற மானியத்தை வைத்துக் கொண்டு எப்படி உற்பத்தியைச் செய்வது, எங்கேயிருந்து நிதியைத் திரட்டுவது? ஆகவே இந்தக் கொள்கை சம்பந்தமாக ஆழ்ந்த பரிசீலனை கவர்னர் அவர்கள் செய்யவில்லை.

அதுமட்டுமல்ல. கவர்னர் உரையிலே ஒரு இடத்திலே சூசகமாகச் சொல்கிறார்கள். நிதி திரட்டுகிற ஆதாரம் எது என்பதற்கு சூசகமான பதிலைத் தருகிறார்கள். பொதுத் துறையிலே இருந்து கிடைக்கின்ற நிதியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதாவது பொதுத் துறைகளிலே இருக்கின்ற தொழில்கள் மிகப்பெரிய அளவுக்கு வளர்ச்சி அடைந்து இலாபம் ஈட்டினால் இந்த நிதித் தட்டுப்பாட்டினை நாம் சமாளிக்க முடியும் என்று கவர்னர் அவர்களின் வாயிலாகத் தமிழக அரசு சொல்கிறது.

தமிழக அரசு நடத்துகின்ற 49 தொழிற்சாலைகளினுடைய நிலைமைகளைப் பற்றிச் சொல்வதற்கு நேரம் இல்லை. 21 கம்பெனிகளில் டோட்டல் பெய்ட் அப் கேப்பிட்டல் 38 கோடி. இவ்வளவு பெய்ட் அப் கேப்பிட்டல் போட்டிருக்கக்கூடிய அந்த 21 கம்பெனிகளின் டோட்டல் அக்யூமுலேட்டட் லாஸ் 93 கோடி. எனவே என்ன நிதியை அங்கே உருவாக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. அதிலும் ஆய்வுக் குழுவினுடைய அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருப்பீர்கள். எனவே எங்கே இருந்து பணத்தைத் திரட்டப் போகிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கம்பெனிகளில் ஒன்றிலும் அக்கவுண்டிங் சரியில்லை; ஸ்டாக் ரெஜிஸ்டர் இல்லை. இது தான் அரசு நடத்துகின்ற தொழிற்சாலைகளின் நிலைமை.

எல்லாவிதமான நடைமுறைகளையும் மீறி, பழக்க வழக்கங்களையும் மீறி தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன அவை. தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட கார்ப்பரேஷன், தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் ஆகியவற்றினுடைய கதைகள் 200, 250 பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. வசூல் செய்ய முடியாத கடன் என்பதே கோடிக் கணக்கில் ஏறிக் கொண்டே போகிறது. இப்படி தொழில் நடத்துவதில் திறமை என்று சொன்னால் முதலமைச்சர் அவர்களுக்குத் திறமை உண்டு என்பதை மறுக்கவில்லை. ஆனால் இந்த அரசுக்குத் திறமை இல்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். என்ன திறமை இருக்கின்றது? 42 தொழிற்சாலைகளின் நிலைமையை எடுத்துப் பார்த்தால் 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 22 கம்பெனிகளில் அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் ஆச்சரியமாக இருக்கின்றது.

1979 ஆம் ஆண்டுக்குப் பிறகு வரவு—செலவு கணக்கை ஆடிட்டே செய்யப்படாத நிலைமையில் பல கம்பெனிகள் இருக்கின்றன. இன்றைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை எல்லாம் நாட்டின் ஸ்டீல் ஃப்ரேம் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கு க்ளே ப்ரேமாகத்தான் மாறி இருக்கிறது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டே அந்த நிறுவனங்கள் எல்லாம் 1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆடிட்டே செய்யப்படாமல் இருக்கின்றன. அப்படி இருக்கின்ற நிலைமையில் அங்கே கோடிக் கணக்கான ரூபாய் விரையம் செய்யப்படுகிறது. 35 கோடி ரூபாய் அதாவது தமிழ்நாடு இன்டஸ்ரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷனில் போடப்பட்டிருக்கக்கூடிய நிலைமையில் இப்படி அந்தக் கம்பெனிகள் பல செயல்படவில்லை. பலவற்றில் முறைகேடுகள் நடந்து இருக்கின்றன. 42 கம்பெனிகளில் 11 கோடியே 806 இலட்சம் ரூபாய் இலாபம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் மற்ற கம்பெனிகளில் 12 கோடியே 76 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது.

சேரன் ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில் அதைப் பற்றிச் சொல்லக்கூடிய பகுதியை எடுத்துப் பார்த்தால் அங்கே நடந்திருக்கக்கூடிய மோசடிகள் ஏராளம். இப்படியும் ஒரு அரசா? அரசினுடைய வரிப்பணத்திலிருந்து இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் மூலதனமாகப் போட்டிருக்கக்கூடிய தொழிலிலே கொள்ளை அடிக்கப்படுகிறது. இதைப்பற்றி எல்லாம் என்ன செய்வது என்று கவர்னர் உரையில் ஒரு வார்த்தைகூட இல்லை.

தமிழகத்தில் வேலை வாய்ப்பு குறைந்து கொண்டிருக்கிறது. இதை சபாநாயகர் அவர்களே நான் உங்கள் மூலமாக நமது அரசுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 10 ஆண்டுகளுக்கு முன் 1 இலட்சத்து 5 ஆயிரம் பேர் பணியாற்றிக் கொண்டிருந்த மிகப்பெரிய நிறுவனமாக இருந்த மின்சார இலாக்கா இன்றையதினம் 82000 பேர் பணியாற்றக்கூடிய வகையில் எண்ணிக்கை குறைந்திருக்கின்றது மின்சார விஸ்தரிப்பு ஏற்பட்டதற்குப் பிறகு.

போக்குவரத்துத் துறையிலே ஒரு பஸ்ஸுக்கு 15 பேர் வேலை செய்திருந்த ஒரு காலமும் உண்டு. எனக்குத் தெரியும். அது 8, 10 ஆண்டுகளுக்கு முன்பு. இந்த ஆட்சி வந்து 7 1/2 ஆண்டுகள் ஆகின்றன.

உலக வங்கி 5 ஆண்டுத் திட்டக் குழுவினுடைய காதை பிடிக்கிறது. 5 ஆண்டு திட்டக்குழு அதற்கு மேலே உள்ளவர்களின் காதைப் பிடிக்கிறது. அவர்கள் அந்தந்த மாநிலங்களின் காதைப் பிடிக்கிறார்கள். கடைசியில் பணம் வேண்டும் என்றால் ஆட்களைக் குறைக்க வேண்டும் என்ற நிலைதான் ஏற்படுகிறது. எங்கே வேலை வாய்ப்பு? கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறதே வேலை வாய்ப்பை அதிகரிப்பதுதான் எங்களுடைய குறிக்கோள் என்று. எங்கே அந்த வேலை வாய்ப்புகள், என்று எனக்குத் தெரியவில்லை.

அது மட்டும் அல்ல, நான் முக்கியமாக சொல்ல வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. ஜனநாயகத்திற்கே மிகப் பெரிய ஆபத்து இன்றையதினம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. கேட்டால் ஒரு செய்யாறு வெற்றியைப் பற்றி ஆளும் கட்சி நண்பர்கள் சொல்லலாம். "One swallow does not make a summer" நான் மீண்டும் சொல்வேன். "One swallow does not make a summer".

இன்று தமிழகத்திலே எல்லாவித உரிமைகளும் பறிக்கப்படுகிறது. போலீஸ்காரர்களின் அராஜகம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது. படிப்பதற்கு நேரம் தான் இல்லை. அவைகளில் எல்லாம் என்னென்ன பின்னணி என்பதும் எனக்குத் தெரியும்.



ஒரு ஆண்டுக்கு முன் ஒரு அதிகாரி ஒரு பெண்ணை கற்பழிக்கிறார். எனவே சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். ஒரு ஆண்டுக்கு முன். ஆனால் அவர் ஏதோ டெக்னிக்கலாக வாதாடி அந்த சஸ்பெண்டிற்கு விதிவிலக்கு வாங்கிக் கொண்டு விடுகிறார். ஆனால் இந்த ஒரு ஆண்டுக்காலமாக வழக்கு நடந்துக் கொண்டிருக்கிறதே அதில் அரசு தரப்பிலேயிருந்து, அந்த ஸ்டேவை ரத்து செய்யப்பட வேண்டும் என்று ஒரு அப்பீல் கூட கேட்கவில்லை. அது மட்டும் அல்ல. இதுபோல் விசாரணைகளே இல்லாது முடிந்த பிரச்னைகள் எத்தனை எத்தனை.

ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், போலீஸ் அதிகாரிகளும் சேர்ந்து தாக்குகிற காரணத்தினாலே பல இடங்களில் நெருக்கடி ஏற்படுகிறது. விழுப்புரத்திலே ஒரு வழக்கறிஞர் தாக்கப்பட்டார். தென்னாற்காடு மாவட்டம் பூராவும் வழக்கறிஞர்கள் ஸ்டிரைக். தமிழகம் பூராவும் ஒரு நாள் வழக்கறிஞர்கள் ஸ்டிரைக். அது மட்டும் அல்ல; 302-வது பிரிவிலே அவர் கைது செய்யப்படுகிறார். எதற்குத் தெரியுமா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களால் தாக்கப்பட்ட ஒரு நபர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டதை அறிந்து அவரைப் பார்க்கச் சென்றபோது அந்த வழக்கறிஞர் தாக்கப்படுகிறார். ஒரு மாவட்டத்திலே ஒரு வழக்கறிஞர் தாக்கப்படுகிறார். அதனால் தமிழகம் பூராவும் அதிகாரிகள் வேலை நிறுத்தம். இப்படி போலீஸ் அராஜகத்தைப் பற்றிச் சொன்னால், மணிக்கணக்கிலே பேச முடியும். அதைப் போலீஸ் மானியத்திலே வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் இதற்கெல்லாம் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒரு விசாரணைக் குழு என்று சொல்லி ஒரு கண்துடைப்பு செய்வீர்கள். விசாரணைக் குழு வைத்தாலும் அதனுடைய முடிவுகள் என்ன என்பது எங்களுக்குத் தெரியப் போவதில்லை. விசாரணைக் குழு என்று சொல்லி அந்தக் காரியத்தை தள்ளி வைத்துவிட்டு, பல மாதங்களுக்குப் பிறகும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததினால் போலீஸ் அதிகாரிகளுக்கு இன்னும் தைரியம் வந்து, ஆணவத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மன்றத்திலே ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கிற ஒரு குற்றச்சாட்டு, ஒன்றைத்தான் சொல்லப் போகிறேன். * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்து விடுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் பேசும்போது * * என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார்கள். அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். கொஞ்சம் அதிகமாகவே பேசினார். திரு. இரா. தாமரைக்கனி குறிப்பிட்டது மாத்திரம் அல்லாமல், போலீஸ் கமிஷனரைப் பற்றிப் பேசத் தொடங்கியதில் இருந்து நீதிமன்றத்தில் வழக்கில் இருக்கும் பிரச்னையைக் குறித்து கடைசிவரை பேசியதை நீக்க ஆணையிடுகிறேன்.

(பிற்பகல் 2—00)

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, மீனவர் பிரச்னையில் சுப்ரீம் கோர்ட்டின் டைரக்ஷனை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி இருக்கிறது. **

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபோன்ற வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம். திரு. வி. பி. சிந்தன் கடைசியாக குறிப்பிட்டதையும், திரு. ரகுமான்கான் **பற்றி பேசியவை களையும்அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : ஆகவே கொள்கை வழியிலே நின்று இந்தப் பிரச்னைகளை ஆராய்கிற ஒரு முறையை தமிழக அரசு கடைப்பிடிக்கவில்லை. இந்தப் பிரச்னைகள் மேலும் மேலும் அதிகமாகி போகின்றன. இதற்கு தீர்வு காண்கிற முறையாக அடக்குமுறைகளும் ஏவிவிடப்படுகிற அபாயம் உண்டு. ஆகவே ஜனநாயகத்திற்கும், பத்திரிகைகள் சுதந்திரத்திற்கும், தொழிற் சங்கங்களுக்கும் இருக்கிற எல்லாவித உரிமைகளையும் பறிக்கிற முறையிலே இந்த அரசு போய்க் கொண்டிருக்கிறது. இவற்றை மாற்றுகிற வகையிலே ஒரு நிலைமை அமைய வேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

திரு. த. புஷ்பராசு : தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

இந்திய திருநாட்டில் ஏழை எளியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக, இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை காக்கவேண்டும் என்பதற்காக தன்னுடைய கடைசி சொட்டு ரத்தத்தை இந்த மண்ணிலே சிந்திய அன்னை இந்திரா காந்தி அவர்களின் திருவுருவப் படத்தை இந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாமன்றத்திலே திறக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து ஓராண்டு காலம் ஆகிவிட்டது. அது திறக்கப் படவில்லை என்பதை நினைவுபடுத்தி, மேலும் காலதாமதமா காமல் அன்னை இந்திரா காந்தி அவர்களின் திருவுருவப் படம் விரைவில் இந்த மாமன்றத்தில் திறக்கப்பட வேண்டுமென்று முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையில் மின்சார உற்பத்தியைப் பெருக்கு வதற்காக திட்டங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை போர்க்கால அடிப்படையிலே, தமிழகத்திலே செயல்படுத்தவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளைக்கூட முழு நேரமும் செயல்படுத்த முடியாத நிலையில், மின்சாரம் இல்லாத காரணத் தால்அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. அதனால் வேலை செய்கின்ற தொழிலாளர்களும் பாதிக்கப்படு கிறார்கள். என்பதை இந்த அரசுக்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொன் னார்கள். மத்திய அரசு தமிழகத்திற்கு தொழிற்சாலைகள் தொடங்குவதிலே ஏதோ புறக்கணிப்பதாகவும், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடப்பதாகவும் சொன்னார்கள். நான் அந்தக் குற்றச்சாட்டை மறுக்கிறேன். ஏன் என்றால், அண்மை யிலே நம்முடைய தமிழகத்திற்கு வருகை தந்த மத்திய துணை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். தொழிற்சாலை தொடங்குவதற்கு, 'லெட்டர் ஆப் இன்டென்ட்' வழங்குவது, அதாவது தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதி வழங்குவது, இந்தியாவில் தமிழகத்திற்குத்தான் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை சொல்லியிருக் கிறார்கள். எனவே மத்திய அரசைப் பொறுத்தவரையில், தமிழகம் தொழில் வளர்ச்சியிலே முன்னேறவேண்டும், தமிழகத் திலே இருக்கிற மக்களின் வாழ்க்கைத் தரத்தை, அதன் மூலமாக உயர்த்த வேண்டும் என்றுதான் மாண்புமிகு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் விரும்புகிறார்கள்.

அதோடு இன்னொரு கருத்தையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, குஜராத், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும் என்றால், உடனடியாக அந்த அரசாங்கம், தொழிற்சாலைகளை அமைப்பதற் கான இடத்தை இலவசமாக, தொழிற்சாலை அமைப்பவர் களுக்குக் கொடுக்கிறது. அதோடு அங்கே மின்சாரத்தையும் அவர் களுக்கு அதிக அளவிலே வழங்குகிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. தொழிற்சாலைகள் அமைப்பதற்கான அனுமதியும் விரைவிலே கொடுக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்திலே 'சிப்காட்' மூலமாக தொழிற்சாலை தொடங்குவதற்கான இடத்தை நாம் தொழில் தொடங்குகிறவர்களுக்கு கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கிறபோது, ஒரு ஏக்கர் 40 ஆயிரம் ரூபாயிலிருந்து 60 ஆயிரம், 70 ஆயிரம், 80 ஆயிரம், 1 லட்சம் வரையிலும் நாம் தொழிற்சாலை தொடங்குகின்றவர்களுக்குக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கிறபோது தொழிற்சாலையினுடைய அந்த நிலத்திற்கே அவர்கள் பல லட்சக்கணக்கான ரூபாயை முதலீடு செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரத்தைப் போதிய அளவிற்குக் கொடுப்பதில்லை. அதோடு மட்டுமல்லாமல், தொழிற்சாலை தொடங்குவதற்கான அனுமதியும் விரைவிலே வழங்கப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே தமிழக அரசு இது மாதிரியான குறைபாடுகளை நீக்கி, எவ்வளவு விரைவாக தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு அனுமதி அளிக்க முடியுமோ, அந்த அளவிற்கு கொடுத்து, தமிழகத்தை தொழில் மயமாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த மின்சாரத்தைப் பொறுத்தவரையிலும், விவசாயிகள் பயிர்த் தொழில் செய்வதற்கு மின் இணைப்பு கொடுக்கிறபோது, எவ்வளவு விரைவாக-சட்ட திட்டங்களைப் போட்டுக்கொண்டிருக்காமல்—மின் வசதியைச் செய்து கொடுக்க முடியுமோ, அந்த அளவிற்கு அதைச் செய்யவேண்டுமென இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே விரைவாகச் செயல்படுத்த வேண்டும். இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத்திலே குடிநீர் இல்லாத கிராமங்கள் நிறைய இருக்கின்றன. எனவே இந்தக் குடிநீர் திட்டத்திற்கு, சில சட்ட திட்டங்களைச் சொல்லி காலதாமதம் செய்யாமல், எவ்வளவு விரைவாக குடிநீர் வசதியைச் செய்து கொடுக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று 10 லட்சம் வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை கவர்னர் உரையிலே அறிவித்து இருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் 10 லட்சம் வீடுகள் கட்டுகின்றபோது, அந்த வீடுகளை கான்ட்ராக்ட் மூலமாக கட்டிக்கொடுக்கக் கூடாது என்பதை இந்த அரசாங்கத்திற்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால், அந்தந்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்கே அந்தப் பணத்தைக் கொடுத்தால், அவர்கள் வீட்டை நல்லமுறையிலே கட்ட முடியும். அதற்கு உதாரணமாக நான்



சொல்ல விரும்புவது, என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன, கான்ட்ராக்ட்காரர்கள் கட்டிய வீட்டிற்கும், மக்களே சொந்தமாகக் கட்டிய வீட்டிற்கும் பல வகையிலே வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை இந்த அரசுக்கு நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

அதோடு இன்று கலவரங்கள் அதிகமான அளவிலே நடக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, தமிழகத்திலே காவல் நிலையங்களை அதிகப்படுத்த வேண்டும் என்றும், காவலர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு காவலர்கள் கிராமங்களுக்கு விரைந்து செல்லுகின்ற அளவிற்கு எல்லாக் காவல் நிலையங்களுக்கும் பேருந்து வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் கிராமத்தில் நிலவுகின்ற சூழ்நிலை மிகவும் வருத்தத்தைத் தருவதாக இருக்கிறது என்பதை நான் வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக கிராமங்களில் கள்ளச் சாராயம் அதிகமாக ஏற்பட்டு, எங்கே பார்த்தாலும், கள்ளச் சாராயம் ஆறாக ஓடிக்கொண்டு இருக்கிற நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதையும், எவ்வளவு விரைவாக அந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக அதை ஒழித்து கிராமங்களிலே இளைஞர்களையும், அங்கே இருக்கின்ற தாய்க்குலத்தையும் காப்பாற்ற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள், எல்லா மாவட்டத்திலேயும் வெள்ள நிவாரண வேலைகள் நடந்தது என்று சொன்னார்கள், அங்கே உண்மை நிலை என்னவென்றால், வறட்சி நிலைதான் அங்கே ஏற்பட்டு இருக்கிறது என்பதை இந்த அரசுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 2-10)

பல கிராமங்களில் பருவ மழை குறைந்து விட்டதன் காரணமாக அங்கே விவசாயிகளுடைய பயிர் பட்டு பாதியில் அந்த விவசாயம் தடைப்பட்டு விட்டது என்ற நிலையை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் காரணமாக தமிழர்களின் திருவிழாவாகிய பொங்கல் திருவிழாவை கூட அவர்கள் சிறப்பாக கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்லி எவ்வளவு விரைவாக புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கின்ற வறட்சிப் பணிகளை தொடர முடியுமோ அவ்வளவு விரைவாக தொடர்ந்து அந்த மாதிரியான விவசாயம் பாதிக்கப்பட்டு இருக்கிற கிராமங்களுக்கு வரி வசூலை தள்ளுபடி செய்து அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. த. புஷ்பராசு] [1986 சனவரி 22

குறிப்பாக இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டம் அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படுவதால் புதுக்கோட்டை மாவட்டத்தில இருக்கின்ற அனைத்து ஏரிகளிலும் ஒவ்வொரு ஏரிக்கும் ஒரு ஆழ் குழாய் கிணறு என்ற வித்தில் அங்கே விரைவாக ஆழ் குழாய் கிணறுகள் தோண்ட ஏற்பாடு செய்து அதன் மூலம் விவசாயம் செய்வதற்கு வழி வகைகளை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமயம் பகுதியில் துணை மின் நிலையம் தொடங்கப்பட இருக்கிறது. அந்தவேலையை துரிதமாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொன்னமராவதி நகரத்திற்கு கூடிய விரைவில் அந்த குடிநீர் வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொன்னமராவதி நகரத்தைப் பொறுத்தவரையில் அங்கே அமைய இருக்கின்ற மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக பணிமனையை விரைவாக செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமயத்தில் தொழிற்பேட்டையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒரு நவீன அரிசி ஆலை கொடுக்கப்போவதாக அரசு அறிவித்து இருக்கிறது. அதை அரிமலம் பகுதியில் விரைவாக ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டையில் உள்ள அரசு மருந்துவமனையில் இன்றையதினம் விபத்து ஏற்பட்டால் அதற்கு உடனடியாக மருத்துவம் செய்வதற்கு தனிப் பிரிவு இல்லை. ஆகவே, விபத்துக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கக்கூடிய முறையில் அந்தத் தனிப் பிரிவை புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் விரைவாக ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (23-1-1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

106. பெங்களூரைச் சேர்ந்த கர்னாடகா மாநில சாலை போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான மோட்டார் வண்டி எண் எம்.ஒய்.எஃப் 7945-க்கு விதிக்கக் கூடிய வரியினை கை விடுதல் குறித்து உள் துறையின் 15.11.1985-ஆம் நாளிட்ட 2764-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)



107. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 22.11.1985-ஆம் நாளிட்ட 2858-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)

108. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ் ஆங்கிலம்)

109. தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் 1984-85-ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப பெற்றது)

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள். ஏனைய தாள்கள்

33. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மீதான பதினொன்றாம் அறிக்கையில் (1979-80) உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் (1985-86) பதினேழாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

34. 1971-72-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1980-82) அளித்த பனிரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் (1985-86) பதினெட்டாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்)

35. 1976-77 மற்றும் 1977-78 ஆகிய ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980-81) ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கை (தமிழ், ஆங்கிலம்)

[1986 சனவரி 22

(189ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 1 (வினா எண் 3267)க்கான விடையைக் காண்க)

(அ) 31.3.85 வரை பதிவு செய்யப்பட்ட வேளாண்மை நில குத்தகைதாரர்களின் மாவட்ட வாரியான எண்ணிக்கை:—

| வ.எண் | மாவட்டம் | குத்தகைதாரர்களின் எண்ணிக்கை | குத்தகைதாரர்களின் நிலப் பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | செங்கை | 12,968 | 18,999 |
| 2 | வடஆற்காடு | 31,660 | 52,301 |
| 3 | தென்னாற்காடு | 14,042 | 18,079 |
| 4 | தஞ்சாவூர் | 1,41,241 | 2,57,759 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 59,011 | 68,243 |
| 6 | புதுக்கோட்டை | 12,750 | 15,642 |
| 7 | மதுரை | 37,157 | 47,572 |
| 8 | இராமநாதபுரம் | 15,674 | 15,067 |
| 9 | நெல்லை | 69,628 | 48,523 |
| 10 | கன்னியாகுமரி | 4,264 | 5,100 |
| 11 | கோவை | 7,234 | 26,557 |
| 12 | பெரியார் | 8,812 | 17,059 |
| 13 | சேலம் | 8,885 | 18,725 |
| 14 | தருமபுரி | 14,167 | 22,375 |
| 15 | நீலகிரி | 2,089 | 4,675 |
| | மொத்தம் | 4,39,522 | 6,36,676 |



1986 சனவரி 22]

(ஆ) குத்தகைதாரர்களோ அல்லது நிலச் சொந்தக்காரர்களோ மனுச் செய்துகொண்டால் அதை ஆவண அதிகாரி விசாரணை செய்தோ அல்லது ஆவண அதிகாரிகள் தாங்களாகவே குத்தகைதாரர்கள் யார் என்று விசாரித்தோ குத்தகைதாரர்கள் பதிவு செய்வார்கள். இது தொடர்பாக அலுவல் சார்பற்ற ஐவரைக் கொண்ட ஒரு குழு அமைத்து, அவ்வுறுப்பினர்கள் அக்குழு அமைக்கப்பட்டுள்ள வட்டத்திலுள்ள கிராமங்களுக்கு நேரில் சென்று பதிவு செய்யப்படாதவர்கள் தொடர்பான பட்டியல் தயாரித்து அதனை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மாதாந்திர கூட்டத்தில் விவாதித்து, பதிவு செய்யப்படாதவர்களை ஆவண அதிகாரியின் (வட்டாட்சியர்) விசாரணைக்குட்படுத்தி பதிவு செய்யுமாறு தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது, நிலச் சீர்திருத்த இயக்குநர் அலுவலகத்தில் மாதாந்திர அறிக்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர்களின் அறிக்கையினைப் பெற்று அரசின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது. இது அரசினால் ஆய்வு செய்யப்படுகிறது.

136441
சென்னை-600 008.